Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.30
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily



தெளிவான வானிலை.
சிறு மழைக்கான
சாத்தியம் உண்டு.

30°c 28°c

பக்கம் 52 | சுடர்: 28 | கதிர்: 188 | வள்ளுவர் ஆண்டு: 2044 | வைகாசி 19, ஞாயிறு 02.06.2013

# காணி சுவீகரிப்பில் அரசு கடும் உறுதி

## மாற்றமேதுமில்லை என்கிறார் காணி அமைச்சர் ஜனக பண்டார



கொழும்பு, ஜூன் 2
யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பு மத்திய நிலையம் ஒன்றை நிறுவுவதற்காக, வலி.வடக்கில் 6 ஆயிரத்து 381 ஏக்கர் தனியார் காணிகள் திட்டமிட்டபடி சுவீகரிக்கப்படும். இதில் எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை என்று காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் அடித்துக் கூறியுள்ளார்.
இந்தக் காணி சுவீகரிப்புக்கு எதிராகக் காணி உரிமையாளர்களால் உயர் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டு - தேவை ஏற்படின் சுவீகரிப்புக்கு எதிராக இடைக்காலத் தடை உத்தரவையும் பெறலாம் என மேன்முறையீட்டு நீதிமன்றம் தெரிவித்துள்ள நிலையில் காணி அமைச்சர் மேற்கண்டாறு கூறியுள்ளார்.
தேசிய பாதுகாப்புக்காக அல்லது அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக காணிகள் தேவைப்படின் அது வடக்கில் இருக்கிறதா? தெற்கில் இருக்கிறதா? என்று பார்க்க முடியாது. எங்கிருந்தாலும் அவை சுவீகரிப்பட்டே தீரும் என்றும் காணி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.
அரசு மேற்படி தேவைகளுக்காக பாரம்பரிய காணிகளைக் கூட சுவீகரித்துள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.
இராணுவ முகாம்களை அமைப்பதற்கென அடையாளப்படுத்தப்பட்ட காணிகளில் தேவையானவற்றை மட்டும் வைத்துக்கொண்டு ஏனையவை அவற்றின் உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.
சுவீகரிக்கப்படும் காணிகளின் உரிமையாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் கூறினார்.
இதேவேளை, அரசின் காணி சுவீகரிப்பை எதிர்த்து 2,176 பேர் சார்பில் மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனு மீதான இடைக்காலத் தடை உத்தரவைப் பெறுவதற்கு மனுதாரர்களுக்கு உரிமை உள்ளது என நீதிமன்றம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## இராணுவத் தலையீட்டால் நிறுத்தப்பட்டது செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 02
அரச காணிகள் வழங்கல் தொடர்பாக திணைக்கள அதிகாரிகளுக்கு மன்னார் மாவட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செயலமர்வு இராணுவத் தலையீட்டால் நேற்றைய தினம் நிறுத்தப்பட்டுள்ளது.
மன்னார் பிரஜைகள் குழுவினால் கடந்த வியாழன், வெள்ளி, சனி ஆகிய மூன்று தினங்களுக்கு இந்தச் செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் இறுதி நாளான நேற்று மன்னார் மாவட்டச் செயலக அதிகாரிகளுக்கு செயலமர்வு நடைபெறவிருந்தது. எனினும் இராணுவத்தினர் அரச செயலகத்துடன் தொடர்பு கொண்டு பணியாளர்கள் எவரையும் செயலமர்வுக்குச் செல்ல அனுமதிக்கக் கூடாது என வலியுறுத்தியுள்ளனர்.
இதன் காரணமாக அதிகாரிகள் எவரும் செயலமர்வுக்கு செல்ல அனுமதிக்கப்படாததால் இறுதி நாள் செயலமர்வை நிறுத்த வேண்டி

தொடர்ச்சி: பக்கம் 20

## செய்திகள்



பக். 04
கவுணாவத்தையில் ஆடுகள் துடிதுடித்துச் சாவு



பக். 11
சர்வமதப் பிரார்த்தனை கிளிநொச்சியில்

## விளையாட்டு



பக். 18
இளம்தென்றல், புதிய பாரதி இறுதியாட்டத்துக்குத் தகுதி




கல்வியங்காட்டுப் பகுதியில் நேற்று ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகள்

## '13' ஒழிப்பை இந்தியா தடுத்தால் பெரும் ஆபத்து

### எச்சரிக்கிறார் அமைச்சர் சம்பிக்க



கொழும்பு, ஜூன் 02
வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படுவதை மாத்திரம் நாங்கள் எதிர்க்கவில்லை. 13ஆவது திருத்தச்சட்டம் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும்என்பதுதான் எமது நோக்கம். இதனைத் தடுக்க இந்தியா தலையிடுமாயின் கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என எச்சரிக்கை விடுத்துள்ளார் அமைச்சர் சம்பிக்க.
2லட்சத்து 36 ஆயிரம் தமிழ் மக்கள் கொழும்பில் இருக்க முடியும் என்றால் ஏன் வடக்கில் சிங்கள மக்கள் வசிக்கமுடியாது? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:
யாழ்ப்பாணத்தில் கடந்த காலங்களில் 21ஆயிரம் சிங்கள மக்கள் வசித்தார்கள். தற்போது 674 பேரே அங்கு உள்ளனர். வடபகுதியிலிருந்து வெளியேற்றப்பட்ட சிங்கள, முஸ்லிம் மக்களுக்கு பதிவுசெய்து கொள்வதற்கு அதிகாரம் இல்லையா? பம்பலப்பிட்டியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காரியாலமொன்றைத் தற்போது திறந்துள்ளது. அதற்கு நாங்கள் கல்லெறிந்தோமா? ஆனால் சிங்கள குடியேற்றத்தைச் செய்யும் போது கல்லெறிந்தார்கள்.
சிங்கள மக்களுடன் குடியிருக்க வேண்டாம் சகலரும் யாழ்ப்பாணத்துக்குச் சென்று குடியிருங்கள் என்று சம்பந்தன் கூறினாரென்றால் அது சாதாரணம் – என்றார். (த-5)

## சீனாவுடனான நெருக்கத்தால் இந்தியா குழம்பக்கூடாது

### இலங்கைத் தூதுவர் தெரிவிப்பு

புதுடில்லி, ஜூன் 2
சீனாவுடன் நாம் ஏற்படுத்திக்கொள்ளும் நெருக்கத்தைப் பார்த்து இந்தியா குழம்பக்கூடாது. இந்தியாவுக்குப் பிரச்சினை ஏற்பட்டால் எமக்கும் பிரச்சினை தான். எனவே நாம் இந்தியாவுக்கு எதற்காகப் பிரச்சினையை ஏற்படுத்தப்

தொடர்ச்சி: பக்கம் 20

## புதுக்குடியிருப்பில் குடும்பஸ்தர் வெள்ளை வானில் கடத்தல்

### மனைவி பொலிஸில் முறைப்பாடு

புதுக்குடியிருப்பு, ஜூன் 02
புதுக்குடியிருப்பு ஆனந்தபுரம் பகுதியில் வைத்து இளம் குடும்பஸ்தர் ஒருவர் வெள்ளை வானில் நேற்று முன்தினம் இரவு கடத்தப்பட்டுள்ளார்.
புதுக்குடியிருப்பு ஆனந்த

தொடர்ச்சி: பக்கம் 20

சிங்கர் வழங்கும் இன்னுமோர் புதிய சேவை
அனைத்து நாடுகளுக்குமான விமானப் பயணச் சீட்டுக்களை நொடிப்பொழுதில் பெற்றுக்கொள்ளலாம்
மேலும் கடவுச்சீட்டு,வீசா, சம்பந்தமான உதவிகளை பெற்றுக்கொள்ளலாம்.
நம்பிக்கை, உத்தரவாதம், விரைவு
இன்றே நாடுங்கள் அருகிலுள்ள SINGER PIUS SINGER
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 5408
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4389
சுன்னாகம். 021 224 0555
கொடிகாமம் 0776433888.
சங்கானை 077 2208232
மானிப்பாய். 021 225 5343
நெல்லியடி. 021 226 4937
பருத்தித்துறை 021 226 3411
கிளிநொச்சி 077 4685771
சாவகச்சேரி 021 227 0197
பிரதான வீதி முல்லைத்தீவு 0772475151
(C-9070)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மரண அறிவித்தல்

## திருமதி யோகேஸ்வரி முத்துக்குமாரசுவாமி



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகேஸ்வரி முத்துக்குமாரசுவாமி நேற்று (01.06.2013) சனிக்கிழமை விநாயகரடி சேர்ந்தார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 18, சிறாம்பியடி வீதி,
யாழ்ப்பாணம். (37932)(07.17)

தகவல்:
மு. சுஸ்நுதன்

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் முன்னாள் அதிபர் திரு. சூசைப்பிள்ளை நோபேட் உதயகுமார் அவர்களின் தாயார்

**அமரர் சூசைப்பிள்ளை திரேசம்மா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

யா/ மார்சன்கூடல் றோ.க.த.க. பாடசாலை,
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை திருமதி
**ரோகணேஸ்வரி சண்முகநாதன்**
அவர்களின் அன்புக் கணவர்

**திரு. விசுவலிங்கம் சண்முகநாதன்**

அவர்கள் நேற்று முன்தினம் (31.05.2013) வெள்ளிக்கிழமை காலமானதையிட்டு அதிர்ச்சியும் கவலையும் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/உடுவில் மான்ஸ் த.க.பாடசாலை,
பாடசாலை சமூகம். (37933)(14.9.7)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
1958.04.12

மறைவு
2013.05.03

## அமரர் இராமையா கமலநாதன்

03.05.2013 அன்று இறைவனடி சேர்ந்த எமது குலவிளக்கின் அந்தியேட்டி கிரியை 01.06.2013 அன்று கீரிமலை தீர்த்தக்கரையில் நடைபெற்றது. இன்று(02.06.2013) ஞாயிறு நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உறவினர் ,நண்பர்கள்,மற்றும்அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

சபாதிபார் வீடு, கரவெட்டி கிழக்கு.
கரவெட்டி. 077 9584534 (15393)(07.09)

குடும்பத்தினர்.

உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111

# நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

கலிக்குயின் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 579 8974 (37973)(5.7.11)

# காணி விற்பனைக்கு

திருநெல்வேலி, பழங்கிணற்றடிப் பிள்ளையார் கோயில் வீதியில் 2½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (பகுதியாகவும் பிரித்து விற்பனை செய்யலாம்.
தொடர்பு: 0714977019

# மரண அறிவித்தல்

## செ. வேலுப்பிள்ளை கனகசிங்கம்

(முன்னாள் தேணிவாசா பேக்கரி உரிமையாளர்)



செ. வேலுப்பிள்ளை கனகசிங்கம் அவர்கள் நேற்று (01.06.2013) மெல்போர்ன் ஆஸ்திரேலியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை நாகமுத்து தம்பதியரின்சிரேஷ்ட புத்திர னும், தில்லைநாயகி, தனலட்சுமி, காசிநாதன், கிருஸ்ணன், திலகவதி, கமலநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெகநாதன், வசந்தி, நளினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

2ஆம் குறுக்கு வீதி,
பருத்தித்துறை.
021 226 5619

தகவல்:
செல்வி வேலுப்பிள்ளை,
செ. பத்மநாதன்.

# மரண அறிவித்தல்

## கந்தையா சீவரத்தினம்(C.K.S)



கொக்குவிலைப்பிறப்பிடமாகவும் அத்தியடியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சீவரத்தினம் நேற்று (01.06. 2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.06.2013) திங்கட்கிழமை மு.ப. 10.30மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.33, புதியவீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (37937)(07.17)

தகவல்:
குடும்பத்தினர்.

# O+ சிறுநீரகம் தேவை

முப்பத்தைந்து வயதுக்கு கீழ்ப்பட்ட நல்ல திடகாத்திரமானவரின் O+ சிறுநீரகம் உடனடியாகத் தேவை. தானம் செய்ய விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு
072 158 9474 - 0774379599

# யாழ் நகரில் நடைபெறும் வியாபாரத்தில் சிறிய முதலீட்டுக்கு அதிக வருமானம்

★ வியாபார நிலையம் தேவையில்லை.
★ வாடகை இல்லை.
★ வீட்டில் இருந்தவாறும் வருமானம் பெறலாம்.
★ தினமும் வருமானம் பெறலாம்.
அல்லது மாத முடிவில் வருமானம் பெறலாம்.

விவரங்களுக்கு
077 8730129, 0757274217

# Drive your Vehicle

நாங்கள் தருகிறோம் நீங்களே ஓட்டிச் செல்லுங்கள்

கார்கள்
கப்கள்
வான்கள்
பஸ்
லொறி



PEAKING RENT A CAR

அழையுங்கள்
0777484820

No 01, Market lane, Raja veethy , Nallur

# பக்ஸ் மிசின்

ஓரிரு தடவைகள் பாவிக்கப்பட்ட புதிய பக்ஸ் இயந்திரம் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு- 0718977711 (37936)(14.7.9)

# வேலையாள்கள் தேவை

ஆனைக்கோட்டையில் அமைந்துள்ள எமது நிறுவனத்துக்கு கணக்கு ஆய்வாளர் மற்றும் கட்டட வேலைகளை மேற்பார்வை செய்வதற்கும் ஆள்கள் தேவை. (அனுபவம் வாய்ந்தவர்கள் மட்டும்)
குறிப்பு: எமது நிறுவனத்தில் இருந்து 3 கி.மீ. சுற்றளவில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 0777046614- 0776630390 (37930)

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 04.05.2013 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி
அமரர்

## மரகதம் ஆறுமுகம்

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (03.06.2013) திங்கள்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சிற்பனை வீதி,
வேலணை மேற்கு, வேலணை-06. (37935)(14.9.7)

வே.நகுலேஸ்வரன்
குடும்பத்தினர்
T.P-

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும், சபிண்டீகரண அழைப்பும்

அமரர் பரஞ்சோதி பாலகணேஸ்

மண்ணில் 04★07★1971
விண்ணில் 03★05★2013



கெட்டித்தனத்திற்கோர் பாலகணேஸ் - நீ
மட்டில்லா நல்வழியும் காட்டி நின்றாய்
எட்டுத் திக்கிலும் நின் புகழ்
நிலைத்துநிற்கும் - நீ
ஊட்டமாய் நினைத்திட்ட பூதநாதன்
திருவடி சரணம்

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், ஆறுதல் கூறியோருக்கும், வைத்தியசாலையில் உதவி புரிந்தோருக்கும், உள்நாடு வெளிநாடுகளில் இருந்து தொலைபேசி மூலமும், தந்தி மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (02.06.2013) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நிகழும் சபிண்டீகரண கிரியைகளில் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் கலந்து கொண்டு ஆத்மசாந்திக்காக பிரார்த்திப்பதுடன் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறும் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

"...வளவு"
... தெற்கு, கரவெட்டி. (37929)(14.9.7)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மலிந்து வரும் தொற்றா நோய்களிலிருந்து இளைய சந்ததியினரைக் காப்போமா...?

இந்த மாதம்-ஜூன் மாதம்-தேசிய போசாக்கு மாதமாக அரசினால்-சுகாதார அமைச்சினால்- பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. மக்கள் சுகதேகிகளாக வாழ்வதற்கு, நோய் நொடி இன்றி வாழ்வதற்கு, அவர்கள் நாளாந்தம் உட்கொள்ளும் உணவுவகைகள் சமபோசாக்கை தரக்கூடியனவாக இருக்க வேண்டும் என்பது குறித்து மக்களிடையே விழிப்புணர்வை உண்டாக்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கம்.

அதன் பொருட்டே தேசிய போசாக்குக் கொள்கை 1986 ஆம் ஆண்டில் அரசினால் வகுக்கப்பட்டது. எனினும் அது குறித்த விழிப்புணர்வு எதிர்பார்க்கப்பட்ட அளவில் உண்டாகாததால், கடந்த 2010 ஆம் ஆண்டில் தேசிய போசாக்குக் கொள்கை வகுக்கப்பட்டு, மாகாண மட்டத்தில் அதனை வேகமாக முன்னெடுப்பதற்கென விசேட குழுக்களும் இணைப்பு அலகு களும் அரசினால்அமைக் கப்பட்டன.

ஆயினும், மக்கள் சுகநலனுக்கென வருடாந்தம் பில்லியன் ரூபா கணக்கில் மக்களின் வரிப்பணம் செலவிடப்பட்ட போதிலும், 2015 ஆம் ஆண்டில் போசாக்கு உணவு உட்கொள்வதை ஊக்குவிப்பதிலும், நோயாளர் எண்ணிக்கையை குறைப்பதிலும் திட்டமிடப்பட்ட இலக்கு இன்னமும் எட்டப்படவில்லை. இது மிகவும் பாதிப்பானதும் கவலைக்குரியதுமாகும்.

அதனை மனதில் வைத்து, ஜூன் மாதம்-இந்த மாதம்-இந்த வருடத்தின் தேசிய போசாக்கு மாதமாக, அரசினால் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. இவை, சொல்வதற்கும் வாசிப்பதற்கும் பயனுள்ளனவையாகத் தோற்றம் அளித்தாலும், நாட்டு மக்களில் மிகமிகப் பெரும்பான்மையானோர் தொற்று நோய்களை விட, தொற்றா நோய்களாலேயே மிக மிகப் பெரும் எண்ணிக்கையில் பாதிக்கப் படுகிறார்கள் என்ற மிகப் பயங்கரமான நிலை எழுந்துள்ளது. இதனை வேறு எவரும் சுட்டிக்காட்டுவதற்குத் தேவையின்றி நாட்டின் சுகாதார அமைச்சே வெளிப்படுத்தி உள்ளது.

ஆசிய, தென்னாசிய மட்டங்களில் ஒப்பிடும்போது, போசாக்குச் சுட்டெண் எமது நாட்டில், மிகப் பின்னடைந்துள்ளதாக சுகாதார அமைச்சு கவலை தெரிவித்துள்ளது. அதனாலேயோ என்னவோ இந்த ஆண்டுக்கான தொனிப்பொருளாக, தொற்றா நோய்களைத் தவிர்ப்பதன் முக்கியத்தை, அவசர அவசிய, தேவையென வலியு றுத்தி உள்ளது அரசு.

போசாக்கு குறைந்த உணவுகளை, உட்கொள்வதால் நிறை குறைந்த சிசுக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும், ஏனைய குழந்தைகள், சிறுவர்களிடம் வயதுக்கு ஏற்ற வளர்ச்சி இல்லை என்றும் போசாக்குச் சார்ந்த பல்வேறு பிரச்சினைகள் தலைதூக்கி உள்ளதாகவும் சுகாதார அமைச்சுச் சுட்டிக்காட்டி உள்ளது.

அதேவேளை, வயதானவர்கள் குறிப்பாக பெண்கள் மத்தியில் 22 சத வீதத்தினர் மற்றும் பாடசாலைச் சிறுவர்கள் மத்தியில் 15 சத வீதத்தினர் வயதுக்கு விஞ்சிய நிறையுடையவர்களாகக் காணப் படுவதாகவும் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

அவர்களில் மிக மிகப் பலரும் தொற்றா நோய்களால் பாதிப்புறு வதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

நாட்டு மக்களின் போசாக்குக் குறைவால் தொற்றா நோய்களுக்கு அதிக எண்ணிக்கையானோர் ஆளாகுவதாலும், சீனி, உப்பு மற்றும் கொழுப்பு அதிகம் உள்ள எண்ணெய் வகைகளை உட்கொள்வதாலும்-

நீரிழிவு, இரத்த அழுத்தம், இருதயக் கோளாறுகள் போன்ற அதிக பாதிப்புக்களைத் தரும் தொற்றா நோய்களுக்கு, மிகப் பெரும் எண்ணிக்கையானோர் ஆளாகுவது தொற்று நோய்களை விடவும் அதிக பாதிப்பைத் தருகின்றன.

எங்கள் பாரம்பரிய பயிர்களை வளர்த்து, மாச் சத்தும் புரதச் சத்தும் பாதிப்புக்களைத் தராத உணவு மற்றும் காய்கறி வகைகளையும் தாமே வளர்த்து சம போசாக்கு உள்ள உணவு வகைகளை உண்ட எமது முந்திய பரம்பரையினர் மத்தியில் நோய் நொடிகள் மிக மிகக் குறைவாகவே இருந்தன. அவர்கள் திடகாத்திரமுள்ளவர்களாக, சுகதேகிகளாக அதிகூடிய வயது வரை வாழ்ந்ததும் இப்போது சரித்திரம் ஆகிவிட்டது.

உதாரணமாக, அவர்கள் வரகு அரிசிக் கஞ்சியும், சமபோசாக்கு நிறைந்த ஏனைய பயிர்களையும் விளைவித்து, அவற்றின் உற்பத்திகளை உட்கொண்டு தமது சுகநல மட்டத்தை உயர்த்தி வைத்திருந்தனர்.

இப்போதைய இளம் சந்ததியினரும் மற்றவர்களும் ''ஓட்ஸ்'' கஞ்சியையும், அதிக உப்பும், அதிக இனிப்பும் ஏனைய புரத வகைகள் அளவுக்கு அதிகமாக உள்ள இறக்குமதியாகும் உணவுத் தானியங் களையும், ஏனையவற்றையும் கொண்டு வயிற்றை நிரப்பி புதுப்புது நோய்களை விலை கொடுத்து வாங்குகிறோம்.

சிறுநீரக நோய், புற்றுநோய் போன்ற மிகப் பாதகமான உயிர்க் கொல்லி நோய்கள் எங்கள் மத்தியில் மலிந்து வருவதற்கு, எமது மத்தியில் உடல் உழைப்புக் குன்றியமையும் உணவுப் பழக்கங்களை தலைகீழாக மாற்றிக் கொண்டமையுமே மிகப் பிரதான காரணங்கள் என்பதனை எப்போது உணரப் போகிறோம்?

காலம் மாறும் போது, அதனையொட்டி மாற வேண்டியது தவிர்க்க முடியாதது என்பதனை மேலெழுத்தி- எமது மக்களை, குறிப்பாக எதிர்காலச் சந்ததியினரை, இளம் சமுதாயத்தினரை சுகதேகிகளாக வாழ்விக்க இப்போதைய புதிய உணவுப் பழக்கவழக்கங்களில் தேவைக்கு ஏற்ப மாற்றங்களைக் கொண்டு வருவது குறித்து பரிசீலனை செய்வது இன்றி அமையாத ஒன்றாகும்.

மருத்துவர்கள், சமூகவியலாளர்கள், பொது நிலையினர் மற்றும் துறைசார் பிரதிநிதிகள் இது தொடர்பில் அலசி ஆராய்ந்து, கட்டம் கட்டமாக முடிவுகளை எட்டி செயலாக்கத்துக்கான வழித் துறைகளை வகுப்பது அவசியம்.

அதன் போது, ஆழமான வாதப் பிரதிவாதங்கள் எழுந்தாலும், சமகால உணவுப் பழக்கங்களால் எமது மக்களின், எதிர்காலச் சந்ததியினரின் சுகநலம் மிகப் பெரிய அளவில் கெட்டுப் போவதை தடுக்கும் பொறுப்பு எங்கள் எல்லோருக்கும் உரியது என்ற உணர்வுடன், செயற்பட உளங்கொள்ள வேண்டும். அது காலத்தின் தேவை என்பதனை ஊன்றிச் சிந்திப்போமா....?

# ஒற்றையாட்சி அரசியல் சாசனத்தை கூட்டமைப்பு ஏற்பது படுபாதகம்

## கூறுகிறார் ஆனந்தசங்கரி



யாழ்ப்பாணம், ஜூன் 2

சமஷ்டியைக் கைவிட்டு ஒற்றை ஆட்சி அடிப்படையில் ஒரு அரசியல் சாச னத்தை உருவாக்குவதாக ஐக்கிய தேசியக் கட்சி கூறியுள்ளது. இதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற் றுக்கொள்வது என்பது படுபாதகச் செயலாகும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார், தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலா ளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக் கப்பட்டிருப்பதாவது.

ஐக்கிய தேசியக் கட்சி 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் சமஷ் டிக் கொள்கையை முன் வைத்தே போட்டியிட்டது.49 சதவீத மக்களின் ஆதரவு கிடைத்தது.

தந்தை செல்வாவும் இனப்பிரச் சினைக்குத் தீர்வாகச் சமஷ்டியையே முன் வைத்திருந்தார்.

இவ்வாறானதொரு நிலையில் ஐ.தே.க சமஷ்டிக் கொள்கையைக் கைவிட்டு ஒற்றை ஆட்சி அடிப்படையில் அரசி யல் சாசனத்தை உருவாக்குவதாக கூறியுள்ளது.

இதனைத் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் பாராட்டியிருப்பது பல்லாயிரக்கணக்கான உயிர்க ளையும் கோடி பெறுமதியான சொத் துக்களையும் இழந்த தமிழ் மக்க ளுக்குச் செய்யும் படுபாதகச் செய லாகும்.

தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளாத அறிக்கைகளை விடும் சுமந்திரன் பதவி விலக வேண்டும். அல்லது தமிழ்த்தேசிய கூட்டமைப்பு அவரைப் பதவி விலக்க வேண்டும் – என்றுள் ளது. (த-5)

# ஜயலத்தின் பூதவுடலுக்கு ஜனாதிபதி நேரில் அஞ்சலி

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளரும் எம்.பியுமான டாக்டர் ஜயலத் ஜயவர்தனவின் பூதவுடலுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்.

ஜா - எலயிலுள்ள இல்லத்தில் வைக் கப்பட்டுள்ள அன்னாரது பூதவுட லுக்கு ஜனாதிபதிடன் சென்ற மூத்த அமைச்சர்களும், ஆளுங்கட்சி எம். பிக்களும் அஞ்சலி செலுத்தினர்.

அத்துடன், ஐ.தே.க., ஜே.வி.பி. உள் ளிட்ட ஏனைய அரசியல் கட்சிப் பிர முகர்களும் ஜயலத்தின் பூதவுடலுக்கு செலுத்தினர்.

சிங்கப்பூர் மருத்துவமனையொன் றில் சிகிச்சை பெற்றுவந்த நிலை யில் கடந்த வியாழக்கிழமை அதி காலை உயிரிழந்த ஜயலத் எம்.பி யின் பூதவுடல் கடந்த வெள்ளிக் கிழமை அதிகாலை 2.30 மணியள வில் இலங்கைக்குக் கொண்டுவரப் பட்டதை அடுத்து தனியார் மலர்ச் சாலை ஒன்றில் அஞ்சலிக்காக வைக் கப்பட்டிருந்தது.

இதையடுத்து நேற்றுமுன்தினம் காலை ஜா–எலயிலுள்ள அன்னாரது இல்லத்துக்குப் பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டு அஞ்சலிக்காக வைக் கப்பட்டது. இதன்போதே அங்கு நேரடி யாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வருகை செய்து பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தியுள்ளார்.

> “அன்னாரது பூதவுட லுக்கு ஜனாதிபதிடன் சென்ற மூத்த அமைச் சர்களும், ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் அஞ்சலி செலுத்தினர்.

ஜயலத்தின் பூதவுடல் நாளை திங்கட் கிழமையும் அஞ்சலிக்காக வைக்கப் பட்டு திங்கள் பிற்பகல் 3 மணி யளவில் ஜா- எல, வெலிகம் பிட்டிய விலுள்ள பொது மயானத்தில் நல்ல டக்கம் செய்யப்படவுள்ளது.

ஜா- எலயிலுள்ள அன்னாரது இல் லத்தில் வைக்கப்பட்டுள்ள அவரது பூதவுடலுக்கு ஆளும் மற்றும் எதிர்க் கட்சி உள்ளிட்ட ஏனைய அரசியல் கட்சிப் பிர முகர்கள், ஊடகவியலாளர் கள், பெருந்திரளான மக்கள் எனப் பலரும் அஞ்சலி செலுத்தினர்.

# தமிழர்களின் அமைதிக்காக பாடுபட்டு வந்தவர் ஜயலத்

## யாழ்.ஆயர் இரங்கல்

யாழ்ப்பாணம், ஜூன் 2

தமிழர்களின் அமைதிக்காக தொடர்ச்சியாகப் பாடுபட்டு வந்தவர் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தனா என யாழ். ஆயர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி யில் குறிப்பிட்டுள்ளார்.

அந்த இரங்கல் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தனவின் திடீர் மரணச் செய்தி அறிந்து மிகுந்த கவலை அடை கின்றேன்.

சிங்களப் பகுதியைச் சேர்ந்த கத் தோலிக்கரான இவர் நீண்ட கால மாக தமிழ் மக்களின் உரிமைக்காக வும், நீதிக்காகவும் குரல் கொடுத்து வந்தவர்.

தமிழ் மக்களின் விடுதலைப் பய ணத்தில் சிறப்பாக போர்க் காலங் களில் வன்னிப் பகுதிக்கு பயணங் களை மேற்கொண்டு துன்பப்பட்ட மக்களின் அவலங்களை நேரில் அவதானித்து அவர்களின் நல்வாழ் வுக்காகவும் நாட்டின் அமைதிக்காக வும் பாடுபட்டு உழைத்தவர். போரின் போது காணாமற் போன பொது மக்களுக்காக தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வந்தவர்.

மேலும் மருதமடு யாத்திரைத் தலத் தின் மீதும், மடு செபமாலை அன் னையின் மீதும் மிகுந்த பக்தி கொண் டவராக விளங்கி, ஆலயத்தை அழகு படுத்தவும், ஆலயத்தின் பாதுகாப் பைப் பேணவும், இறைமக்கள் திரு யாத்திரைகள் மேற்கொள்ளவும் ஊக்கம் கொடுத்தவர்.

இவரது திடீர் மறைவினால் துயருற் றிருக்கும் அவரின் குடும்பத்தினருக் கும், உறவுகளுக்கும் அனுதாபங்க ளைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்ம சாந்திக்காக மன்றாடு கின்றேன்–என்றுள்ளது. (த-400)

# 5 ஆம் குறுக்கு செப்பனிடல் பூர்த்தியாகவில்லை

குருநகர், ஜூன் 2

யாழ்ப்பாணம் ஐந்தாம் குறுக்கு வீதி செப்பனிடப்பட்டுள்ள போதிலும் இந்தச் செப்பனிடும் பணி பூரண மடையவில்லை. யாழ். வேம்படி மகளிர் கல்லூரி வீதிக்கும் யாழ். சப்பல் வீதிக்கும் இடையே சேதம டைந்த நிலையில் காணப்பட்ட பகுதி மட்டுமே யாழ். மாநகர சபையால் செப்பனிடப்பட்டுள்ளது.

யாழ். பிரதான வீதிக்கும் சப்பல் வீதிக்கும் இடையே சேதமடைந்த நிலையில் காணப்படும் இந்த வீதி யின் இன்னுமொரு பகுதி இதுவரை செப்பனிடப்படாமையால் பயணிப் போர் மிகுந்த சிரமங்களை எதிர் கொள்கின்றனர். (த-81)

# இரத்த பேதியால் ஒருவர் சாவு

> “இரவு உணவு அருந்திவிட்டு படுக் கைக்குச் சென்ற இவருக்கு நள்ளிரவு தொடக்கம் தொடர்ச்சியாக வயிற் றுழைவு ஏற்பட்டதுடன் இரத்த பேதியும் காணப்பட்டது.

தென்மராட்சி, ஜூன் 2

செம்பியன்பற்று பிரதேச வைத்திய சாலையில் மலேரியா தடுப்பு பிரிவு நுண்ணியியலாளர் இரத்த பேதி ஏற்பட்டு மரணமானார்.

இந்தச் சம்பவம் நேற்று சனிக்கி ழமை இடம்பெற்றது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு உணவு அருந்திவிட்டு படுக் கைக்குச் சென்ற இவருக்கு நள்ளி ரவு தொடக்கம் தொடர்ச்சியாக வயிற் றுழைவு ஏற்பட்டதுடன் இரத்த பேதி யும் காணப்பட்டது.

நேற்றுக் காலை செம்பியன்பற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டு மேலதிக சிகிச்சைக்காக சாவ கச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு அம்புலன்ஸில் கொண்டு வரும் வழியில் அவர் மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டது.

செம்பியன்பற்று மருதங்கேணி யைச் சேர்ந்த சின்னையா பரிமேல ழகன் (வயது-60) என்பவரே மரண மானவராவார். இவரது சடலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை சவச்சாலையில் வைக்கப்பட்டுள் ளது. (த-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரைதுறைப்பற்று பிரதேச சபையின் டிராக்டர் மாயம்

முல்லைத்தீவு, ஜூன் 2

கரைதுறைப்பற்றுப் பிரதேச சபைக்குச் சொந்தமான உழவு இயந்திரம் (டிராக்டர்) காணாமற் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

டிராக்டர் காணாமற்போனது எப்போது என்பது பிரதேச சபையினருக்குத் தெரியாது எனத் தெரிவிக்கப்பட்டது.

கரைதுறைப்பற்றுப் பிரதேச சபைக்குத் தேர்தல் நடத்தப்படாமல் செயலாளரின் நிர்வாகத்திலேயே சபை இயங்கி வருகிறது.

பிரதேச சபைக்குச் சொந்தமான பல டிராக்டர்கள் இருக்கின்றன. அண்மையில் வற்றாப்பளை கண்ணகை அம்மன் திருவிழாவுக்காக அவை தேவைப்பட்டபோதே அவற்றில் ஒன்று காணாமற்போனமை தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக கரைதுறைப்பற்றுப் பிரதேச சபையிடம் வடமாகாண உள்ளூராட்சித்திணைக்களத்தினால் விளக்கம் கோரப்பட்டுள்ளது. (ஒ-5)

# இலங்கைப் போர்க் கப்பலை கச்சதீவில் இருந்து அகற்றுக

## மன்மோகனுக்கு வைகோ கடிதம்

சென்னை, ஜூன் 02

கச்சதீவு அருகே சீனப் படகுகளும், இலங்கைப் போர்க்கப்பலில் சீன வீரர்களும் இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன. இது, நமது கடலிலும், பன்னாட்டுக் கடல் பரப்பிலும், இந்தியாவின் இறையாண்மைக்கு விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தல் ஆகும். போர்க் கப்பல்களைக் கொண்டு வந்து நிறுத்துவது ஒரு முன்னோட்ட எச்சரிக்கையே ஆகும். எனவே அவற்றை உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுங்கள் என இந்தியப் பிரதமர் மன்மோகனிடம் கடிதம் மூலம் கோரியுள்ளார் வைகோ.

அவர் தனது கடிதத்தில் மேலும் கூறியிருப்பதாவது:-

கடந்த பல ஆண்டுகளாகப், பன்னாட்டுக் கடல் பரப்பிலும், நமது கடல் பரப்பிலும், தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்பட்டுக் கொல்லப்பட்டு வருகின்றனர். மீன்பிடி படகுகளைச் சேதப்படுத்தி, வலைகளை அறுத்து எறிகின்றனர்.

இந்நிகழ்வுகளை, நான் பல முறை தங்கள் கவனத்துக்குக் கொண்டு வந்து இருக்கின்றேன். இதுவரையிலும், 578 தமிழக மீனவர்கள், இலங்கைக் கடற்படையினரால், மிருகத்தனமாகத் தாக்கிக் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்தியக் கடற்படை, தமிழக மீனவர்களைப் பாதுகாக்கவில்லை. கச்சத்தீவு தமிழகத்துக்குச் சொந்தமானது. தமிழக மீனவர்களின் உரிமைநலன்களைப் பறிக்கின்ற வகையில், 1974 ஆம் ஆண்டு, இந்திய அரசு, கச்சதீவை இலங்கைக்குத் தாரை வார்த்துக் கொடுத்து விட்டது. அதற்காக, இந்திய நாடாளுமன்றத்தின் ஒப்புதலையும் பெறவில்லை.

இது தமிழக மக்களுக்கு இழைக்கப்பட்ட துரோகம் ஆகும். கச்சதீவைத் திரும்பப் பெற்று இந்தியாவோடு இணைக்கவேண்டும் என, மத்திய அரசை வலியுறுத்தி, தமிழகச் சட்டசபை அண்மையில் தீர்மானம் நிறைவேற்றி உள்ளது.

இந்நிலையில், தற்போது, கச்சதீவு அருகே, இலங்கைக் கடற்படையின் போர்க்கப்பல் கொண்டு வந்து நிறுத்தப்பட்டு உள்ளது; நாட்டுப்படகுகளில் மீன்பிடிக்கச் சென்ற தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் அச்சுறுத்தி உள்ளனர். 45 நாள்கள் மீன்பிடித் தடைக் காலத்துக்குப் பிறகு, இயந்திரப் படகு மீனவர்கள் தற்போது கடலுக்குச் செல்லத் தொடங்கி



உள்ளனர்.

எனவே இந்தியப் பெருங்கடலில் இந்தியாவின் நலன்களைப் பாதுகாக்கவும், தமிழக மீனவர்களின் வாழ்வாதாரங்களைப் பாதுகாக்கவும் உரிய நடவடிக்கைகளை இந்திய அரசு மேற்கொள்ள வேண்டும்; இலங்கைப் போர்க்கப்பல்கள் அகற்றப்பட வேண்டும்: அதற்கான நடவடிக்கைகளைத் தாங்கள் மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன்-என்றுள்ளது. (த)

## சாவகச்சேரி வைத்தியசாலையில் புதிய சவச்சாலை பாவனைக்கு

தென்மராட்சி, ஜூன் 2

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் 5 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட சவச்சாலைக் கட்டடம் நேற்றுச் சனிக்கிழமை தொடக்கம் இயங்கத் தொடங்கியுள்ளது.

யாழ்.மாவட்டக் கட்டடத் திணைக்களத்தினால் அமைக்கப்பட்ட கட்டடம் நேற்றுமுன்தினம் வைத்தியசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டதையடுத்து பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரனின் பணிப்பின் பேரில் நேற்றுத் தொடக்கம் பொதுமக்களின் பாவனைக்கு விடப்பட்டுள்ளது.

சவச்சாலையில் சடலங்களைப் பழுதடையாமல் பாதுகாக்கும் குளிரூட்டிகள் விரைவில் பொருத்தப்பட்டுச் சவச்சாலையில் வசதிகள் அதிகரிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (த-9)

## திருநெல்வேலிச் சந்தியில் இரண்டு கடைகளில் திருட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 2



யாழ்.திருநெல்வேலிச் சந்தியில் இராணுவக் காவலரணுக்கு முன்பாக உள்ள இரண்டு வர்த்தக நிலையங்கள் நேற்றுமுன்தினம் இரவு உடைக்கப்பட்டுப் பொருள்கள் திருடப்பட்டுள்ளன எனக் கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

சுமார் 35 ஆயிரம் ரூபா பணம் உட்பட சிகரெட், 25 ஆயிரம் ரூபா பெறுமதியான தொலைபேசி மீள் நிரப்பு அட்டைகள், கண்டோஸ் உட்பட ஒரு கடையில் சுமார் 2 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களும், மற்றொரு கடையிலிருந்து சுமார் 60 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களும் திருடப்பட்டுள்ளன என வர்த்தக நிலைய உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

ஆயினும் இந்தத் தொகையை விட குறைந்த அளவான பொருள்களே திருடப்பட்டுள்ளன. இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. விசாரணைகளை முன்னெடுத்து வருகிறோம் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் கடையைப் பூட்டி விட்டுச் சென்றிருந்ததாகவும் நேற்றுக் காலை வந்து பார்த்த போது பூட்டு உடைக்கப்பட்டு உள்ளிருந்த பொருள்கள் திருடப்பட்டிருப்பதை அவதானித்ததாகவும் உடனடியாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது என்றும் வர்த்தக நிலைய உரிமையாளர்கள் தெரிவித்தனர். (த-4)

# மட்டக்களப்பு நுழைவாயிலில் புத்தரை வைத்தே தீருவேன்

## சுமணரத்ன தேரர் திட்டவட்டம்

மட்டக்களப்பு, ஜூன் 2

மட்டக்களப்பு நகர நுழைவாயிலில் புத்தர் சிலை வைத்தே தீருவேன் என மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இங்கு நான் 16 வருடங்களாக விகாராதிபதியாக இருந்து இன ஐக்கியத்துக்காகப் பணியாற்றுகின்றேன். மட்டக்களப்பு மங்களராமய விகாரைக்கு வரும் வழியை அடையாளப்படுத்த மட்டக்களப்பு நகர நுழைவாயில் அமைந்துள்ள பிள்ளையாரடிப் பகுதியில் புத்தர் சிலை அமைத்து விளம்பரப் பலகை போடுவதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் அனுமதி கேட்டு விண்ணப்பித்தேன். அத்துடன் கொழும்புத் தலைமையகம், மட்டக்களப்பு மாநகர சபை, மண்முனை வடக்கு பிரதேச சபை ஆகியவற்றுக்கும் விண்ணப்பம் அனுப்பி னேன்.

ஆனால் எவ்வித பலனும் இல்லை. நான் புத்தர் சிலையை வைக்க முயல்வது விகாரைக்கான வழியை அடையாளப் படுத்தவே. அனுமதி இன்னும் கிடைக்காததால் இன்னும் நான் வைக்கவில்லை. இலங்கையில் யாரும் எங்கும் வழிபாட்டுத் தலங்களை அமைக்கலாம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இனப் பிரச்சினையைத் தோற்றுவிக்கின்றனர். இவர்கள் மக்களைத் தவறாக வழி நடத்துகின்றனர். பொலநறுவை முதல் மட்டக்களப்பு வரை அனைத்து இடங்களிலும் நான் புத்தர் சிலைகளை நிறுவுவேன்.

இது பௌத்த நாடு. பிக்கு என்ற வகையில் நான் சிலை வைப்பது மக்களுக்குப் போதனை செய்யத்தான்-என்றார். (த-ரி)

## சில தினங்களுக்கு சீரற்ற காலநிலை

கொழும்பு, ஜூன் 02

சீரற்ற காலநிலை இன்னும் சில தினங்களுக்கு நீடிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் நிலவும் தென்மேற்குப் பருவக் காற்று காலநிலையைத் தொடர்ந்தும் நாட்டின் பலபாகங்களில் இடியுடன் கூடிய மழைபெய்யும் எனவும் திணைக்களம் மேலும் கூறியுள்ளது.

இதற்கமைவாக மேல், சப்ரகமுவ, மத்தி மற்றும் தென் மாகாணங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழைக் காலநிலை தொடர்ந்து நீடிக்கும் என்றும் இந்தக் காலநிலை வயம்ப மற்றம் ஊவா மாகாணங்களுக்குப் பரவக்கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுவதாகவும் வளிமண்டலவியல் திணைக்கள வானிலை அதிகாரி சன்ன ரொட்றிக்கோ தெரிவித்துள்ளார். (த)

## சப்ரகமுவ மோதலில் 12 பொலிஸார் காயம்

### 10 பேர் வைத்தியசாலையில்

கொழும்பு, ஜூன் 02

சப்ரகமுவ மாணவர்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தின் போது பொலிஸாருக்கும் மாணவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் 12 பொலிஸார் காயமடைந்துள்ளனர்.

இதில் இரத்தினபுரி சிரேஸ்ட பொலிஸ் அதிகாரி, பலாங்கொட உதவி பொலிஸ் அதிகாரி உள்ளிட்ட 12 பேர் காயமடைந்ததோடு அதில் 10 பேர் பலாங்கொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பொலிஸாரை நோக்கி மாணவர்கள் கல்வீச்சுத் தாக்குதல் நடத்தியதால் இந்தக் காயம் ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

பலாங்கொட - பம்பகின்ன பகுதியில் பதுளை - கொழும்புவீதியை முழுமையாக மறித்து 1000 - 1500 மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதாகவும் நோயாளர்களை ஏற்றிச் சென்ற மூன்று அம்புலன்ஸ் செல்ல முடியாத நிலை ஏற்பட்டதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது. (த)

## திரைப்படமாகிறது ஈழ அகதிகள் அவலம்

யாழ்ப்பாணம், ஜூன் 2

இலங்கைப் போரில் பாதிக்கப்பட்டு இந்தியாவில் தஞ்சம் கோரியுள்ள ஈழத் தமிழர்களின் நலன்புரி வாழ்க்கை அவலங்கள் திரைப்படமாக வெளிவரவுள்ளது.

இயக்குநர் சிவாவின் திரைக்கதை உருவாக்கத்தில் 'சிவப்பு' எனும் பெயரில் இந்தத் திரைப்படம் வெளியிடப்படவுள்ளது.

இலங்கைப் போரின் போது பாதிப்புற்று உயிர் அச்சுறுத்தல்களால் நிம்மதியான வாழ்க்கையைத் தேடி இந்தியாவில் தஞ்சமடைந்துள்ள ஈழத் தமிழர்கள் அங்கு நலன்புரி முகாம்களில் துன்பப்படுகின்றனர்.

சிவப்பு நிறத்தின் பின்னால் இந்த மக்களின் காதல், வறுமை, கோபம், வன்முறை போன்றவற்றை வெளிப்படுத்தும் வகையில் இந்தப் படம் தயாராகிறது.

துரத்தியடிக்கப்பட்ட மக்களின் உள்ளுணர்வுகளின் பிரதிபலிப்பாகவுள்ள இந்தத் திரைப்படத்தில் ராஜீகரன், நவீன், சந்திரா, ரூபா மஞ்சாரி உள்ளிட்ட பலர் நடிக்கின்றனர். (த-14)

### கொக்குத்தொடுவாய் அ.த.க. பாடசாலையின்

## அதிபராக இருந்தவர் மீண்டும் உப அதிபராக!

முல்லைத்தீவு, ஜூன் 02

முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய் அ.த.க. பாடசாலையில் அதிபராகக் கடந்த ஒரு வருட காலமாக கடமையாற்றி இடமாற்றம் பெற்ற க.சுபாஜிதன் மீண்டும் அதே பாடசாலைக்கு நாளை திங்கட்கிழமை முதல் உபஅதிபராக வருகிறார்.

கொக்குத்தொடுவாய் அ.த.க. பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றிய சுபாஜிதன் கடந்த பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி முதல் உப அதிபராகப் பதவி இறக்கப்பட்ட நிலையில் கொக்கிளாய் அ.த.க. பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டார்.

அதையடுத்து கொக்கிளாய் அ.த.க. பாடசாலைக்கு புதிய அதிபராக மா.உதயகுமார் என்பவர் நியமிக்கப்பட்டார். அவர் முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் மா.ராஜகுமாரின் சகோதரர் எனத் தெரிவிக்கப்பட்து.

புதிய அதிபர் நியமனத்தைக் கண்டித்து பெற்றோர், மாணவர்கள் கடந்த வியாழன், வெள்ளிக்கிழமைகளில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்ற சமயத்தில் அங்கு வந்த முல்லைத்தீவு கல்விப் பணிப்பாளர் மா.இராஜகுமார் மீண்டும் சுபாஜிதனை கொக்குத்தொடுவாய் அ.த.க. பாடசாலையில் உப அதிபராகக் கடமையாற்ற அனுமதிப்பதாகத் தெரிவித்தார். இந்த இடமாற்றம் குறித்து நாளை முதல் உபஅதிபராகப் பொறுப்பேற்க உள்ள சுபாஜிதனிடம் கேட்டபோது,

"கடந்த 10 வருடங்களாக நான் கஷ்டப் பிரதேசத்தில் பணியாற்றி வருகிறேன். இடமாற்றம் இங்கு நடந்த ஆர்ப்பாட்டங்கள் உள ரீதியாக எனக்கு பாதிப்பை ஏற்படுத்தி விட்டன. அதே பாடசாலைக்கு வருவது மகிழ்ச்சி தான். உப அதிபராக எனது கடமையை சிறப்புடன் தொடர்ந்து செய்வேன்" - என்றார். (ஒ-ரி)

# கவுணாவத்தையில் ஆடுகள் துடிதுடித்துச் சாவு

யாழ்ப்பாணம், ஜூன் 02

கீரிமலை கவுணாவத்தை நரசிம்ம வைரவர் ஆலயத்தில் நேற்று அதிகாலை ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆடுகள் வெட்டிச் சரிக்கப்பட்டன.

பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து வைரவருக்குப் பொங்கல் பொங்கி படைக்கப்பட்டது. இதன் பின்னர் மாமிசப் படையல் ஆலய முன் மண்டபத்தில் படைக்கப்பட்டது.

முட்டை, கள்ளு, கருப்பணி போன்றவற்றுடன் உணவு படைக்கப்பட்டுப் பின்னர் ஆட்டுக் கடா ஒன்று வெட்டப்பட்டு அதன் தலை படைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஏனைய கடாக்கள் தொடர்ச்சியாக வெட்டிச் சரிக்கப்பட்டன. இதனை விட முந்நூறுக்கும் மேற்பட்ட சேவல்களும் பலியிடப்பட்டன.

இந்த நிகழ்வில் வெட்டப்பட்ட கடாக்கள் 30 ஆயிரம் முதல் ஒரு லட்த்து 30 ஆயிரம் ரூபா வரை ஏலம் போனது. இந்த வேள்வியில் சுமார் 20 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர். (த- 5-86-ரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

JANASHAKTHI INSURANCE



## நாகராஜா சுஜீவறூபன்

(சண்டிலிப்பாய் மத்தி, சண்டிலிப்பாய்)

ஆகிய எமது வியாபார உதவி முகாமையாளர் உத்தியோக பூர்வமாக பதவியேற்று மிக குறுகிய காலத்தில் அதிகூடிய வியாபார நடவடிக்கையை மேற்கொண்டமையால் ஜனசக்தி காப்புறுதி கம்பனி அவரை சிறந்த வாடிக்கையாளர் சேவை வழங்குநர் என கௌரவித்து வாழ்த்துகின்றது.

வாழ்த்துவோர்:
ஜனசக்தி யாழ் பிராந்தியம்.

(37912)(10,6)

# மரண அறிவித்தல்

## திருமதி நாகையா இராசமலர் (மம்மி)

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும்,வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகையா இராசமலர் (மம்மி) 31.05.2013 வெள்ளிக் கிழமை சிவபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற நாகையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வைத்தியர் இராசேந்திரம், சத்தியபாலன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், தெய்வேந்திரராசா(ஓய்வூதியர்-கனடா), காலஞ்சென்ற இரத்தினேஸ்வரி (கிளி) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற பூபாலசுந்தரத்தின் (ஓய்வுபெற்ற பிரதம லிகிதர்)அன்பு மாமியும், சுபைதா- ரவீந்திரன்(Royal Bank-Canada), கலாநிதி ஐங்கரன்(சிரேஷ்ட விரிவுரையாளர், விஞ்ஞான பீடம், யாழ்.பல்கலைக்கழகம்)- அனுஜா ஆகியோரின் அன்பு பேர்த்தியும்,வைஷகி, பிரணவன், தரனிகா ஆகியயோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மானிப்பாய்,பிப்பிலி இந்து மயானத்தில் 31.05.2013 வெள்ளிக்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மானிப்பாய். பூ.ஐங்கரன்

(337916)(5,6,7)

# உதயன் விளம்பரத் தொடர்புக்கு—

advt@uthayan.com
0215671111

## வாடகைக்கு

வெள்ளவத்தையில் வீடு வாடகைக்கு. குறுகிய காலத்திற்கும், நீண்ட காலத்திற்கும்
தொடர்பு: 077 381 3452, 075 859 0978

## அனெக்ஸ் தேவை

யாழ். பல்கலைக்கழக மாணவிக்கு நல்லூர், திருநெல்வேலி, ஆடியபாதம் வீதி, கோண்டாவில் பகுதியில் அனெக்ஸ் தேவை.
தொடர்பு:
077 157 8532, 077 901 0661

## வேலை வாய்ப்பு

இல.45, புனித மரியா வீதி, கல்கிஸ்ஸையில் அமைந்துள்ள தொழிற்சாலைக்கு பொருள்களை (நெல், அரிசி, சீனி, பால்மா) களஞ்சியசாலைக்கு ஏற்றி, இறக்க 55 வயதிற்கு குறைந்த சுறுசுறுப்பானவர்கள் தேவை. தங்குமிட வசதி, உணவு இலவசம்.

அழையுங்கள்:
0777 483107 (C/8674)

## காணவில்லை



கும்பலை, அளவெட்டி வடக்கைச் சேர்ந்த துரையன் தவமணி என்பவரை (30.05.2013) வியாழக்கிழமை அதிகாலையிலிருந்து காணவில்லை.

கண்டவர்கள் அல்லது தெரிந்தவர்கள் கீழ்க்கண்ட தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு அறியத்தரவும்.

தொடர்பு: 077 250 0457, 077 268 0591, 077 967 2430

உதயன் விளம்பர தொடர்புகளுக்கு:
021 5671111
advt@uthayan.com

# மரண அறிவித்தல்



## பொன்னம்பலம் சர்வானந்தன்

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியைப் பிறப்பிடமாகவும், சுவிஸ்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் சர்வானந்தன் நேற்று முன்தினம் ( 31.05.2013 ) காலமானார். அன்னார் திரு.திருமதி பொன்னம்பலத்தின் ( கல்கமுவா ஸ்ரோஸ் ) அன்பு மகனும், காலஞ்சென்ற திரு.திருமதி பொன்னுத்துரையின் அன்பு மருமகனும், பதிசக்தியின் ( இந்திரா ) பாசமிகு கணவரும், அச்சுதன், அஜந்தன் ஆகியோரின் அன்பு தகப்பனாரும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை ( பிறண்டி ), சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு பேரனும், நித்தியானந்தன், தயானந்தன், சச்சிதானந்தன், காலஞ்சென்ற விபுலானந்தன், கீதா ஆகியோரின் பாசமிகு சகோதரரும், ரஞ்சன், ராஜன், கண்ணன், கலா, பபா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அனனாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னா அறிவிக்கப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்
11C அத்தபத்து மாவத்தை, தெஹிவளை
011 2739934, 0775581442, 0041795105479,0041783206288

லண்டன் / கனடா / அமெரிக்கா / சுவிஸ் / ஜேர்மனி / பிரான்ஸ் / இத்தாலி / டென்மார்க் / அவுஸ்திரேலியா / நியூஸிலாந்து மற்றும் ஏனைய நாடுகளுக்கு செல்ல இருப்பவர்களுக்கு

## வங்கியில் பணவைப்பு

அரச வங்கியில் 3, 6, 12 மாதங்களுக்கான முன் பின் வங்கியில் பணவைப்பு

**Saving Book - FD - Statement**

For: Student | Business | Migration | PR | Visit Family | Dependant | Refused | Visas

077 4789289

விசா பெற்றுக்கொள்வதற்கு தேவையான சகல உதவிகளும் எம்பசி வேலைகளும் செய்து தரப்படும்

No.52, Davidson Road, Colombo -04.
நேரத்தை முன்கூட்டியே பதிவுசெய்துவிட்டு வரவும். (C/8692)

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம். கொழும்பில் Engineer ஆக கடமை புரியும் வயது 32 புனர்பூசம் 3ம் பாதம் பாவம் 15½ உடைய மணமகனுக்கு படித்த அழகிய சிவந்த நற்பண்புகளையுடைய மணமகளை பெற்றோர் எதிர் பார்க்கின்றனர். வெளிநாடும் ஏற்று கொள்ளப்படும். (C/8691)

தொடர்பு : 0112 733669

## வீடு, கடை வாடகைக்கு

யாழ். நகரில் தொழில் புரிவோருக்கும், கல்வி கற்பவர்களுக்கும் சிறந்த வசதிகளோடு மாத அடிப்படையில் அறைகள் வாடகைக்கு உண்டு. (சுற்றுலாப் பயணிகளுக்கும் தங்குமிட வசதிகள் உண்டு) மற்றும் யாழ். K.K.S வீதியில் கடை வாடகைக்கு உண்டு.

தொடர்பு:
077 129 4096, 077 586 1216

## Tours & travels




(C/8616)

HOTLINE 0727 00 33 66

## தேவை

எமது நிறுவனத்துக்கு வியாபார அனுபவமுள்ள வேலையாள்கள் தேவை. தகுதிக்கேற்ப தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
தொடர்பு: 077 873 0114

## வீடு வாடகைக்கு

யாழ். நகர மத்தியில் இருந்து ஒரு கிலோ மீற்றருக்குள் 10 அறைகள் மற்றும் வசதிகள் கொண்ட மாடி வீடு வாடகைக்கு உண்டு. (நிறுவனங்கள் விரும்பத்தக்கது)
தொடர்பு: 077 781 3646

## விலைக்குத் தேவை

10 Wheel Lorry ஒன்று உடனடியாக விலைக்குத் தேவை.
தொடர்பு: 077 329 4341

## வாரிசு இல்லை என்ற கவலையா?

உடனே தொடர்பு கொள்ளவும்.
சோதிட மாமணி பொ.ம.இராசதுரை
கை.தொ. 077 619 1128,
வீ.தொ. 021 226 4103

## தெல்லிப்பழைச் சந்தியில் கடைகள் வாடகைக்கு

கே.கே.எஸ். வீதி, தெல்லிப்பழைச் சந்தியில் சகல வசதிகளுடன் கடைத் தொகுதியில் கடைகள் வாடகைக்குண்டு.
நிதி நிறுவனங்களுக்கும் ஏற்றது.
தொடர்பு: 077 059 4789

## REPAIRING

சகலவிதமான கணினிகளும் (Laptop & Desktop) CPU, Monitor (LCD, CRT), LED TV, Printer, UPS மற்றும் இலத்திரனியல் உபகரணங்களும் ஒரே நாளில் உடனுக்குடன் பழுதுபார்த்துக் கொடுக்கப்படும். உங்கள் கணினிகளை வீடுகளுக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ வந்து ஒரே நாளில் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்.

சகலவிதமான கணினி உதிரிப்பாகங்களை குறைந்த விலையில் கூடிய உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ளலாம்.

NORTH LEAD COMPUTER SALES & SERVICE
No. 338, Stanly Road, Jaffna
(ஆரியகுளம் சந்திக்கு அருகில்)

Tel : 222 4459, Mob : 0772533390, Fax : 222 4460

# பணியாளர் தேவை

## பணிநிலை-பிரதேச விற்பனை முகாமையாளர்

பிரபல சிமெந்து ஏக விநியோக நிறுவனம் ஒன்றின் வடமாகாண கிளையினருக்கு பிரதேச விற்பனை முகாமையாளர்கள் தேவையாக உள்ளனர். பின்வரும் பிரதேசங்களை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

வடமராட்சி பிரதேச செயலர் பிரிவு:(பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி)
தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவு:(சாவகச்சேரி)
தீவகம் பிரதேச செயலர் பிரிவு:(வேலணை, ஊர்காவற்றுறை, காரைநகர், நெடுந்தீவு)
மன்னார் மாவட்டம்

### விண்ணப்பதாரர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் தகுதிகள்

1. மேற்குறித்த பிரதேசங்களை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டிருத்தல் வேண்டும்.
2. மோட்டார் சைக்கிளுக்கான சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருத்தல் வேண்டும்.
3. சந்தைப்படுத்தல் துறைசார்ந்த தொழில் முன் அனுபவம் உள்ளவராக இருப்பின் வரவேற்கத்தக்கது.

### சம்பளத்திட்டமும் சலுகைகளும்

* அடிப்படைச் சம்பளம் 25,000+ மேலதிக விற்பனைத்தரகு
* பணி நிமித்தமான வாகன வசதிகள், தொலைத் தொடர்பாடல் வசதிகள் என்பன நிறுவனத்தால் வழங்கப்படும்
* விண்ணப்பதாரியின் ஏனைய வரையறைகள் பேசித் தீர்மானிக்கப்படும்.

தலைமைக்காரியாலயம்:
ஈஸ்வரபகவான் &கம்பனி
வரையறுக்கப்பட்ட நிறுவனம்
102C இடாம் வீதி,
கொழும்பு 12,
011 243 8244

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
வட பிராந்தியக் காரியாலயம்
ஈஸ்வரபகவான் & கம்பனி
வரையறுக்கப்பட்ட நிறுவனம்
இல.91,ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். 021 222 7603

(37911)(6,7,11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## CAMBRIDGE MANAGEMENT COLLEGE

French, Deutsch, IELTS, Sinhala & English
வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
021 222 1818 / 075 975 1818
(37867) 23, கச்சேரிநல்லூரர் வீதி , யாழ்.

## காணி விற்பனை

ராமலிங்கம் வீதியில் அமைந்துள்ள முடமாவடிக்கும் பூங்கனிச்சோலைக்கும் இடையில் 3½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:077 284 1195
(37842)(6.11)

## வீடு காணி விற்பனை

உடுவில், மானிப்பாய் வீதியில் உடுவில் மகளிர் பாடசாலைக்கு அருகில் (Love Lane)துன்மலை வீதியில் இல.44, இல் அமைந்த 5 பரப்புக் காணியும் பெரிய வீடும் விற்பனைக்குண்டு.
தொடர்பு :
0112725974 / 0773 792 193 / 0770 868 517

## கடை வாடகைக்கு

கிளிநொச்சியில் A9 பாதையில் கச்சேரிக்கு முன்பாக உள்ள புகையிரத நிலைய வீதியில் இரண்டு கடைகள் வாடகைக்கு உண்டு.
தொடர்பு:
077 774 9235, 077 023 6718
(37846)(6.11)

## பஸ் விற்பனைக்கு

HK-XXXX தொடரிலக்கமுடைய அசோக் லேடன் பஸ் வழி அனுமதியுடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 602 6938
(37449)(6.11)

## வாடகைக்கு

பருத்தித்துறை நகரின் மத்தியில் 3 கடைகள் வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 129 8201

## டொல்பின் விற்பனைக்கு

JD, Dual A/C அஜஸ்டபிள் சீற், 172, Alloy wheel, ஓட்டோ நீட்டு மொடல், வெள்ளை நிறம் Five doors உடைய டொல்பின் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 303 9275 (35261)(6.11)

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி ஆடியபாதம் வீதி, பலாலி ஆசிரியர் கலாசாலைக்கு அருகில் சுற்று மதிலுடன் கூடிய 2 பரப்பு 16 குளி கொண்ட காணி விற்பனைக்குண்டு.
(தரகர் தேவையில்லை)
(37828)(6.11) தொடர்பு: 077 670 1600

## ஆசிரியர் தேவை

Cambridge-IGCSE (LONDON A/L) 2013 -NOV பரீட்சைக்கு தோற்றவுள்ள ஒருவருக்கு Mathematics, Physics, Chemistry ஆகிய பாடங்கள் கற்பிக்கக்கூடிய ஆசிரியர்கள் தேவை. வீட்டிற்கு வந்து கற்பிக்கக் கூடியவர்கள் அல்லது ஆசிரியரின் வீட்டுக்கு வந்து கற்கவும் முடியும்.(பட்டதாரி மாணவர்களும் தொடர்புகொள்ளலாம்)
தொ.பே. 077 741 6012, 077 916 9867

## பயிற்சி பெறும் கண் சிகிச்சை உதவியாளர் (3 நிலைகள்)

Para-medic தொழிற்துறையில் தமது தொழிலை ஆரம்பிக்கவிரும்பும் பாடசாலை கல்வியை முடித்த மாணவர்களுக்கு இதோ ஒரு பொன்னான வாய்ப்பாகும்.

பின்வரும் தகைமைகள் வேண்டப்படுகின்றன:

- வயது 25ற்கு உட்பட்டவராய் இருத்தல் வேண்டும்.
- க.பொ.த உயர் தரப்பரீட்சை விஞ்ஞானப்பாடத்தில் சித்தியடைந்தவராய் இருத்தல் வேண்டும்.
- எங்களின் எந்தவொரு கிளையிலும் விசேஷமாக வட மாகாணத்தில் பணியாற்றக்கூடியவராய் இருத்தல் வேண்டும்.
- பயிற்சிக் காலத்தின் போது கொழும்பில் தங்கியிருக்கக்கூடியவராய் இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரி தன்நம்பிக்கையுள்ளவராகவும், ஆங்கிலத்தில் அதி திறன் தொடர்பாடல் திறமைக்கொண்டவராகவும், team player ஆகவும் இருத்தல் வேண்டும்.

**வேலைக்கான நேர்காணல் நடைபெறும் ஜூன் 6ம் திகதி காலை 8.30 மணி முதல் உங்கள் சுயவிபரக்கோவையுடன் கீழ்காணும் விலாசத்தித்திற்கு வரவும்.**

VISION CARE OPTICAL SERVICES

முகாமையாளர் - மனிதவள மற்றும் நிர்வாகம்
**வரையறுக்கப்பட்ட விஷன் கெயார் ஒப்டிகல் சேர்விசஸ் நிறுவனம்**
இல: 108, பிறவுண் வீதி யாழ்ப்பாணம்.
0212-221808

www.adinnovations.lk
சி/8673)(6)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 24.03.1951 — உதிர்வு 25.06.2011

அமரர் **சரவணமுத்து இந்திரராசா**
(ஓய்வு பெற்ற இயந்திர இயக்குநர், இலங்கை மின்சார சபை-சுன்னாகம்)
திதி: நவமி 02.06.2013

காலப்புயலில் நீங்களும் காற்றாகி
காலங்கள் ஈராண்டு ஆகிவிட்டதே
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
அப்பா என்றழைக்க நீங்கள் இல்லையே
உங்கள் விழுதுகள் நாம்
என்றும் உங்கள் நினைவுகளுடன்...

ஐயனார் கோயிலடி, மல்லாகம். (37860)(10.6)
குடும்பத்தினர்.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 21 - 03 - 1937



விண்ணில் 06 - 06 - 2010

அமரர் **சந்திரசேகரம் நடேசபிள்ளை**
(ஓய்வுபெற்ற அதிபர், யா/சரசாலை சரஸ்வதி வித்தியாலயம்)

காலத்தின் ஒளிவிளக்காய் எம்மோடு இருந்து இன்று உயிரோடு உயிராய்
கலந்துவிட்ட தெய்வமே அப்பா!
கண்முன்னே வாழ்ந்த காலங்கள் கனவாகிப் போனதுவோ
ஆயிரம் உறவுகள் இருந்தாலும் உங்கள் அன்புக்கு ஈடாகுமோ
மண்ணைவிட்டு விண்சென்று ஆண்டுகள் மூன்று ஆனபோதும்
மண்ணில் நாம் உள்ளவரை மறப்போமா உங்கள் நினைவை
இன்றைய நாளில் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
திருகோணமலை. (37835)(5.8)
குடும்பத்தினர்.

## BOC

மீட்கப்படாத அடகு நகைகளின்
பகிரங்க ஏல விற்பனை

யாழ் மாவட்டத்தில் உள்ள பின்வரும் இலங்கை வங்கி கிளைகளில் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவும் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

| கிளையின் பெயர் | அடகுத் திகதி | ஏல விற்பனைத்திகதி இடம் நேரம் |
|---|---|---|
| யாழ்.2ம் மேற்தரக்கிளை (கொக்குவில் விரிவாக்கற்கிளை உட்பட) | 14.09.2012 ற்கு முன்னர் 6 மாதங்களுக்கும் 14.03.2012 ற்கு முன்னர் 12 மாதங்களுக்கும் அடகு வைக்கப்பட்ட நகைகள் | யாழ்ப்பாணம் அதி மேற்தரக்கிளை யாழ்ப்பாணம் 2013 ஜூன் 15ம், 16ம், 22ம், 23ம் திகதிகளில் காலை 9.00 மணிக்கு (சனி, ஞாயிற்றுக் கிழமைகளில்) |
| சாவகச்சேரி (கைதடி, கொடிகாமம், பளை, பூநகரி விரிவாக்கற்கிளைகள் உட்பட) | | |
| அச்சுவேலி (சிறுப்பிட்டி விரிவாக்கற்கிளை உட்பட) | | |
| நெல்லியடி (கரணவாய் விரிவாக்கற்கிளை உட்பட) | | |
| பருத்தித்துறை (மந்திகை, மருதங்கேணி விரிவாக்கற்கிளைகள் உட்பட) | 16.09.2012 ற்கு முன்னர் 6 மாதங்களுக்கும் 16.03.2012 ற்கு முன்னர் 12 மாதங்களுக்கும் அடகு வைக்கப்பட்ட நகைகள் | பருத்தித்துறை கிளை பருத்தித்துறை 2013 ஜூன் 17ம், திகதி காலை 9.00 மணிக்கு (திங்கட்கிழமை) |
| வல்வெட்டித்துறை | | |
| சுன்னாகம் (புன்னாலைக்கட்டுவன் விரிவாக்கற்கிளை உட்பட) | 17.09.2012 ற்கு முன்னர் 6 மாதங்களுக்கும் 17.03.2012 ற்கு முன்னர் 12 மாதங்களுக்கும் அடகு வைக்கப்பட்ட நகைகள் | வடபிராந்திய காரியாலயம் யாழ்ப்பாணம் 2013 ஜூன் 18ம், திகதி காலை 9.00 மணிக்கு (செவ்வாய்க்கிழமை) |
| மானிப்பாய் (சாவல்கட்டு விரிவாக்கற்கிளை உட்பட) | | |
| காங்கேசன்துறை (அளவெட்டி , இளவாலை விரிவாக்கற்கிளைகள் உட்பட) | | |
| சங்கானை | | |
| யாழ் .மேற்தரக்கிளை (யாழ் கச்சேரி, யாழ் பஸ் நிலையம், யாழ் பிரதான வீதி விரிவாக்கற்கிளைகள் உட்பட) | 18.09.2012 ற்கு முன்னர் 6 மாதங்களுக்கும் 18.03.2012 ற்கு முன்னர் 12 மாதங்களுக்கும் அடகு வைக்கப்பட்ட நகைகள் | வடபிராந்திய காரியாலயம் யாழ்ப்பாணம் 2013 ஜூன் 19ம், திகதி காலை 9.00 மணிக்கு (புதன் கிழமை) |
| காரைநகர் | | |
| ஊர்காவற்றுறை (ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, நயினாதீவு விரிவாக்கற்கிளைகள் உட்பட) | | |
| திருநெல்வேலி (கல்வியங்காடு விரிவாக்கற்கிளை உட்பட) | 19.09.2012 ற்கு முன்னர் 6 மாதங்களுக்கும் 19.03.2012 ற்கு முன்னர் 12 மாதங்களுக்கும் அடகு வைக்கப்பட்ட நகைகள் | வடபிராந்திய காரியாலயம் யாழ்ப்பாணம் 2013 ஜூன் 20ம், திகதி காலை 9.00 மணிக்கு (வியாழக்கிழமை) |
| உரும்பிராய் | | |
| கோப்பாய் | | |

இந்த ஏல விற்பனையை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச்செய்யும் அதிகாரம் வங்கிக்கு உண்டு.

தொலைபேசி இல. 021 222 4683
021 222 3126

செயற்பாட்டு முகாமையாளர்
இலங்கை வங்கி (வடபிராந்தியம்)
வடபிராந்திய காரியாலயம்
ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.

(C/9548)(6)




## நிலப்பதிப்புக் கற்களின் சிறந்த தெரிவுகளுக்கு



**பிரணவன் என்ரபிறைசஸ்**
**பருத்தித்துறைவீதி. நல்லூர்**
**யாழ்ப்பாணம்**
**(சங்கிலியன் சிலைக்கு முன்பாக)**
**0773818799**

[illegible] கொண்ட நிலப்பதிப்புக்கற்களை யாழ், வவுனியா, கிளிநொச்சி, முள்ளியவளை போன்ற இடங்களில் உள்ள காட்சியறைகளில் பார்வை இடலாம். (35253)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'டவ்' வர்த்தக நாமத்தின் சிகையலங்கார அணிவகுப்பு

கண்கவரும் ஆடைகள், டாப்ஸ், கைப்பைகள் மற்றும் காலணிகள் கொண்டு தம்மை பல்வேறு வடிவங்களில் அலங்கரித்துக் கொண்ட 48 அழகிய பெண்களின் கூந்தல் அணிவகுப்பு அண்மையில் சினமன் கிராண்ட் ஹோட்டலில் நடைபெற்றது. யுனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் முன்னணி கூந்தல் பராமரிப்பு வர்த்தகநாமமான டவ், முன்னணி அழகுகலை நிபுணர் நயனா கருணாரத்ன மற்றும் பிரபல நடன அமைப்பாளர் லோ சிங் வொங் ஆகியோரின் புதிய பாணிகள் மற்றும் ஸ்டைல்கள் உள்ளடங்கிய வகையில் "Dove Real Women Real Beauty' சிகையலங்கார அணிவகுப்பு நடைபெற்றது. Real Women எனும் தொனிப்பொருளிற்கமைய, இந் நிகழ்வில் பங்கேற்ற 48 மாடல்களும் வெவ்வேறு தொழிற்துறையை சேர்ந்தவர்களாகவும், அனுபவமற்றவர்களாகவும் இருந்தமை விசேட அம்சமாகும்.

மேலும் இந் நிகழ்வில் டவ் குழுவினர் மூலம் முதற்தடவையாக டவ் ஃபேஸ் வொஷ் (Face Wash) தயாரிப்புகள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டன. டவ் ஃபேஸ் வொஷ் தயாரிப்பிலுள்ள மொய் சரைசர் மில்க் ஆனது ஏனைய சாதாரண ஃபேஸ் வொஷ்களை விட முகத்திற்கு சிறந்த பாதுகாப்பினை வழங்குகிறது. சாதாரண ஃபேஸ் வொஷ்கள் உங்கள் முகத்தின் ஈரப்பதனை பேணுகிறது. ஆனால் டவ் ஃபேஸ் வொஷ் ஆனது உங்கள் முகத்தின் எண்ணெய், அழுக்கு போன்றவற்றை நீக்கி சிறந்த பராமரிப்பினை வழங்குகிறது. மொய்சரைசர் மில்க் ஆனது சருமத்தின் உட்புறம் வரை ஊடுருவி சருமத்திலிருந்து மொய்சரைசர் வெளியேறுவதை தடுப்பதுடன், மிக மென்மையான சருமத்தையும் வழங்குகிறது. இப்: ஃபேஸ் வொஷ் தயாரிப்புகள் Beauty Moisture, Go Fresh மற்றும் Deep Pure போன்ற மூன்று ரகங்களில் சந்தையில் கிடைக்கிறது.




பிரபல அழகுக்கலை நிபுணர் நயனா கருணாரத்ன மூலம் அலங்கரிக்கப்பட்ட சிகையலங்கார அணி வகுப்பு நடைபெற்றது. ஒவ்வொரு பெண்ணினதும் அழகினை வெளிக்கொண்டு வருவதற்காகவே டவ் வர்த்தக நாமம் அர்ப்பணிக்கபட்டுள்ளது என்பதை பங்கேற்ற மாடல்கள் பார்வையாளர்களுக்கு உணர்த்தினர்.

# பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் ஃபினான்ஸ் பி.எல்.சி இன் நான்கு புதிய கிளைகள்

பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் ஃபினான்ஸ் பி.எல்.சி. (PLF) தனது விரிவாக்கத் திட்டத்தின் ஒரு பகுதியாக ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த வெலிமடை, வெள்ளவாய, மொனராகல, களுவாஞ்சிக்குடி ஆகிய இடங்களில் நான்கு (4) புதிய கிளைகளைச் சமீபத்தில் திறந்துவைத்தது. இந்த நான்கு கிளைகளுடன் PLF வலையமைப்பிலுள்ள கிளைகளின் எண்ணிக்கை 73 ஆக அதிகரித்துள்ளது. சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களில் கவனம் செலுத்தும் அரசாங்கத்தின் பிரதேச அபிவிருத்தித் திட்டத்திற்கு அமைவாகவே PLF தனது விரிவாக்கத் திட்டத்தை மேற்கொள்கிறது. புதிய கிளைகளை PLF பொது முகாமையாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான டி.பி.குமாரகே, உதவிப் பொது முகாமையாளர் லக்சந்த குணவர்தன ஆகியோர் திறந்துவைத்தனர். சம்பந்தப்பட்ட கிளைகளின் ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் ஆதரவாளர்களும் இந்த நிகழ்வுகளில் கலந்துகொண்டனர்.

இலங்கையின் வங்கித்துறை சாராத நிதிச் சேவைகள்



சந்தையில் முன்னணி வகிக்கும் PLF, தனது கிளை வலையமைப்பின் மூலம் பிரதேச ரீதியான வாடிக்கையாளர்களுக்கு லீசிங், வாடகைக் கொள்வனவு, நிலையான வைப்புக்கள், சேமிப்புக் கணக்குகள், கடன்கள், பண மாற்றங்கள், நுண்ணளவு நிதியுதவி, வாகன அணி முகாமை, உத்தரவாதங்கள், பெறுமதி மதிப்பீடு, காணி ஆதன அபிவிருத்தி, காப்புறுதி, இஸ்லாமிய நிதிச் சேவைகள் போன்ற வசதிகளை மிகவும் கவர்ச்சியான நிபந்தனைகளுடனும் விரைவாகவும் வழங்குகின்றது.

புதிய கிளைகளின் ஆரம்பம் பற்றி குமாரகே கருத்து வெளியிடுகையில், கிராமப்புற தொழில் முயற்சியாளர்களுக்கு உதவிக்கரம் நீட்டி, அவர்களைத் தேசிய தொழிற்றுறை அமைப்பில் இணைப்பதும் சேமிப்புக்கள் மற்றும் முதலீடுகளை ஊக்குவிப்பதன் மூலம் பொதுமக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதுமே பிரதேச ரீதியாகப் புதிய கிளைகள் திறக்கப்படுவதன் நோக்கம் என்று கூறினார்.

# ஜனசக்தி நிறுவனத்தின் ஆண்டறிக்கைக்கு விருது

ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தின் 2012ஆம் ஆண்டிற்கான 'A Transformative Spirit' ஆண்டறிக்கையானது உலகளாவிய ரீதியில் 11ஆம் இடத்தினையும், The League of American Communications Professionals(LACP) இன் 2012/13 Spotlight விருதுகளுள் பிளாட்டினம் விருதினையும் வென்றுள்ளது. இந் நிகழ்வில் Cisco System, Intel Corporation மற்றும் Credit Suisse போன்ற சர்வதேச ரீதியில் புகழ் பெற்ற நிறுவனங்களுடன் போட்டியிட்டு 100 இற்கு 99 புள்ளிகளை பெற்று இப் பெருமைக்குரிய விருதினை ஜனசக்தி வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. LACP ஆனது பொருளாதார நிலைமைகளை எதிர்த்து மிதமிஞ்சிய தொடர்பாடல் கூறுகளை வெளிப்படுத்திய ஜனசக்தி நிறுவனத்தினை பாராட்டியது.

இவ்வருட நிகழ்வில் ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தின் 2012ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையானது குறிப்பிடத்தக்க கடும் போட்டியை வழங்கியிருந்தது' என LACP இன் முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்டீன் கெனடி தெரிவித்தார். மேலும் அவர் கூறுகையில், 2012/13 Spot Light விருதுகளிற்கு சுமார் பன்னிரண்டு நாடுகள் மற்றும் 200 நிறுவனங்களிடமிருந்து 800 க்கும் அதிகமான சமர்பித்தல்கள் கிடைக்கப் பெற்றன. ஒட்டுமொத்த மாக 100 இற்கு 99 மதிப்பெண்களை பெற்ற இப்பணியை சிறப்புமிக்கதாக கருதினோம். இத் திட்டத்தின் ஊடாக பொருத்தமான நபர்களுடனான தொடர்பு, மிகப் பொருத்தமானதும், சரியான தகவல்களை வழங்குவதன் ஊடாகவும்; இலக்கு பார்வையாளர்களை கவர முடிவதுடன், இத்திட்டத் தின் வெற்றிக்கும் காரணமாக அமையும் என நாம் நம்புகிறோம்' என்றார்.






விற்பனை ஊக்குவிப்புத் திட்டத்தின் ஓர் அங்கமாக சித்திரைப் புத்தாண்டு பண்டிகைக் காலத்தில் சிங்கர் ஸ்ரீலங்கா நிறுவனம் நடத்திய ''தன நிதான'' பரிசு மழை சீட்டிழுப்பில் வாராந்த வெற்றியாளராக வட மாகாணத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட திருமதி பத்மாவதி நாராயணசாமிக்கு சிங்கர் நிறுவன யாழ்.மாவட்ட முகாமையாளர் தயாளன் விநாயகமூர்த்தி ஒரு லட்சம் ரூபா பெறுமதியான காசோலையை வழங்குவதையும் அருகில் பருத்தித்துறை சிங்கர் ப்ளஸ் முகாமையாளர் ஜெயந்திரன் பத்மநாதன் நிற்பதையும் படத்தில் காணலாம். (ஓ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்

**உங்களுக்கு எப்படி?**

**மேடர்:** குழப்பத்திலிருந்த நீங்கள் இன்று திட்டவட்டமான முடிவுகளை எடுப்பீர்கள். உறவுகளுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**இடபர்:** எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். சகோதர வகையில் இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மனநிறைவு கிடைக்கும்.

**மிதுனர்:** திறமைகளை வெளிப் படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும். புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பயணங்கள் திருப்திகரமாக அமையும். இளவயது நண்பர்களைச் சந்திப்பீர்கள்.

**கடகர்:** எதையும் திட்டமிட்டுச் செய்யப்பாருங்கள். உங்களைப்பற்றி தவறாக சிலர் பேசினாலும் அதற்காக வருத்தப்படாதீர்கள். கோபத்தால் இழப்புகள் ஏற்படும். உத்தியோகத்தில் தானுண்டு தன் வேலையுண்டு என்றிருக்கப் பாருங்கள்.

**சிங்கர்:** மனநிறைவுடன் சில காரி யங்களைச் செய்து முடிப்பீர்கள். முன் கோபம் விலகும். அரசுப்பணிகள் சுமு கமாக முடியும். வேற்று மதத்தினரால் ஆதரவு கிடைக்கும். அயல் வீட்டாரின் அன்புத் தொல்லைகள் விலகும்.

**கன்னி:** நட்பு வட்டாரம் விரிவடை யும். கடன் பிரச்சினைகளுக்கு மாற்று வழி காண்பீர்கள். வெளியூரிலிருந்து நற்செய்திகள் வந்துசேரும். உத்தியோ கத்தில் உங்களின் திறமையை மேலதிகாரி புரிந்து கொள்வார்கள்.

**நாளை**

*வைகாசி-20 திங்கட் கிழமை 03.06.2013*
*திதி: தசமி பி.ப.04.31 வரை*
*நட்சத்திரம்: திருவாதிரை பி.இ. 01.36 வரை*
*சுபநேரம்: 11.52 - 01.22 வரை*
*இராகுகாலம்: 07.22 - 08.52 வரை*

**துலாயர்:** பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். அரசியல்வாதிகளின் சந்திப்பு நிகழும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர் கள். புண்ணிய தலங்களுக்குச் சென்று வருவீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விறைந்து முடிப்பீர்கள்.

**விருச்சிகர்:** தன்னம்பிக்கை பிறக்கும். விடாப்பிடியாகச் செயற்பட்டு சில வேலை களை முடிப்பீர்கள். பணப்பற்றாக் குறை நீங்கும். உத்தியோகத்தில் மகிழ்ச்சி தங்கும். பயணங்களால் ஆதாயம் உண்டு.

**தனுசு:** மனதில் பட்டதை பளிச்சென்று பேசுவீர்கள். உறவினர்களால் மன நிம்மதி கிடைக்கும். பணப்பற்றாக்குறை நீங் கும்.வியாபாரத்தில் பரபரப்பான சூழல் ஏற் படும். வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும்.

**மகரர்:** சொன்ன சொல்லைக் காப்பாற்ற பரபரப்புடன் செயற்படுவீர்கள். மனதுக் குப்பிடித்தவர்களுக்காக அதிகம் செலவு செய்வீர்கள். முன்கோபத்தைத் தவிர்ப்பீர்கள்.

**கும்பர்:** வேலைச்சுமை இருந்துக் கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர் கள். மற்றவர்கள் விடயத்தில் அநாவசிய மாக தலையிடாதீர்கள். சிலரின் நய வஞ்சக செயலை நினைத்து வருந்துவீர்கள். உத்தி யோகத்தில் அதிகாரிகளிடம் வளைந்து கொடுத்து போவது நல்லது.

**மீனர்:** சில காரியங்களை அலைந்து. திரிந்து முடிக்க வேண்டி வரும். எதிர்பார்த்த உதவிகள் தாமதமாக கிடைக்கும். சாலை களை கவனமாகக் கடந்து செல்லுங் கள். உத்தியோகத்தில் பணிகளை போராடி முடிப்பீர்கள்.

# சுடோக்கு

**எண் விளையாட்டு**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | | | 9 | 6 | | | | |
| | 5 | 9 | | 8 | 4 | 6 | | |
| 2 | 3 | | 7 | | 5 | | 8 | |
| | | | | | | 3 | 4 | 2 |
| 3 | | | | | | | | 8 |
| 7 | 8 | 1 | | | | | | |
| | 1 | | 4 | | 9 | | 5 | 3 |
| | | 4 | 8 | 3 | | 7 | 9 | |
| | | | | 5 | 7 | | | 1 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 7 | 8 | 9 | 6 | 3 | 2 | 1 | 5 |
| 1 | 5 | 9 | 2 | 8 | 4 | 6 | 3 | 7 |
| 2 | 3 | 6 | 7 | 1 | 5 | 9 | 8 | 4 |
| 9 | 6 | 5 | 1 | 7 | 8 | 3 | 4 | 2 |
| 3 | 4 | 2 | 5 | 9 | 6 | 1 | 7 | 8 |
| 7 | 8 | 1 | 3 | 4 | 2 | 5 | 6 | 9 |
| 6 | 1 | 7 | 4 | 2 | 9 | 8 | 5 | 3 |
| 5 | 2 | 4 | 8 | 3 | 1 | 7 | 9 | 6 |
| 8 | 9 | 3 | 6 | 5 | 7 | 4 | 2 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு [illegible]

# மரண அறிவித்தல்

## செல்லப்பா இராஜேஸ்வரன்



### (ராசன் மாமா, எலக்ரீசியன்)

வீமன்காமம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், கலட்டி லேன், கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா இராஜேஸ்வரன் 28.05.2013 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - சிதம்பரம் தம்பதியரின் அன்பு மருமகனும், நகுலாம்பிகையின் அன்புக் கணவரும், தனுஷன் (கனடா), அனுஷன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், தக்ஷாயினியின் அன்பு மாமனும், காலஞ் சென்ற புவனேஸ்வரி மற்றும் மகேஸ்வரி (நோர்வே), காலஞ்சென்ற மகேஸ்வரன் மற்றும் காந்திமதி (டென்மார்க்), சுந்தரேஸ்வரன் (வரன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், அன்னம்மா, கமலாம்பிகை (கனடா), காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் தவராசா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.06.2013) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **ராசன் மாமி** (மனைவி),
**தனுஷன், அனுஷன்** (பிள்ளைகள்),
**தக்ஷாயினி** (மருமகள்),
**சுந்தரேஸ்வரன்** (வரன் - சகோதரன்)

கலட்டி லேன்,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில் (2.6)(37874)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 118

## தாய்ப்பாலூட்டலின் முக்கியத்துவமும் அதனை ஊக்கப்படுத்துதலும்

ஒரு குழந்தை பிறக்கும் போதே, இயற்கையாக அதன் ஓர் உணவாகத் தாய்ப்பால் அமைகிறது. குழந்தைக்கு ஏற்றவகையில் தாய்ப்பால் எல்லாப் பதார்த்தங்களையும் கொண்டுள்ளது. தாய்ப்பாலுக்கு ஈடாக வேறு எந்தப் பாலும் அமையாது. தாய்ப்பாலூட்டலானது குழந்தைக்கு எவ்வளவு முக்கியமானதோ, அதேபோன்று தாய்க்கும், அவர்களுடைய குடும்பத்துக்கும் பல நன்மைகளை அளிக்கின்றது.

**குழந்தைக்கு கிடைக்கும் நன்மைகள்**

1. குழந்தைக்கு தேவையான அளவில் அனைத்து சத்துக்களும் தாய்ப்பாலில் உண்டு. எனவேதான் தனித் தாய்ப்பாலூட்டல் முதல் ஆறு மாதங்களுக்கு பரிந்துரை செய்யப்படுகின்றது.
2. தாய்ப்பாலிலுள்ள நோய் எதிர்ப்பு பதார்த்தங்கள், குழந்தையை இலகுவில் தொற்றக்கூடிய நோய்களிலிருந்து பாதுகாக்கின்றது. குறிப்பாக வயிற்றோட்டம், குடல் சார்ந்த நோய்கள், சுவாசத்தொகுதி தொற்றுநோய்கள் என்பவற்றிலிருந்து பாதுகாப்பளிக்கின்றது. இந்த நோய் எதிர்ப்பு சக்தியை தாய்ப்பாலைத் தவிர வேறு எந்தப் பாலிலும் பெற்றுக்கொள்ள முடியாது.
3. குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களில் பிறந்த தாய் பாலருந்தாத குழந்தைகள் நிறைகுறைந்த குழந்தைகளாகவும், வசதிபடைத்த குடும்பங்களில் பிறந்த தாய்ப்பால் அருந்தாத குழந்தைகள் அதிக நிறை (obesity) உடையவர்களாகவும் காணப்படுவார்கள். இவ்விரு சந்தர்ப்பங்களிலும் குழந்தைக்கு நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகரிக்கிறது. அதிக நிறையுடைய குழந்தைகளுக்கு பின்னர், இருதய வருத்தங்கள், சலரோகம், ஆஸ்துமா போன்ற நோய்கள் ஏற்படலாம். அதேபோல் நிறைகுறைந்த பிள்ளைக்கு தொற்று நோய்கள் ஏற்பட வாய்ப்புண்டு.
4. தாய்ப்பாலானது, குழந்தைக்கு ஏற்படும் ஒவ்வாமை சம்பந்தமான நோய்களிலிருந்து (ஆஸ்மா, எக்சிமா, பீனிசம்) பாதுகாப்பளிக்கின்றது.
5. தாய்ப்பால் அருந்தும் குழந்தை ஆரோக்கியமாக வளர்வதுடன், அதற்கு தாயின் அன்பும், அரவணைப்பும் எப்போதும் கிடைக்கிறது.

**தாய்க்கு கிடைக்கும் நன்மைகள்**

1. தாய்ப்பாலூட்டிய தாய்க்கு, தாய்ப்பாலூட்டாத தாயைவிட மார்பு புற்றுநோய்க்கான வாய்ப்பு மிகவும் குறைவாக காணப்படுகிறது. எனவே தாய்ப்பாலூட்டல் மார்பகப் புற்றுநோயிலிருந்து பாதுகாக்கின்றது.
2. தாய் மீண்டும் கர்ப்பந்தரிப்பது தாமதமாகும். எனவே தாய்ப்பாலூட்டலானது ஓர் இயற்கையான கர்ப்பத்தடை முறையாகும்.
3. பிள்ளைபெற்ற தாயின் உடற்பருமன் குறைந்து, சாதாரண உடலமைப்பும், அழகும் விரைவில் கிடைக்கும்.
4. தாய்ப்பாலூட்டலின் மூலம், தாய்க்கு வயதான காலத்தில் ஏற்படும் எலும்புமுறிவு, எலும்பு மென்மையடைதல் (osteoporosis) போன்றவை ஏற்படும் வீதம் குறைவடைகின்றது.
5. தாய்ப்பாலூட்டும் தாய்க்கு, குருதிச்சோகை ஏற்படுவதற்கான வாய்ப்பும் குறைகின்றது.
6. மேலும் தாய்க்கு, பிள்ளை மீதான பாசப் பிணைப்பு அதிகரிக்கும்.

**குடும்பத்துக்கு கிடைக்கும் நன்மைகள்**

1. தாய்ப்பாலானது, பணம் கொடுத்து வாங்கும் பொருளல்ல. எனவே பணச்செலவு ஏற்படாது.
2. பாலைத் தயாரிப்பதற்கு உபகரணங்களோ, நேரமோ தேவைப்படாது.
3. தாய்ப்பால் தூய்மையான முறையில் கிடைப்பதாலும், தாய்ப்பால் அருந்தும் குழந்தை ஆரோக்கியமாக இருப்பதாலும், வைத்திய செலவுகளோ; தந்தை வேலைக்குச் செல்லாமல் இருக்க வேண்டிய தேவையோ ஏற்படாது. எனவே குடும்பத்தில் பிரச்சினைகளின்றி மகிழ்ச்சி நிலவும்.

இது போன்ற காரணங்களால் தான், தனித்தாய்ப் பாலூட்டல் ஆறு மாதம் வரைக்கும் பரிந்துரை செய்யப்படுகிறது. முதல் ஆறு மாதங்களுக்கு தாய்ப்பாலைத் தவிர வேறு பானமோ, உணவோ, நீரோ சாதாரணமான ஒரு குழந்தைக்கு தேவைப்படாது. குழந்தைக்கோ அல்லது தாய்க்கோ மருத்துவ ரீதியான பிரச்சினைகள் ஏற்படின் மட்டுமே மருத்துவர்கள் மாற்று பாலூட்டலை பரிந்துரை செய்வார்கள்.

குழந்தைக்கு தேவையான போதெல்லாம் தாய்ப்பாலூட்டலாம். ஆனால் ஆறு மாதம் முடிந்தவுடன் மிகை நிரப்பு ஆகாரங்கள் புகட்ட வேண்டும். அப்போது தாய்ப்பால் கொடுக்கும் தடவைகள் குறைவடையும். எனினும் குழந்தைக்கு இரண்டு வயது வரை தாய்ப்பாலூட்டல் தொடர்வது சிறந்தது.

**தாய்ப்பாலூட்டலை ஊக்குவிக்கும் முறைகள்**

1. குழந்தை பிறந்தவுடன் தாயும் குழந்தையும் தோலிற்கு தோலான தொடுகையுடன் ஒன்றாக இருக்க இயலுமானவரை முயலவேண்டும். அதனால் குழந்தை முதல் ஒரு மணி நேரத்துக்குள் தாய்ப்பாலை பருகக் கூடியதாக இருக்கும்.
2. இயலுமானவரை தாயையும் குழந்தையையும் தேவையின்றி பிரித்து வைத்திருத்தலாகாது.
3. மருத்துவக் காரணமின்றி தாய்க்கு நித்திரை உண்டாக்கும் வலி மருந்துகளையோ, சிசேரியன் சத்திரசிகிச்சையையோ தவிர்க்க வேண்டும்.
4. தாய்க்கு குழந்தை பால் அருந்த ஆயத்தமாகும் அறிகுறிகளை தெரியப்படுத்த வேண்டும். அது மட்டுமல்லாமல், சுகாதார சேவையாளர்கள் தாய்ப்பாலூட்டும் சரியான முறைகளை கற்பிக்க வேண்டும். குறிப்பாக -முதல் பிரசவத்தின் பின்னர், தாய்ப்பாலூட்டலுக்கு நிறைய உதவிகள் செய்ய வேண்டும்.

தாய், குழந்தைக்கு தேவையேற்படும் போதெல்லாம் தாய்ப்பாலூட்ட வசதி செய்து கொடுப்பதுடன், எதுவித சூப்பிகளையோ, போத்தலையோ அல்லது குழந்தையின் அழுகையை நிறுத்த வாயில் எந்தப் பொருளை கொடுக்கக் கூடாது.
தாய்ப்பாலூட்டலின் நன்மைகள் பற்றி தாய்மாருக்கு அறியச் செய்ய வேண்டும்.
சுகாதார நிலையங்களில் சுகாதார சேவையாளர்கள் மற்றும் பால் சம்பந்தமான ஊக்குவிப்பை விளம்பரப்படுத்தக் கூடாது.
வேலைக்குச் செல்லும் தாய்மார், தாய்ப்பாலூட்டலைத் தொடர்வதற்காக பெரும்பாலான நிறுவனங்களில் பாலூட்டும் நேரத்திற்கான விடுப்பு கொடுக்கப்படுகிறது. மேலும் வேலைக்குச் செல்ல முன்னர் தாய்ப்பாலை ஒரு கிண்ணத்தில் எடுத்து, தாய் இல்லாத போதும் வீட்டில் உள்ளோர் குழந்தைக்கு கிண்ணம் மூலம் பருக்கலாம். அதற்காக தாயை ஊக்கப்படுத்த வேண்டும்.
தாய்ப்பாலூட்டும் தாயின் போசாக்கும் முக்கியமானதாகும். தாய் சத்துள்ள உணவுகளை உட்கொள்வதுடன் அதிகளவு நீராகாரங்களையும் எடுக்க வேண்டும். அப்போதுதான் போதியளவு தாய்ப்பால் பிள்ளைக்குக் கிடைக்கும்.
மேற் கூறப்பட்ட வழிமுறைகள் மூலம் தாய்ப்பாலூட்டலை ஊக்குவித்து ஆரோக்கியமான குழந்தையை வளர்த்துக் கொள்ள வழியுண்டு.

*Dr. ந.ஸ்ரீசரவணபவானந்தன்*
*குழந்தை வைத்திய நிபுணர்*
*போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்*

## கவனமற்ற பிளாஸ்ரிக் பாவனை சுகாதாரத்துக்கு தீங்கானது

இன்றைய வாழ்வில் பிளாஸ்டிக் பொருள்களின் உபயோகம் தவிர்க்கமுடியாத ஒன்றாகிவிட்டது. எனினும் தொடர்ந்து உணவு விடயத்தில் நீண்டநாள் பிளாஸ்ரிக் பொருள்களின் உபயோகம் ஆபத்தானது.
அத்துடன் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுகமாக பல்கி பெருகிவரும் கேளிக்கை சாதனங்கள் – உதாரணமாக ரேடியோ, ரீவி, கணினி, வோக்மேன், ஐபாட் போன்ற பல புதிய பொருள்கள் இவை எல்லாம் நம்மை சந்தோசமாக வைத்திருக்கும் என்ற அவ நம்பிக்கையிலே மேலும் புதிது புதிதாக சந்தைக்கு வரவழைத்துக் கொண்டு இருக்கின்றோம். எனினும் இவை அனைத்தும் நம்மை இயற்கை சார்ந்த உணவு அற்று பல மணிநேரம் எம்மை வெகு தொலைவில் வைத்திருப்பதால் தேவையற்ற உடல், உள பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புண்டு. (கண் பாதிப்புகள், காது கேளா
மை, மன உளைச்சல்) தொடர்ச்சியான பிளாஸ்ரிக் பாவனையால் சுகாதார பிரச்சினைகள், மற்றும் பிளாஸ்ரிக் பொருள்களை எரிப்பதால் வெளியேற்றப்படும் வாயுக்களால் சுவாசநோய் பாதிப்புக்களும் ஏற்படுகின்றன.
எனவே பிளாஸ்ரிக் பொருள்கள் சில நிமிடம் பயனை தந்து விட்டு சில நூற்றாண்டுகளுக்கு எமக்கும் இந்த மண்ணுக்கும் தீராத தீமையைத் தந்து விட்டு போகின்றன. எனவே பிளாஸ்ரிக் பொருள்கள் பாவனையையும் பாதிப்பையும் குறைப்பதற்கு ஒரு சில ஆலோசனைகள். பிளாஸ்டிக் பொருள்களை அப்புறப்படுத்தும் போது பாதுகாப்பான முறையில் அப்புறப்படுத்துவது உதாரணம். பிளாஸ்ரிக் பைகள்,கழிவு நீர்க் கால்வாய்களை அடைக்கின்றன மண்ணில் புதைந்து நிலத்தடி நீரினை மாசடைய வைக்கின்றன. மரங்களின் வேர்களை வளர முடியாது தடுக்கின்றன. உங்கள் வீட்டிலிருந்து தூரத்தில் கிடங்கில்போட்டு சுவாசத்துக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் எரியுங்கள்.
அல்லது உங்கள் வீட்டில் சேரும் கழிவுகளை மக்கும் குப்பைகள், மக்காத குப்பைகள் என பிரித்து மாநகர துப்புரவு



பணியாளர்களின் ஒத்துழைப்புடன் அப்புறப்படுத்துங்கள். பிளாஸ்ரிக் கழிவுகளையும் ஏனைய கழிவுகளையும் சரியான முறையில் தரம் பிரித்து கழிவு அகற்றும் துப்புரவு பணியாளர்களை கௌரவிக்க வேண்டும்.
உங்கள் குழந்தைகளுக்கு கூடிய அளவுக்கு தாய்ப்பால் ஊட்டுங்கள். கண்ணாடி பால்புட்டிகளை பாதுகாப்பான முறையில் உ[illegible]யுங்கள். பிளாஸ்ரிக் பால் புட்டிகளாயின் தரமான பால் புட்டிகளை கேட்டு வாங்குங்கள்.
அதிக சூட்டுடன் பால் மாவை கரைத்து அதற்குள் விடாதீர்கள்.

உங்கள் வீடுகளில் பிளாஸ்டிக் Jug/cup களில் தொடர்ந்து சுடுநீர் கொதிக்க வைக்கும் போது சில இரசாயனங்கள் வாயுக்கள் நீரில் கலக்க வாய்ப்பு இருக்கிறது. எனவே எப்போதும் ஆபத்து இல்லாத மண் பாத்திரங்களில் நீர் கொதிக்க வையுங்கள். எனினும் பிளாஸ்ரிக் Jug/cup போன்ற அமைப்புடைய மண் பாத்திரங்களை சந்தைகளில் பெறுவது சிரமமாக உள்ளது. எனவே இவற்றை பெறுவதற்கு முயலுங்கள். புதிய முறைகளை கண்டறிய முயலுங்கள்.
விலங்கினங்கள் பொலித்தீன் பைகளை உண்டு மடிகின்றன. அத்துடன் நோய் வாய்படுகின்றன. கலிபோனியாவில் செய்த ஆய்வில் கடலில் வாழும் மீன்களும் பிளாஸ்ரிக் பொருள்களை உண்ணும் போது நோய்வாய்ப்படுகின்றதாகக் கண்டறியப்பட்டுள்ளது.
பிளாஸ்ரிக்கின் நன்மை தீமை பற்றி அறிந்த எமது சமூகத்தில் வாழும் கல்வி மான்கள், விஞ்ஞானிகள், மருத்துவர்கள், எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள், சமூக நலன் விரும்பிகள் அனைவரும் இதற்கான மாற்றத்தை உருவாக்க முயல வேண்டும், உருவாக்க வேண்டும். சட்டங்கள் காகிதத்தில் மட்டும் இல்லாது செயலிலும் செய்து காட்டவேண்டும். மறு சுழற்சி பிளாஸ்ரிக்கை உபயோகப்படுத்தும் போது சூழல் மாசுபடுவது தடுக்கப்படுகின்றது. மறுசுழற்சிக்குரிய பிளாஸ்ரிக்கை நாம் கூடுதலாக உபயோகப்படுத்துவது மிகவும் சிறந்தது. கடைகளுக்கு செல்லும் போது துணிப்பை, கடதாசிப்பையை உபயோகப்படுத்துவதனால் சுகாதாரப் பிரச்சினைகளையும், சூழல் மாசடைவதையும் தடுக்க முடியும்.

எஸ்.சுதாகரன்,
தாதிய உத்தியோகத்தர்,
நீரிழிவுச் சிகிச்சை நிலையம்,
யாழ். போதனா வைத்தியசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

STUDY IN Malaysia

LIMKOKWING UNIVERSITY OF CREATIVE TECHNOLOGY

Limkokwing University of Creative Technology

- Commonwealth Recognized
- Affordable fee
- Foundation to Doctoral Level in many disciplines
- IELTS not required for most programs,
- Sponsorship or Bank balance confirmation not required

**Paneklo**

Skills Development & Creative services (Pvt) Ltd,

Tel : 0814914501 Email : my.education.link@gmail.com (37761)

**ஆதி சக்தி திருமணசேவை**

யாழ் இந்து, செவ்வாய் உள்ள, செவ்வாய் இல்லாத, உள்நாடு, வெளிநாடு ஆண், பெண் மணமக்கள் எம்மிடம் உண்டு.

தொடர்பு: 077 706 8984

**வீடு வாடகைக்கு உண்டு**

ஸ்ரேசன் றோட், கொக்குவிலில் சகல வசதிகளுடன் கூடிய மேல்மாடி வீடு வாடகைக்கு உண்டு.

நிறுவனங்கள் விரும்பத்தக்கது. (37816)(5.6)

தொடர்பு: JJ தூலின், 077 8590969

**விற்பனைக்கு**

4 அடி உயரமுள்ள சவுக்கங்கன்று, 3 அடி உயரமுள்ள மலை வேம்பு, 2 அடி தேக்கங்கன்று மற்றும் பல இன பழ மரக் கன்றுகளும், பூங்கன்றுகளும், பூச்சாடிகளும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: **நியூ லங்கா பாம்**

கே.கே.எஸ் வீதி, இணுவில்.

கிளை: பலாலி வீதி, ஊரெழு மேற்கு.

T.P- 077 612 9343 (37725)(6.11)

**வாகனம் வாடகைக்கு**

TATA 207- Single Lap-PRxxxx

விற்பனைக்கோ/ மாதாந்த வாடகைக்கோ கொடுக்கப்படும்.

தொடர்பு:

077 515 1761

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
06 * 10 * 1933

உதிர்வு
12 * 06 * 2012

### அமரர் கந்தர் துரைசிங்கம் (J.P)

*ஓர் ஆண்டு ஆனதுவோ உங்கள் முகம் கண்டு*
*ஆறவில்லை நம் இதயம்*
*அன்பும் பாசமும் நிறைந்த பொக்கிஷம் நீங்கள்*
*நித்தம் புலம்புகின்றோம் உங்கள் திருமுகம் காணாமல்*
*ஆறவில்லை எங்கள் துயர் உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

(37724)(5.6)

நியூலங்கா பாம்.
கே.கே.எஸ். வீதி. இணுவில்.

*உங்கள் நினைவுடன்*
குடும்பத்தினர்.




**Gateway to Europe**

**Study in Romania**

Educational Fair conducted by the Romanian Government / Romanian Ministry of Education

Romania is an European Union country, located in Southeastern Europe, bordering the Black Sea. Romania is a gateway to all European Union countries. There are 57 Government Universities, including 3 Medical Universities recognized by the Medical Council of Sri Lanka.

Courses Available:

- MD / MBBS
- Oil & Gas
- Engineering
- IT
- Finance
- Many more...

Venue : The Kingsbury Hotel, 10th Floor - Kensington Room, 48, Janathipathi Mawatha, Colombo 01.

Date : 8th of June, 2013

Time : 10.00 am - 5.00 pm

Please call for more information.

+94 11 257 6066
+94 77 262 7070
+94 77 283 7733

Embassy of Romania
25.1, Horton Place, Colombo 7

Honorary Consulate of Romania
Hotel Suisse
30, Sangarajah Mawatha
Kandy, Sri Lanka

TMMP International (Pvt.) Ltd
3rd Floor, Confidence Building No. 5,
St. Anthony's Mawatha, Colombo 03
Tel: +94-11-257 6066
Fax: +94-11-237 0980


# ஓராண்டின் உருக்கமான நினைவஞ்சலி

மலர்வு 24.06.1944 — உதிர்வு 13.06.2012



அமரர்

## சிதம்பரப்பிள்ளை சந்திரலிங்கம்

(இளைப்பாறிய மாவட்ட நீதிமன்றப் பதிவாளர், அகில இலங்கைச் சமாதான நீதிவான் - அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி)

**திதி: அபரபக்க நவமி 02.06.2013**

'அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு' - குறள்

குறளின் பொருள்படவே வாழ்ந்து
எங்கள் குடும்பத்தின் உயர்வுக்கு
நல்வழிகாட்டிய குலவிளக்கே!
ஆசை மனைவிக்கேற்ற பிரியமுள்ள கணவராக
அருமைப் பெற்றோர்க்கோர் அன்புத் தலைமகனாக
அன்புத்தம்பியர்க்கோர் ஆசை அண்ணனாக
நேசத் தங்கையர்க்கோர் நினைவழியாச் சோதரனாக
அருமை மைத்துனர்க்கு நல்ல வழிகாட்டியாக
பெருமை மிகு மைத்துனியர்க்கு பிரியமுள்ள பெரியோனாக
மகிமை மிகு மருமக்களுக்கோர் மாண்புமிகு மாமனாக
கூர்மை மிகு பெறாமக்களுக்கோர் சீரிய ஆசானாக
உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும்
அன்பாலும், பரிவாலும், அளவற்ற பாசத்தாலும்
அரவணைத்து ஆதரவு காட்டிய தோழனே!
தங்களின் உன்னத ஆத்மா சாந்தியடைய மனதாரப் பிரார்த்தித்து
இதய அஞ்சலி செலுத்துகின்றோம்.
ஓம் சாந்தி ஓம்!
உந்தன் பசுமையான நினைவுகளுடன்

செல்வராணி சந்திரலிங்கம் (அன்பு மனைவி)
பெறாமக்கள், சகோதர சகோதரிகள்,
மைத்துனர், மைத்துனிமார், மருமக்கள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

(37845)(10.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உர விநியோகத்தில் தாமதம்

முல்லைத்தீவு, ஜூன் 2
சிறுபோகச் செய்கைக்கான உர விநியோகத்தில் தாமதம் ஏற்பட்டு வருவதாக ஒட்டுசுட்டான் பெரிய குளத்தின் கீழான விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.
நெல்லை விதைத்து ஒரு மாதம் கடந்த நிலையிலும் உர விநியோகம் மேற்கொள்ளப் படாததால் விவசாயிகள் தனியார் கடைகளில் அதிக விலைக்கு உரத்தைக் கொள்வனவு செய்வதாகத் தெரிய வருகின்றது.
கமநல சேவை நிலையத்துக்கு கமக்கார அமைப்பினர் உர விநியோகத்துக்குரிய பட்டியலை அனுப்பி வைக்காமையால் இந்தத் தாமதம் ஏற்படுவதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.
(க-500)

## போரினால் உயிரிழந்தவர்களுக்கான

# சர்வமதப் பிரார்த்தனை கிளிநொச்சியில்




கிளிநொச்சி, ஜூன் 2
கடந்த முப்பது வருட காலமாக இடம்பெற்ற போரினால் உயிரிழந்த உறவுகளை நினைவு கூரும் நிகழ்வு ஒன்று கடந்த 29 ஆம் திகதி கிளிநொச்சியில் இடம்பெற்றது.
நாட்டில் இடம்பெற்ற போர் காரணமாக இனமதபேதமின்றி கொல்லப்பட்ட உறவுகளுக்கான சர்வமத பிரார்த்தனை நிகழ்வு ஒன்றே கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் கடந்த 29 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு நடைபெற்றது.
இந்த நிகழ்வில் வன்னி, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, கண்டி, மன்னார், குருநாகல், பதுளை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் உயிரிழந்தவர்கள், காணாமற் போனவர்களின் உறவினர்கள் என சுமார் 500 க்கும் மேற்பட்டவர் கலந்து கொண்டு சர்வமதப் பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.
இதில் ஆஸ்திரேலியாவில் இயங்கி வரும் கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தினைச் சேர்ந்த மைக்கேல் கலந்து கொண்டார்.
காணாமற் போனவர்களின் உறவுகள், உயிரிழந்தோரின் உறவுகள் எனப் பலரும் ஒன்று கூடி, சர்வமதப் பிரார்த்தனையில் ஈடுபட்டதோடு ஈகச் சுடர் ஏற்றித் தமது உறவுகளை நினைவு கூர்ந்தனர். தொடர்ந்து ஆற்றுப்படுத்தல் நிகழ்விலும் அவர்கள் கலந்து கொண்டனர். (க-6)

## கோட்டக் கல்வி அலுவலகம் 2 இடங்களில்

அக்கராயன், ஜூன் 2
கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளரின் பணிப்புரைக்கு அமைவாக பூநகரி கோட்டக் கல்வி அலுவலகம் இரண்டு இடங்களில் இயங்கவுள்ளது.
இதன் பிரகாரம் திங்கள், செவ்வாய் ஆகிய இரு நாள்களில் ஜெயபுரம் மகா வித்தியாலயத்திலும், வியாழன், வெள்ளி ஆகிய தினங்களில் நல்லூர் மகா வித்தியாலயத்திலும் இந்த அலுவலகம் இயங்கவுள்ளது.
பூநகரி கோட்டக்கல்வி அலுவலர் சு.தர்மரட்ணம் தெரிவித்துள்ளார்.
மேற்படி தினங்களில் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் குறிப்பிட்ட இடங்களில் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளுமாறும் அவர் அறிவித்துள்ளார்.
பூநகரி நல்லூர் மகா வித்தியாலயத்தில் தற்போது கோட்டக் கல்வி அலுவலகம் இயங்கி வருவதாக பூநகரி மேற்கிலுள்ள பாடசாலை ஆசிரியர்கள் போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொண்டு வந்தனர்.
இந்த நிலையில் ஜெயபுரத்தில் கோட்டக்கல்வி அலுவலகத்தின் செயற்பாடுகள் இடம் பெறும் வகையில் வலயக் கல்வி பணிமனையில் மேற்குறிப்பிட்ட ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. (க-18)

# திட்டங்கள் செயலிழந்த நிலையில்

## அக்கராயன், ஸ்கந்தபுரம் பகுதிகளில் ஆரவாரத்துடன் தொடங்கப்பட்ட வேலைகள்

அக்கராயன், ஜூன் 2
அக்கராயன் மற்றும் ஸ்கந்தபுரம் பகுதிகளில் பெரும் ஆரவாரத்துடன் தொடங்கப்பட்ட மூன்று திட்டங்கள் மக்களுக்குப் பயன்தராத வகையில் காணப்படுகின்றன.
ஸ்கந்தபுரம் கிராமத்தில் 60 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட பொதுச் சந்தை அது அமைக்கப்பட்டதன் நோக்கத்தை இழந்து நெல்லைக் காயவிடுவதற்கும் கால்நடைகளின் உறைவிடமாகவும் மாறிக் காணப்படுகின்றது.
ஸ்கந்தபுரம் ஏற்று நீர்ப்பாசனத் திட்டம் ஆரம்ப தினத்துடன் செயலிழந்து போயுள்ளது. இதனால் ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தின் மூலமாக நீர் கிடைக்கும் என்ற விவசாயிகளின் நம்பிக்கை தகர்ந்துள்ளது.
இதைபோன்று அக்கராயன் மகாவித்தியாலயத்தில் உயர்தர வகுப்பில் கணித, விஞ்ஞானபிரிவுகள் ஆரம்பித்து வைக்கப்பட்ட போதிலும் பௌதிகவியல் பாடத்துக்கு மட்டுமே ஆசிரியர் உள்ளார்.
ஏனைய பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லாத நிலை காணப்படுகிறது. இவ்வாறு இங்கு ஆரம்பிக்கப்பட்ட திட்டங்கள் செயலிழந்து காணப்படுகின்றமை மக்களிடையே கவலையை ஏற்படுத்தியுள்ளது.
(க-18)

# 22 குளங்கள் புனரமைப்பு

ஒட்டுசுட்டான், ஜூன் 2
ஒட்டுசுட்டான் கமநலசேவை நிலையத்துக்குட்பட்ட 22 குளங்கள் புனரமைக்கப்படவுள்ளதாக பெரும்பாக உத்தியோகத்தர் ரி.அமிர்தலிங்கம் தெரிவித்தார்.
பல ஆண்டுகளாக புனரமைப்புக்கள் இல்லாத நிலையில் உள்ளன. இவற்றைப் புனரமைப்பதன் மூலமாகப் பல விவசாயிகள் நன்மையடைவதுடன் மேலும் பல ஏக்கர் விவசாய நிலங்களில் பயிர்களைச் செய்கைபண்ண முடியுமென அவர் தெரிவித்தார்.
குளங்களைப் புனரமைப்பதன் மூலமாக தரிசு நிலங்களை விவசாய நடவடிக்கைகளுக்கு உட்படுத்த முடியும். இதனால் பல விவசாயிகள் நன்மை பெறுவர்.
பல விவசாயிகள் பாசன வசதி இல்லாததால் கழிவு நீரைப் பயன்படுத்தியும் சில ஆறுகளை மறித்தும் விவசாயத்தை மேற்கொள்கின்றனர்.
மேலும் பெருமளவு காணிகள் முத்துஐயன்கட்டு குளத்தின் கீழ் செய்கைபண்ணாது காடாக மாறியுள்ளன. எதிர்காலத்தில் குளங்களையும் வாய்க்கால்களையும் புனரமைப்பதன் மூலம் அனைத்து மக்களும் பயன்அடைவர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-500)

## கமக்கார அமைப்புக்களுக்கு ஐந்து நாள் கருத்தரங்கு

ஒட்டுசுட்டான், ஜூன் 2
ஒட்டுசுட்டான் கமநலசேவை நிலையத்திற்குட்பட்ட கமக்கார அமைப்புக்களுக்கான 5 நாள் கருத்தரங்கு ஒட்டுசுட்டான் கமநலசேவை நிலையத்தில் பெரும்பாக உத்தியோகத்தர் ரி.அமிர்தலிங்கம் தலைமையில் இடம்பெற்றது.
கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள் தமது பணியை மக்கள் மத்தியில் எவ்வாறு கொண்டு செல்லுவது, மக்களின் விவசாய நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொள்வது, சேதனைப் பசளை தயாரித்தல், நல்ல நெல் விதைகளை விதைத்து அவற்றைப் பராமரித்து உச்ச விளைச்சலைப் பெற்றுக் கொள்ளுதல் என்பன தொடர்பான விரிவான விளக்கங்கள் துறை சார்ந்த விவசாய உத்தியோகத்தர்களால் இங்கு விரிவாக வழங்கப்பட்டன. (க-500)

# சிரமங்களை எதிர்கொள்ளும் வட்டக்கச்சி மீன் வியாபாரிகள்

கிளிநொச்சி, ஜூன் 2
வட்டக்கச்சி பொதுச் சந்தையில் மீன் வியாபாரத்தில் ஈடுபடுவோர் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.
வட்டக்கச்சி பொதுச் சந்தைக்கான கட்டடம் அமைக்கப்பட்டு 6 மாதங்களுக்கு முன்னர் திறந்து வைக்கப்பட்ட போதிலும் வர்த்தகர்களிடம் கையளிக்கப்படாத நிலையே தொடர்கின்றது.
இதனால் வர்த்தகர்கள் இங்குள்ள வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.
இந்த நிலையில் கடந்த 23 ஆம் திகதி வீசிய கடும் காற்றினால் மீன் வியாபாரம் இடம் பெற்று வந்த தற்காலிகக் கொட்டகை தூக்கி வீசப்பட்டுள்ளது. இதனால் மீன் வியாபாரிகள் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.
இந்த நிலையில் கரைச்சிப் பிரதேச சபையின் உத்தியோகத்தர்கள் சந்தை வியாபாரிகளிடம் வரி அறவிடச் சென்ற போது முரண்பாடுகள் ஏற்பட்டதாகத் தெரிய வருகின்றது.
மேற்படி சந்தை கரைச்சிப் பிரதேச சபையின் ஆளுகைக்குள் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (க-426)



புதுக்குடியிருப்பு மந்துவில் பிரதேசத்தில் மீள்குடியமர்ந்த குடும்பம் ஒன்று தாம் வசிக்கும் தறப்பாள் கொட்டிலின் முன்னால் இருந்து தமது எதிர்காலம் குறித்து சிந்தித்தவாறு உள்ளனரோ...? (க-6)

# சிறுவர்கள் தொடர்பான செயலமர்வு

வவுனியா, ஜூன் 2
தமிழ், சிங்கள ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களுக்கான சிறுவர் உரிமைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான செயலமர்வுகள் வவுனியா மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினரின் ஏற்பாட்டில் இடம்பெற்றுள்ளன.
சுமார் 350 பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் இந்தச் செயலமர்வுகளில் கலந்து கொண்டனர். இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியிலும் அருந்ததி ஹோட்டலிலும் இந்தச் செயலமர்வுகள் இடம்பெற்றன.
சிறுவர்களைப் பாதுகாப்பதற்காக ஆசிரியர்கள் நடந்து கொள்ள வேண்டிய நடைமுறைகள், பாலியல்சார்ந்த விழிப்புணர்வு, பாடசாலைக் கல்வியை கற்க வரும் சிறுவர்களை வகுப்பறைகளில் பாதுகாப்பாக வைத்திருக்கும் நடைமுறைகள், சிறுவர்களுக்கு ஆபத்து ஏற்படும் போது உடனடியாகத் தகவல் தெரிவிக்க வேண்டிய இடங்கள், தொலைபேசி இலக்கத் தொடர்பு முறை ஆகியன தொடர்பான முக்கிய விடயங்கள் இந்தச் செயலமர்வின் போது ஆராயப்பட்டது. இதில் வவுனியா மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அதிகாரி த.செல்வகுமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.
(க-402)

# ஆசிரியர்கள் இல்லாததால் கற்கைநெறியில் தாமதம்

வன்னேரிக்குளம், ஜூன் 2
கிளிநொச்சி வன்னேரிக்குளம் மகாவித்தியாலயத்தில் உயர்தர வகுப்புக்களில் கலை, வர்த்தக பிரிவுகள் ஆரம்பிக்கப் பட்ட போதிலும் ஆசிரியர்கள் இல்லாததால் கற்கை நெறிகளை ஆரம்பிக்க முடியாதுள்ளதாகத் தெரிய வருகின்றது.
1954 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாடசாலையில் கடந்த 2 ஆம் திகதி தொடக்கம் உயர்தர வகுப்புக்கான கலை வர்த்தக பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் பாடங்களைக் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் இல்லாத நிலையே காணப்படுகின்றது.
கிளிநொச்சி மாவட்டத்தில் கலை வர்த்தக பிரிவுகளில் கற்பிக்கக் கூடிய ஆசிரியர்கள் கிளிநொச்சி நகரிலும் அதனை அண்டிய பகுதிகளிலுள்ள பாடசாலைகளிலும் பணி புரிந்து வருகின்றனர். ஆனால் வன்னேரிக்குளம் கிராமத்துக்கு ஆசிரியர்கள் வராத நிலையே காணப்படுகின்றது.
வன்னேரிக்குளம் மகா வித்தியாலயத்தில் 40 மாணவர்கள் உயர்தர வகுப்புக்களில் இணைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

# தீயினால் எரிந்து நாசமாகிய அழகுசாதன விற்பனை நிலையம்

வவுனியா, ஜூன் 2
வவுனியா ஓமந்தை பகுதியில் உள்ள வர்த்தக நிலையமொன்று தீயினால் எரிந்து நாசமாகியுள்ளது.
ஓமந்தை மத்திய மகாவித்தியாலயத்துக்கு முன்பாக அமைந்துள்ள உணவகத்துக்கு அருகில் உள்ள அழகு சாதனப் பொருள்களை விற்பனை செய்யும் கடையொன்றிலேயே இந்த தீ விபத்துச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.
இதில் 25 ஆயிரம் ரூபா பணம், சுமார் மூன்றரை லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள், உபகரணங்கள் என்பன தீயினால் எரிந்து நாசமாகியுள்ளன. வழமைபோன்று மாலையில் கடையைப் பூட்டிவிட்டு உரிமையாளர் சென்றுவிட்டார். மறுநாள் காலை கடை முற்றாக எரிந்து சாம்பலாக இருப்பதை அவரால் தெரிந்து கொள்ள முடிந்தது.
இது தொடர்பாக கடை உரிமையாளரால் கிராம சேவகருக்கும் பொலிஸாருக்கும் தெரிவிக்கப்பட்டது.
இதேவேளை அயலில் உள்ள கடைக்கும் தீ பரவிய போதிலும் பொருள்களுக்குச் சேதம் ஏற்படவில்லையெனத் தெரிய வருகின்றது. (க-402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய

GlaxoSmithKline

# பற்களில் ஏற்படுகின்ற கூர்உணர்ச்சிக்கு 60 வினாடிகளில்* விடுதலை




அறிமுகமாகின்றது றப்பிட் றிலீவ், விரைவான பலனைப் பெற்றுக்கொள்வதற்கு சென்சொடைன் வழங்கும் புதிய பற்பசை.

கூர்உணர்ச்சி ஏற்படுகின்ற பற்களில் சிறிதளவு பற்பசையை 60 வினாடிகள் வரை பூசவும். அதன் பின்னர் குளிரான அல்லது சூடான ஏதேனும் ஒன்றை உள்ளெடுக்கவும். எவ்விதமான வலியோ அல்லது அசெளகரியங்களையோ நீங்கள் உணர மாட்டீர்கள்.

**நீண்ட கால பாதுகாப்பிற்கு தினமும் இரு தடவை பல்துலக்கவும்.**
மருத்துவரீதியாக நிவாரணி என நிரூபிக்கப்பட்டது. 60 வினாடிகளில் பலனை அளிக்கின்றது.*

SENSODYNE®

*பக்கட்டில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைவாக உபயோகிக்கப்படுதல் வேண்டும். © 2013, GlaxoSmithKline. சென்சொடைன் GlaxoSmithKline கம்பனிகளின் சிறந்த வர்த்தக நாமம் ஆகும்

(0/8684)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாடகமும் அரங்கியலும் ஆசிரியர் கணேசராஜா நெறியாள்கையில் ''ஒய்யாரக் கொண்டை'' எனும் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவரின் மேடை நாடகம் மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளது. நாடகத்தில் பங்கு பற்றிய மாணவர்கள், அதிபர், ஆசிரியர்களுடன். (ஒ)



மாகாண மட்டத்தில் இடம்பெற்ற தமிழ் மொழித் தினப் போட்டியில் சிந்துநடைக் கூத்துப் பிரிவில் முதலாவது இடத்தைப் பெற்றுக் கொண்ட பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி மாணவர்கள். (க-28)



குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் சிறுவர்களுக்கு உறுதிப்பூசுதல் வழங்கும் சடங்கு யாழ். ஆயரால் அண்மையில் நிறைவேற்றப்பட்டது. இந்தச் சடங்கில் யாழ். ஆயருடன் பூசைப் பலியில் பங்கேற்ற குருக்களையும் உறுதிப் பூசுதல் பெற்றுக் கொண்ட பெண் பிள்ளைகளில் ஒரு பகுதியினரையும் காணலாம். (ஒ-51)



இளவாலை, சண்டிலிப்பாய்க் கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற மெய்வன்மைப் போட்டியில் 11 வயதின் கீழ் பெண்களுக்கான போட்டியில் இளவாலை பெரியவிளான் றோ.க.த.க. பாடசாலையைச் சேர்ந்த ரவிச்சந்திரன் ஜெசீபா சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.சிவானந்தராஜா ஜெசீபாவுக்கு வெற்றிக் கிண்ணத்தை வழங்கிக் கௌரவிக்கின்றார். (ஒ)



நுணாவில் மத்தியைச் சேர்ந்த க.தம்பிநாதன் என்பவரால் தேங்காய் சிரட்டையில் தயாரிக்கப்பட்ட உற்பத்திப் பொருள்களையே காண்கிறீர்கள். (வ-9)



காரைநகர் பிரதேச செயலர் பிரிவு பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டி தியாகராசா ம.ம.வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. போட்டியில் வெற்றியீட்டிய வீரர் ஒருவருக்கு பிரதேச செயலர் திருமதி தே.பாபு வெள்ளிக் கேடயம் வழங்குவதை முதலாவது படத்திலும் 116 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடம்பெற்ற கலாநிதி விளையாட்டுக் கழக வீரர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் மற்றும் அதிகாரிகளுடன் இரண்டாவது படத்திலும் காணப்படுகின்றனர். (ஒ-250)





பாஷையூர் கடற்றொழிலாளர் தமது வலைகளை உலரவைப்பதற்காக பாஷையூர் துறைமுகத்துக்கு அருகில் உள்ள கடற்கரையில் இடம் ஒன்றை பாஷையூர் புனித அந்தோனியார் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஒதுக்கியுள்ளது. இங்கு வேலைகள் நடைபெற்று மணல் நிரவப்பட்டுள்ளதையும் பாஷையூர் இறங்குதுறைப் பகுதியையும் காணலாம். (ஒ-51)







இது என்ன குப்பைமேடு என யோசிக்கிறீர்களா? மக்கள் அ[illegible] குப்பை கூளங்கள் நிறைந்துள்ளன. அருகில் குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர் இல்லமும் உள்ளது. இருந்த போதும் குப்பைகள் அகற்ற[illegible] நாள்கள் தேங்கிக் கிடப்பதால், சுற்றுச் சூழலில் இருப்போர் மற்றும் அப்பகுதியூடாகச் செல்வோர் பெரும் அசௌகரியங்களுக்கு ஆளாகி வருகின்றனர். குப்பை மேடு காணப்படும் இடம் திருநெல்வேலி மதவடி பாடசாலை வீதி. (ஒ-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முரசுமோட்டை ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமி ஆலயத்தின் வருடாந்த தேர்த் திருவிழாவின்போது அடியவர்கள் வடம் பிடித்து தேர் இழுக்கும் காட்சி. (க-6)



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கிளிநொச்சி பொதுச் சந்தையைப் பார்வையிட்டு, வர்த்தகர்களுடன் உரையாடினர். (க-6)





கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் உள்ள மாற்றுத் திறனாளிகளை சமூகத்துடன் இணைத்துக் கொள்ளும் செயற்றிட்ட செயலமர்வின்போது மாற்றுத் திறனாளிகள் அமர்ந்திருக்கின்றனர். (க-6)



சர்வதேச லயன்ஸ் கழகங்களின் மாவட்ட பி 1 இன் எட்டாவது வருடாந்த மாநாடு அண்மையில் ஹெந்தலவில் இடம்பெற்ற போது வலயம் 24 இன் வலயத் தலைவராக சிறந்த சேவையாற்றிய வவுனியாவைச் சேர்ந்த லயன் க.சிவபாலனுக்கு சர்வதேச லயன்ஸ் கழகங்களின் முன்னாள் தலைவர் லயன் மகேந்திர அமரசூரிய சிறப்பு விருது வழங்குகின்றார். (க-402)



வற்றாப்பளை அம்மன் ஆலயத்தின் வருடாந்தப் பொங்கல் விழாவை முன்னிட்டு ஆலயத்தில் கடல் நீரில் ஏற்றி வைக்கப்பட்ட விளக்கு பிரகாசமாக எரிந்து கொண்டிருக்கின்றது. (க-435)




கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தில் இடம்பெற்ற காணிச் சட்டங்கள் தொடர்பான கருத்தரங்கில் ஓய்வு பெற்ற மாகாண காணி ஆணையாளர் கே.குருநாதன் உரையாற்றுகின்றார். (க-18)



கிளிநொச்சி வட்டக்கச்சி மம்மில் இந்து மயானத்துக்கு இராமநாதபுரத்தைச் சேர்ந்த அமரர் இராஜேஸ்வரி வேலுப்பிள்ளை ஞாபகார்த்தமாக அவரின் குடும்பத்தவரால் எரிகொட்டகை அமைத்து வழங்கப்பட்டுள்ளது.
அமரர் இராஜேஸ்வரி வேலுப்பிள்ளையின் நிதிப் பங்களிப்பில் வட்டக்கச்சி அறிவொளி சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் இந்த எரிகொட்டகை அமைக்கப்பட்டு வட்டக்கச்சி கிராம முன்னேற்ற சங்கத்திடம் அண்மையில் கையளிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனும் கலந்து கொண்டார். (ஒ-5)



ஐரோப்பிய ஒன்றியத்தின் அனுசரணையுடன் இலங்கை வர்த்தக சம்மேளனமும் இளைஞர் வர்த்தக வேலைத் திட்ட அமைப்பும் இணைந்து நடத்திய முயற்சியாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை வவுனியாவில் இடம்பெற்ற போது இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் தேசிய திட்ட முகாமையாளர் வ.குமரகுரு கருத்துரை வழங்கும்போது நிகழ்வில் பங்கு பற்றிய முயற்சியாளர்கள் அமர்ந்திருக்கின்றனர். (க-421)




குஞ்சுப்பரந்தன் பொறிக்கடவை கண்ணகை அம்மன் ஆலயத்தின் பங்குனித் திங்கள் வேள்வி விழாவின் போது முதலுதவிச் சேவையை வழங்கிய இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சிக் கிளையைச் சேர்ந்த தொண்டர்கள் காணப்படுகின்றனர். (க-405)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாடகைக்கு உண்டு



* கனரக வேலைகள் செய்யும் இயந்திரம்
* குழாய்க்கிணறு தோண்டும் இயந்திரம்
* மற்றும் டிராக்டர் குறைந்த விலையில் வாடகைக்கு உண்டு.

நிமல்,
தொடர்பு: 077 704 6404, 021 490 9161

## மரண அறிவித்தல்

### பெரியதம்பி பாலசுந்தரம்

(முன்னாள் ஊழியர், சிமெந்து தொழிற்சாலை)



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட பெரியதம்பி பாலசுந்தரம் நேற்று முன்தினம் (31.05.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பெரிய தம்பி மற்றும் அழகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற அப்பாச் சாமி மற்றும் மகாலட்சுமி தம்பதியரின் மருமகனும், லீலாவதியின் பாசமிகு கணவரும், மீரா, மதுரா, மயூரா (சுவிஸ்), காலஞ்சென்ற கார்த்திகா மற்றும் லக்ஷன், ரஞ்சன், பவித்திரா ஆகியோரின் அன்புத் தந்தையும், பகீரதனின் அன்பு மாமனாரும், லருயனின் அன்புப் பேரனும், வசந்திமாலா, சரோஜினி தேவி, சசிலேகா ஆகியோரின் அன்புச் சகோதரனும், இரத்தினசிங்கம், பரமேஸ்வரன் (லண்டன்), சுரேஸ் (சுவிஸ்), நடனசிகாமணி (சுவிஸ்), சச்சிதானந்தம் (வவுனியா), குணராசா (கனடா), சிதம்பரதேவன் (லண்டன்), திருலோகநாதன், இராஜேஸ்வரி, சாரதா (சுவிஸ்), வனஜா (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.06.2013) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடுப்பிட்டி,
வல்வெட்டி.

தகவல்: குடும்பத்தினர்,
0771176383

☎ 0215671111
advt@uthayan.com

## காணி விற்பனைக்கு

யாழ். காங்கேசன்துறை வீதியில் மல்லாகம் சந்திக்கு அருகிலுள்ள வைரவர் கோவிலுக்கு சமீபமாக 2¼ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 773 2164

## விற்பனைக்கு

ஒரு வயது நிரம்பிய ஆண், பெண் ஜேர்மன் செப்பேட் நாய்கள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 553 8492

## வாகனம் விற்பனைக்கு

2000 கிலோ எடையைத் தாங்கக் கூடிய புதிய யூ.ஜின் வாகனம் விற்பனைக் குண்டு.
தொடர்பு: 077 978 9182

## நெற்காணி விற்பனைக்கு

கண்டாவளை மகாவித்தியாலயத்தின் முன் ஒழுங்கையில் இருந்து ½ km தூரத்திலுள்ள 'நுணாவில் கமம்' அல்லது 'புதுக்காடு வயல்' 12 ஏக்கர் விற்பனைக்கு உண்டு. சிறுபோகமும் செய்யக் கூடியது. முழுமையாகவோ, பிரித்தோ கொடுக்கப்படும். தொடர்பு:
021 490 1053/077 988 3583

## பணியாளர் தேவை

தோட்ட வேலைகளுக்கு ஒரு நபர் தேவை. வயதெல்லை 60 இற்கு உட்பட்டவர் சம்பளம் 18000/= தங்குமிட வசதி உண்டு. மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: 077 303 4516
சமணங்குளம், வவுனியா.

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த நல்லூரில் வசிக்கும் 40 வயதுடைய சதய நட்சத்திரம் அழகிய பொது நிறமுடைய மணமகளுக்கு பொருத்தமான நல்ல குணம், பண்பு, தொழில் செய்யும் மணமகன் தேவை. தொடர்பு:
077 500 7749/077 302 2462

## மரண அறிவித்தல்

### முருகேசு சாந்தகுமார்



கரம்பொன் மேற்கு, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு சாந்தகுமார் 28.05.2013 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு மற்றும் புஸ்பவதி தம்பதியரின் இளைய மகனும், சுரேஸ்குமார், சசிகலா, சிவகுமார், சந்திரகலா ஆகியோரின் அருமைச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.06.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஐயித்தாம்புலம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரம்பொன் மேற்கு,
ஊர்காவற்றுறை.

தகவல்:
குடும்பத்தினர்.
0094775983897

## அபிவிருத்தியில் ஒரு பங்காளராகுங்கள்!!!

உள்ளூர் தொண்டு நிறுவனம் ஒன்றுக்காக வட மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் அபிவிருத்தி நடவடிக்கையில் ஈடுபடுவதற்காக தன்னார் வத் தொண்டர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

க.பொ.த உயர்தரத்துடன் பாடசாலைக் கல்வியை முடித்தவர்கள், சமூக அபிவிருத்தியில் ஆர்வமுள்ளவர்கள், தொழில் அனுபவம் பெற விரும்புபவர்கள், மொழியறிவு ஆளுமையினை வளர்த்துக் கொள்ள விரும்புபவர்கள் விண்ணப்பிக்கலாம்.

சமூக அபிவிருத்தியில் வினைத்திறனுடன் ஈடுபடுவதற்கான சகல பயிற்சிகளும் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு செயல்முறை முறையில் பயிற்றுவிக்கப்படும்.

உங்கள் சுயவிவரக் கோவையினை 10.06.2013ஆம்திகதிக்கு முன்னர் 79, Uthayanagar-West,off Kanagapuram Road, Kilinochchi எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

எம்முடன் இணைந்து உங்கள் தொழில் பெறுதிறன்களை விருத்தி செய்துகொள்ளுங்கள். நேர்முகத் தேர்வுகள் 15.06.2013 ஆம் திகதியிலிருந்து நடைபெறும்

## புதிய கிளை புதிய நபர்

INNOVAGE நிறுவனத்தின் புதிய மூன்று கிளைகளுக்கு 35 பதவிவெற்றிடங்கள் உள்ளன. 16-35 வயதுக்குட்பட்டோர் (O/L, A/L) தகைமையுடையவர் விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப முடிவு திகதி June 10th, தங்குமிட வசதி, மருத்துவ வசதி வழங்கப்படும். அடிப்படை சம்பளம் 8000-12000 வழங்கப்படும். பயிற்சியுடன் நிரந்தர வேலைவாய்ப்பும் சான்றிதழும் பயிற்சியில் தகுதி பெறுவோருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பும் வழங்கப்படும்.

விண்ணப்ப முகவரி: INNOVAGE, 151 A-9 Road, Nunavil centre, Chavakacheri.
தொடர்பு: 021 720 1521, 077 892 0777, 077 926 3404

## வீடு வளவு விற்பனைக்கு உண்டு

2 பரப்பு வளவு வீட்டுடன் (வேலணை சாட்டி மாதா கோயில் அருகில்)விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 527 2069

## காணி விற்பனை

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அருகில் சுற்றி வர மதில் கட்டிய படி கிணற்றுடன் 1 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
T.P: 077 131 9939

## காணி விற்பனைக்கு

இணுவிலுக்கும் மருதனார் மடத்துக்கும் இடைப்பட்ட ஆஞ்சநேயர் கோயிலுக்கும் அண்மையாக K.K.S.வீதியிலிருந்து 2ஆவது காணி 4 பரப்பு விற்ப னைக்கு உண்டு. தொடர்பு: 077 658 7795

## Room வாடகைக்கு கொடுக்கப்படும்

பரமேஸ்வராச் சந்திக்கு அருகில்
தொடர்பு:077 928 0278

## ஆடு, மாடு விற்பனைக்குண்டு

கோண்டாவிலில்
தொடர்பு:075 511 3457

## வேலையாள்கள் தேவை

கீரிமலைவீதி, பன்னாலையில் இயங்கும் 'ATS' கால்நடை விவசாயப் பண்ணைக்கு ஆண்,பெண் வேலையாள்கள் தேவை.
தொடர்பு:
077 899 5431, 075 043 4277

## தேவை

யாழ் நகரில் சைவ உணவகம் ஒன்றுக்கு வேலையாள்கள் தேவை. ரீமேக்கர், ரொட்டி மேக்கர், சப்பிளையர், தங்கி நின்று வேலை செய்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். உடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு:077 945 6069

## வீட்டுப் பணிப்பெண் தேவை

சிறிய குடும்பத்திற்கு வீட்டுப்பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.
இடம்: யாழ்ப்பாணம் ராசாவின் தோட்டம்.
தொ.பே.: 077 203 3788
(20 வயதுக்கு மேற்பட்டவர் விரும்பத்தக்கது)

## கணிதம் 6 - O/L வரை

ஆங்கில மூலம் தனித்தனியாக மாணவர்களுக்கு அவர்கள் இருப்பிடம் வந்து கற்பிக்கப்படும். (அனுபவம் உள்ள பல் கலைக்கழக விஞ்ஞான பீடமாணவனால் கற்றுத் தரப்படுகின்றது.)
(யாழ் நகரத்தில் இருந்து 10 Km உட்பட்ட பகுதி)
தொடர்பு: 077 575 4612

## தேவை

Keetha Consulting (Pvt) Ltd is looking for Programmers. English Graduates, Social Media Writers. மேலதிக தகவல்களுக்கு.
http://www.keethaconsulting.com

## உடனடி வேலைவாய்ப்பு

விடுதி உதவியாளர்கள் தேவை. ஆண்கள் (15), வயது 19-40 வரை. சம்பளம் 32,000/= ஆரம்பம்
தொடர்பு:077 419 3321/ 072 719 3322

## வீடு விற்பனைக்கு

தெகிவளையில் 2nd Lane இல் கட்டு மானப் பணிகள் நடந்து கொண்டிருக்கும் தொடர் மாடியில் 1100 Sqft. 3 Bed Rooms வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு:077 778 6440

## மணமகன் தேவை

68ஆம் ஆண்டு பிறந்த, A/L சித்தியடைந்த, விவாகரத்துப் பெற்ற ஒரே மகளுக்கு பெற்றோர் வரன் தேடுகின்றனர். படித்த, உத்தியோகம் பார்ப்பவர் விரும்பத்தக்கது. ஜாதகக் குறிப்பு மற்றும் முழு விவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.
விளம்பர இல. 4454, பே/ப. உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## வேலைவாய்ப்பு

இலங்கையின் முன்னணி நிறுவனம் ஒன்றுக்கு நாடளாவிய ரீதியில் பின்வரும் தொழில்களுக்கான விண்ணப்ப தாரர்கள் கோரப்படுகின்றனர்.
Area Manager,Sales Rep. Marketing Executive, Drivers,Accountants. வயதெல்லை 18-30 School leaversஉம் விண்ணப்பிக்கலாம்.
SR Marketing(Pvt)Ltd. 077 348 3099

## காணி விற்பனைக்கு

நாகம்மாள் கோயிலடி, தங்கோடை, காரைநகர் மேற்கில் 02 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. (கிணறு, மலசல கூட வசதியும், நல்லதண்ணீர் வசதியும் [illegible])
தொடர்பு: 075 729 2865

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### வீரசிங்கம் ஜெகதீஸ்வரன்

(யாழ்.மத்திய கல்லூரி கணித ஆசிரியர்)

மண்ணில்: 02.06.1977 விண்ணில்:02.06.2012

என் அன்பு ஜெகனே! தடுமாறித் தவிக்கின்றேன் இங்கு
உன் நினைவுகளை மறக்க முடியவில்லை என்னால்
என்று நான் உன்னிடம் வந்து விடுவேன் என்று ஏங்குகிறேன்
தவிக்கின்றேன் தணியாத உன் நினைவுகளுடன்.....

கொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை.

அபர்ணா (மனைவி)
ஐதுன் (மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை வான் சேவை

சாவகச்சேரி நகர்ப் பாடசாலைகளுக்கு வான் சேவை. மாத அடிப்படையில் ஏற்பாடு செய்யப்படும்.

தொடர்பு: 077 640 4485

(35057)(6.11)



## பொது அறிவு புதிர் போட்டி

தரம் 1-13 வரை உள்ள வகுப்பு மாணவர்களுக்கான பொது அறிவு புதிர் போட்டி நடத்தப்படவுள்ளது. விரும்பிய மாணவர்கள் விண்ணப்பிக்க முடியும். பெயர், கல்வி கற்கும் தரம், தொலைபேசி இலக்கம், விலாசம் என்ற விவரங்களுடன் விண்ணப்பங்களை கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். முடிவு திகதி 15.06.2013 முத்திரை ஒட்டிய வெறும் தபால் உறை ஒன்றும் உடன் வைத்து அனுப்பவும்.

விளம்பர இல.-4453, மே/பா உதயன்,
561, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (37905)(6.11)


# கிளிநொச்சி, முல்லையில் அரச அலுவலகங்கள் திறந்து வைப்பு

கிளிநொச்சி,ஜூன் 2

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் கிளிநொச்சி மாவட்டத்தில் அமைக்கப்பட்ட நிலஅளவைத் திணைக்கள பிரதேச அலுவலகம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைக்கப்பட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் ஆகியன கடந்த மாதம் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் 26 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில், இலங்கை நில அளவை திணைக்களத்தின் பிரதேச நில அளவை அலுவலகம் அமைக்கப்பட்டது. இதனை கடந்த மே மாதம் 28 ஆம் திகதி பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ திறந்து வைத்தார். முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், பொருளாதார அபி விருத்தி அமைச்சின் வடக்கின் துரித அபிவிருத்தித் திட்ட நிதியின் கீழ் 22.2 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டது. இதனை கடந்த மாதம் 27 ஆம் திகதி வட மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி திறந்து வைத்தார். (ஒ-5)


## உடனடி வேலைவாய்ப்பு

இலங்கையில் வேகமாக வளரும்U.A.E.யை மையமாகக் கொண்ட எமது நிறுவனத்துக்கு யாழ்ப்பாணம்,வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள கிளைகளில் பின்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.

★ விநியோகஸ்தர்கள் ★ மேற்பார்வையாளர்கள்
★ உதவி முகாமையாளர் ★ முகாமையாளர்
★ கையடக்க தொலைபேசி திருத்துனர்.

* க.பொ.த.சாதாரணதரம் போதுமானது. மாதாந்த வருமானம் 30,000/=. தங்குமிட வசதி இலவசம்.
* நேரில் அல்லது தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளவும்.

021 221 9995/075 098 5088 [illegible]

275 1/3, Clock Tower Road, Jaffna.


## நினைவுப் பிரார்த்தனை

கோப்பாய் இலுப்பையடி விநாயகர் துணை — குப்பிளான் கற்கரை விநாயகர் துணை

10 ஆவது ஆண்டு நினைவு — 19 ஆவது ஆண்டு நினைவு



தவப்பேறு 21.12.1918 — தவப்பேறு 11.01.1960

சிவப்பேறு 08.05.2003 — சிவப்பேறு 03.06.1994



**அமரர் கந்தையா ஆறுமுகம்**
[ஆசிரியர்]

எந்தையே, எம்மை ஆளாக்கிய
தெய்வமே
எப்பிறப்பிற் காண்போம்

திருமதி சரஸ்வதி ஆறுமுகம்
(மனைவி-இளைப்பாறிய ஆசிரியர்)
பிள்ளைகள். மருமக்கள்.
பேரப்பிள்ளைகள்.

**திருமதி ஞானலஷ்மி ஸ்ரீஸ்கந்தமூர்த்தி**
(B.A.(Hons) Eng.Trd.) ஆங்கில ஆசிரியர்)
திதி: 02.06.2013

இமைப் பொழுதும் எம் நெஞ்சில்
இறவா அன்பே ஞானா
வணங்குகின்றோம்

ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி (கணவர்).
சகோதரி. மைத்துனர்.
பெறாமக்கள். மருமக்கள். உறவினர்.

(37953)(2.6)

246/4A, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

## முதலாம் ஆண்டு நினைவும் 36 ஆவது பிறந்தநாளும்



**வீரசிங்கம் ஜெகதீஸ்வரன் (ஜெகன்)**
(முன்னைநாள் கணித ஆசிரியர், யாழ்.மத்திய கல்லூரி)

தோற்றம்: 02.06.1977 மறைவு :02.06.2012

அன்பைப் பொழிந்த
ஆதவன் மறைந்தது ஏனோ!
அறிவை அள்ளி வீசிய
இதயம் அணைந்தது ஏனோ!
பிறந்த நாளில் – எம்மை
மறந்து பறந்து சென்ற – எம்
குடும்ப குல விளக்கே! – எம்
உயிர் உள்ள வரை உந்தன்
நினைவுடனே வாழ்வோம்.

அப்பா. அம்மா. சகோதரர்கள்.
மனைவி. ஜதுன் (மகன்).
விபுலானந்தர் வீதி. மாதகல்.

### நற்கருணை பேரணி

நம்பிக்கை ஆண்டை முன்னிட்டு நாவாந்துறை பரலோக மாதா ஆலயத்தில் நற்கருணைப் பேரணி இன்று நடைபெறவுள்ளது. இன்று காலை இடம்பெறும் நற்கருணை எழுந்தேற்றத்தைத் தொடர்ந்து மாலை 3.30 மணிக்கு நற்கருணைப் பேரணி ஆரம்பமாகும்.

இந்தப் பவனி கடற்கரை வீதியூடாககாக்கை தீவு சந்தியை அடைந்து பொம்மை வெளி வீதியால் ஒஸ் மானியா கல்லூரி வீதி, காதி அபூபக்கர் வீதி வழியாக கடற்கரை வீதியை அடைந்து நாவலர் வீதியூடாக புனித நீக்கிலஸ் ஆலயத்தை அடைந்து நற்கருணை ஆசீருடன் பேரணி நிறைவுறுமென தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பேரணியை நாவாந்துறைப் பங்கைச் சேர்ந்த அஞ்சனந்தாழ்வு, ஓட்டு மடம் பகுதி மக்களும் இணைந்து நடத்தவுள்ளதாக கூறப்படுகிறது. (ந-135)

### பொங்கல் விழா

கைதடி கலைநகர் அருள்மிகு கரவிடை அண்ணுமார் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழா இன்று அதிகாலை நடைபெற இருக்கின்றது. நேற்று இரவு ஆரம்பமான மடைவிழா இன்று பொங்கலுடன் முடிவடையும். மதியம் அன்னதான நிகழ்வுகளும் நடைபெறும். (ஒ-288)

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
1977★08★26
மறைவு
2008★06★02

அமரர்
**பற்றிக் டிவின்சன்** (மில்டன்)

ஆண்டுகள் ஐந்து ஆனாலும்
அழியாது உன் நினைவு
கூண்டில் ஒரு பறவையாய்
கூடித்திரிந்தாய் – பகைவன்
குதறி எறிந்தான் உன் உயிரை
என்றும் எங்கள்
இதயத்தில் இருப்பாய்

என்றும் பாசமுடன்
தாய், சகோதரர்கள், மச்சான்மார்,
மருமக்கள், பெறாமக்கள்
149/2, கதிற்றல் லேன், யாழ்ப்பாணம்

(37903)(6.2)

## மரண அறிவித்தல்

### இளையகுட்டி பரஞ்சோதிலிங்கம்



பலாலி கிழக்கு, வயாவிளானைப் பிறப்பிடமாகவும் மாகியப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட இளையகுட்டி பரஞ்சோதிலிங்கம் நேற்று (01.06.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையகுட்டி-கதிராசி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், கோமதி (கல்வித் திணைக்களம்- வவுனியா), சுதாகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், வரதராஜாவின் அன்பு மாமனாரும், பிருத்துவியின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.06.2013) ஞாயிற்றுக்கிழமை பி.ப ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாகியப்பிட்டி கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய். (37892)(6.11)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### தில்லை உதயபுத்திரன் (ஜேர்மனி)



உரும்பிராய் கிழக்கு, உரும்பிராயை பிறப்பிடமாகவும் நிற்சாமம் சங்கானையை வதிவிடமாகவும் தற்போது ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட தில்லை உதயபுத்திரன் (31.5.20 13) வெள்ளிக் கிழமை ஜேர்மனியில் இறைப தம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லை -சின்னம்மா தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான நாகமுத்து- பாக்கியம் தம்பதியரின் மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், திவாகரன் (ஹொலண்ட்), சுகந்தினி (இலங் கை), சுஜாத்தா (சுவிஸ்), சுமதி (ஹொலண்ட்) ஆகியோரின் பாசமுள்ள தந்தையும், உதயராணி (ஹொலண்ட்), உதயகுமாரி, உதயநாதன், காலஞ்சென்ற உதயகிரி ஆகியோரின் சகோதரரும், றூபி (ஹொலண்ட்), நியமதன் (இத்தாலி), ஜெயசீலன் (சுவிஸ்), சாந்தராசா (ஹொலண்ட்) ஆகியோரின் மாமனாரும், அனாஞன் (ஹொலண்ட்), லக்ஸ்மன் (ஹொலண்ட்), நிருபயன் (இலங்கை), ஜெதுசா (சுவிஸ்), இனிகா (ஹொலண்ட்), இசானா (ஹொலண்ட்) ஆகியோரின் பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியை ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நிற்சாமம்,
சங்கானை. (37910)(6.7.11)

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை ஆச்சிப்பிள்ளை



கடவைப்புலம், சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை ஆச்சிப்பிள்ளை (31.05.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதி-முத்துப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பாக்கியம், செல்லத்துரை, கந்தசாமி, கண்மணி,கனகம்மா மற்றும் சரசுப்பிள்ளை ஆகியோரின் பாமிகு சகோதரியும் தவமணிதேவி, சந்திரராசா, பத்மநாதன், ஈஸ்வரன் (நோர்வே), ரஞ்சினிதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் மகாலிங்கம், சந்திரவதனா, புஸ்பராணி, பிறேமாவதி (நோர்வே), தவராசா ஆகியோரின் பாசமிகு மாமியும், ஸ்ரீமதன்(சுவிஸ்), மோகன் ஸ்ரீமதனி (லண்டன்), காலஞ்சென்ற ஸ்ரீசுதன் மற்றும் மயூரன்,நவநீதன்(லண்டன்), சிவராசா நளாயினி(சுவிஸ்), நந்தினி, நவஜீவன்(லண்டன்), நவராஜ்,நளினி, துஷானி(நோர்வே), கஜானி (நோர்வே), கேஜினி(லண்டன்),கஜமுகன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், கிருத்திகன், கிஷான்,கிஷோனா(லண்டன்), நிதுஷிகா, திருஷிகா(சுவிஸ்), யாகித், பாகித்,ராகித் (லண்டன்),ரதுஷன் ஆகியோரின் பாமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (02.06.2013) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று,பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சந்திரராசா (மகன்)
குடும்பத்தினர்.

கடவைப்புலம்,சுன்னாகம். (37957)(5.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

DUTCH(Netherlands)
GERMAN FRENCH ENGLISH
மொழிகளை இலகுவாக கற்கவும் Embassy இனால் நடாத்தப்படும் விசாவுக்கான பரீட்சைகளில் சிறப்பாக சித்தியடையவும் அந்தந்த நாடுகளிலிருந்து வருகை தந்த ஆசிரியர்களினால் Audio, Video மற்றும் தமிழ் விளக்கங்களுடன் கற்பிக்கப்படுகிறது

Netherland அரசாங்கத்தினால் April - 2012 லிருந்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ள M.V.V விசா பரீட்சைக்கான புதிய பாடத்திட்டத்திற்கமைய புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன. ஏற்கனவே Netherland தூதரக பரீட்சையில் சித்தியடையாதவர்களுக்கும் கூடிய கவனம் தேவைப்படுகிறவர்களுக்கும் விசேட வகுப்புக்களும் மாதிரிப் பரீட்சைகளும் தமிழ் விளக்கத்துடன் உண்டு

Dutch Lanka Academy
Netherland தூதரகத்தினால் நீண்ட கால நன்மதிப்பை பெற்ற ஒரே International Language Academy
#69 -2/1, Galle Road, Dehiwala.
Tel : 0777251332, 011 271 8811
நெதர்லாந்து தூதரக பரீட்சையில் சித்தியடைவதற்கு 100 % உத்தரவாதம் அளிக்கப்படும். **Condition Apply

# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை சண்முகராசா

(கண்ணன் மில் உரிமையாளர்)



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சண்முகராசா நேற்று (01.06.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கமலாதேவியின் பாசமிகு கணவரும், கிருஷ்ணசாமி, தங்கச்சியம்மா, சுந்தரம், பொற்கொடி ஆகியோரின் அன்புச் சகோதரனும், இந்திரமலர், காலஞ்சென்ற இந்திரகுமார் மற்றும் தயாபரன் இந்திரபவானி (கனடா), கண்ணன் (லண்டன்), கலைச்செல்வி ஆகியோரின் பாசமிகு தந்தையும், கௌரிகாந்தன் (விரிவுரையாளர், தேசிய கல்வியியற் கல்லூரி), அனுஷா, தயாபரன் (கனடா), வாசுகி (லண்டன்), றமேஷ் ஆகியோரின் அன்பு மாமனும், நீலசுலோசனா தேவி, காலஞ்சென்றவர்களான சிதம்பரநாதன், மனோன்மணி, கதிரவேலு ஆகியோரின் மைத்துனரும், சித்தாந்தன், திரிசிகன், கிதியோன், ஸ்ரீபன், பிறனேஸ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.06.2013) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. ஒரு மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கண்ணன் மில்,
இணுவில் மேற்கு, இணுவில். (37907) (10.6)

தகவல்:
குடும்பத்தினர்,

மருதங்கேணி வைத்தியசாலையில்

## 300 வரையான நோயாளிகள் மாதம் தோறும் சிகிச்சை

வடமராட்சி, ஜூன் 2

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் உள்ள மருதங்கேணி அரசினர் வைத்தியசாலையில் பிரதி மாதந்தோறும் 250 தொடக்கம் 300 வரையான நோயாளர்கள் பொது வைத்திய சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த வைத்தியசாலையில் பிரதி வாரந்தோறும் செவ்வாய்க்கிழமைகளில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலையில் இருந்து வைத்தியர் ஒருவர் மருதங்கேணி அரசினர் பிரதேச வைத்தியசாலைக்குச் சென்று பொது வைத்திய சிகிச்சைப் பிரிவை மேற்கொண்டு வருகின்றார்.

இந்தச் சிகிச்சைப் பிரிவில் தொடர்ந்தும் சிகிச்சைகள் நடைபெறும் என பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் தா.வினோதன் தெரிவித்தார். (ந-8)

மணமகள் தேவை
மணமகள் தேவையா? ஒரு SMS இனூடான உங்களின் பதிவினை மேற்கொண்டு காத்திருங்கள். உங்களின் டயலொக் மொபைலில் (Dialog) REG bride என ரைப் செய்து 77000 இலக்கத்திற்கு SMS பண்ணவும். மேலதிக தகவலிற்கு www.realmatrimony.com Call : 011 4380900 0114344230

மணமகன் தேவை
மணமகன் தேவையா? ஒரு SMS இனூடான உங்களின் பதிவினை மேற்கொண்டு காத்திருங்கள். உங்களின் டயலொக் மொபைலில் (Dialog) REG groom என ரைப் செய்து 77000 இலக்கத்திற்கு SMS பண்ணவும். மேலதிக தகவலிற்கு www.realmatrimony.com Call : 011 4380900 0114344230

SMS ஊடாக வரன் தேடல்
SMS இனூடாக Realmatrimony இல் பதிவதாயின், உங்களின் மொபைலில் <உங்களின் பெயர்>. <பிறந்த திகதி>. ரைப் செய்து 0777 111 786 என்ற இலக்கத்திற்கு SMS பண்ணுங்கள். 30 நாள்கள் இலவச சேவையினையும் பெறலாம். மேலதிக தகவலுக்கு அழையுங்கள் www.realmatrimony.com
Call : 011 4380900 0114344230
MMW

## பாம்பு தீண்டிய ஊழியர் சிகிச்சை

அளவெட்டி, ஜூன் 2

சுன்னாகம் பிரதேச சபை ஊழியர் ஒருவர் வடிகால் சுத்தம் செய்யும் போது பாம்புக் கடிக்கு இலக்காகிய சம்பவம் கடந்த [illegible]றுக்கிழமை இடம்பெற்றது. அந்த ஊழியர் தெல்லிப்பழை ஆதார வைத் தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனு மதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். கந்தரோடை மேற்குப் பகுதியைச் சேர்ந்த சிவக்கொழுந்து நாதன் (வயது-43) எனும் தொழிலாளியே கடமையின் போது பாம்புக்கடிக்கு இலக்கானவராவார். (ந-36)

# நீங்காத நினைவதனில் முதலாம் ஆண்டு நினைவு நாள்



தோற்றம்
28.02.1937

மறைவு
14.05.2012

திதி: அபரபக்க நவமி

## திருமதி இராசமணி செல்வராசா

ஓராண்டு ஓடி விட்டது அம்மா!
உங்கள் ஒளி முகம் காணாமலே
நெஞ்சம் கனக்கிறது அம்மா
உங்கள் நேசவார்த்தை கேளாமலே
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகள்
எம்மை விட்டு நீங்காது அம்மா

இன்று (02.06.2013) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனை தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் தனிப்பட்ட அழைப்பாக அழைத்துக்கொள்கின்றோம்.

கொய்யாத்தோட்டம்,
இருபாலை. (37909)(10,6)

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி கணேசு இராசம்மா (தெல்லிப்பழை கிழக்கு)



தெல்லிப்பழை கிழக்கு, வண்ணாமாதரையைப் பிறப்பிடமாகவும், கனடா-நோர்த்யோக்கை (Northyork) வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கணேசு இராசம்மா 29.05.2013 புதன்கிழமையன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-சேதுப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-பார்வதி தம்பதியரின் பாசமிகு மூத்த மருமகளும், காலஞ்சென்ற கணேசுவின் அன்பு மனைவியும், நந்தகுமார்(பிரதேச செயலகம்,தெல்லிப்பழை),சந்திரகுமார்(சண் ஸ்ரோர்ஸ்-கந்தரோடை), காலஞ்சென்ற சுகுமார் மற்றும் வசந்தகுமாரி(கனடா), விஜயகுமார் (கனடா), சிவகுமார்(கனடா), உதயகுமார்(கனடா),திருக்குமார்(கனடா), காலஞ்சென்ற ஜெயக்குமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், கலாவல்லி, ஆனந்தராணி, விஜயரட்ணம்(கனடா), அஞ்சுகா(கனடா), ஜெயவாணி (கனடா), சுஜிதா(கனடா), துஷியதனுஷா(கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், பிரதீபன்(லண்டன்), ரதீபன், தமிழினி, புருஷோத்மன், மகிந்தன்(லண்டன்), அனிதா, அனுசன்,விதுஷா,வினுஷ்,சுஜன், சுஜானி, சகான், தேனுஜா, ஆரணி, ஆரூரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும்,காலஞ்சென்ற முருகையா மற்றும் கனகம்மா, அழகம்மா, மகேஸ்வரி, அன்னலட்சுமி,புஸ்பலீலா, காலஞ்சென்றவர்களான புஸ்பரதி, நவரத்தினம் மற்றும், புஸ்பராணி, தம்பிரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை, சரஸ்வதி (மணியக்கா), மார்க்கண்டு மற்றும் தர்மலிங்கம்,சாவித்திரி காலஞ்சென்ற இராசையா மற்றும் நடராஜா, காலஞ்சென்ற வேலுப்பிள்ளை, முருகையா, பொன்னுத்துரை மற்றும் வடிவாம்பிகை,கிருஷ்ணமூர்த்தி, சுசீலாதேவி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (02.06.2013) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 12.30 மணி-3.30 மணிவரை நடைபெற்று. 1591Elgin Mills Road East இல் அமைந்துள்ள Elgin Mills Cemetery And Visitation Centre இல் மாலை 4 மணியளவில் தகனம் செய்யப்படும்.

அன்னாரின் அஞ்சலி நிகழ்வு இன்று(02.06.2013) ஞாயிற்றுக்கிழமை மல்லாகத்திலுள்ள மகன் நந்தகுமாரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
நந்தகுமார் (மகன்-இலங்கை) - 011 94 214911420
சந்திரகுமார்(மகன்-இலங்கை) -011 94 771286629
விஜயரட்ணம் (மருமகன்-கனடா) - 416 427 6062
விஜயகுமார் (மகன், கனடா) - 416 402 3958
சிவகுமார் (மகன்- கனடா) - 647 706 5115
உதயகுமார் (மகன்-கனடா) - 416 209 8403
திருக்குமார் (குட்டி-மகன்-கனடா) - 416 742 0783, 416 414 0571
வசந்தகுமாரி (மகள்-கனடா) - 905 553 3972

கே.கே.எஸ். வீதி, மல்லாகம்.

தகவல்: பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள். (37918)(5,6,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதிபுரம் ஆதவன் கரப்பந்தாட்ட சுற்றுத் தொடர்

# இளம்தென்றல், புதிய பாரதி இறுதியாட்டத்துக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஜுன் 2
கிளிநொச்சி பாரதிபுரம் ஆதவன் விளையாட்டுக் கழகம் நடத்திய ஆண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் இளம்தென்றல் விளையாட்டுக் கழக 'ஏ' அணியும், மலை யாள்புரம் புதிய பாரதி விளை யாட்டுக் கழக 'ஏ' அணியும் இறுதி யாட்டத்துக்குத் தகுதி பெற்றுள் ளன.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற அரையிறுதி ஆட்டங்களில், முத லாவது ஆட்டத்தில் கிளிநொச்சி இளம்தென்றல் விளையாட்டுக் கழக 'ஏ' அணியை எதிர்த்து பாரதிபுரம் ஆதவன் விளையாட் டுக் கழக 'ஏ' அணி மோதியது.



**சுற்றுத் தொடரின் இறுதியாட்டம் எதிர் வரும் புதன்கிழமை கழக மைதானத்தில் இடம்பெற்றவுள்ளது.**

5 செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் கிளிநொச்சி இளம் தென்றல் விளையாட்டுக் கழகம் 3:1 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

அடுத்து நடந்த இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில், வட்டக் கச்சி குறிஞ்சி விளையாட்டுக் கழக 'ஏ' அணியை எதிர்த்து மலை யாள்புரம் புதிய பாரதி விளையாட் டுக் கழக 'ஏ' அணி களமிறங்கியது. 5 செற்களைக் கொண்ட ஆட்டத் தில் மலையாள்புரம் புதியபாரதி விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது.

சுற்றுத் தொடரின் இறுதியாட்டம் எதிர்வரும் புதன்கிழமை கழக மைதானத்தில் இடம்பெற்றவுள் ளது. (ற-23)



தேசிய பரா ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொண்டு 100 மீற்றர் சக்கர நாற்காலி ஓட்டத்தில் பதக்கங்களைப் பெற்ற வவுனியா மாவட்ட பரா விளையாட்டுக் கழக வீராங்கனைகளைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை வவுனியாவில் இடம்பெற்றது. வீராங் கனைகளுக்கு வடமாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப் பாளர் எஸ்.எம்.ராஜரணதுங்க பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார். இந்தக் கௌரவிப்பு நிகழ்வு வவுனியா பிரதேச செயலக விளை யாட்டுப் போட்டி பரிசளிப்பு நிகழ்வில் இடம்பெற்றது. (ற-23)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஜுன் 2
மன்னார் பெரிய கடை ஸ்ரார் ஈகிள் விளையாட்டுக் கழகம் மூன்றாவது வருடமாக நடத்தும் மன்னார் பிறீமியர் லீக் '20/20' கிரிக்கெட் சுற்றுத் தொடரில் இன்று ஞயிற்றுக்கிழமை நடை பெறவுள்ள ஆட்டங்களின் விவ ரம்:

காலை 9மணி
சென்.ஜோசப் விளையாட்டுக் கழகம் எதிர் இந்து முன்னனி விளையாட்டுக் கழகம்.

பிற்பகல் 2 மணி
விக்ரறிஸ் விளையாட்டுக் கழகம் எதிர் கிறின்பீல்ட் விளையாட்டுக் கழகம். (ற-23)

பாரதிபுரம் ஆதவன் கரப்பந்துத் தொடர்

## புதிய பாரதி பெண்கள் அணி சம்பியனாகத் தெரிவாகியது

யாழ்ப்பாணம், ஜுன் 2
கிளிநொச்சி பாரதிபுரம் ஆதவன் விளையாட்டுக் கழகம் நடத்திய பெண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் மலையாள்புரம் புதியபாரதி விளையாட்டுக் கழக அணி சம்பியனாகத் தெரிவாகியது.



கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் மலையாள்புரம் புதிய பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கிருஷ்ணபுரம் விபு லானந்தா விளையாட்டுக் கழகம் களமிறங்கியது.

5 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் மலையாள்புரம் புதியபாரதி விளையாட்டுக் கழகம் 3:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனாகத் தெரிவாகியது. (ற-23)

## சைக்கிளோட்டப் போட்டியில் 401 மாணவர்கள் பங்கேற்பு

மட்டக்களப்பு, ஜுன் 2
திருகோணமலை ஸ்ரீ கோணேஸ் வரா இந்துக் கல்லூரியின், கல் லூரி தினத்தை முன்னிட்டு நடத் தப்பட்ட சைக்கிளோட்டப் போட்டி யில் 401 மாணவர்கள் பங்குபற் றினர்.

12 ஆவது தடவையாக நடை பெறும் இந்தப் போட்டிகள் கனிஷ்ட பிரிவு, இடைநிலை பிரிவு, சிரேஷ்ட பிரிவு என்று தனித்தனியாக நடத்தப்பட்டன.



கனிஷ்ட பிரிவில் 150 மாணவர் களும் இடைநிலை பிரிவில் 96 மாணவர்களும், சிரேஷ்ட பிரி வில் 155 மாணவர்களும் போட்டி யில் கலந்து கொண்டனர். (ற)



## கராத்தே போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜுன் 2
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்படும் 15, 17 மற்றும் 19 வயதுப் பிரிவுகளைச் சேர்ந்த ஆண், பெண் இருபாலா ருக்குமான கராத்தே போட்டிகள் நாளை மறுதினம் 4ஆம் திகதி யும், மறுநாள் 5 ஆம் திகதியும் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் என்று அறிவிக் கப்பட்டுள்ளது. (ற-23)



## பெருவிளையாட்டு நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜுன் 2
வடமாகாணப் பெரு விளை யாட்டுப் போட்டிகளின் இரண் டாம் கட்டப் போட்டிகள் நேற்று சனிக்கிழமை யாழ். இந்து மக ளிர் கல்லூரியில் ஆரம்பமாகி யுள்ளன.

15 மற்றும் 19 வயதுப் பிரி வினருக்கான மேசைப்பந்தாட் டம், சதுரங்கம் ஆகிய போட்டிகள் நேற்று நடைபெற்றன.

சதுரங்கப் போட்டிகளில் 128 ஆண், பெண் அணிகளைச் சேர்ந்த 850க்கும் அதிகமான வீர, வீராங்கனைகள் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ற-23-86)

## மென்பந்து கிரிக்கெட் நாளை

யாழ்ப்பாணம், ஜுன் 2
கிளிநொச்சி பாரதிபுரம் ஆதவன் விளையாட்டுக் கழகம் வருடாந் தம் நடத்தும் விளையாட்டுப் போட்டிகளில், ஆண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் சுற்றுத் தொடர் நாளை யும், நாளை மறுநாளும் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள் ளனர். (ற-23)

## நக்கீரன் உதைபந்தாட்ட தொடர்: இறுதியாட்டம் இன்று



பொமர்ஸ்

யாழ்ப்பாணம், ஜுன் 2
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியு டன் அல்வாய் வடக்கு நக்கீரன் விளையாட்டுக் கழ கம் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந் தாட்டச் சுற்றுத் தொடரின் இறுதியாட்டம் இன்று ஞாயிற் றுக்கிழமை கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறவுள்ள இறுதி யாட்டத்தில் வதிரி பொமர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ற-23)



டைமன்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

IPtech வழங்கும்

# வர்த்தகர்களிற்கு நம்பமுடியாத சலுகை!

ரூ. 40,000 முதல்.....

**உங்கள் வர்த்தகத்தை இலகுவாக்கவும், மேம்படுத்தவும் மற்றும் தவறுகளை தவிர்க்கவும் மென்பொருள் மூலமான தீர்வு**

1) தன்னியக்கமான பற்றுச்சீட்டு உருவாக்கம்
Automated Billing System (POS System)
2) நாளாந்த,மாதாந்த விற்பனை விபரம்
Daily, Monthly Sales Details
3) தன்னியக்க இருப்பு கணக்கீடு மற்றும் அறிக்கைகள்
Automated Stock Details and Updates
4) தன்னியக்க காலாவதி திகதி அறிவிப்பு
Automated Expiry Notification
5) காசோலை பராமரிப்பு
Cheque Maintenance
6) நாளாந்த,மாதாந்த வருவாய் அறிக்கைகள்
Daily, Monthly Income Reports
7) ஊழியர் சம்பள நிர்வகிப்பு
Workers Salary Management

மற்றும் பல அம்சங்கள்...

**மேலும் உங்கள் விருப்பங்களும் உள்ளடக்கப்படும்**

பல்பொருள் வாணிபங்கள், மருந்தகங்கள், கணினி மற்றும் இலத்திரனியல் விற்பனை நிலையங்கள், புடைவையகங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, திருகோணமலை

தொடர்புகளுக்கு:-
077 960 9320 / 077 918 6387

IP TECH Tel: 021 7539925 Mobile: 077 2361465
529,Kasthuriyar Road,Jaffna Email: info@iptech.lk



# DIPLOMA IN ENGLISH

இலங்கையின் முதற்தர ஆங்கிலக் கல்வி நிறுவனத்தில் ஆங்கில மொழியினைப் பயின்று ஆங்கிலத்தினை சரளமாகப் பேசுவதோடு சர்வதேச சான்றிதழ்களையும் பெற்றிடுங்கள்

**புதிய பிரிவு ஆரம்பம்**

**10.06.2013 மாலை 4.00 மணி**

**(திங்கள்/புதன் 4.00 - 6.15 வரை)**

FEEL THE BRILLIANT FUTURE

**E-CITY**

COLLEGE OF ENGLISH & IT SKILLS DEVELOPMENT

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்
(வீரகாளி அம்மன் கோவில் அருகில்)

**0774924166 / 0770810271**


## இனிய பிறந்தநாள் வாழ்த்து



இன்று 02.06.2013 ஞாயிற்றுக்கிழமை பிறந்தநாள் விழாவை வெகு விமரிசையாக எமது இல்லத்தில் சிவனருளால் கொண்டாடும் இராகவன் கார்த்திகா தம்பதியரின் செல்வப் புதல்வி

**அட்சயா**

சகல சௌபாக்கியங்களும் கல்விச் செல்வமும் பெற்று நீடூழி வாழ இனிதாக வாழ்த்துவோர்.

ஆத்தா, அப்பா, மம்மியம்மா, ஆசைமாமா, ஆசை மாமி, ஷாயினி, மச்சாள், சின்னமாமா, குட்டிமாமா மற்றும் அம்மம்மாமார், சித்தாமார் மற்றும் உறவினர்.

கரணவாய், கரவெட்டி
0770868939 [35392]


# Study in Canada

Study – Work – Live

CANADA CANADA

**Canada** வில் முன்னணி கல்லூரிகளில் பயின்று மூன்று (3) ஆண்டுகளில் **Permanent Residence (PR)** பெறுவதற்கான வாய்ப்பு.



IELTS Minimum 6.0 Required

Admission at Best Canadian Universities and Colleges.



**STUDENT VISA :** கடந்த மூன்று வருடங்களுக்குள் O/Level or A/Level சித்தி பெற்றவர்களுக்கும், பல்கலைக்கழக பட்டதாரிகளுக்கும், தற்போதைய பல்கலைக்கழக மாணவர்களுக்கும் முன்னுரிமை.

**Consulting and Guidance by licensed Canadian Immigration Consultants**
**கனடிய அரச அங்கீகாரம் பெற்ற குடிவரவு ஆலோசகர்களின் வழிகாட்டல்.**

இலங்கையில் தொடர்புகளுக்கு
**E-City College**
No : 372 B, Pointpedro Road,
Anaipanthi, Jaffna
Tel : 077-492-4166, 077-340-0418
ecitycollege@gmail.com
(Authorized Representative for VisaDomain Inc. Canada)

Canada வில் தொடர்புகளுக்கு
**VisaDomain Inc.**
Immigration Service
Tel : 011-416-819-4420
Email : info@visadomain.com
Web : www.visadomain.com
கனேடிய சட்ட அங்கீகாரம் பெற்ற நிறுவனம்.
Licensed Canadian Immigration Consultancy Firm

**Warning : Beware of "illegal" Consultants/Agents without a Canadian Government Approved License.**
**கனேடிய அரச அங்கீகாரம் இல்லாத குடிவரவு ஆலோசகர்/முகவர்களிடம் அவதானமாய் இருக்கவும்.**


## 33ஆம் நினைவு நாள்

மண்
மகிழ்
20
02
1960

கண்
நெகிழ்
30
04
2013



அமரர் **இரத்தினம் தவபாலன்** (தவம்)

(ஆயக்கடவை ஐங்கரன் பரிபாலன சபை உப செயலாளர், விவசாயச் சம்மேளன செயலாளர்)

அன்பின் உறைவிடமே அப்பா!
பூவுலகில் எமைத் தவிக்கவிட்டு எங்குதான் போனீரோ?
காலங்கள் கடந்தாலும் நாம் கொண்ட
கோலங்களே மாறினாலும் உம் நினைவு
எம் மனதை விட்டு என்றுமே நீங்காது.

அன்னாரின் 33ஆம் நாள் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (02.06.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மணியகாரன் வீதி,
பன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.

குடும்பத்தினர்.
021 224 0928

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்குடியிருப்பில் குடும்பஸ்தர் வெள்ளை வானில் கடத்தல்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
புரம் பகுதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையாரான சிவராசா- சிவகரன் (வயது-25) என்பவரே இவ்வாறு கடத்தப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடத்தப்பட்டவர் குறித்து இது வரை எந்தவித தகவலும் கிடைக்கவில்லை என அவரது மனைவி உதயனுக்குத் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் உள்ள அரச சார்பு அமைப்பு ஒன்றின் அலுவலகத்தில் பணியாற்றும் ஒருவரே தனது கணவரைக் கடத்தியதாக நேரில் கண்டவர்கள் தன்னிடம் கூறினர் என்றும் மனைவி மேலும் கூறினார்.

குறித்த நபர் கடத்தப்பட்டவரின் உறவினர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கடத்தலுடன் சம்பந்தப்பட்டவர் எனச் சந்தேகிக்கப்படுபவரை புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு பொலிஸார் கூறியுள்ள போதும் அவர் இது வரை அங்கு செல்லவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸார் விசாரணைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்னர். (த-400)

# இராணுவத் தலையீட்டால் நிறுத்தப்பட்டது செயலமர்வு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஏற்பட்டது. இந்தத் தகவலை உறுதிப்படுத்தினார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை இமானுவேல் செபமாலை.

ஏற்கனவே கடந்த வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கு செயலமர்வு நடைபெற்றது.

இறுதி நாளான நேற்று பிரதேச செயலாளர்கள் மற்றும் அரச அதிகாரிகளுக்கு செயலமர்வு நடைபெறவிருந்தது. இதற்கான அனுமதியும் பெறப்பட்டிருந்தது.

குறித்த செயலமர்வில் பங்குபற்ற அரச அதிகாரிகளை அனுமதிக்க வேண்டாம் என்று இராணுவத்தினர், மன்னார் மாவட்ட செயலகத்துக்கு வழங்கிய அழுத்தத்தினாலேயே இந்த செயலமர்வை நடத்த முடியாது போனதாக பிரஜைகள் குழு தெரிவிக்கிறது.

இந்த விடயம் தொடர்பாக மன்னார் மாவட்ட அரச அதிபரின் கருத்தை உடனடியாக அறிய முடியவில்லை.

(ஐ-5-12)

# தாய்லாந்து, சீனா நாடுகளுடன் பலமாகிறது இலங்கை உறவு

கொழும்பு, ஜூன் 2
தாய்லாந்து மற்றும் சீனா ஆகிய நாடுகளுடன் பாதுகாப்புத்துறை சார் உறவுகளை இலங்கை பலப்படுத்திக்கொண்டுள்ளது.

போர் முடிவடைந்ததாக அறிவிக்கப்பட்டு 4 ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் இலங்கையின் பாதுகாப்பு மேம்பாட்டுக்காக சீனா, தாய்லாந்து ஆகிய நாடுகளுடன் இலங்கை ஒப்பந்தங்களைச் செய்துள்ளது.

சில தினங்களுக்கு முன்னர் சீனாவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இலங்கைக்குப் பாதுகாப்புத் தொழில்நுட்பம், இராணுவத்தினருக்கான பயிற்சி மற்றும் ஏனைய துறைகளில் இரு நாடுகளின் பாதுகாப்பு அமைச்சுக்களுக்கு இடையில் தொடர்ந்தும் ஒத்துழைப்புகளைப் பரிமாறிக்கொள்வதற்கான ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளார்.

இதேவேளை, இரண்டு நாள் பயணமாக இலங்கை வந்த தாய்லாந்து பிரதமரைச் சந்தித்துப் பேசிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் இலங்கையைப் பிரிப்பதற்கு வெளிநாடுகளிலிருந்து தொடர்ந்தும் போராடி வருகின்றனர். எனவே பாதுகாப்புத் தகவல்கள், புலனாய்வுத் தகவல்களைப் பகிர்ந்து கொள்வதில் தாய்லாந்து இன்னும் அதிகம் நெருக்கமாக ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுள்ளார்.

இலங்கை இராணுவத்தின் மனித உரிமை மீறல்களால், பயங்கரவாத முறியடிப்புக்கு எதிரான உதவிகளை இலங்கைக்கு அமெரிக்கா மட்டுப்படுத்தியுள்ளது.

இவ்வாறானதொரு நிலையிலேயே சீனா மற்றும் தாய்லாந்து நாடுகளுடன் இலங்கை பாதுகாப்பு உறவுகளைப் பலப்படுத்தியுள்ளது. (த-5)

# சீனாவுடனான நெருக்கத்தால் இந்தியா குழம்பக்கூடாது

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
போகிறோம் என்று கேட்கிறார் இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசம்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சீனாவுக்குப் பயணத்தை மேற்கொண்டு பலதரப்பட்ட உடன்பாடுகளில் கைச்சாத்திட்டுள்ளார். சீனாவுடன் இலங்கை நெருக்கமான உறவை வலுப்படுத்தும் நிலையிலேயே பிரசாத் காரியவசம் இவ்வாறு கூறியுள்ளார்.

டில்லியில் வெளிநாட்டுச் செய்தியாளர்கள் சங்கத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

இந்தியாவை நாம் ஓர் உறவினராக நெருங்கிய நண்பனாகவே கருதுகின்றோம். நாம் பலமான உறவைக் கொண்டிருக்க வேண்டும். அதே நேரத்தில் சீனாவுடனான உறவுகளும் எமக்கு முக்கியமானது. அது மிகவும் பழைமைவாய்ந்த உறவு.

எனவே இது ஒன்றை விட்டுக்கொடுத்து ஒன்றைப் பெறுகின்ற ஆட்டமல்ல. எமது உட்கட்டமைப்பு அபிவிருத்தியில் சீனாதான் பிரதானமாகத் தொடர்புபட்டுள்ளது. சீனாவுடனான உறவுகளை முரண்பாடாகப் பார்க்கக் கூடாது.

இன்னொரு நாட்டினால் மேற்கொள்ளப்படும் எந்தத் திட்டமும், மூலோபாய சமநிலை, அமைதி, பிராந்தியத்தின் பாதுகாப்புக்குப் பாதிப்பை ஏற்படுத்தக் கூடாது என்பதில் நாம் தெளிவாக உள்ளோம்-என்றார். (த-5)


**வீடு வாடகைக்குத் தேவை**
கொக்குவில் பகுதி, யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையை அண்மித்த பகுதியில் நான்கு பேர் கொண்ட குடும்பத்திற்கு வீடு வாடகைக்குத் தேவை.
(37927) தொடர்பு: 0775420567

**Dial Smart Call Taxi**
**Nelliyadi**
உங்களது இலகுவான பயணத்திற்கும் அதிவிரைவான பயணத்திற்கும் பயணிக்கும் Km மாத்திரம் கட்டணம் அறவிடப்படும். AC, NON/AC உடன் பருத்தித்துறை நெல்லியடி, மந்திகை ஆகியவற்றிற்கு பயணிக்க நாடவேண்டி இடம்.
Smart Call Taxi
Nelliyadi 0773600630
(சி/9556)

**German Swiss மொழிகள்**
தமிழ் மொழிபெயர்ப்புடன் Goethe Institute Examக்கு ஏற்றவாறு நடைபெறுகின்றன.
10,Palaly road, Jaffna.
T.P: 077 1604823. Mrs. Kajenthini

**தேவை**
முள்ளியவளையில் அமைந்துள்ள கட்டட பொருள்கள் விற்பனை நிலையத்திற்கு தங்கியிருந்து பணி செய்யக் கூடிய ஆண் ஒருவர் தேவை.
மாதாந்தம் 12000/= சம்பளமும் தங்குமிடம், உணவு என்பன இலவசமாக வழங்கப்படும்.
தொடர்பு:077 416 9026
(38254)(6.11)

**VACANCIES**
Sanken Construction (Pvt) Ltd, Jaffna branch having the following vacancies in Northern Territory.
* Civil Engineers with some building construction experience.
* Assistant Civil Engineers- N.D.T or equivalent with some building experience.
* Quantity Surveyors- Qualifified/ experienced with some experience in building construction.
* Technical Supervisors- with or without experience in building construction work.
Apply to:
jayanthi@sankenconstruction.lk
or
Fax:021 2224840
(சி/9519) (10.6)

**விரும்பிய நாட்டிற்கு குறுகிய காலம் போய்த் திரும்ப விசா ஆலோசனை**
Visit Visa, Sponsor
மறுக்கப்பட்ட விசாக்கள்
சட்ட ஆலோசனைகளிற்கு
திசை காட்டி(பிறைவேற்)லிமிட்
175, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
021 221 9016
021 568 9090
(37812)(6.11)

**கார் விற்பனைக்கு**
HG XXXX தொடரிலக்கமுடைய Hyundai Accent Car உடன் விற்பனைக்குண்டு.
மேலதிக விபரங்களிற்கு:
077 374 7825, 021 222 8984

**பஸ் விற்பனைக்கு**
ND-xxxx இலக்கமுடைய (Semi Luxery) யாழ்-கொழும்பு (வழி இல 87) றூட் பெமிற்றுடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
0777238615

**கடையும் வீடும் விற்பனைக்கு**
யாழ். ஆஸ்பத்திரி வீதியில் மாநகர சபை பிரதேச எல்லைக்குள் அமைந்துள்ள கடையுடன் சேர்ந்த வீடும் காணியும் உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு:- 0718454025

**கட்டடத் தொழிலாளர்கள் தேவை**
சங்கென் கொன்ஸ்ரக்ஸன் (பிவிடி) லிமிட் யாழ்.கிளைக்கு கீழ்வரும் வேலைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
★ பார ஊர்தி சாரதி (Heavy Vehicle Drivers)
★ தொழிலாளர்கள் (Office Labourers)
★ தொழில் செய்யுமிடத்தில் தங்கி வேலை செய்யக்கூடிய சமையல்காரர்
★ மேசன்மார்
★ சட்டறிங் வேலை செய்யக் கூடிய தச்சு தொழிலாளர்கள்
★ கட்டடம் கட்டும் இடத்தில் வேலை செய்யக்கூடிய (பார் பெண்டர்ஸ்) கம்பி தொழிலாளர்கள்
★ மாபிள் பதிக்கக் கூடிய மேசன்மார்
தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசிகள்
தெல்லிப்பழை - 0771236918
யாழ். கச்சேரியடி - 0777356079
ஊரெழு - 0718643636
கிளிநொச்சி - 0711093900
(சி/9520)

**PersonalClass (கணினி)**
★ 10 வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.
★ Ms Office 2013, Internet & Email, WebDesign, DTP, Graphic Design T.P-077 967 2038
(37817)(6.11)

**சிங்கப்பூர் மற்றும் மலேசியா நாட்டில் உடனடி வேலைவாய்ப்பு**
அதி உயர் சம்பளம், தங்குமிடம், மருத்துவம் இலவசம் மலேசியாவில் துறைமுகத்தில் வேலை வாய்ப்பு. ஒரு வாரத்தில் பயணம். சிங்கப்பூரில் ஏனைய துறைகளில் வேலை வாய்ப்பு
உடன் தொடர்பு:
Lanka Voice 077 058 4658

**Study in UK**
உங்கள் London செல்லும் கனவை நனவாக்க இன்றே எம்முடன் இணையுங்கள்
நடைமுறைகள் மாறினாலும் எவ்வித மாற்றமும் இன்றி London செல்லுங்கள்
GCE (O/L) தகமை போதுமானது
நீங்கள் ஏன் EXPONET ஐ தெரிவுசெய்ய வேண்டும்
June / July Intake க்கான அனுமதிகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன
COLLEGES
• Yearly Payment £3500
• IELTS overall: 4.5 or B1
UNIVERSITIES
• Yearly Payment £3950 - £6450
• IELTS overall band: Minimum 5.5
0117 555511/14/18
021 7538395 / 021 2227230

Karthiga

Usha Gowry
EXPONET
379 - 1/2 Galle Road, Colombo 06.
197, Arasady Road, Jaffna.
E-mail: nimal@expogroup.lk
Web: www.expogroup.lk

**யாழ் நகரில் Diploma in Mass Media அறிவிப்பாளர் பயிற்சி**
வானொலி, தொலைக்காட்சி அறிவிப்பாளராக, தயாரிப்பாளராக நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராக வருவதற்கு ஆவசப்படுகிறீர்களா?
இதோ புதியபிரிவுகள் ஆரம்பம் 08.06.2013 காலை 9 மணி வடமாகாணத்தில் (திறமையின் தேடல்) ஊடகத் துறையில் ஆர்வமுள்ள மாணவர்களை தலைசிறந்த அறிவிப்பாளர்களாக உருவாக்கி வரும் வவுனியா Sun British College பெருமையுடன் அறிமுகப்படுத்தும் யாழ் மாணவர்களுக்கான
அறிவிப்பாளர் பயிற்சி நெறி. (Diploma in Mass Media). வானொலி அறிவிப்பு, நிகழ்ச்சித் தயாரிப்பு, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு, விளம்பரத் தயாரிப்பு, நேரடி வர்ணனை, செய்தி வாசிப்பு, பத்திரிகை வாசிப்பு இன்னும் பல. (பயிற்சியினை நிறைவு செய்யும் மாணவர்களுக்கு 05 நாள் மழை FM வானொலியில் அறிவிப்பாளராக கடமையாற்றும் சந்தர்ப்பம்).
தயாராகுங்கள், பதிவுகளுக்கு விரையுங்கள்...
வவுனியா, முல்லைத்தீவு மாணவர்கள்
Sun British College
No-26.Station Road, Vavuniya.
T.P: 0777929475.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாணவர்கள்
IISEES NALLUR CAMPUS
No-762, Point Pedro Road, Nallur, Jaffna.
T.P: 0777929475/ 0212224728.
குறிப்பு: எமது நிறுவனத்தில் அறிவிப்பாளர் பயிற்சியினை மேற்கொண்ட மாணவர்கள் அரச, தனியார் வானொலி, தொலைக்காட்சிகளில் அறிவிப்பாளர்களாக கடமையாற்றுகின்றார்கள்.
(35257) (10,6)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.06.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'றோ'வின் பார்வை வடக்கு மீது 04



வடக்கும் கிழக்காகலாம்



09

ரகசியப் புலிகள் சுவிஸில்....



23

தேசிய அணிக்கு தமிழ் வீரர்கள்



21

சிரிய உள்நாட்டுப் போரில் முகிழ்ந்துள்ள புதிய திருப்பங்கள் 24




# சூரியகாந்தி

உதயன் ஞாயிறு சிறப்பம்சம் 01

உதயன் 02 ஜுன் 2013 ஞாயிற்றுக்கிழமை பக்கங்கள்: இருபத்துநான்கு


# எங்களின் கடலிலே...

உ சிலமணி



அள்ளித் தந்த கடலே அள்ளிக் கொண்டு சென்ற சுனாமி அவலத்திலிருந்து மீள்வதற்குள் போரினால் இடப்பெயர்வைச் சந்தித்து மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் தென்பகுதியைச் சேர்ந்த பெரும்பான்மையினத்தவரால் தமது வாழ்வாதாரங்களைக் தொலைக்கின்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தின் எட்டாத் தொலைவாக இருக்கின்ற வடமராட்சி கிழக்குப் பகுதி மீனவர்களது வாழ்வாதாரமே தற்போது கேள்விக் குறியாக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்குப் பகுதி மக்கள் 2010 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி மீளக்குடியமர்வு செய்யப்பட்டனர். மீன்பிடியை பிரதானமாக கொண்ட இந்தப் பகுதி மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக பாசிக் நிறுவனத்தால் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

சுண்டிக்குளம் கடல் பகுதியே மீன் வங்கியாகக் காணப்படுவதால் இந்திய மீனவர்கள் தொடக்கம் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மீனவர்களும் இந்தப் பகுதிகளுக்குள் வந்து மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். இருப்பினும் இந்தப் பகுதி மீனவர்களது வாழ்வாதாரத்துக்குப் பெரியளவில் பாதிப்பு ஏற்படவில்லை.

கடந்த ஆண்டு தென்பகுதியைச் சேர்ந்த பெரும்பான்மையின மீனவர்கள் கடல்அட்டை பிடிப்பதற்காக வடமராட்சி கிழக்கு கடற்பகுதியினுள் புகுந்தார்களோ அப்போதிருந்து தமது வாழ்வாதாரம் ஆட்டம் காணத் தொடங்கியதாகக் குறிப்பிடுகின்றனர் வடமராட்சி கிழக்கு மீனவ சங்கத்தினர்.

'' போனவருஷம் ஆமிக்காரரோட வந்து சிங்கள மீன்பிடிகாரர் கேட்டதால கடல் அட்டை பிடிக்க தாளையடிப் பக்கம் விட்டனாங்கள். ஆனால் இதுதான் கடைசி வருஷம் என்று சொல்லித்தான் விட்டனாங்கள். ஆனா அவங்கள் இந்த வருஷமும் வந்து கடல் அட்டை பிடிக்கிறாங்கள்'' என்கின்றனர் மீனவ சங்கத்தினர்.

யாழ்ப்பாணத்தின் கடல் எல்லையாக இருப்பது சுண்டிக்குளம் பகுதி. இந்தப் பகுதியில் மக்கள் இன்னமும் மீளக்குடியமரவில்லை. அத்துடன் கேவிலில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் இந்தப் பகுதியினூடாக தொழில் செய்வதற்கு வடமராட்சி கிழக்கு மீனவர்களுக்கு அனுமதியளிக்கவில்லை. இருப்பினும் சுண்டிக்குளம் பகுதிக்குரிய கடற்தொழிலாளர் சங்கம் ஒன்று இயங்கி வருகின்றது.

''சுண்டிக்குளம் தலைவர் காசை வாங்கிக் கொண்டு சிங்களவன் கடல் அட்டை பிடிக்கிறத்துக்கு கடிதம் குடுத்திட்டான். அவர் இப்ப ஆஸ்திரேலியாவுக்கு ஓடிட்டார். அவன்ர கடிதத்தை வச்சுக் கொண்டு மீன்பிடி அமைச்சில அனுமதி எடுத்திட்டு சிங்களவன் இங்க கடல் அட்டை பிடிக்க வந்திட்டான்'' என்கின்றனர் மீனவ சங்கத்தினர்.

நீர்கொழும்பு, சிலாபம் பகுதியைச் சேர்ந்த சிங்கள மீனவர்கள் ஏப்ரல் மாதம் தொடக்கம் ஒக்ரோபர் மாதம் வரையிலான காலப் பகுதியிலேயே கடல் அட்டை பிடிப்பதற்காக வடமராட்சி கிழக்கு கடலுக்கு வருகின்றனர். இந்த வருஷமும் அவர்கள் மே மாதம் வடமராட்சிக்கு வந்த போது பிரச்சினை வெடித்தது.

சிங்கள மீனவர்கள் இந்தப் பகுதியில் வந்து கடல் அட்டைபிடிக்க அனுமதிக்க மாட்டோம் என்று சகல மீனவசங்கங்களும் உறுதியாக நின்றபோதும், சுண்டிக்குளம் சங்கத்தினால் தன்னிச்சையாக கடிதம் வழங்கப்பட்டதால் வேறு வழியின்றி அவர்களை அனுமதிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இருப்பினும் சிங்கள மீனவர்கள், வடமராட்சி கிழக்கு மீனவர்களுக்கிடையே கடல்அட்டை பிடிப்பது தொடர்பில் ஒரு கலந்துரையாடலுக்கு இராணுவம் ஒழுங்கு செய்தது.

மே மாத ஆரம்பத்தில் குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. ஆனால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களோ எந்தவொரு அரசியல் தரப்பினரும் கூட்டத்துக்கு வரக்கூடாதென்றும் அவ்வாறு அவர்கள் வந்தால் கூட்டம் நடக்காதென்றும் நீங்கள் இங்கிருக்க மாட்டீர்கள் என்றும் வடமராட்சி கிழக்கு மீனவ சங்கப் பிரதிநிதிகளை இராணுவத்தினர் மிரட்டியுள்ளனர்.

இதனையடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வராமலேயே குறித்த கலந்துரையாடல் இராணுவத்தினரால் நடத்தப்பட்டுள்ளது.

''எங்க ஏ.டி (கடற்தொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர்) வந்தவர். வடமராட்சி கிழக்கில இருக்கிற எல்லா ஆமி கொமாண்டர்மாரும் வந்தவை. எங்க மீனவ சங்கங்க ஆக்கள் எல்லாரும் வந்தவை. தலைவர், செயலாளர், பொருளாளர்மாரை மட்டும்தான் கூட்டத்துக்க ஆமி விட்டவன். கூட்டம் பெரும் காரசாரமாக நடந்தது. அவை கடல் அட்டைபிடிக்கிறதில உறுதியாய் நிண்டிச்சின. ஒரு கட்டத்தில எங்கட ஆக்கள் இவையோட கதைச்சுப் பிரியோசனமில்லை சிங்களவன்ர வாடியை எரிச்சு அடிச்சுக் கலைச்சாத்தான் சரி என்று சொன்னதுக்குப் பிறகுதான் அவை அடங்கினவை '' என்கிறார் மீனவ சங்க பிரதிநிதி ஒருவர்.

''எங்கட இடத்துக்கு நாங்கள் போகேலாது. ஆனா சிங்களவன் வந்தவுடன மட்டும் அவங்களை விட்டுட்டாங்கள். சுண்டிக்குளத்திலயிருந்து எங்கட ஆக்கள் தொழில் செய்ய அனுமதியில்லை. சிங்களவன் வந்து கடல் அட்டைபிடிக்கிறான். எங்களால என்ன செய்யேலும் '' என்று இயலாமையை விபரிக்கின்றார் அந்தப் பகுதி மீனவர் ஒருவர்.

''400 போட் வந்து நிக்குது. 60 வாடி வரையில கட்டியிருக்கிறான். 12 கொம்பனி கடல் அட்டை பிடிக்குது. ஆனா இரண்டு கொம்பனிக்குத்தான் அனுமதி இருக்குது. மிச்சாக்கள் எல்லாம் ஆமிகாரனிண்ட செல்வாக்கில இருந்து மீன் பிடிக்கிறாங்கள். அட்டை பிடிக்கிறாங்கள், சிலிண்டர் பாவிக்கிறாங்கள், லைட் அடிச்சுப் பிடிக்கிறாங்கள். தடை செய்த எல்லாத்தையும் பாவிச்சு அவன் கடல் அட்டை பிடிச்சாலும் அதை தடுக்க ஒரு நடவடிக்கையும் இல்லை'' என்று குறிப்பிடுகிறார். மீனவ சங்கத் தலைவர்.

இலங்கையில் சங்கு பிடிப்பதற்கு தடைசெய்யப்பட்டுள்ள நிலையில் சிங்கள மீனவர்கள் கடல் அட்டை பிடிக்கும் சாக்கில் சங்கு பிடித்தலில் ஈடுபடுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பிடிக்கப்படும் சங்குகளை கூலரின் அடியில் போட்டுக் கொண்டு செல்கின்றனர்.

''சிலிண்டர் பாவிச்சு, லைட் அடிச்சு இரவில இவங்கள் கடல் அட்டை பிடிக்கிறதால மீன்பாடு எங்களுக்கு குறைவாக இருக்கு. நாங்கள்

(5 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவி நிறத்தின் அரசியல்

■ தம்பி

சிங்கள – பௌத்த நெறியைத் தழுவாத சிறுபான்மையினத்தவர்கள் இலங்கை நாட்டில் வாழத்தகுதியற்றவர்கள் என்ற முடிவை முன்னிறுத்தி தமது அரசியல் பயணத்தை வெற்றிகரமாக தொடர்ந்தனர். துறவிகளை மீறி அரசுகள், அரசியல் கட்சிகள் எதுவும் செய்துவிட முடியாது என்ற ஆத்மீக கட்டுப்பாடும், அவர்களின் காவியுடை அதிகார இருப்பிற்கு காரணமாக அமைந்து விடுகின்றது.

மஞ்சள், செம்மஞ்சள், சிவப்பு என்ற நிறங்களிலான காவிகளைத் தரித்தவர்களை பௌத்த துறவிகள் என்கிறோம். சிறு அளவிலான கொள்கை மாறுதல்களுடனும், நாடு மற்றும் பண்பாட்டு வித்தியாசங்களுடனும் தம்மை வகைப்படுத்திக் காட்டிக் கொள்ளவே பல் வர்ணங்களிலான காவிகளை அந்தத் துறைவிகள் போர்த்திக்கொள்கின்றனர். அந்தத் துணிகளுக்கென்று தனியான புனிதம் இருப்பதுபோலவே, தரங் குறையாத மரியாதையுமுண்டு. இலங்கை, திபெத், தாய்லாந்து, இந்தோனேசியா, இந்தியா போன்ற நாடுகளில் இந்தப் புனிதத் துணியை அடையாளமாக்கிக் கொண்ட துறவிகள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

பௌத்த தத்துவ உருவாக்கத்தோடு அறிமுகமானவர்களே சமூக வழிகாட்டலாளர்களான இந்தத் துறவிகள். பௌத்தம் என்ற போதனை அரசியலுக்காகவும், பண்பாட்டு ஆக்கிரமிப்புக்காகவும் ஏனைய தேசங்களை நோக்கி படையெடுக்கையில் துறவிகளும் அந்தத் தேசங்களில் உற்பத்தியாகிக் கொண்டனர். இலங்கைக்கும் அந்த வழியிலேயே பௌத்த துறவிகள் அறிமுகமானார்கள். மஹிந்தர் தலைமையிலான துறவிகள் அணி, தேவநம்பிய தீசனை மதம் மாற்றியதோடு, இலங்கை அரசியலில், பண்பாட்டில் பௌத்த மதத்தின் ஆதிக்கம் முளைவிடத் தொடங்கியது. அன்றைய காலத்தில் மன்னர்களே சர்வ வல்லமையும் பொருந்தியவர்களாக காணப்பட்டதால் அவர்களுக்கு ஆலோசனை கூறி வழிநடத்தும் பொறுப்பை பௌத்தத்தின் வருகையோடு துறவிகள் எடுத்துக் கொண்டனர்.

இதன் விளைவு, இலங்கை வரலாற்றில் மன்னர்களுக்கு கதாநாயத்தனத்தையும், வில்லத்தனத்தையும் பௌத்த துறவிகளே வழங்கும் நிலை உருவாகியது. உதாரணமாக, பௌத்த மதத்திற்கும், துறவிகளுக்கும் எந்த மன்னன் அதிக தானங்களையும், பாதுகாப்பையும் வழங்குகின்றானோ அவனையே துறவிகள் படைத்த வரலாற்று இலக்கியங்களில் பாட்டுடைத் தலைவனாக மாற்றினர். கெட்ட குணங்கள் அதிகம் கொண்ட துட்ட காமினி வரலாற்றில் கதாநாயகன் ஆக்கப்பட்டதும், நாட்டின் பொருளியல் வளர்ச்சிக்கு அதிக பணியாற்றிய மகாசேனன் கெட்டவனாக்கி வரலாற்றில் காட்டப்பட்டமைக்கும் இந்த அடிப்படை வரலாற்றியல் உதாரணமே காரணமாகும். இந்த வகையில் இலங்கையின் நடப்பியல் அரசியலையும், அதன் விளைவான வரலாற்றையும் திசைப்படுத்துவதில் காவியுடை தரித்த துறவிகள் மிகுந்த செல்வாக்கைப் பெற்றவர்களாக, மிகையான அதிகாரத்தைக் கொண்டவர்களாக இருந்து வந்திருக்கின்றனர். இதற்கு இலங்கையின் வரலாற்றுத் தொடக்க காலங்களில் நிகழ்ந்த இதுபோன்ற சம்பவங்கள் சிறந்த எடுத்துக்காட்டுகள்.

காலனியவாதிகளின் காலத்தில் பௌத்த துறவிகள் அரசியலில் ஈடுபடும் நிலைமை இருந்திருக்கின்றனது. அநாகபீக தர்மபால போன்றோர் பிரித்தானியரை எதிர்த்து தீவிர அரசியல் பணியாற்றினர்

இலங்கையின் நவீன கால வரலாறானது பிரித்தானியரது வெளியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. இந்தக் காலப்பகுதியிலேயே காவித் துறவிகளுக்கு தனியான அரசியல் அடையாளம் கிடைக்கின்றது. இந்தக் காலத்தில், பௌத்த தர்மம் போதிக்கின்ற நற்செயல்களை புறந்தள்ளி முற்றுமுழுதான இனக் குரோத அரசியலை முன்னெடுக்கும் சக்தியாக காவித் துறவிகள் முகாமிட்டுக் கொள்கின்றனர். அதாவது சிங்கள – பௌத்த நெறியைத் தழுவாத சிறுபான்மையினத்தவர்கள் இலங்கை நாட்டில் வாழத்தகுதியற்றவர்கள் என்ற முடிவை முன்னிறுத்தி தமது அரசியல் பயணத்தை வெற்றிகரமாக தொடர்ந்தனர். துறவிகளை மீறி அரசுகள், அரசியல் கட்சிகள் எதுவும் செய்துவிட முடியாது என்ற ஆத்மீக கட்டுப்பாடும், அவர்களின் காவியுடை அதிகார இருப்பிற்கு காரணமாக அமைந்து விடுகின்றது.

இலங்கை வரலாற்றில் 2000 ஆம் ஆண்டுகளுக்குப் பின்னரான காலத்தில் பௌத்த காவியுடை அரசியல் என்றுமில்லாத எழுச்சியைப் பெற்றது. வடக்குக் கிழக்கில் எழுச்சி பெற்ற தமிழரின் விடுதலைப் போராட்டம் இலங்கை இரண்டுபடப் போகின்றது என்ற பீதியை சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படுத்திய காலமாக இக்காலம் இருந்தது. இதனால் இனவாத, மதவாத அரசியல் எழுச்சியின் தேவை அவசியமெனப்பட்டது. ஜாதிக ஹெல உறுமயவின் வரவு இவ்வாறானதொரு பின்னணியிலேயே நிகழ்ந்து பேரெழுச்சி பெற்றது. தமிழ் – சிங்கள கலைஞர்களும், புத்திஜீவிகளும் ஒன்று கூடவிருந்த அரிய சந்தர்ப்பத்தைக் கலவரமாக்கிய துறவிகள் இலங்கையின் காவி அரசியலின் வன்மத்தை மீள் பிரசவப்படுத்தினர்.

அன்று ஆரம்பித்த காவி அரசியல், இரு இனங்களும் ஐக்கியப்படும் சந்தர்ப்பங்கள் அனைத்தையும் தவிடுபொடியாக்கியும் நடைமுறை அரசியலை தன் மாறாத நிகழ்ச்சி நிரலாக கொண்டு செயற்பட்டு வருகின்றது. போர் உச்சம் பெறும் வரை தமிழ் மக்களை மட்டுமே தமது எதிரிகளாகக் கருதி அரசியல் நடத்தினர். போர் முடிவுற்றதும் தமது பிராதான எதிரி களத்திலிருந்து அகற்றப்பட்டதை காவி அரசியல்வாதிகள் எதிர்கொண்டனர். வடக்கில் தேர்தல் நடத்தப்படக் கூடாது. வட, கிழக்கெங்கும் பௌத்த குடியேற்றம் நிகழ்த்தப்படவேண்டும் என்ற கோரிக்கைகளை அவர்கள் முன்வைத்து அரசியல் செய்கின்றனர். ஆனாலும் அதற்கு முன்னரே அரசு அந்த வேலைத் திட்டங்களை வடக்கு, கிழக்கில் செய்து வருவதால் காவி அரசியல் தமிழ் பகுதியில் சரிவை சந்தித்துவிட்டது.

ஒரு மாற்றுக்காக இலங்கையின் மூன்றாவது சிறுபான்மையினமான முஸ்லிம் மக்களை காவி அரசியல்வாதிகள் தம் அரசியல் இலக்காகதெரிவுசெய்துகொண்டனர். பள்ளிவாசல்களில் பத்து மணிக்குப் பின்னர் ஒலியெழுப்பி தொழுகையில் ஈடுபடக் கூடாது என்ற சட்டவரைவுடன் முஸ்லிம்களுக்கு எதிரான தம் அரசியலைத் தொடக்கி வைத்தனர். அடுத்தடுத்து தம்புள்ள விகாரை சம்பவமும், சர்ச்சையும் நிகழ்ந்தேறியது. பர்தா, ஹலால், எனப் பல பிரச்சினைகளை முஸ்லிகளுக்கு எதிராக பொதுபலசேனா போன்ற காவி அரசியல் சக்திகள் தொடக்கி வைத்தன. சிலவற்றில் வெற்றியும் அடைந்தன. முஸ்லிம்களின் வணிக நிலையங்கள் அடித்து நொறுக்கப்பட்டன. தீயூட்டப்பட்டன.

கடந்த வாரத்தில், ஸ்ரீ சுகந்த விகாரையின் போவத்தே இந்திர ரத்ன தேரர் உயிர் வதைக்கு எதிராக தனது உயிரை தீயில் மாய்த்துக் கொண்டார். இலங்கையில் இறைச்சிக்காக மாடுகளை அதிகளவில் வெட்டுவது முஸ்லிம்கள் என்ற பொதுப்பார்வை இருக்கின்றது. அவர்களின் பண்டிகைக் காலங்களில் மாட்டிறைச்சி அதிகளவில் பரிமாறப்படுவதால் அதிகளவான மாடுகள் கொல்லப்படக் கூடும். அவர்களின் உணவுசார் கலாசார நடைமுறையையும் தடைசெய்யும் நோக்கிற்காகவே மிருக உயிர் வதை என்ற விடயம் கையிலெடுக்கப்பட்டிருக்கின்றது. 1980 களில் தென்னிலங்கையில் சிங்கள மக்களும், 2009 களில் வட இலங்கையில் தமிழ் மக்களும் எதிர்கொண்ட உயிர் வதைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து மூச்சுக் கூட விடாத காவி அரசியல் சக்திகள், மிருக வதைக்காக உயிர் துறப்பது விந்தையானதும், முரணானதும் ஆகும்.



இலங்கையின் நவீன கால வரலாறானது பிரித்தானியரது வெளியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. இந்தக் காலப்பகுதியிலேயே காவித் துறவிகளுக்கு தனியான அரசியல் அடையாளம் கிடைக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பழநெடுமாறன் நீண்ட காலமாகத் தமிழ்த் தேசியத்துக்காகக் குரல் கொடுப்பவர். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தீவிர ஆதரவாளர். விடுதலைப் புலிகள் இயக்கம் வன்னியில் போராட்டங்களை நடத்தியபோது தமிழகத்திலிருந்து வந்து தலைவர் பிரபாகரனை நேரில் சந்தித்துச் சென்றவர். இன்று வரைக்கும் ஈழத் தமிழர்களின் விடுதலைக்காக தமிழ கத்தில் இருந்தபடி தளர்வற்று தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வருபவர்.
தமிழ்த் தேசியத்தை மனித குல வரலாற்றுடன் தொடர்புபடுத்தி அவர் எழுதும் புதிய தொடர் இது. பல நூல்களை, ஆய்வுக் கட்டுரைகளைப் படித்த பின்னர் அவர் இந்தத் தொடரை எழுதுகிறார். "தமிழினம் ஒரு தொல்லினம் மட்டுமல்ல செழுமையான பண்பாட்டுப் பரப்பை உருவாக்கி அதன் மீது ஒரு சீரிய நாகரிகத்தையும் உருவாக்கி உலகனைத்தும் தனது இருப்பை நிலைநிறுத்தி இருக்கும் ஓர் இனம் என்பதால் தமிழ்த் தேசியத்தை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டியது அவசியம். இன்று தேசிய இனங்களின் வாழ்வும் சுயநிர்ணய உரிமையும் நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றன. இந்த நிலையில் தமிழினத்தின் தொன்மை குறித்தும், அது தேசிய இனமாக இயங்கி வந்திருப்பது குறித்தும் இந்தத் தொடர் விளக்குகிறது.



# மனித குலமும் தமிழ்த் தேசியமும்

## மனித குலத் தோற்றமும் வளர்ச்சியும்

02

மனித குலத்தை இனங்களாகப் பாகுபாடு செய்வது என்பது உயிரியலை அடிப்படையாகக் கொண்டதாகும் என வரலாற்றாசிரியர் ஜேம்ஸ் எட்ஜர்ஸ்வைன் தாம் எழுதிய "History of World Civilisation" என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

1. உடல் அமைப்பு
2. கீழ்த்தாடை அமைப்பு
3. முகத்தின் அமைப்பு
4. நிறம்
5. மயிரின் அமைப்பு
6. தலையின் அமைப்பு

ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு மனித இனங்கள் பிரிக்கப்படுகின்றன. குறிப்பாகத், தலையின் அமைப்பு, மயிர் ஆகியவை இனப் பாகுபாட்டில் முக்கிய இடம் வகித்தன.

### சோவியத் அறிஞர்களின் கருத்து

பெரும்பாலான சோவியத் மானிட இயல் அறிஞர்கள் மனித இனத்தை மூன்று பெரிய இனங்களாகப் பிரிக்கிறார்கள்.

1. நீக்ரோ - ஆஸ்திரேலிய வகை அல்லது ஆபிரிக்க - ஓஷனிய வகை அல்லது நில நடுக்கோட்டு வகை
2. ஐரோப்பிய வகை அல்லது ஆசிய வகை
3. மங்கோலிய வகை அல்லது ஆசிய - அமெரிக்க வகை

ரகீன்ஸ்கி எனும் அறிஞர் இந்த மூன்று பெரிய இனங்களை 22 கிளை இனங்களாகப் பிரிக்கிறார். புனாக் எனும் அறிஞர் மனித குலத்தை 48 பிரிவுகளாகப் பிரிக்கிறார். இரத்தக் குழுக்களின் வேறுபாட்டை அடிப்படையாகக் கொண்டு இனங்கள் பிரிக்கப்படலாம் என பாய்டு எனும் அறிஞர் கூறுகிறார். அவர் மனித குலத்தைக் கீழ்க்கண்ட 5 இனங்களாக வரையறுக்கிறார்.

1. காக்கேஷிய வகை
2. நீக்ரோ வகை
3. மங்கோலிய வகை
4. அமெரிக்க- இந்திய வகை
5. ஆஸ்திரேலிய வகை

ரிச்சர்ட்டு மக்குல்லாக் என்ற அறிஞர் மனித குலத்தை 5 முக்கிய இனங்களாகப் பிரிக்கிறார்.

1. காங்கோயிட்
2. காப்போயிட்

மேற்கண்ட இரு வகையினரும் சகாரா நீங்கி ஆபிரிக்காவில் பரவியவர்கள்.

3. ஆஸ்திரேலாயிட்: இவர்கள் இந்தியா, தென்கிழக்கு ஆசியா, இந்தோனேஷியா, நியூகினியா, ஆஸ்திரேலியா ஆகியவற்றில் பரவியவர்கள்.
4. மங்கோலாயிட்: வடகிழக்கு ஆசியாவில் பரவியவர்கள்
5. காக்ஸாயிட்: ஐரோப்பா, வடக்கு ஆபிரிக்கா, மேற் ஆசியா பகுதிகளில் பரவியவர்கள்.

தொடக்க காலத்தில் வாழ்ந்த மனித இனங்களை வேறு சில மானிட இயல் அறிஞர்கள் பின்வருமாறு பகுத்துள்ளனர்.

1. இந்தோ- ஐரோப்பிய இனம்- கருங்கடலுக்கும் காகசஸ் மலைகளுக்கும் நடுவே உள்ள பகுதியில்- அதாவது மத்திய ஆசியாவில் வாழ்ந்தவர்கள்.
2. செமிடிக் இனம்- அரேபிய பாலைவனங்களில் வாழ்ந்தவர்கள்.
3. மங்கோலிய இனம்- மங்கோலியாவில் வாழ்ந்தவர்கள்.
4. ஆஸ்திரேலிய இனம்- தென்கிழக்கு ஆசியாவில் வாழ்ந்தவர்கள்.

### மனித குலத்தின் தொட்டில்

பல நூறாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட ஊழிக்காலத்தில் இந்து மாக் கடலில் இருந்து ஒரு பெரிய நிலப்பரப்பு மூழ்கி மறைந்தது. இந்தக் கண்டத்தில் வாழ்ந்து மறைந்த ஒரு குரங்கினமே மனித இனமாகப் பின்னர் உருவெடுத்தது என்னும் கருத்தை பிரடரிக் எங்கல்ஸ் கூறுகிறார். தென்கிழக்கு ஆபிரிக்காவில் தான் மக்களினம் தோன்றியது என சார்லசு டார்வின் கூறியுள்ளார். அந்தத் தென்கிழக்கு ஆபிரிக்கா குமரிக்கண்டத்தின் ஒரு பகுதியாகவோ அதை ஒட்டிய பகுதியாகவோ இருந்திருக்க வேண்டும்.

குரங்கு நிலையில் இருந்த மனித இனம் நவின மனிதனாக உருப்பெறுகின்ற வகையில் மனித குலத்தின் தொட்டிலாக இருந்தது குமரிக்கண்டமே எனத் தோமஸ் ஹக்ஸ்லி [Thomas Huxley] 19 ஆம் நூற்றாண்டில் முன்வைத்த கருத்தை ஏனஸ்ட் ஹெகேல் [Earnst Kaeckel] விரிவுபடுத்தினார். குமரிக்கண்டத்தில் இருந்த மனிதக் குரங்கினம் ஆபிரிக்காவையும் இந்தியத் துணைக் கண்டத்தையும் நோக்கி இடம் பெயர்ந்ததாக சோவியத் அறிஞரான ஒய். ரெஃழத்தோவ் [Y.- Reshetov] கூறுகிறார்.

ஆபிரிக்காவில் இருந்துதான் மனித குலம் உலகெங்கும் பரவியது என்னும் கருத்தைப் பல்வேறு அறிஞர்கள் உறுதி செய்திருக்கின்றனர். ஆனால் அறிஞர் தேவநேயப்பாவாணர் "கடலில் மூழ்கி மறைந்த குமரிக் கண்டத்தில் இருந்தே மனித இனம் உலகெங்கும் பரவி இருக்க வேண்டும்" என்னும் கருத்தைப் பின்வருமாறு வலியுறுத்தியுள்ளார்.

"மாந்த இனங்களின் கொடிவழியும் பொதுப்படையான இடமாற்றங்களும் பற்றிய கருதுகோள். மாந்தனின் முந்தியல் இருப்பிடம் இன்று இந்துமாவாரியில் மூழ்கியுள்ள ஒரு கண்டம் என்றும், அது இன்றுள்ள படி ஆசியாவின் தென் கரையை நெடுகிலும் அடுத்து [பெரும்பாலும் இருந்திருக்கக் கூடிய படி] அதனோடு சில விடங்களில் இணைந்தும், கிழக்கில் [Further India] அப்பாலை இந்தியாவும் சண்டாத் தீவுகள் வரையும், பரவியிருந்ததென்றும் கருதுவிக்கும் பல சூழ்நிலைகள் [சிறப்பாகக் காலக் கணக்கியல் உய்மைகள்] உள்ளன. விலங்குகளும் நிலைத்திணையும் பற்றிய பல ஞால நூலுண்மைகள் அத்தகைய தென்னிந்திய கண்டமொன்று முன்னிருந்ததென்பதைப் பெரிதும் காட்டுகின்றன. அந்தக் கண்டத்துக்கு சிறப்பாக உரியனவாயிருந்த முந்தியற் பாலுண்ணிகளால், அது இலெமூரியா [Lemuria] எனப் பெயர் பெற்றது. அதை முதற்கால மாந்தனின் உறைவிடமாகக் கொள்வோமாயின், மாந்த இனங்கள் இடம்பெயர்ந்து ஆங்காங்கும் குடியேறியிருக்கும் திணையியற் பாதீடு எளிதாய் விளங்கிவிடும்.

மாந்த இனவாராய்ச்சி, வட பாகத்திலும் நண்ணிலக் கடற்கரையிலும் இன்று வாழும் மாந்த இனங்களின் முன்னோர், தென்னிந்தியா வழியாகத்தான் அவ்விடங்களுக்குச் சென்றிருந்தனர் என்பது எவ்வகையிலும் கீழ்க் கரையில் கண்டெடுக்கப்பட்ட மாந்தனெலும்புக் கூடுகளுக்கும் அடையாளங்களுக்கும் உரிய காலம் இன்னதென்று தீர்மானிக்கப் படாததாயிருப்பினும் பொதுவாகக் கணிக்கப்படும் வரலாற்றுக் காலத்துக்கு முற்றும் அப்பாற்பட்டதாகும்.

(வளரும்)

குரங்கு நிலையில் இருந்த மனித இனம் நவீன மனிதனாக உருப் பெறுகின்ற வகையில் மனித குலத்தின் தொட்டிலாக இருந்தது குமரிக் கண்டமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'றோ'வின் பார்வை வடக்கு மீது

அதிரன்





வடக்கில் நிலைமைகளை நேரில் அறிந்து கொள்வதற்கு இந்திய மத்திய அரசு காட்டி வரும் அக்கறை அண்மைக்காலச் சம்பவங்களின் மூலம் வெளியாகியுள்ளது.

சீனாவுடனான உறவை இலங்கை வலுப்படுத்தி வரும் நிலையில் இலங்கையின் வடபகுதியில் தமிழர்களின் தற்போதைய நிலைமைகள் குறித்தும் அவர்களின் பிரச்சினைகள் குறித்தும் நேரடியாக அறிந்துகொள்வதில் இந்திய அரசும் அதன் கீழ் உள்ள அமைப்புக்களும் அதிக அக்கறையும் கரிசனையும் காட்டி வருகின்றன.

சீனாவுக்கான பயணம் ஒன்றை மேற்கொண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அங்கு சென்றுள்ள அதே நேரத்தில் இலங்கையின் வடபகுதிக்கு இந்திய அரசின் முக்கிய பிரமுகர்கள் வந்து சென்றிருக்கிறார்கள். இந்திய புலனாய்வுத்துறை அமைப்பான 'றோ' உயர் அதிகாரியான எல்.ஐ.என்.ஜி. சின்ஹா தலைமையிலான நான்கு பேரைக் கொண்ட குழுவினரே வடபகுதிக்கு நேரில் சென்று நிலைமைகளை அவதானித்துள்ளதுடன் வடபகுதியிலுள்ள படைத் தளபதிகளுடனும் இரகசியப் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளனர்.

இந்திய அரசின் ஒத்துழைப்புடன் ஏற்படுத்தப்பட்ட 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை இல்லாதொழிக்குமாறும் அதில் உள்ள காணி, பொலிஸ் அதிகாரங்களை நீக்குமாறும் ஜனாதிபதியின் சகோதரரும் பாதுகாப்புச் செயலருமான கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் ஆளும் தரப்பு அமைச்சர்கள், பேரினவாத கட்சிகளின் தலைவர்கள் உரக்கக் குரல் கொடுத்து வரும் இந்த நேரத்தில் இந்தியப் புலனாய்வு அமைப்பான 'றோ' வடக்கில் தனது நோட்டம் இடும் பணிகளை ஆரம்பித்துள்ளமை பல்வேறு மட்டங்களிலும் சந்தேகங்களை கிளப்பியிருக்கிறது.

13 ஆவது திருத்தத்தை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு இந்திய மத்திய அரசும் அதனோடு இணைந்த கட்சிகளும், தமிழகமும் இலங்கை அரசுக்கு தொடர்ச்சியாக நெருக்கடி கொடுத்து வருகின்றன. தமிழர்களின் ஆகக் குறைந்த அரசியல் தீர்வுக்கான அடித்தளமாக இருக்கும் இந்தப் 13 ஆவது திருத்தத்தையாவது நடைமுறைப்படுத்தி அதன் மூலம் தமிழர் பிரச்சினைக்கான தீர்வு எட்டும் முயற்சியை முன்கொண்டு செல்லுமாறு இந்திய மத்திய அரசு இலங்கையைத் தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது. இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வரும் அரசியல்தலைவர்கள் அனைவரும் தமது பயணத்தின் முடிவில் ஜனாதிபதி மஹிந்தவிடம் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறே கூறிவிட்டுத் திரும்புகின்றனர். இவ்வாறு 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று இந்திய அரசு விடாப்பிடியாக இருக்கும் அதேவேளை, இலங்கை அரசோ '13'ஐ ஒழிக்கும் கைங்கரியங்களை திரைமறைவில் மேற்கொண்டு வருகிறது. அதன் ஓர் அங்கமாக தனது அமைச்சர்களையும் பேரினவாதக் கட்சிகளையும் பின்னால் இருந்து கிள்ளிவிட்டு 13 ஆவது திருத்தத்துக்கு எதிராக குரல் கொடுக்குமாறு அரசு தூண்டிவிடுகிறது. போதாக் குறைக்கு அரச அதிகாரியாகவுள்ள பாதுகாப்பு அமைச்சின் செயலரோ ஓர் அரசியல்வாதியைப் போன்று 13 ஆவது திருத்தத்துக்கு எதிராக கூச்சல் போட்டு வருகிறார்.

அத்துடன் வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்த விடாமல் தடுப்பதில் பாதுகாப்பு அமைச்சின் செயலரும் சிங்கள மிதவாதத் தலைவர்களும் பல்வேறுபட்ட கருத்துக்களை வெளியிட்டு வடக்குத் தேர்தல் தொடர்பில் அச்சமூட்டும் பிரசாரங்களை சிங்கள மக்கள் மத்தியில் மேற்கொள்கின்றனர். வடக்குத் தேர்தலுக்கு எதிராக சிங்கள மக்களும் கிளர்ந்தெழ வேண்டும் என்ற எண்ணத்துடன் தேர்தலுக்கு எதிரான இந்தப் பொய் பிரசாரங்கள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. காணி, பொலிஸ் அதிகாரங்களை நீக்காமல் வடக்கு மாகாணத் தேர்தலை நடத்தினால் அது தமிழர்களுக்கு தனி நாடு கொடுப்பது போல் ஆகிவிடும் என்றும், வடக்குத் தேர்தலில் கூட்டமைப்பு வெற்றிபெற்றால் அங்கு தனியாட்சி நிறுவப்பட்டு பின்னர் அது அரசுக்கே ஆபத்தாக மாறிவிடும் என்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாயவும், தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாஸ அமரசேகரவும் தொடர்ச்சியாக பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். தமிழர்களுக்கென்று வடக்கில் ஓர் அதிகார மையம் நிறுவப்படக் கூடாது என்பதில் தெளிவாக இருக்கும் இவர்கள் வடமாகாணத் தேர்தலைத் தடுப்பதில் முனைப்பாகச் செயற்படுகின்றனர். அத்துடன் 13 ஆவது திருத்தத்தையும் இல்லாதொழிக்கும் கைங்கரியங்களையும் முடுக்கிவிட்டுள்ளனர்.

வடக்கில் தேர்தல் நடத்தப்பட்டால் அங்குள்ள தமிழ் மக்கள் ஓரளவுக்கேனும் ஒரு நிம்மதியான - அமைதியான - ஜனநாயக சூழலுக்கு பிரவேசிக்க முடியும் என்றும் அவர்கள் தமது கருத்துக்களை வெளிப்படுத்தக் கூடிய சுதந்திரம் ஓரளவாவது ஏற்படும் என்றும் சர்வதேச சமூகமும் இந்தியாவும் கருதி வரும் நிலையில் அதற்கு ஆப்பு வைக்கும் செயற்பாடுகளே இப்போது இடம்பெறுகின்றன.

இவ்வாறு வடக்குத் தேர்தலுக்கும் 13 ஆவது திருத்தத்துக்கும் எதிரான கருத்துக்கள் தென்னிலங்கையில் வலுத்து வரும் நிலையில் 'றோ' அதிகாரியின் வடக்குப் பயணம் பல்வேறு சந்தேகங்களை எழுப்புகிறது.

இலங்கை வந்த 'றோ' குழுவினர் வேறு எங்கேயும் செல்லாமல் வடக்குக்கு மட்டும் பயணம் செய்தமை இந்தச் சந்தேகங்களை மேலும் வலுப்படுத்துவதாக அமைகிறது. வடக்குப் பயணத்தின்போது யாழ்ப்பாணம், வன்னி படைகளின் கட்டளைத் தளபதிகளை 'றோ' அதிகாரிகள் சந்தித்துப் பேசியிருக்கிறார்கள். இந்தப் பேச்சுக்களில் என்ன விடயங்கள் ஆராயப்பட்டன என்பது இதுவரை வெளியாகவில்லை. ஆயினும் அயல் நாட்டு விவகாரங்களில் அதிக கவனம் செலுத்திவரும் இந்தியப் புலனாய்வு அமைப்பான 'றோ' ஏதோ ஒரு காரணத்துடனேயே இந்தப் பயணத்தை மேற்கொண்டுள்ளதாக அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர். இந்தியாவால் ஏற்படுத்தப்பட்ட 13 ஆவது அரசியல் திருத்தத்தில் தென்னிலங்கையில் கடும் எதிர்ப்பு எழுந்து வரும் நிலையில் 'றோ' அதிகாரிகள் இங்கு வந்தமை மிக முக்கியமானதாக கருதப்படுகிறது.

எது எவ்வாறாயினும் வடக்கு நிலைமைகளை உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கிறது இந்தியா என்பது தெளிவாகியிருக்கிறது. அடுத்த கட்டமாக இந்தியாவின் பிரதான எதிர்க்கட்சியான பாரதீய ஜனதாக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவர் அடுத்த வாரம் இலங்கை வருகின்றனர். அவர்களும் வடக்குக்கு நேரில் வந்து இங்குள்ள நிலைமைகளை பார்வையிடுவதுடன் இந்திய அரசால் இங்கு மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி குறித்தும் ஆராயவுள்ளனர். அதேநேரத்தில் தமிழர்களின் தீர்வு தொடர்பாக ஆராய்வதற்கான மாநாடு ஒன்றும் இந்தியாவில் கூட்டப்படவுள்ளது. இந்திய மத்திய அரசின் முக்கிய நாடாளுமன்ற உறுப்பினரான சுதர்சன நாச்சியப்பன் இந்த மாநாட்டுக்கான ஒழுங்குகளை மேற்கொண்டு வருகிறார். இவற்றை வைத்துப் பார்க்கும் போது தமிழர் பிரச்சினை குறித்து இந்தியா இப்போது காட்டிவரும் அதிக சிரத்தை தெளிவாகிறது. அது தமிழர்களுக்கு நன்மை பயக்குமா? தீங்கிழைக்குமா? என்பதுதான் தெரியவில்லை.

> காணி, பொலிஸ் அதிகாரங்களை நீக்காமல் வடக்கு மாகாணத் தேர்தலை நடத்தினால் அது தமிழர்களுக்கு தனி நாடு கொடுப்பது போல்,ஆகிவிடும் என்றும், வடக்குத் தேர்தலில் கூட்டமைப்பு வெற்றி பெற்றால் அங்கு தனியாட்சி நிறுவப் பட்டு பின்னர் அது அரசுக்கே ஆபத் தாக மாறிவிடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மனுக்குப் பொங்கல்

■ நிரோஜன்

கடல் போல் திரண்டு வந்த பக்தர்களின் உணர்வு பூர்வ வழிபாடுகளுக்கு நடுவே நடைபெற்று முடிந்துள்ளது வரலாற்றுச் சிறப்பு மிக்க வற்றாப் பளைக் கண்ணகி அம்மனின் வருடாந்த விசாகப் பொங்கல் உற்சவம். வழமைபோன்று இந்த முறையும் இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் இலட்சக் கணக்கானோர் கலந்து கொண்டனர்.

''கடந்த சில வருடங்களுடன் ஒப்பிடும் போது இந்த முறை வற்றாப் பளைக்கு வந்த அடியவர்களின் எண்ணிக்கை அதிகரித்தே இருந்தது. சுமார் 5 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் பொங்கல் உற்சவத்தில் கலந்து கொண்டிருந்தனர்'' என்பது ஆலய நிர்வாகத்தினரின் கருத்து.

திங்கட்கிழமை அதிகாலையிலிருந்தே திரள் திரளாக பக்தர்கள் ஆலயச் சூழலை நோக்கி படையெடுக்கத் தொடங்கி விட்டனர்.

வற்றாப்பளை அம்மனின் அதிசயங்களில் கடல் நீரில் தீபம் எரியும் நிகழ்வும் ஒன்று. அந்த அதிசயத்தைப் பார்க்க அதிகாலையிலேயே பக்தர்கள் கூடிவிட்டனர். பொங்கல் உற்சவத்துக்கு ஒருவாரத்துக்கு முன்னரே கள்ளப்பாடு கடற்கரையில் விசேட வழிபாடு இடம்பெற்று குடத்தினுள் கடல்நீர் எடுக்கப்பட்டிருந்தது. அந்த நீரில் வழமை போன்று முள்ளியவளையில் உள்ள காட்டா விநாயகர் கோயிலில் விளக்கு ஏற்றப்பட்டது. கடல்நீரை எண்ணெய்யாக்கி அணையாது எரிந்து கொண்டிருந்த அந்தத் தீபம் 27 ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 3 மணியளவில் அங்கிருந்து வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோயிலுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அங்கு மூலஸ்தானத்தில் கடல் நீர்த் தீபம் வைக்கப்படுவதற்கு முன்னரே பார்த்துவிடவேண்டும் என்ற ஆவலில் ஏராளமான பக்தர்கள் கூப்பிய கரங்களுடன் காத்திருந்தனர்.

காலையிலிருந்தே கண்ணகி அம்மனுக்குகான பொங்கல் தொடங்கிவிட்டது. ஆலயச் சூழலில் எங்கு பார்த்தாலும் அடுப்பும் நெருப்பும் பானைகளும் புகையும்தான். கோயிலுக்கு முன்பாக பரந்த இடத்தில் காலையிலிருந்து இரவுவரை அம்மனுக்கு இடைவிடாது பக்தர்கள் பொங்கிக் கொண்டே இருந்தார்கள்.

பொங்கலை சூடு தணிய முன்னரே பானையுடன் ஆலயத்தினுள் கொண்டு சென்று படைத்து பக்தியுடன் தமது நேர்த்திக்கடனை நிறைவேற்று வதில் பக்தர்கள் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர்.

பொங்கலால் மட்டுமல்லாது பக்தர்களின் காவடி நேர்த்திக் கடனாலும் கண்ணகி அம்மனின் உள்ளம் குளிர்ந்து கொண்டிருந்தது. விதமான காவடிகளே எங்கு நோக்கினும் தென்பட்டன. பாற்காவடி, பன்னீர்க்காவடி, செம்புக் காவடி, செடில் காவடி, பறவைக் காவடி, தூக்குக் காவடி என்று தமது நேர்த்திக் கடன்களை காவடிகளாகத் தூக்கி வந்து கண்ணகி அம்மனின் காலடியில் பக்தர்கள் இறக்கி வைத்துக் கொண்டிருந்தார்கள். பெண்கள் பாற்செம்பும் வேப்பிலையும் கற்பூரச் சட்டிகளுமாக கையிலேந்திக் கொண்டு ''அரோகரா'' என்ற கோஷத்தோடு நகர்ந்து கொண்டிருந்தனர். காவடிகளுக்கும் கற்பூரச் சட்டிகளுக்கும் பின்னணி இசையாக முழங்கிக் கொண்டிருந்த பறை ஒலி அடியார்களின் பக்தியை உன்னத நிலைக்கு கொண்டு சென்றுகொண்டிருந்தது. கூடவே தவில் , நாதஸ்வர இசைகளும் எங்கும் நிறைந்து கிடந்தன. என்றாலும் கடந்த வருடத்தைவிட இந்தவருடம் காவடிகளின் எண்ணிக்கையில் சிறிது வீழ்ச்சி ஏற்பட்டிருந்ததாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

திங்கட்கிழமை காலையில் தொடங்கிய பக்தர்களின் வரவு, இரவு 12 மணி ஆகியும் நின்றபாடாக இல்லை. மினி பஸ், ஹைஏஸ், கார், மாட்டு வண்டி, உழவு இயந்திரம், மோட்டார் சைக்கிள், சைக்கிள் என ஆலயத்தில் வெளிப்புறச்சூழல் வாகனக் காடாக மாறியிருந்தது. சனத்திரளின் நெரிசலால் முல்லைத்தீவு தொடக்கம் வற்றாப்பளை வரையான வீதியில் அன்று முழுவதும் எள் விழக் கூட இடமில்லை. அந்தளவுக்கு போக்குவரத்து நெருக்கடி.

வற்றாப்பளை அம்மன் பொங்கலின் ஓர் அங்கமாக மாலையில் தீ மிதிப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்து. ஆயினும் மிகக் குறைந்த அளவானோரே ''பூக்கிடங்கில்' (கனன்று கொண்டிருக்கும் தணல் சுமந்து நின்ற பள்ளத்தில்) இறங்கி, தீ மிதித்து தமது நேர்த்தியை நிறைவேற்றினர். ஆனாலும் கடந்த வருடங்களுடன் ஒப்பிடும் போது தீ மிதிப்பிலும் குறைந்தளவானோரே ஈடுபட்டனர் என்பதை உணர முடிந்தது.

ஆனாலும் பக்தர்களின் வரவு மாத்திரம் பல மடங்காக அதிகரித்திருந்தது. இதற்கு வற்றாப்பளைக்கான வீதிகள் சீரமைக்கப்பட்டிருந்தது மட்டுமல்லாதமல் இன்னுமொரு முக்கிய காரணமும் இருந்தது. அது தான் வற்றாப்பளையில் உள்ள ஒரு வேப்ப மரத்திலிருந்து பால் வடிகின்ற அதிசயமாகும். ஏற்கனவே இந்தத் தகவல் ஊடகங்கள் மூலம் பெருமளவானோரை சென்றடைந்திருந்ததால் ''வற்றாப்பளை பொங்கலுக்கும் போவதோடு இந்த பால் வடியும் அதிசயத்தையும் பார்க்கலாம்'' என்ற நினைப்பே அநேகரை இந்தமுறை வற்றாப்பளை பொங்கலுக்கு இழுத்திருந்தது.

> இந்த முறை ஆலயத்துக்கு பக்தர்களின் வரவு பல மடங்காக அதிகரித்திருந்தது. இதற்கு வற்றாப்பளைக்கான வீதிகள் சீரமைக்கப்பட்டிருந்தது மட்டுமல்ல இன்னுமொரு முக்கிய காரணமும் இருந்தது. அதுதான் வற்றாப்பளையில் உள்ள ஒரு வேப்ப மரத்திலிருந்து பால் வடிகின்ற அதிசயமாகும்.



''பொதுவாக வயதான - நீண்ட காலமாக உள்ள முற்றிய வேப்ப மரங்களிலிருந்தே இவ்வாறு பால் வடிவதுண்டு. ஆனால் இது சில வருடங்களேயான வேப்பமரம்தான். இதிலிருந்து பால் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது என்பது எமக்கும் ஆச்சரியமான விடயமாகவே உள்ளது. ஆனால் இதனை தனியே விஞ்ஞான பீதியில் மட்டும் சரியாகி விடாது. விஞ்ஞானத்துக்கு எட்டாத பல விடயங்களும் ஆன்மீகத்தில் இருக்கவே செய்கின்றன. அத்தகைய ஓர் அபூர்வ விடயமாகவே வற்றாப்பளை வேம்பிலிருந்து வடியும் பாலையும் காண முடிகிறது. சிறிதளவு கசப்பும் இனிப்பும் கலந்த சுவை கொண்டதாக இந்தப் பால் வடிந்து கொண்டிருக்கிறது. இவ்வாறு பால் வடிவது ஏதோ ஓர் நல்ல விடயம் நடக்கப் போவதற்கான அறிகுறி தான். தினமும் நாட்டின் பல பாகங்களிலும் இருந்தும் வந்து குவியும் ஏராளமானோர் வேம்பிலிருந்து வடியும் பாலை எடுத்துச் செல்கிறார்கள். ஒரு வாரத்துக்கு முன்னர் வடியத் தொடங்கிய பால் இன்னமும் சொரிந்து கொண்டேயிருக்கிறது'' என்றார் ஆலயத்தின் தலைவரான குகதாசன்.

இரவு 12 மணி அளவில் கோயிலினுள் ''வளந்துப் பானை வைத்தல்'' என்று கூறப்படும் பொங்கல் பானை வைத்து பொங்கும் நிகழ்வு ஆரம்பமானது. அந்த நேரம் ஆலயத்தினுள் பக்தர்கள் கூட்டம் என்றுமில்லாதவாறு அதிகரித்திருந்தது. பறையொலி முழங்க, ஒருவர் 'உரு வந்து ஆடத் தொடங்கினார். அவ்வாறு உரு ஆடிய படியே பொங்கல் பானை அடுப்பில் வைக்கப்பட்டது.

வழமை போன்று இந்த முறையும் சுமார் 300 தொண்டர்கள் ஆலயத்துக்கு வரும் பக்தர்களை வழிப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். பொலிஸாரும் சீருடை, சிவில் உடை என்பவற்றோடு பாதுகாப்புப் பணியில் இறங்கியிருந்தனர். என்னதான் கண்ணும் கருத்துமாக பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதும் திருடர்களின் கைவரிசையும் கண்ணகி அம்மன் ஆலயத்தில் அரங்கேறத் தயங்கவில்லை. பணப்பைகள், நகைகள் என்பன பொங்கலின் போது களவாடப்பட்டுள்ளன.

சிறிது நேரத் தேடுதலின் போது தவறவிடப்பட்ட, திருடப்பட்ட பேர்ஸ் மற்றும் கைப்பை என்பன அதனுள் இருந்த பணம் உள்ளிட்ட பெறுமதிமிக்க பொருள்கள் எடுக்கப்பட்ட பின்னர் ஆங்காங்கே வீசப்பட்ட நிலையில் கண்டெடுக்கப்பட்டன.

இரவாகியதும் சில இடங்களில் தண்ணீர் தாங்கிகள் சிறிது நேரம் வெறுமையாகவே இருந்தன. தண்ணீருக்குத் தட்டுப்பாடு இருக்காத போதும் அவற்றைப் பெறுவதில் சிறிதுநேரம் இடையூறு ஏற்பட்டது. இயற்கைக் கடன்களைக் கழிப்பதற்கு மலசலகூடங்களின் முன்னால் சிறிய கூட்டம் காத்திருந்ததை அவதானிக்க முடிந்தது.

ஆலயத்தில் இலட்சக்கணக்கானோர் வந்திருந்ததனால் சிறிய பரப்பினுள் அனைவரதும் கைத்தொலைபேசிகளும் இயங்கியதனால் தொடர்பை ஏற்படுத்துவதிலும் உரையாடுவதிலும் சிக்கல் நிலை காணப்பட்டது. அதனால் பலர் கடற்கரையோரம் 'சிக்னலை' எதிர் பார்த்து கைத்தொலைபேசிகளை அழுத்திக் கொண்டிருந்தனர்.

ஆரவாரங்கள், காவடிகள், அதிசயங்கள், கடலை, கச்சான், வியாபாரம், விடியவிடிய நடந்த அன்னதானம் என இந்தமுறையும் எந்தக் குறையும் இன்றி நடந்து முடிந்துள்ளது வற்றாப்பளை அம்மனின் பொங்கல்..

# எங்களின் கடலிலே...

(சூரியகாந்தி முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழிச்சல் வலை போட்டுத்தான் தொழில் செய்யிறனாங்கள். தண்ணி ஓட்டத்துக்கு வலையைப் போட்டு பிடிக்கேக்க. இவங்கள் இப்பிடிச் செய்தா மீன்பாடு குறைவாகத் தான் இருக்கும். இதால எங்களுக்கு சரியான தொழில் பாதிப்பு'' என்கின்றனர் மீனவர்கள்.

இந்திய மீனவர்களின் அத்துமீறலுக்கு எதிராக போர்க் கொடி தூக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இங்கு இராணுவத்தின் துணையுடன் இடம்பெறும் சிங்கள மீனவர்களின் அத்துமீறல்கள் குறித்து மௌனத்தையே பதிலாக வழங்குகின்றார்.

சுனாமியால் அள்ளுண்டு போன வாழ்வாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கிடையில் போரால் பறி போன வாழ்வாதாரம் மீளவும் கட்டியெழுப்படும் சூழ்நிலையில் அதனையும் தட்டிப் பறிப்பதற்கு தென் பகுதி மீனவர்கள் முயல்கின்றனர். எங்கள் கடலில் நாங்கள் சுதந்திரமாக தொழில் செய்யும் நாள் எப்போது வரும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலிகளை ஆரத்தழுவும் பிக்குகள்

தாய்லாந்து நாட்டின் காஞ்சனாபூரி என்ற இடத்தில் உள்ள புத்த பிக்குகளின் மடாலயத்தில் 100 பிக்குகளுடன் கூடவே வாழ்கின்றன இந்த இரு புலிகளும். சின்னக் குட்டிகளாக இருந்தபோதே இவற்றை எடுத்து வந்து மனிதர்கள் மத்தியில் வளர்த்துப் பழக்கியிருக்கிறார்கள். அதனால் மனிதர்களுடன் அன்னியோன்னியமாகப் பழக அவைகளும் கற்றுக் கொண்டிருக்கின்றன. பிக்குகளும் புலிகளும் எவ்வளவு நெருக்கமாக இருக்கிறார்கள் என்பதை இந்தப் படங்கள் தெளிவாக்குகின்றன. இருந்தாலும் இந்தப் புலி மடாலயம் மிருக ஆர்வலர்களின் கடும் விமர்சனங்களுக்கும் உள்ளாகி வருகின் றது. புலிகள் இங்கு சரிவரக் கவனிக்கப்படுவதில்லை என்பது அவர்களின் குற்றச்சாட்டு.







# அப்பப்பா



- தான் வாழ்ந்த பார்படோஸ் நாட்டின், கிட்டத்தட்ட மொத்த வரலாற்றையும் அறிந்தவராக இருந்தார் சிஸ்நெட்
- இந்தப் பூமியில் வாழ்ந்து கொண்டிருந்த இரண்டாவது அதிக வயதுள்ளவராக இருந்தார் சிஸ்நெட்
- குழந்தையாக இருந்தபோது உலகின் முதலாவது வான் பறப்புப் பற்றிய செய்திகளை அவர் கேட்டார்.
- சிஸ்நெட் 19ஆம் நூற்றாண்டில் பிறந்தார்.

41,363 நாள்கள். அப்பா...! எவ்வ்வளவு நாள்கள்! அவ்வளவு காலங்கள் உயிர் வாழ்வதற்கு நிச்சயம் நீங்கள் ஆசைப்பட மாட்டீர்கள். ஆனால், ஜேம்ஸ் சிஸ்நெட் அதனைச் சாதித்துக் காட்டியிருக்கிறார்.

ஊமைப் படங்கள் முதல் முதலாக திரையரங்குகளை எட்டியதைப் பார்ப்பதற்கு அவரது ஆயுள் போதுமானதாக இருந்திருக்கிறது. அந்த ஊமைப் படத்தைத் திரையிடுவதற்காக நீண்ட காலத்தின் பின்னர்தான் பார்படோஸ் தீவில் திரை அரங்கு ஒன்றை கட்டினார்கள். அந்தத் தீவில்தான் சிஸ்நெட் தனது மொத்த வாழ்க்கையையும் ஓட்டினார்.

றைற் சகோதரர்களில் ஒருவரான ஓர்வில்லி றைற் உலகில் முதன் முதலாகத் தனது வான் பறப்பை நிகழ்த்தியபோது சிஸ்நெட்டின் வயது மூன்று. முதல் உலகப் போர் நிகழ்ந்த போது அவர் தனது பதின்ம வயதுகளைக் கடந்துகொண்டிருந்தார்.

மே மாதம் 23ஆம் நாள் அவரது உயிர் இந்த உலகை விட்டுப் பிரிந்தபோது, மேற்குலகப் பரப்பில் அதிக காலம் உயிர் வாழ்ந்த ஆண் என்கிற பெருமையை அவர் பெற்றிருந்தார். உலக அளவில் அதிக காலம் உயிருடன் வாழ்ந்த இரண்டாவது ஆண் இவர்தான்.

ஒருவரின் வயதை துல்லியமாகக் கணிப்பிடும் பொறிமுறை யைக் கொண்டுள்ள 'ஜெரொண்டோலஜி ஆய்வுக் குழு', சிஸ் நெட்டின் வயது 113 என்று உறுதிப்படுத்தியிருக்கிறது.

தமது வாழ்க்கையில் சதம் அடித்த மனிதர்களினதும் சதத்தையும் தாண்டி ஓடிக்கொண்டிருக்கும் மனிதர்களினதும் வயதை உலக அளவில் உறுதிப்படுத்துவதே 'ஜெரொண்டோலஜி ஆய்வுக் குழு' செய்யும் முக்கியமான பணி.

சிஸ்நெட் மாதிரி வாழ்வது என்பது பெரும் சாதனைதான். ஆனால், ஆண்களைவிடப் பெண்கள் அதிக காலம் வாழ்கிறார்கள் என்ற பொதுக் கருதுக்கு ஏற்ப கனடாவுக்கும் ஆர்ஜென்ரீனாவுக்கும் இடையில் வாழும் பெண்கள் சிலர் சிஸ்நெட்டிலும் வயது கூடியவர்கள் என்கிறது 'ஜெரொண்டோலஜி ஆய்வுக் குழு'. அவர்களில் ஐவர் அமெரிக்காவில் வசிக்கிறார்கள்.

இதுவரைக்கும் அறியப்பட்ட வகையில் உலகில் அதிக காலம் உயிர் வாழும் நபர் ஜப்பானைச் சேர்ந்த ஜிரோமோன் கிமுரா. கடந்த ஏப்ரலில்தான் அவர் 116 வயதைக் கடந்தார்.

122 வயது வரை வாழ்ந்து இன்றுவரை முறியடிக்க முடியாத சாதனையை நிலைநாட்டி வாழ்ந்தவர் பிரான்ஸைச் சேர்ந்த லூவிஸ் கல்மென்ட் . கின்னஸ் சாதனை புரிந்தவர் அவர்.

சிஸ்நெட் வாழ்ந்த பார்படோஸ் தீவு வெறும் 30 மைல் நீளமே கொண்டது. அங்கு சிஸ்நெட் எப்போதுமே ஒரு விருந்தாளிதான் என்கிறார் அவரது பரம்பரையில் வந்த ஜெராட் சிஸ்நெட்.

வரலாற்று நிகழ்வுகள் எல்லாவற்றுக்குமான ஒரு வாழும் நூலகமாக சிஸ்நெட் அங்கு திகழ்ந்தார். "அப்பப்பா" என்றால்தான் பார்படோஸில் சிஸ்நெட்டை எல்லோருக்கும் தெரியும். நாட்டின் மதிப்புக்குரிய சின்னமாக அவர் மதிக்கப்பட்டதால் அவருக்கு 100 வயதானபோது நாட்டின் தலைநகரான பிரிஜ்ட்டவுணின் திறப்பு அவரிடம் கையளிக்கப்பட்டது. அது நடந்தே ஒரு தசாப்தம் கடந்துபோய்விட்டது.

19ஆம் நூற்றாண்டின் இறுதி ஆண்டில் பிறந்தவர் சிஸ்நெட். 1900 பெப்ரவரி 22 அவரது பிறந்த நாள். 113 வருடங்களும் 90 நாள்களும் தொடர்ந்து வாழ்ந்தார். தூங்கும் போதே இந்த உலகை விட்டு நீங்கினார். 'லீப்' வருடங்களில் வரும் 28 மேலதிக நாள்களையும் சேர்த்துஅவரது வாழ் நாள் கணக்கு 41,363 நாள்கள்.

தான் பார்த்துக்கொண்டிருந்த வேலையில் இருந்து 1970இல் சிஸ்நெட் ஓய்வு பெற்றார். அதன் பின்னரும் 70 ஆண்டுகள் அவர் வாழ்ந்திருக்கிறார். அதுவே அமெரிக்கர்களின் சராசரி வாழ்நாளைவிட 3 வருடங்கள் அதிகமானது. 70 வயது என்பது, லீப் வருட மேலதிக நாள்களைவிட்டு 25,550 நாள்கள். முடிந்தால் அந்த வயது வரையாவது வாழப் பாருங்கள்.

ரேணுபிரேம்

## நீங்க கேட்கலாம்

கேள்விகளை 361, கஸ்தூரியார் வீதி, முகவரிக்கு அனுப்புங்கள்

? யாழ்ப்பாண மாணவர்களின் கல்வி நிலை பெருமளவு வீழ்ச்சி அடைந்துவிட்டது என்று புள்ளிவிவரங்கள் காட்டுகின்றனவே, நீங்கள் என்ன நிலனக்கிறீர்கள்?

*மயூரன், யாழ்.நகர்*

! வின்ஸ்டன் சேர்ச்சில் தனது ஆறாம் வகுப்பில் தோல்வியடைந்தார். பின் தனது 62 ஆம் வயதில் பிரிட்டிஷ் பிரதமராக பதவியேற்றார்.

! தோமஸ் அல்வா எடிசனின் ஆசிரியர் Too stupid to learn anything என அவரை ஒதுக்கினார். பள்ளியை விட்டு நின்ற எடிசன், 'பல்ப்' உள்ளிட்ட 1,000 கண்டுபிடிப்புகளைச் செய்தார்.

! ஸ்ரீபன் ஸ்பீல்பெர்க் தனது கனவுக் கல்லூரியான ஒரு 'பிலிம் ஸ்கூலின்' சேர்க்கை நேர்காணலில் இருந்து மூன்று முறை நிராகரிக்கப்பட்டார். பின்னாள்களில் அவர் உலகப் புகழ் பெற்ற சினிமா இயக்குனராக உருவெடுத்தார்.

! சார்லி சாப்ளின் முதன் முதலில் நாடகக் கம்பெனி முதலாளிகளிடம் நடித்துக் காண்பிக்கையில், அவர் நடிப்பை புரிந்துகொள்ள கடினமாக இருக்கிறது என்று வெளியேற்றப்பட்டார். பின்னாள்களில் தனது நடிப்பால் உலகையே கொள்ளை கொண்ட கலைஞனானார்.

! ஆல்பர்ட் ஐன்ஸ்டீனின் ஆசிரியர் அவரை Slow and Mentally handicapped என்று ஒதுக்கினார். பின்னாள்களில் ஐன்ஸ்டீன் விஞ்ஞான உலகில் தவிர்க்க முடியாத மனிதராக மாறி, இயற்பியலில் நோபல் பரிசும் பெற்றார்.

! டார்வினிஸம் என்ற உயிரியல் கொள்கையை வெளியிட்டு உண்மையை வகுத்த சார்லஸ் டார்வின், பள்ளிகளில் மிக மிகச் சுமாரான ஒரு மாணவர்.

! புவியீர்ப்பு விசையை கண்டுபிடித்த ஐசக் நியூட்டன், வகுப்பறையில் மிகவும் மோசமான மாணவனாக அடையாளம் காணப்பட்டார்.

! கேட்கும் திறனை இழந்த பீத்தோவன், அனைவரின் காதுகளையும் இதயத்தையும் மயக்கிய இசைத் தொகுப்புகளை படைத்தார்.

பார்த்தீர்களா! பெரிய பெரிய மேதைகள் எல்லாம் பள்ளிப் படிப்பில் சாதித்தவர்கள் அல்லர். அதனால் விட்டுவிடுங்கள் யாழ்ப்பாணத்து மாணவர்களும் பின்னாளில் எதிர்நீச்சல் போட்டு சாதித்துக் கொள்வார்கள்.



சேர்ச்சில் எடிசன் ஸ்பீல்பெர்க் சாப்ளின்

ஐன்ஸ்டீனின் நியூட்டன் பீத்தோவன் டார்வின்



? அண்மையில் பார்த்த நல்ல படம் ஏதாவது?

*கோகுலன், கிளிநொச்சி*

தன்து அழகைத் துறந்ததால் ஊடக உலகில் பரபரப்பாகப் பேசப்பட்ட அஞ்சலினா ஜோலி இயக்கிய 'தி லான்ட் ஒவ் பிளட் அன்ட் ஹனி' என்ற படம். பொஸ்னியாவில் நடந்த போரை மையப்படுத்திய கதை. சேர்பிய இனவாதிகள் பொஸ்னிய முஸ்லிம்களை எப்படி இனச் சுத்திகரிப்புச் செய்தார்கள் என்பதை தத்ரூபமாகச் சொல்லும்படம். அதிரடி ஹொலிவூட் நாயகியான அஞ்சலினா ஜோலி எழுதி இயக்கி இருந்தாலும் ஹொலிவூட்டின் மாயா ஜாலங்கள் எதுவும் இல்லாத படம். பொஸ்னியர்கள் மீது சேர்பியர்கள் போரை ஆரம்பிப்பதற்கு முன்னர் காதலனாக இருந்தவன் கடைசியில் பொஸ்னிய முஸ்லிம் பெண்ணை எப்படிச் சுட்டுக் கொன்றான் என்பதைச் சொல்லும் படம். முள்ளிவாய்க்காலின் முக்கால்வாசிப் பரிமாணத்தை அந்தப் படத்தில் பார்க்கலாம். தாங்கள் செய்த அத்தனை அக்கிரமங்களையும் உலக நாடுகளின் கண்களில் இருந்து மறைத்து எப்படி இனச்சுத்திகரிப்பை மேற்கொண்டார்கள் என்பதைச் சொல்லும் படம். முடிந்தால் ஒருமுறை பாருங்கள். மொழி தாண்டி உணர்வுகளைப் புரிந்துகொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூங்கோதை



# பேசுவோமா பெண்ணியம்...

பெண்களுக்கு இருக்கும் உரிமைகளை, சமத்துவத்தை நடைமுறைப்படுத்துவதற்கான சூழ்நிலையை முடுக்கி விடும் ஒரு ஆயுதம் தான் பெண்ணியம் என்ற வாதம். பலர் இந்த உரிமைகளை இன்னொருவரிடமிருந்து (ஆணாதிக்கவாதிகளிடமிருந்து) பெற்றுக்கொள்வது என்று நினைப்பதுண்டு. இல்லை. உரிமைகள் நாம் பிறக்கும் போதே எம்முடன் பிறந்து விடுகின்றன. அதை சமுதாயத்தின் கட்டுப்பாடுகளுக்குள் மூச்சடக்க அமிழ்த்திவிடுகிறோம். ஆண்கள் மட்டுமன்றி பெண்களும் கூட இந்த ஆணாதிக்கத்தை ஏற்படுத்தி விடுகிறார்கள். ''அந்தகாலத்தில் நாங்கள் இப்படியல்ல. என்னமாதிரி போகுதுகள் இந்தக் காலத்துப் பெண்கள்'' என்று ஆரம்பித்து, ''பொம்பிளை சிரிச்சாப் போச்சு. போயிலை (புகையிலை) விரிச்சா போச்சு'' என்று முடிப்பார்கள். பாமர மக்களினை மட்டுமன்றி படித்த புத்தி ஜீவிகளும் கூட தம் பிள்ளைகளை முற்போக்காக வளர்க்கிறோம் என்பார்கள். ஆனால் எங்கோ ஒரு இடத்தில் 'பெண்'என்பதற்கு சமூகத்தால் எதிர்பார்க்கப்படும் வரைவிலக் கணத்தை எதிர்பார்க்கிறவர்களாகத் தான் இருக்கிறார்கள்.

பெண்ணின் இயல்புகளைப் பெண்மை என்கிறார்கள், அது போலவே ஆணின் இயல்புகளை ஆண்மை என்கிறார்கள். அதில் மென்மை, பெண்களின் பிரதான இயல்பாகவும், வீரம் ஆணின் இயல்பாகவும் சமூகத்தில் எதிர்பார்க்கப்படுகிறது. உளவியல் ரீதியாக இது சமூகத்தால் திணிக்கப்பட்டுவிடுகிறது. எப்படியெனில் ஒரு குழந்தை பிறந்ததும் அது தன் குடும்பத்தில், அல்லது சூழலில் எப்படி வளர்கிறது என்பதைப் பொறுத்து மென்மைத் தன்மையோ அல்லது வன்மைத்தன்மையோ அதற்குள் புகுந்து கொள்கிறது. இது இயற்கை எனினும் பெண் இந்த இயற்கையைப் பிற்காலத்தில் தன் அறிவுத் திறனுக்கும் அனுபவங்களுக்கும் ஏற்ப வெல்ல வேண்டிய கட்டப்பாடு உடையவளாகிறாள். பெண்மையை மென்மையாகவே இலக்கியங்களில் படைக்கப்பட்டிருப்பதால் அதையே எம் சமூகம் பெண்ணிடம் எதிர்பார்க்கின்றது. அதே வேளை, அதைப் பயன்படுத்தியே அவர்களைப் பாலியல் ரீதியான சுரண்டல்களுக்கும் மன அழுத்தங்களுக்கும் தள்ளிவிடுகிறது.



மென்மையாக உள்ள பெண்கள் (மென்மையான ஆண்களும் கூட.) பாதுகாக்கப்பட வேண்டியவர்கள். இதைப் பெற்றோர், சமூகத்தார் நன்கு அவதானிக்க வேண்டும். இவர்கள் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள் என்பதன் கருத்து அவர்களுக்கு வரக்கூடிய பிரச்சினைகளில் இருந்து பாதுகாக்கப்பட வேண்டியவர்கள் என்பதல்ல. பிரச்சினைகளை எதிர்நோக்கும் போது சோர்ந்து போகாமலும், மன அழுத்தங்களுக்கு உள்ளாகாமலும் பாதுக்காப்பதே. முக்கியமாக அவர்கள் உயிருக்கு பாதுகாப்பு கொடுங்கள். அவர்கள் சமூகத்தின் சவால்களுடாகப் பயணிக்கும்போது வெறுமனே சாய்ந்து கொள்ளத் தோள் கொடுத்தால் மட்டும் போதும். மற்றப்படி அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் தான் இந்தச் சமூகத்தைப் புரிந்து கொள்ளவும், அதற் கேற்ப தன்னை வடிவமைத்துக் கொள்ளவும் கற்றுக்கொடுக்கும்.

மென்மை எப்போதும் அழகானது தான். அது பெண்ணிடம் மட்டுமல்ல ஆணிடமும்அது இருக்க வேண்டும் . இதற்கும் வீரத்துக்கும் முடிச்சுப் போடத் தேவை இல்லை . பெண்மையின் வீரம் கூட மிகவும் அழகானது தான். ஆனால் நாம் மென்மை என்ற போர்வையில் பயம், கோழைத்தனம், போன்ற எதிர்மறையான உணர்வுகளையும், வீரம் என்ற போர்வையில் வன்மம், முரட்டுத் தனம் போன்றவற்றையும் திணித்து விடுகிறோம். இவை வரும் போது இயல்பாகவே இவர்கள் மென்மையானவர்களைக் குறிவைத்துத் தாக்குபவர்களாக மாறி விடுகிறார்கள். அவர்களுக்குள்ள வக்கிர புத்தியால் மென்மையானவர்கள் துடிப்பதை இரசிக்கிறார்கள். இதற்கெல்லாம் விதை சிறு வயதிலேயே பெற்றோர்களாலும் உறவுகளாலும் போடப்படுகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

(தொடரும்)

# பொது இடங்களில் தவிர்க்க வேண்டியவை

★ பொதுவாக பெண்கள் அழகிற்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள் என்று அனைவருக்குமே தெரியும். அதற்காக அவர்கள் எங்கு கண்ணாடியைப் பார்த்தாலும், உடனே தங்கள் அழகை பார்த்து ரசிப்பது, சரிசெய்வது என்று செய்வார்கள். இத்தகைய செயலை மற்றவர்கள் பார்க்கும் போது, அது சரியான நகைச்சுவையாகத் தான் இருக்கும்.

★ சில பெண்கள் உடுத்தும் உடைகளை வீட்டிலேயே சரியாக அணிந்து கொண்டு வராமல் இருப்பார்கள். இதனால் உள்ளாடையானது வெளியே அடிக்கடி தெரியும். அவ்வாறு தெரியுமாறு உடை உடுத்தியிருப்பதோடு, அதனை அடிக்கடி சரிசெய்வதால், அத்தகைய செயல் நிச்சயம் ஆண்களின் பார்வையை தூண்டி விளையாடும். மேலும் அவ்வாறு சரிசெய்யும் போது ஆண் கள் பார்த்து விட்டால், உடனே கூச்சலிட்டு ஆர்ப் பாட்டம் செய்வார்கள். இதில் தவறு நிச்சயம் பெண்கள் மீது தான். பெண்கள் ஒழுங்காக இருந்தால், நிச்சயம் ஆண்களும் ஒழுங்காக இருப்பார்கள்.



★ சிலபெண்கள்சருமப்பராமரிப்புஎன்றுஅடிக்கடி முக அலங்கரம் செய்வார்கள். முக அலங்காரத்தில் கொஞ்சம் வியர்த்துவிட்டாலும், பொது இடம் என்றும் பார்க்காமல், அந்த இடத்திலேயே சிலர் தமது அலங் காரத்தைச் சரி செய்வார்கள். இது அநாகரிகமானது என்பதைப் புரிந்து கொள்வதே இல்லை.

★ சில பெண்கள் சிறிய ஆடைகளை அணிவார்கள். அவ்வாறு உடுத்தியிருக்கும் ஆடை சிறியதாக, குட்டையாக இருக்கிறது என்று தெரிந்தும், சிலர் பொது இடங்களில் கால் மேல் கால் போட்டு உட்கார்ந்து கொள்கின்றனர்.

★ இன்னும் சில பெண்கள் பொது இடங்களில் அளவுக்கு அதிகமான சத்தத்துடன் உணர்ச்சி வசப் பட்டுப் பேசுவார்கள். அந்த இடத்தில் யார் இருக்கிறார்கள் என்று சிறிதும் பார்க்கவே மாட்டார்கள்.

இத்தகைய செய்கையால் எல்லா பெண்களின் மீதும் தவறான எண்ணம் ஏற்படுகிறது. எனவே பெண்கள் இத்தகைய செய்கைகளை தவிர்ப்பது மிகவும் நல்லது.

## கனவு கேளடி தோழி

பசும் புற்றரையின் நடுவிலாங்கே
பளபளவென்று மின்னின இரண்டு
காற்று நிறைத்த அழகிய பலூன்கள் - என்
கரத்தில் அவற்றைப் பிணைத்த நூல்கள்...
பற்றிய நூலுடன் பார்த்து இரசிக்கையில்
பலூன்கள் என்னிடம் பேசத் தொடங்கின
பற்றிய நூலைக் கலாச்சாரம் என்றன
நீல நிறத்து பலூன் என்னைப் பார்த்து
நீடிய தயவாய் மெல்லக் கேட்டது..
உலகை நான் உயர்ந்து பார்க்க வேண்டும்..
உன் கை நூலைக் கொஞ்சம் இளக்குவாயா?..
நியாயமான ஆசை கண்டு கொஞ்சம்
நீளமாகவே நூலை இளக்கினேன்...
எனக்கும் அது போல் பறக்க வேண்டும்
என்ற ஆசை எனக்குள் உதித்தது..
சிவப்பு பலூனோ அதிகம் பேசிற்று..
சுதந்திரம், பெண்ணியம் உரிமை என்று..
சத்தமிட்டது, என் கரத்தின் நூலைச்
சாடி நின்றது...கடிந்து கொண்டது..
அடக்குமுறை இது... அறுத்து விடு நான்
சுதந்திரமாகப் பறப்பேன் என்றது...
பலவந்தமாக என் கரத்தின் நூலைப்
பறித்துக் கொண்டு பறந்து போனது...
பாடிப் பறக்குது என்று தான் நினைத்தேன்
'படார்'... ஓசை.. பதைத்துத் திரும்பினேன்..
பரிதாபம் கேள் தோழி.. சீரழிவென்ற
முட்களில் சிக்கிச் சிதறுண்டு போயிற்று
நீல பலூன் என்னைப் பார்த்தது...
நீண்ட மென்நகை சிந்திற்று.. பெண்ணியம்
பேசு, சுதந்திரம் பேசு பெண்களின்
உரிமையைக் காத்திடப் போர் செய்-ஆனால் கண்ணியம்
பேணும் கலாச்சாரம் தன்னை
அடக்குமுறையென்று அறுத்துச் செல்லாதே...
அதுவே உனக்கு வேலி...என்ன நினைக்கிறாய் தோழி -
நீ உயரப் பறப்பது பற்றி ???

சு.சாரங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிஞ்சுப்பழம்:

## தெணியானின் புதிய கோணம்



■ ந.மயூரரூபன்

தெணியான்; எல்லோராலும் அறியப்பட்ட, அநேகரால் வாசிக்கப்பட்ட -வாசிக்கப்படுகின்ற எழுத்தாளர். ஒடுக்கப்பட்ட மனிதர்கள் மேலான சார்பு நிலை கருத்தியலோடு இயங்குவன இவரது நாவல்கள். 'விடிவை நோக்கி','கழுகுகள்', 'பொற்சிறையில் வாடும் புனிதர்கள்', 'மரக்கொக்கு', 'காத்திருப்பு', கானலில் மான்' என்பன இவர் எழுதிய நாவல்கள். 'மரக்கொக்கு' நாவல் மூலமே தெணியான் எனக்கு அறிமுகமானார்.

ஈழத்துப் படைப்பு வெளியில் நாவல்களின் மூலம் நன்கு அறியப்பட்டவர்கள்; சிறுகதைகளில் தமது முயற்சிகளையே மேற்கொண்டிருந்தனர். அவர்களின் கதை சொல்லும் பண்பே அவர்களது சிறுகதைகளில் துருத்திக் கொண்டு நிற்பதைக் காணமுடியும். இதற்கு டானியல், செங்கை ஆழியான் ஆகியோரது சிறுகதைகளை எடுத்துக்காட்டாகச் சொல்ல முடியும். ஆனால் தெணியானின் சிறுகதை எழுத்துக்கள், வெறுமனே கதை சொல்லும் கூறுடன் மட்டுப்படுவன அல்ல. இங்கு 'சிறுகதை' என்பதை உணர்த்தும் வாசிப்பு அனுபவக் கூறுகள் அதிகம் உள்ளன. தெணியான் தன் படைப்பு வெளிக்குள் சிறுகதை மூலமே நுழைந்தவர் என்பதுவும் கவனங்கொள்ளத்தக்கது. 'சொத்து', 'மாத்துவேட்டி', 'இன்னொரு புதிய கோணம்', 'ஒடுக்கப்பட்டவர்கள்' என்பன இவரது சிறுகதைத் தொகுதிகள்.

தெணியான் கொண்டிருக்கின்ற பொதுக்கருத்து நிலை என்பது எப்போதும் ஒடுக்கப்பட்டவர்கள் அல்லது விளிம்பு நிலை வாழ்வில் அல்லலுறுபவர்களின் வாழ்வியலை கரிசனையுடன் பேசுகிற- அவர்களது வாழ்க்கைக்கு மாற்றத்தை அவாவுகின்ற அகவயத்துடன் இயங்குவதாகும்.

இந்த வாசிப்பில் தெணியானின் 'இன்னொரு புதிய கோணம்' எனும் சிறுகதைத் தொகுதியிலுள்ள; உருவ அமைப்பில் வேறுபட்டு நிற்கின்ற 'பிஞ்சுப்பழம்' எனும் சிறுகதையை தனித்தெடுத்துள்ளேன். இவரது பொதுக் கருத்து நிலை எப்போதும் தனக்கான கருத்தியற் சட்டகத்துள் பொருந்திப் போவது. அதற்கான எடுத்துக்காட்டுகளாக இவரது சிறுகதைகளின் ஆரம்பத்தில் இவரால் கொடுக்கப்படுகின்ற (கதைக்குள்ளேயும் உள்ள) 'பாதை காட்டும் வாக்கியங்களைக்' குறிப்பிடலாம்.

அ. ''நாங்கள் சொத்தில்லாதவர்கள், பணமில்லாதவர்கள், எந்தக் கொடுமை இழைக்கப் பெற்றாலும் மௌனமாக இருக்க வேண்டியவர்கள். தட்டிக் கேட்கும் வல்லமை இல்லாதவர்கள். ஏழைகள், தீண்டத்தகாதவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள்.''
(தீண்டத்தகாதவர்கள்.)

ஆ. ''ஒவ்வொரு மனிதனுக்கும், தனக்கென்று ஒன்று வேண்டாத பூரணமான ஒரு சமுதாய அமைப்பில் தான், தனிமனித அவலங்களிலிருந்து விடுபட்டு அவன் உயர்ந்து -மிக உயர்ந்து நிற்கிறான். தனிமனித சொத்துரிமைகளை என்று மனிதன் பேணத் தொடங்கினானோ அன்றே இந்த அவலங்களும் பந்தபாசங்களும் தோன்றிவிட்டன.''
(ஒரு மாணவி, ஓர் ஆசிரியன், ஒரு தகப்பன்)

இ. ''இந்த மண்ணில் எந்த ஒரு தனி மனிதனாவது உணவின்றி வாடும் கொடுமை சகிக்க இயலாததோ அதற்குச் சற்றும் குறைவில்லாதது கல்வி இல்லாக் கொடுமை.''
(பிஞ்சுப்பழம்)

இங்கு தெணியானின் சிறுகதைகள் கொண்டிருக்கக்கூடிய கருத்து நிலையும் அவர் கொண்டிருக்கின்ற மார்க்சிஸ, கம்யூனிஸ சித்தாந்தச் சார்புநிலைகளையும்நாம் உணரலாம். (இந்தப் ''பாதை காட்டும் வாக்கியங்கள்'' என நான் சுட்டுவதை; பத்திரிகைகளும் சிறுகதைகளைப் பிரசுரிக்கும்போது, கையாளுகின்றன. இங்கே 'ஹைலைட்' செய்யப்படுகின்றபோது, குறித்த கதைக்கான வாசிப்புத்தடம் இதுதான் என்ற பத்திரிகை சார் கருத்துநிலை அல்லது ஒரு குறித்த தனி மனிதனது கருத்து நிலை வலியுறுத்தப்படும் அபாயம் நிகழும் வாய்ப்புண்டு.)

தெணியானின் 'பிஞ்சுப்பழம்' சிறுகதை, அவரது வழமையான வெளிப்பாட்டுச் சட்டகத்திலிருந்து விலகியது. அதேநேரத்தில் வழமையான உள்ளடக்க, சொல்முறைக் கருத்தியலிலும் மாற்றத்தைக் கொண்டிருக்கிறது. 1971ஆம் ஆண்டு வெளிவந்த இந்தச் சிறுகதையில் தெணியான், உருவ வெளிப்பாட்டு முறையில் பரீட்சார்த்த முயற்சியைச் செய்திருக்கிறார் எனச் சொல்ல முடியும். 'பிஞ்சிலே பழுத்து' என்ற சொல்வழிக்கேற்ப, அரும்பு, மலர், பிஞ்சு, பழம் என்ற தலைப்புகளின் கீழாக கதை சொல்லப்பட்டிருக்கிறது. அந்த உத்தி காய்க்காத பழம் என மௌனமாகச் சொல்கிறது.

இதன் கதை;

மிக வறுமையில் வாடும் சிவாசி, குடிகாரத்தந்தை. அன்றாட உணவுக்கு அல்லலுறும் வாழ்க்கை. படிக்கக் கூடிய சிறுவன் சிவாசி. அவன் வயதொத்த நண்பர்கள் பாடசாலை செல்லாது சந்தையில் வாழைக் குலை தூக்கிக் கூலி பெற்று, இஷ்டம் போல் காலம் போக்குபவர்கள்.

சிவாசியும் தனது கல்வியை நிறுத்தி அந்த வாழ்க்கைக்கு ஆசைப்பட்டுப் போகிறான். அதிலிருந்து விடுபட்டு மீண்டும் கல்வி கற்கும் சூழலைப் பெற- மீண்டும் அதனுடன் இணைய, அவனது குடும்பச் சூழலும் பாடசாலைச் சூழலும் ஒவ்வாததாயிருக்கிறது. பழைய கல்வி வாழ்க்கை அவனை அந்நியமாக்குகிறது.

இங்கு குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஒரு விடயம்; பொதுவான இவ்வாறான கருத்து நிலையுடன் இயங்குகிற சமூக விடுதலையை அவாவுகிற கதைகள், முடிவை நோக்கி (teleologi-cal) அமைந்தவையாகவே காணப்படும். அதாவது எல்லோரும் எதிர்பார்க்கிற 'சிவாசி' பாடசாலைக்கு திரும்பி [illegible] என்ற முடிவு. ஆனால் [illegible] வில்லை. கருத்து நிலைசார் கோட்பாட்டை ஒழுங்குபடுத்துகிற ஆணையிடுகிற இயல்பு இங்கில்லை.

அக்கால படைப்புச் சூழலில் இது புதுமை. பொதுவாகவே ஒரு தனி மனிதனின் வளர்ச்சி, கல்வி, வாழ்க்கை வரலாறு என்பவற்றை இலட்சிய மனோபாவத்துடன் சொல்லுகிற பெருங்கதையாடற் பண்பு இங்கு இல்லை. மனித விடுதலையை அர்த்தங்கொள்ள வைக்கும் பெரும் பரப்பிலிருந்து விடுபட்டு இயல்பான மன நிகழ்வாய் நகரும் பண்பை இங்கு காண முடிகிறது.

உண்மையில் குறித்த காலப் பகுதியில் புனைவுகளில் காணப்பட்ட ஒழுக்கம் மற்றும் கோட்பாட்டுக் கருத்தியல்களை நிறுவுகிற – கற்பிக்கப்படுகின்ற அம்சத்தை 'பிஞ்சுப்பழம்' தவறவிட்டாலும், 'ஹைலைட்' செய்யப்பட்ட ஆரம்பப் பகுதியில் இருக்கும் இயல்பு; வாசிப்பவர்களை அந்த வட்டத்துக்குள்ளேயே இருத்த முயலும்.

> தெணியானின் சிறுகதைகளில் வேறுபட்டு நிற்கிற இந்தப் பிஞ்சுப்பழம் சிறுகதை நுட்பத்துடன் கூடிய வெளிப்பாட்டு முறையில் கட்டமைக்கக்கூடிய வாய்ப்பு இன்று தென்பட்டாலும், நாற்பத்திரண்டு வருடங்களுக்கு முன்னர் உருவான சிறுகதையில் இந்த வகையான பண்பினை வாசிக்க முடிவது அபூர்வமானது, மகிழ்ச்சியானது.

தெணியானின் சிறுகதைகளில் வேறுபட்டு நிற்கிற இந்தப் பிஞ்சுப்பழம் சிறுகதை நுட்பத்துடன் கூடிய வெளிப்பாட்டு முறையில் கட்டமைக்கக்கூடிய வாய்ப்பு இன்று தென்பட்டாலும், நாற்பத்திரண்டுவருடங்களுக்கு முன்னர் உருவானசிறுகதையில்இந்தவகையான பண்பினை வாசிக்க முடிவது அபூர்வமானது, மகிழ்ச்சியானது.

தெணியான் சிறந்த சிறுகதை எழுத்தாளர் என்பதை 'இன்னொரு புதிய கோணம்' தொகுதியிலுள்ள கதைகள் கூறுகின்றன. குறிப்பாக சிறுவர் உளவியலில் அமைந்த கதைகள் இவரது கருத்து நிலையோடு கதைகளாகிறபோது தனித்துத் தெரிகின்றன. குறிப்பாக சட்டநாதன் எழுதுகின்ற நடுத்தரவர்க்க, மென்மையான உணர்வுகளுக்கு மாற்றான ஒரு தளத்தை இது காட்டிச் செல்கிறது.

இங்கு தெணியானின் கதைகளில் சமூகம்–வர்க்கம்–குடும்பம் சார்ந்த இளைய [illegible] வியல்பு [illegible] குறுக்குவெட்டு முகத்தை அடையாளப்படுத்த முடியும்.

## காசைத் தா



ஜம்புலிங்கம் இருபது ரூபாய் கொடுத்து ஓர் அதிர்ஷ்டலாபச்சீட்டு வாங்கினார். அவரே எதிர்பார்க்காத வகையில் அந்த சீட்டுக்கு ஒரு கோடி ரூபா பரிசாக விழுந்தது. அதிர்ஷ்ட லாபச்சீட்டு கடைக்காரர் அரச வரியைக் கழித்துக் கொண்டு போக 55 இலட்ச ரூபாயை ஜம்புவி டம் கொடுத்தார். உடனே ஜம்புலிங்கத்துக்கு கோபம் வந்துவிட்டது.

''யாரை ஏமாற்றப் பார்க்கிறாய்? மரியாதையாக ஒரு கோடி ரூபாவை அப்படியே தா. இல்லாவிட்டால் என் இருபது ரூபாயை மரியாதையாகத் திருப்பிக் கொடு'' என்றார்.

ஜம்புவின் 2 தடாலடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கும் கிழக்காகலாம்

ஜெரா

வட மாகாணசபைத் தேர்தல் பிரதான செய்திப் பொருளாகியிருக்கின்றது. அரச தரப்பு, அரசுக்குள் இருந்து ஆதரவளிக்குக்கும் தரப்ப, எதிர்தரப்பு, தமிழர் தரப்பு என அனைத்து அரசியல் தரப்பினரின் கவனக் குவிவும் வட மாகாண சபைத் தேர்தலை குவியப் படுத்தியதாக மாறிவருகின்றது. இந்தத் தேர்தல் நடத்தப்படுமா? அல்லது நடத்தப்படாதா என்பதற்கு அப்பால் அனைத்து கட்சிகளும் அதற்கான தயார்படுத்தலில் தீவிரம் காட்டிவருகின்றன. ஆனால் வடமாகாணசபை தேர்தலை முன் வைத்து அரசும், அரசுக்கு முண்டுகொடுக்கின்ற இனவாதக் கட்சிகளும் செய்கின்ற அரசியல் பல உள்நோக்கங்களுக்காகவே இந்தத் தேர்தல் அறிவிப்பு செய்யப்பட்டிருக்கின்றது என்பதை வெளிச்சமிட்டுக் காட்டியிருக்கின்றன.

இலங்கை அரசியல் ஓட்டத்திலும், முக்கிய தீர்மானமெடுப்புக்களிலும் இனவாதக் கட்சிகளுக்கு தனித்துவமான இடமுண்டு. சுனாமியின் பின்னரான பொதுக்கட்டமைப்பு நீக்கம், விடுதலைப்புலிகளுக்கும்– ரணில் அரசுக்கும் இடையிலான சமாதான முறிவு, இறுதிப் போர் என இலங்கை அரசியல் வானில் நிகழ்ந்த ஜீரணிக்க முடியாத திருப்பங்களுக்கு இந்த இனவாதக் கட்சிகளின் பங்களிப்பு கணிசமானது. தமிழருக்கு ஆதரவான அல்லது இலங்கையில் வாழ்கின்ற இனங்கள் நல்லிணக்கத்துடன் வாழக் கூடிய ஏதுநிலைகள் உருவாகும் சூழலில் விமல் வீரவன்சவும், ஜாதிக ஹெல உறுமயவும் அதனைக் குழப்பிவிடுவதற்கான போராட்டங்களில் குதிப்பதும், அந்தப் போராட்டங்களுக்கு மதிப்பளித்து இனவாதிகளின் கருத்தை அரசின் கொள்கையாக மாற்றுவதும் இந்த நாட்டின் துயர் படிந்த இனவாத அரசியல் போக்காயிருந்றது.

### மையங்கொண்ட இனவாதம்

இப்போதும் அதேநிலைதான் தென் இலங்கை அரசியல் வானில் மையம் கொண்டிருக்கின்றது. மேற்கு நாடுகளினதும், இந்தியாவினதும் நேரடி அழுத்தங்கள் வடமாகாண சபை தேர்தலுக்கான அறிவிப்பை துரிதப் படுத்தியது. ஆனால் இலங்கை அரசு அதனையும் இதய சுத்தியுடன் செய்ததாக தெரியவில்லை. தேர்தல் அறிவிப்பை அரசு செய்த அதேவேளை அரசில் அங்கம் வகிக்கின்ற அல்லது அரசின் ஆசியுடன் இனவாதக் கட்சிகளின் எதிர்ப்பும் ஒரேவேளையில் நிகழ்ந்து வருகின்றது. வழமையாக இரண்டு இனவாதக் கட்சிகளே களத்தில் இறங்கியிருக்கும். ஆனால் தமிழரின் பூர்வீக நிலப் பகுதியான வடக்கில் நடைபெறவுள்ள தேர்தலை குழப்புவதற்கு பிரதானமாக நான்கு இனவாதக் குழுக்கள் களமிறங்கியிருக்கின்றன. விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணி, ஜாதிக ஹெல உறுமய, தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம், பொது பலசேனா என மொத்த இனவாதக் கும்பலும் வடக்கு தேர்தலை எதிர்க்கத் தயாராகிவிட்டன.

வடக்கு தேர்தலின் முடிவில் வழங்கப்படவேண்டிய 13 ஆவது திருத்தச் சட்டத்தை நீக்கவேண்டும். அல்லது அந்த சட்டத்திருத்தத்தில் அடக்கப்பட்டிருக்கின்ற காணி, பொலிஸ் அதிகாரங்களை நீக்கிவிட்டு தேர்தல் நடத்த வேண்டும் என்பதே இப்போதைக்கு இனவாதக் கட்சிகளின் பிரதான எதிர்ப்புக் கோசங்களாக இருக்கின்றன. இந்த இரு விடயங்களில் ஏதாவது ஒன்றை நீக்கிய பின் தமிழர் தாயகப் பகுதியில் நடத்தப்படும் தேர்தலில் எந்தப் பயனுமில்லை.

ஈழத்தமிழர்களின் சுதந்திர அரசு மீள் நிறுவலுக்கான 30 வருடகால விடுதலைப் போராட்டம் சிதைக்கப்பட்ட பின்னர், சுயாட்சியுடன் கூடிய தீர்வொன்று தமிழர்களுக்கு வழங்கப்பட்டாலே இனப்பிரச்சினை தீர்வு நிலையை எட்டக் கூடிய சாத்தியம் இருப்பதை சர்வதேசமும் இந்தியாவும் நம்புகின்றன. 13 ஆவது திருத்த சட்டத்தின் பரகாரம் தமிழரைத் தாமே நிர்வகித்துக் கொள்ளக் கூடிய தேர்தலாகவே வடமாகாண சபை முன்மொழியப்பட்டு வந்தது. தற்போது அதற்கு அமைவாக தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளபோதிலும், தமிழர்களும், சர்வதேசமும் விரும்புகின்ற, பரிந்துரைக்கின்ற இனப்பிரச்சினை தீர்வுக்கான சாரம்சங்களை தூக்கியெறிந்துவிட்டு தேர்தலை நடத்துமாறு இனவாதக் கட்சிகள் கோரிக்கை விடுக்கின்றன. அதற்கு எதிராகப் போராடவும் ஆரம்பித்துவிட்டன.

### தீக்குளித்தல் வன்முறை

வட மாகாண சபைத் தேர்தலுக்கு எதிரான இனவாதக் கட்சிகள் இம்முறை நடத்தப்போகின்ற போராட்டங்களை சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாது. போர் முடிவின் பின்னர் தென் பாகத்தில் வியாபகம் பெற்றிருக்கின்ற இனவாத அரசியலின் எழுச்சி, புத்த தத்துவத்தை கேள்விக்குட்படுத்துவது வரை சென்றிருக்கின்றது. மிருக வதைக்கு எதிர்ப்பு தெரிவித்து, அகிம்சையையும், தர்மத்தையும் போதிக்கின்ற, எந்த பிரச்சினைக்கும் வன்முறையை தீர்வாக எடுத்துக் கொள்ளக் கூடாத பௌத்த பிக்கு தீயில் கருகி உடலை மாய்த்துக் கொள்ளும் வன்முறைப் போக்கு உருவாகியிருக்கின்றது. நான்கு வருடங்களுக்கு முன்னர் இதேகாலப்பகுதியில் இலங்கையின் ஒரு தொகுதி மக்களாகிய தமிழர்கள் கொத்துக் கொத்தாக கொன்று குவிக்கப்படுகையில் சந்தோசித்திருந்த பௌத்த துறவிகள் இப்போது மிருக வதைக்காக உயிர் விடுவது விந்தையானது. ஆனாலும், அந்த தீக்குளிப்பின் பின்னால் இருக்கின்ற அரசியல், இந்த நாட்டின் இனவாத அரசியல் முகத்தின் கோரமான முகத்தை திரைவிலக்கியிருக்கின்றது. சிறுபான்மையினத்தவரது உரிமைகளை அவ்வளவு இலகுவாக காப்பாற்றிக் கொள்ளவோ, சிங்கள இனவாதிகளிடமிருந்து பெற்றுக் கொள்ளவோ முடியாது என்பதை தெளிவுபடுத்தியிருக்கின்றது.

### தேர்தல் அறிவிப்பில் ஒளிந்திருக்கும் அரசியல்

இனவாதக் கட்சிகளின் நிலைப்பாடுகளும், போராட்டங்களும் இவ்வாறிருக்கையில், வடமாகாண சபை தேர்தல் அறிவிப்புக்குப் பின்னால் இன்னபிற அரசியலும் இருப்பதை அவதானிக்க கூடியதாயிருக்கின்றது. வடக்கில் 1983 ஆம் ஆண்டுக்கு முன்னர் வாழ்ந்தஅனைவருக்கும் வாக்குரிமை கிடைக்க கூடிய ளவிலான சட்ட சீர்திருத்தம் கொண்டுவரப்படுவதற்கான முயற்சிகள் அரச மட்டத்தில் எடுக்கப்பட்டுவருகின்றது. அந்தத் சட்ட திருத்தத்தின் பரகாரம் வடக்கில் இருந்து வெளியேறி தென் பாகத்தில் குடியிருக்கின்ற சிங்களவர்களும், முஸ்லிம்களும் தமது பிரதிநிதிகளை வடக்கில் தெரிவுசெய்யக் கூடிய சூழல் உருவாகும். இவர்களோடு வடக்கில் புதிதாக குடியேற்றப்பட்டுள்ள, விரைவாக குடியேற்றப்பட்டு வருகின்ற சிங்களவர்களும், முஸ்லிம்களும் வாக்களிக்கும் உரிமையை பெறுகின்றனர்.

### இனவிகிதாசார வாக்களிப்பு

லட்சக் கணக்கான தமிழர்கள் வடக்கில் இருந்து வெளியேறியும், போரில் மரணித்தும் போன பின்பு நடத்தப்படும் இந்தத் தேர்தலில் இனவிகிதாசார அடிப்படையில் சிங்கள மைய அரசியலை வடக்கிலும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கான அனைத்து முயற்சிளையும் அரசு செய்துவருகின்றது. வடக்கிலிருந்து வெளியேறி புலம்பெயர் நாடுகளிலும், தமிழகத்திலும் வாமுகின்ற தமிழர்களும் வாக்களிக்க வசதி செய்து கொடுக்கப்படவேண்டும் என்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்த போதிலும் அது உடனடியாகவே நிராகரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### குறைக்கப்படும் வாக்குப்பலம்

இவ்வாறு தமிழர்களின் வாக்குப் பலத்தை குறைத்த பின்னர் நடத்தப்படவுள்ள தேர்தல், இன்னொரு கிழக்கு மாகாணமாக வடக்கை மாற்றுவதற்குரிய சந்தர்ப்பமாக வடமாகாண சபைத் தேர்தல் அமையப்போகின்றது. வடக்கில் செல்வாக்குடன் இருக்கின்ற தமிழர்தரப்பை மழுங்கடிப்பதற்கான, அரசியல் அரங்கிலிருந்து ஓரங்கட்டிவிடுவதற்கான பணிகள் ஏற்கனவே விரிவுபெற்று வருகின்றன. தமிழ்த் தேசிய அரசியலுக்குள் ஏற்பட்டிருக்கின்ற உடைவு, முறிவு முணுமுணுப்புக்கள் வடக்குத் தேர்தலின் முடிவுகளை அரசின் பக்கமாக திருப்பவிடுவிடுவதற்கான வாய்ப்புக்களை வழங்கும். இந்த முணுமுணுப்பு அரசியல் தமிழ்த் தேசிய அரசியலுக்கு எதிரானவர்களால் திட்டமிட்டு உருவாக்கப்பட்டதாகவும் இருக்கலாம். வடக்குத் தேர்தலில் இவர்களின் கனவு பலிக்குமானால், வடக்கு மாகாணத்திலும் ஒரு பிள்ளையானும், அரசின் நிழல் ஆட்சியும் உருவாவதை தவிர்க்க முடியாது.



இந்தத் தேர்தல் அறிவிப்பு வருவதற்கு முன்னர் வடமாகாண மக்களும் அவர்களைப் பிரதிபலிக்கின்ற அரசியல் தரப்புக்களும் ஜனநாயக வழிப்பட்ட மக்கள் போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்தன. இராணுவத்தினரின் நில அபகரிப்பைக் கண்டித்தும், எதிர்த்தும் மக்கள் பல்வேறு இடங்களிலும் போராட்டங்களை நடத்திக் கொண்டிருந்தனர். கடத்தல், காணாமல் போதல் போன்றவற்றுக்கு எதிராகவும் இந்தப் போராட்டங்கள் நடந்து கொண்டிருந்தன. ஆனால் தேர்தல் அறிவிப்பு வெளியாகிய பின்னர் மக்களது போராட்டமும், வடக்கைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசியல் கட்சிகளின் வேலைத்திட்டங்களும் ஓய்வுநிலைக்கு அல்லது தேர்தல் அரசியல் நோக்கி பயணிக்கத் தொடங்கியிருக்கின்றன. நில அபகரிப்பும், சிறுமிகள் மீதான பாலியல் வேட்டைகளும் தினம் தினம் பரவிக் கொண்டிருக்கையில் தமிழர் தரப்பு மௌனப் படுக்கைக்குள் துயில் கொள்ளும் நிலையை இந்தத் தேர்தல் அறிவிப்பு உருவாக்கிச் சென்றுள்ளது. இவ்வளவு சூழ்ச்சிகளுக்கும் மத்தியில் நடத்தப்படவிருக்கின்ற தேர்தலை நோக்கி தமிழர்களும் காத்திருக்கின்றனர். அதிலும் சிங்கள மைய அரசியல் சக்திதான் வெற்றி பெறுமானால் தமிழர் அரசியல் சகாப்தத்தின் இறுதி அஸ்தமனமாகவே அது அமையும். அந்த மறைவுப் பொழுதை நோக்கியே சதிகளும், சூழ்ச்சிகளும் பின்னப் படுகின்றன.

**"நடத்தப்படவுள்ள தேர்தல், இன்னொரு கிழக்கு மாகாணமாக வடக்கை மாற்றுவதற்குரிய சந்தர்ப்பமாக வட மாகாண சபைத் தேர்தல் அமையப்போகின்றது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காற்றில் வாழும் கலைஞன்

## ரி.எம்.சௌந்தரராஜன் சில குறிப்புகள்

*கலைச்செல்வன் ரெக்ஸி (ஆஸ்திரேலியா)*

எனக்கு விவரம் தெரிந்த போது, என்னுடைய அம்மா ரி.எம்.எஸ்.சின் தீவிர ரசிகை. அவரின் ஒவ்வொரு பாடல்களையும் அணு அணுவாக எனது அம்மா பாடி ரசிப்பதை பார்ப்பதே இனிமையாக இருக்கும். ஆனால் எனக்கு விவரம் தெரியத் தொடங்கியபோது தமிழ்த் திரையிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக ரி.எம்.எஸ். காணாமல் போகத் தொடங்கியிருந்தார்.

இது அவரது முதிர்ச்சியாலா? கால மாற்றத்தாலா? இசைஞானியின் வரவாலா? எம்.ஜி.ஆர். சிவாஜி காலம் முடிந்து இளைஞர்களான கமல். ரஜினியின் வரவாலா? அல்லது முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆருடன் ரி.எம்.எஸ். சுக்கு ஏற்பட்ட கருத்து மோதலாலா? பலரும் பல விதமாகக் கதைத்தார்கள். ஆனால் ரி.ம்.எஸ். காணாமல் போய்க் கொண்டிருந்ததை மட்டும் என்னால் உணரக் கூடியதாக இருந்தது.

ரி.எம்.எஸ். தனியே குரலில் கம்பீரத்தைக் கொண்டிருந்ததால் மட்டும் பிரபலமாகவில்லை என்பதை, அவரின் பல பாடல்களைக் கேட்டு உணர்ந்து ரசித்து மலைத்துப் புரிந்து கொண்டேன். இவர் தனது குரலில் காட்டும் அல்லது இடைச் செருகும் சங்கதிகளையும் பாவங்களையும் தமது நடிப்புள் கொண்டுவந்ததன் மூலம், அந்த நடிகர்கள் பேர் வாங்கிக் கொண்டு போனார்கள். இதற்கு நல்ல உதாரணம் கௌரவம் படத்தில் "கண்ணா. நீயும் நானுமா?" என்ற பாடலுக்கு முன்னான கண்ணா.. என்ற கர்ஜனைக் குரல். இந்தக் குரலை சிவாஜியினுடையது என்றே பலரும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அது ரி.எம்.எஸ்.சின் கர்ஜனை.

ஒரு காலத்தில் மிக உச்சத்தில், இருந்த ரி.எம்.எஸின் பாடலுக்காக முன்னணி நடிகர்கள் காத்திருந்தார்கள். ஆனால் அவரின் ஆரம்ப காலம் வறுமையின் போராட்டமாகவே இருந்துள்ளது. பாடல்களில் அவரின் ஆலாபனையையும் சுருதி சுத்தத்தையும் பார்த்துப் பலர் அவரை பல வருடங்கள் முறையாக சங்கீதம் படித்தவர் என்றே நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் காரைக்குடி ராஜாமணி அய்யங்காரிடம் சீடராகச் சேர்ந்து அவர் இசையை முறையாக படித்ததோ ஒரே ஒரு வருடம் மட்டுமே. காரணம் வறுமை. ஆனால் படித்தவற்றை இறுகப் பிடித்து வைத்துக் கொண்டார்.

தான் படித்ததை வைத்துக் கொண்டு கச்சேரி செய்யத் தொடங்கினார். கச்சேரியின் போது தனது ஆஸ்தான பாடகர் தியாகராஜப் பாகவதரின் சினிமாப் பாடல்களை இடையிடையே பாடினார். இதற்குக் கிடைத்த வரவேற்பு அவரை சினிமா பக்கம் திரும்பிப் பார்க்க வைத்தது.

சினிமா வாய்ப்புத்தேடி அவர் பட்ட கஷ்டம் கொஞ்ச நஞ்சமல்ல. கே.வி.மகாதேவனிடம் வாய்ப்புத் தரும்படி அழுதபடி கெஞ்சிக்கூடப் பார்த்திருக்கிறார். மகாதேவன் அவரைப் புரிந்து கொண்டு இரண்டு பக்திப் பாட்டுக்களைக் கொடுத்துவிட்டு சிறிதுகாலத்தின் பின் எம்.ஜி.ஆர், சிவாஜியின் கூண்டுக்கிளி படத்தில் கோரஸ் பாட வாய்ப்பளித்தார். ஆனால் ரி.எம்.எஸ்சின் அதிர்ஷ்டம் அந்தப் படத்தின் பாடலாசிரியர் தஞ்சை ராமையாதாசுக்கு ரி.எம்.எஸ்ஸின் குரலும் பாணியும் பிடித்துப் போக அவருக்கு ஒரு பாட்டைக் கொடுக்கும்படி மகாதேவனிடம் பரிந்துரை செய்தார். அப்படித்தான் ரி.எம்.எஸ். அந்தப்படத்தில் 'கொஞ்சும் கிளியான பெண்ணை' என்ற பாடலைப் பாடும் வாய்ப்பைப்பெற்றார். கூண்டுக்கிளியில் பாடிய பின்னும் ரி.எம்.எஸ். இற்குப் பெரிதாக வாய்ப்புக்கள் கிடைக்கவில்லை. ஒருமுறை திருச்சி லோகநாதன் பாடுவதாக இருந்த பாடல்களை சம்பளத் தகராறு காரணமாக அவர் பாட மறுத்தபோது அந்தப் பாடல்களைப் பாடுவதற்குக் குறைந்த சம்பளத்துக்கு வறுமையில் வாடிய ரி.எம்.எஸ். சம்மதித்த போதும், புதுப் பாடகனான ரிஎம்.எஸ்ஸை தனது படத்துக்கு பாட வைப்பதற்கு சிவாஜி தயங்கினாராம்.

இதைக் கேள்விப்பட்டு மனம் வருந்திய ரி.எம்.எஸ் ஒரு சில பாடல்களைத் தாருங்கள் நான் பாடிக்காட்டுகிறேன் பிடித்தால் வைத்துக் கொள்ளுங்கள், பிடிக்கா விட்டால் ஊரைவிட்டே போய் விடுகிறேன் என்று கூறிவிட்டு, 'சுந்தரி சௌந்தரி நிரந்தரியே' 'ஏறாத மலைதனிலே' 'பெண்களை நம்பாதே' ஆகிய மூன்று பாடல்களைப் பாடியுள்ளார். இதைக் கேட்ட சிவாஜி அகமகிழ்ந்து போய் இவ்வளவு திறமைசாலியாக நீங்கள் இருப்பீர்களென நான் எதிர் பார்க்கவில்லையெனக் கூறி எல்லாப் பாட்டுக்களையும் அவரையே பாடும்படி பச்சைக் கொடி காட்டி விட்டார். அன்றிலிருந்து அவரின் வாழ்க்கை மாறியது.

தாய்மொழி தமிழில்லாத ரி.எம். எஸ் சின் தமிழ் உச்சரிப்பு தமிழகத்தைக் கவர்ந்தது. அவரது பாடும் பாணியே ஒரு நடிகனைப் பார்க்கும் உணர்ச்சியை மக்களுக்குக் கொண்டு வந்ததால் மக்கள் அவரின் குரலுக்குக் கட்டுண்டு போகத் தொடங்கினார்கள்.

அந்தக் காலகட்டத்தில் வெளிவந்த 'மலைக் கள்ளன்' என்ற எம்.ஜி.ஆரின் படத்துக்கு ரி.எம். எஸ்சே பாடவேண்டும் என்ற முடிவை எம்.ஜி.ஆர். ஏலவே எடுத்து அவரைப் பாடவைத்தார். அதில் வந்த "எத்தனை காலம் தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே" என்ற பாடல் படித்தவர் முதல் பாமரர் வரை மிக பிரபலமாகி ரி.எம்.எஸ். உடன் எம்.ஜி.ஆர். என்ற வெற்றிக் கூட்டணிக்கு பிள்ளையார் சுழி போட்டது. அதன் பின் எம்.ஜி.ஆர். சிவாஜி என்ற இரு இமயங்களின் குரலாக பல தசாப்தங்கள் ஒலித்தது அந்தக் குரல்.

ரி.எம்.சௌந்தராஜன் நடிகர்களின் விசேட இயல்பை நன்கு கவனித்து அதனை உள்வாங்கி பாடினார்.

"சிவாஜிக்கு அடி வயிற்றில் இருந்து பாடுவேன், எம்.ஜி.ஆருக்கு நெஞ்சில் இருந்து பாடுவேன், ஜெய்சங்கர் முத்துராமன் போன்றவர்களுக்கு தொண்டையில் இருந்து பாடுவேன்" என்று தன் வெற்றியின் ரகசியத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

ரி.எம்.எஸ். இலங்கை வானொலி ஊடாக ஒவ்வொரு வீட்டுக்குள்ளும் உட்புகுந்தவர். ஈழத்தவர்கள் மத்தியில் அவருக்கிருந்த செல்வாக்கும் மதிப்பும் அடிக்கடி அவரை இங்கு வர வைத்தது. இலங்கையில் நடைபெற்ற பல்வேறு இசை நிகழ்ச்சிகளில் அவரது 'கணீர்' குரலை ஈழத்தமிழர்களும் கேட்டு இன்புற முடிந்தது. இணுவையூர் வீரமணி ஐயரின் வார்த்தைகளில் உருவான "கற்பகவல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன் ..." பாடலுக்கு உயிர் கொடுத்தவர் ரி.எம். சௌந்தரராஜன்தான். காலமும் நோயும் சௌந்தரராஜனின் சாரீரத்தை இல்லாது செய்திருந்தாலும் என்றைக்கும் மறையாத சிரஞ்சீவித் தன்மையோடு அவரது சாரீரம் காற்றில் பரவிக்கொண்டேதான் இருக்கும்.

> ஒரு சில பாடல்களைத் தாருங்கள் நான் படித்துக்காட்டுகிறேன் பிடித்தால் வைத்துக் கொள்ளுங்கள், என்று சிவாஜியிடம் கேட்டார் பிடிக்கா விட்டால் ஊரைவிட்டே போய் விடுகிறேன் என்று கூறிவிட்டு, 'சுந்தரி சௌந்தரி நிரந்தரியே' 'ஏறாத மலைதனிலே' 'பெண்களை நம்பாதே' ஆகிய மூன்றுபாடல் களைப் பாடினார். சிவாஜி மயங்கினார்.

# அவர்கள் கொள்ளைக்காரர்கள்தான் இது நிஜம்

அவர்கள் ஆயுதம்
தரித்திருக்கவில்லை
அவர்களின் முகங்களில்
முகமூடிகள் இல்லை
யாரும் குதிரைகளில் வரவில்லை
கண்கள் ஒன்றும் இரத்தச்
சிவப்பாக இல்லை
பெரிய கூட்டமாகக் கூட
அவர்கள் வரவில்லை
ஆனால் வந்தவர்கள்
உள்வீட்டுக்காரர்கள்
இது உண்மை
அவர்கள் பின் கதவால்
நுழைந்தவர்கள்
தன்னிறைவாக வாழ
எத்தனித்த தையல்களை
எல்லாம் கொள்ளையடித்தனர்
சாரா வாழ்வுக்காக இழைக்கப்பட்ட
அற்பங்களைக் கூட
இரகசியமாக அழித்தனர்
வெறுமையான மாடிகளின்
ஈரலிப்பான இரவுகளை
அவர்கள் அள்ளிச் சென்றனர்
எல்லாவற்றையும் முற்றாக
அவிழ்த்துக் கொட்டினர்
ஆதரவே இல்லாமல்
பரிதவிக்க விட்டனர்
ஆதரவே இல்லாமல்....!



*[illegible] இன்ர வேலிச்*
*ஆங்கிலம் வழியாக தமிழில் 'மோட்டையான்'*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(கடந்த வாரத் தொடர்ச்சி)

# உளவியலும் ஆன்மிகமும்

இராம ஜெயபாலன்

1. உள்ளூறுப்புக்களின் இயக்கம்
உயிர்க்கலங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு மின்சார பற்றிகளாகும். இந்த உயிர்க்கலங்களிலிருந்து இலத்திரனியில் பரிமாற்றம் மூளைக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. மூளை தனக்கு இலத்திரனியல் சக்தி தொடர்ந்தும் கிடைப்பதற்காக உள்ளூறுப்புக்களை இயக்கி கலங்களுக்குச் செறிவூட்டலைச் செய்கி றது. இது மூளையின் மற்றப்பகுதிகளுடன் தொடர்புபடும் சந்தர்ப்பங்கள் மிகச் சில என்பதால் ஒருவர் கோமா நிலைக்குச் சென்றாலும் தனது முதல் தொழிலைச் செய்து கொண்டு மொழியறிவு, சிந்தனை ஆற்றல், பகுத்தறிவு தொகுத்தறிவு மேலும் ஞாபகச்சக்தி, தொழில் நுட்ப கலை ஆற்றல்கள் என தான் பெற்றுக்கொள்ளும் அனைத்து அறிவுகள் மூலமும் மூளையை வளப்படுத்துகின்றது. எவ்வாறாயினும் மனிதன் தன்னைத்தானே " நான்" என்று உணர்வதும் தனது மூளையுடன் போராடுவதும் இந்தப் பகுதியால் தான்.

எவ்வாறாயினும் இயற்கை (இறைவன்) உயிர்களைப் படைத்து பரிணாமமடையச் செய்து மனிதனை மட்டுமே சுயமாக சிந்திக்கச் செய்து தனது அறிவு ஆற்றலை வளப்படுத்த வகை செய்திருக்கிறது என்றாலும் மனிதன் தனது அறிவு ஆற்றல்களை அப்பாற்பட்ட பல காரணிகள் ( ஆன்மிகம்) பாதிப்பதாகக் கருதினான். இதனால் மனிதர்களின் உளவளப் பிரச்சினைகளுக்குத் தீர்வாக ஆன்மிகம் கலந்து மூலிகை மருத்துவங்களை

> பற்றற்ற எமது ,
> மனங்களை வைத்துக்
> கொண்டு பயனை
> எதிர்பாராது கடமை
> யைச் செய். நாம்
> நினைப்பதொன்று
> நடப்பதொன்று. நினைப்
> பதெல்லாம் நடந்துவிட்
> டால் தெய்வம் ஒன்று
> மில்லை, நடந்ததையே
> நினைத்திருந்தால் நிம்
> மதி என்றும் இல்லை

யும் தீர்வாக வாழ்வு முறைத் தத்துவங்களையும் வழிபாடுகளையும் பல்வேறு வடிவில் அறிமுகப்படுத்தியது மற்றும் உளவியல் பிரச்சினைகளின் மூலப்பிரச்சினையாக பாலியல் பிரச்சினைக்களை இனம் கண்டு காலத்துக்கக் காலம் பல்வேறு வாழ்வு முறைகளை அறிமுகப்படுத்தினான்.

1. கட்டுப்பாடற்ற வாழ்வு முறை
இது உளவியல் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வாக இருந்தாலும் நீண்ட காலத்திட்டத்தில் சமூக முன்னேற்றம் மனித சந்ததி எவ்வாறாயினும் முரண்பாடுகளும் பிரச்சினைகளும் இல்லையென்றால் வாழ்வதில் கூட சுவாரசியமிருக்காது. எனவே உளவியல் பிரச்சினை நீண்டு கொண்டே சென்றது. இவைகளுக்கு துறவற வழிமுறைகளே தீர்வாகவும் புலனடக்க சிந்தனைகளும் பற்றறுப் பாசம் இல்லாத வாழ்வு பற்றியும் சமயங்கள் பேசுகின்றன. இதுவே யோகர் சுவாமிகளின், எப்பவோ முடிந்த காரியம் சும்மா இரு ஒரு பொல்லாப்புமில்லை என்கின்ற கருத்தாகும்.

மேலும் மாற்றங்கள் ஏற்படுகிறபோது மக்கள் மனங்களை ஆற்றுப்படுத்துகின்ற தத்துவமே பகவத் கீதையாகும். எது நடந்ததுவோ அது நன்றாகவே நடந்தது. எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது. எது நடக்க இருக்கிறதோ அது நன்றாகவே நடக்கும். இவ்வாறு மேற்கொண்டு சொல்லப்படுகின்ற தத்துவங்கள் எல்லாமே விதிப் பயன்களின் படியே நடந்து முடிகிறது, பற்றற்ற எமது மனங்களை வைத்துக் கொண்டு பயனை எதிர்பாராது கடமையைச் செய்யச் சொல்கிறது.

நாம் நினைப்பதொன்று, நடப்பதொன்று. நினைப்பதெல்லாம் நடந்து விட்டால் தெய்வம் ஒன்றுமில்லை, நடந்ததையே நினைத்திருந்தால் நிம்மதி என்றும் இல்லை நல்லதே நடக்கும், கடவுளை நம்புவோம். அரசன் அன்றறுப்பான், தெய்வம் நின்றறுக்கும்.



# மூப்பின் மர்மம் என்ன?

(கடந்த வாரத் தொடர்ச்சி)

உடலின் முக்கிய பாகங்களான இதயம் மற்றும் மூளையின் செயற்பாடுகள் குறைந்து போவதுதான் மூப்படைதலின் முதல் மற்றும் அடிப்படை அறிகுறி. இந்த பாகங்களின் உயிரணுக்களில் நிகழும் புரதச் சமன்பாடு (protein homeostasis) அல்லது உட்புற உறுதி நிலை (internal stability) பாதிக்கப்படுவதே அவற்றின் செயற்பாடு குறைவதற்கான முக்கிய காரணம் என்கிறது சமீபத்திய ஆய்வு முடிவுகள். ஆய்வாளர் மார்ட்டின் ஹெட்சரின் ஆய்வு முடிவு களில், (மூளை உயிரணுக்களான) நியூரோன்களின் செயற்பாடுகள் குறைவதற்கு ELLP புரதங்கள் சேதமடைவதே காரணமாக இருக்கக்கூடும் என்று கண்டறியப்பட்டுள்ளது. நியூரோன்கள் தவிர்த்த உடலிலுள்ள பிற உயிர ணுக்களின் செயற்பாடுகள் குறையும்போது அவை, அவற்றின் சேதமடைந்த பழைய புரதங்களை அழித்து புதிய புரதங்களை உற்பத்தி செய்துவிடுகின்றன.

இதனால் அவற்றின் செயற்பாடு மீண்டும் அதிகரித்து விடுகிறது.

ஆனால் நியூரோன்களிலுள்ள புரதங்கள் ஒருமுறை சேதமடைந்தால் அவற்றுக்கு மாற்றாக புதிய புரதங்கள் உற்பத்தி செய்யப்படுவதில்லை என்பது துரதிஷ்டவசமானது. 'என்றும் பதினாறு' மார்க்கண்டேயனைப் பற்றி படித்திருக்கிறோம். இந்த ஆய்வு முடிவுகளை பார்க்கும்போது, ஒருவேளை மார்க்கண்டேயனின் ELLP புரதங்க்ள் அவனுடைய பதினாறாவது வயதுக்குப் பின்னர் சேதமடையவே இல்லையோ என்று எண்ணத் தோன்றுகிறது!

றஜி

# இனிப்பைத் தவிர்க்கும் புத்திசாலி கரப்பான் பூச்சிகள்

கரப்பான் பூச்சிகளின் குணாதிசயத்தில் ஏற்படும் வேகமான வளர்ச்சி மரபணு மாற்றத்துக்கு வழிவகுக்கும் என்றும் விஞ்ஞானிகள் நம்புகின்றனர்

கரப்பான் பூச்சிகளை ஒழிப்பதற்கு வீடுகளில் வைக்கப்படும் பொறிகளில் பயன்படுத்தப்படும் இனிப்பு உணவுகளை நாடாமல் இருக்கும் குணாதிசயம் சிலவகை கரப்பான் பூச்சிகளிடத்தில் இயல் பாகவே வளர்ந்திருப்பதாக ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

இந்த வகையான உணவுப் பொருள்களை அண்டாமல் இருக்கும் பழக்கம் இந்த கரப்பான் பூச்சிகளிடத்தில் ஒருசில ஆண்டுகளில் மிக வேகமாக வளர்ந்திருப்பதாகவும் வடக்கு கரோலினா அரசு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இந்த வகை கரப்பான் பூச்சிகளிடத்தில் வளர்ந்துள்ள இந்தப் பழக்கம் பூகோள ரீதியிலும் உலகின் பல பாகங்களிலும் உள்ள கரப்பான் இனங்களிடத்திலும் வேகமாகப் பரவிவருவதாகவும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

அமெரிக்கா, ரஷ்யா மற்றும் தென் கொரியா ஆகிய நாடுகளிலிருந்து ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 19 வகையான கரப்பான் பூச்சி இனங்களில் 7 இனங்களி டத்தில் சீனி- உணவுப்பொறியில் சிக்காமல் அந்த உணவுகளை வெறுக்கும் போக்கு வளர்ந்திருப்பது தெரியவந்துள்ளது.

தமக்கு தீங்கு ஏற்படுத்தும் இனிப்பு உணவுகளைத் தவிர்க்கும் இயல்பு, கரப்பான் பூச்சிகளின் அடுத்தடுத்த பரம்பரைகளில் இயல்பாகவே மரபணு ரீதியான மாற்றத்தை ஏற்படுத்த வல்லது என்று விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

உயிர் ஆபத்தில் சிக்கிக்கொள்ளாமல் தப்பும் இயல்புகொண்ட கரப்பான் பூச்சி வகைகள் பெருகும் வாய்ப்பு இதன்மூலம் அதிகரிக்கும் என்றும் நம்பப்படுகிறது.

விஞ்ஞானிகள் இப்போது தான் இந்தப் போக்கை ஆய்வு ரீதியாக கண்டறிந்திருந்தாலும், எலிகள் மற்றும் பூச்சி இனங்களைக் கட்டுப்படுத்தும் மருந்துகளைத் தயாரிக்கும் நிறுவனங்கள் ஏற்கனவே இதனை அறிந்து வைத்துள்ளன. அதற்காக தமது உணவுப் பொறிகள், மருந்துகளில் புதிய வகைகளை அவ்வப்போது அந்தக் கம்பனிகள் அறிமுகப் படுத்திவருகின்றன.

மது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி பெறலாம் வாங்க!

### உ ங்கள் பெற்றோர்களை ஊக்குவிக்கும் 10 புதிய விடயங்கள்

உங்களை வளர்த்த பெற்றோர், நீங்கள் வளர்ந்த பிறகும் உங்கள் வாழ்க்கையில் ஆர்வம் காட்டு வார்கள். உங்கள் வாழ்க்கைத் திட்டத்தை அவர் களுடன் பகிர்ந்துகொள்வதுடன், அவர்களையும் அவர்களுக்கான வாழ்க்கைத் திட்டத்தை உருவாக்கச் சொல்லாம். இது உங்களைப் பற்றி அவர்கள் கவலைப்படுவதைத் தடுக்கும். உங்கள் பெற்றோர்களுடன் நல்ல விதமான உறவைப் பேணுவது, அவர்களை உங்களுடன் நெருங்க வைப்பதுடன், உங்கள் வாழ்க்கைத் திட்டத்தையும் எளிதில் சாதிக்க வைக்கும்.




**பயணம் :** இப்பொழுது அவர்களிடம் நிறைய நேரம் இருக்கிறது. ஏன் பணமும்கூட இருக்கலாம். முன்பு அவர்கள் பார்க்க முடியாத இடங்களுக்கு எல்லாம் இப்பொழுது போய்ப் பார்க்கலாம். வெளிநாடுகளுக்குக்கூட கூட்டிச் செல்லலாம்.

**விளையாட்டு :** நல்ல உடல்தகுதியுடன் இருந்தால் நீண்ட நாள் வாழலாம். வயதானவர்கள் விளையாடுவதற்கென்று பல விளையாட்டுகள் உள்ளன. அவற்றை அவர்கள் விளையாடச் செய்யலாம்.

**எழுதுதல் :** உங்களுடைய அம்மா ஒரு வளரும் கவிஞரா? அல்லது உங்கள் தந்தை சுயசரிதை எழுதவும் ஆசைப்படுபவரா?. புத்தகம் பிரசுரம் ஆவது பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. உங்களுக்காக அவர்களை எழுதச் சொல்லலாம்.

**செல்லப் பிராணிகள் :** உங்கள் பெற்றோர் நாய் வாங்கி வளர்க்க விரும்பினால், அதை நீங்கள் வாங்கிக் கொடுங்கள். அந்த நாயைக் கூட்டிக்கொண்டு நீண்டதூரம் நடைப்பயிற்சி போகச் சொல்லுங்கள்.

**ஷொப்பிங் அழைத்துச் செல்லுங்கள் :** வயதான நபர்கள் தங்களுக்குப் பயன்படுகிறதோ இல்லையோ, நிறையப் பொருள்களை வாங்க விரும்புவார்கள். அவ்வப்போது உங்கள் பெற்றோரை ஷொப்பிங் செய்ய அழைத்துச் செல்லுங்கள்.

**தன்னார்வலர்களாக மாறலாம் :** வயதானவர்களுக்கு அனுபவமும், நேரமும் இருக்கும். அவர்களைவிட வயதானவர்களுக்கு அவர்கள் உதவலாம். தொண்டு நிறுவனங்களுக்கும் தன்னார்வலர்கள் தேவை.

**கிளப்புகளில் உறுப்பினராதல் :** நகரில் எவ்வளவு கிளப்புகள், சொசைட்டிகள் இருக்கிறது எனத் தெரிந்தால் வியப்படைவீர்கள். அவர்கள் ஆர்வம் என்னவாக இருந்தாலும் அதற்கான கிளப்புகள் இருக்கும்.

**இணையம் :** இணையத்தளம் புதிய விடயங்களைக் கண்டறிவதற்கான அருமையான இடமாகும். அதில் நம்மைப் போன்று ஆர்வமுள்ள பலரை இணையம் மூலம் தொடர்புகொண்டு நட்புக் கொள்ளலாம்.

**கற்றுக் கொள்ளுதல் :** நாம் கற்றுக்கொள்வதை நிறுத்தக் கூடாது. ஓய்வாக இருக்கும் அந்த நேரத்தில் புதிய அந்நிய மொழியைக் கற்றுக்கொள்வதென்பது மிகப் பயனுள்ளதாக அமையும்.

**மீண்டும் காதல் :** உங்களின் தாய், தந்தை இருவருமே உயிருடன் இருந்தால், முதிய வயதானது அவர்களுக்குப் புதிய வாய்ப்புகளையும், சவால்களையும் எதிர்கொள்ள உதவும். மீண்டும் அவர்கள் தங்கள் பழைய காதல் வாழ்க்கைக்குத் திரும்பலாம்.

ராகவன் அல்பி

உங்கள் வாழ்க்கையை மாற்றப்போகும் தொடர்....

# யாரை எழுப்பினான்....?

ஒரு முறை ரயிலில் பயணம் செய்துகொண்டிருந்த ஜம்புலிங்கத்துக்கு தூக்கம் தூக்கமாக வந்தது. தான் இறங்க வேண்டிய இடம் இன்னும் ஒரு மணி நேரத்தில் வந்து விடும் என்பதால் ஜம்புலிங்கம் தூங்க முடியாமல் தவித்துக் கொண்டிருந்தார். திடீரென்று ஜம்புவுக்கு ஒரு யோசனை வந்தது. அருகில் உட்கார்ந்திருந்த ஒருவரிடம், ''என்னை கொடிகாமம் வந்ததும் எழுப்பிவிட முடியுமா?அதற்கு சன்மானமாக இருநூறு ரூபாய் தருகிறேன்'' என்று சொன்னார். அருகே இருந்த அந்த ஆளும் அதற்கு ஒத்துக்கொண்டு, பணத்தையும் வாங்கிக் கொண்டார். ஜம்புலிங்கம் நன்கு தூங்க தொடங்கினார். ஜம்புவை எழுப்பி விடுவதாக சொன்ன நபருக்கு, ''ஒரு ஆளை தூக்கத்தில் இருந்து எழுப்பி விடுவதற்கு, இருநூறு ரூபாய் வாங்குவது சரியா?'' என்று மனச்சாட்சி உறுத்தியது. இந்த எண்ணம் அவருக்கு கஷ்டமாக இருந்தது. தான் வாங்கிய பணத்துக்கு மேலும் உபயோகமாக வேறு ஏதாவது ஜம்புவுக்கு செய்ய வேண்டும் என நினைத்தார். அவர் ஒரு சிகை அலங் கரிப்பாளர். எனவே வாங்கிய காசுக்கு வஞ்சகம் செய்யாமல் தூங்கிக் கொண்டிருந்த ஜம்புலிங்கத்துக்கு சவரம் செய்து நீண்டு வளர்ந்து கிடந்த அவரின் தலை முடியை அளவாக வெட்டிவிட்டார். தூக்கத்தில் இருந்ததால் இதொன்றும் ஜம்புவுக்கு தெரியாது. கொடிகாமம் வந்ததும் அந்த நபர் ஜம்புலிங்கத்தை எழுப்பியும் விட்டார்.

தனக்கு முடிவெட்டி, சவரம் பண்ணப்பட்டதை அறியாத ஜம்புலிங்கம் நேரே வீட்டுக்கு வந்து குளித்துவிட்டு, தன்னை கண்ணாடியில் பார்த்தபோது அதிர்ச்சி அடைந்தார். அவரையே அவரால் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. உடனேயே தன் மனைவியை அழைத்து ஜம்புலிங்கம் சொன்னார்.

''ரயிலில் அந்த மடையனுக்கு என்னை எழுப்பி விடுவதற்கு இருநூறு ரூபா கொடுத்தேன். ஆனால் அவன் என்னை எழுப்பிவிடுவதற்கு பதிலாக வேறு யாரையே எழுப்பிவிட்டு விட்டான். இப்போது கண்ணாடியைப் பார்த்தபோதுதான் எனக்கே உண்மை தெரிந்தது.'' என்றாரே பார்க்கலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



துணிந்தவனுக்கு தூக்கு மேடையும் பஞ்சுமெத்தை. உலக நீதி எல்லோருக்கும் ஒன்று தான்.

# அவமானத்தின் வலி

ஒரு மானமுள்ள மனிதன் அவமானப்படும்போது அவன் மனது படுகிற வலி பிறிதொருவனுக்கு சொன்னால் புரியுமா? அனுபவிக்கிறவனுக்கே அதன் வலியும், வேதனையும் புரியும்.

அதுபோல அண்மையில் எனக்கொரு வலி, அவமான வலி. அது வலியல்ல; வடு. அது எனக்குத் தனிப்பட்ட ரீதியில் நடைபெற்ற ஒரு பிரச்சினைதான். ஆனால் ஓர் ஊடகவியலாளரான நான் அப்படிச் சொல்லிவிடமுடியாது. இதை எனது கோணப் பொதுநிலைக் கண்ணோட்டத்தில் அலசி ஆராய்ந்து அதன் உண்மை நிலையை என் மக்களும் உணர்ந்துகொள்ளும்படி எடுத்தியம்பினால் மட்டுமே அன்றைய தினம் நான்பட்ட அந்த அவமான வலிக்கோர் வழி பிறக்குமென்று கருதி இந்த ஆக்கத்தை எழுத விழைகின்றேன். இனி விடயத்துக்கு வருவோம்.

''ஒரு மனிதனின் பெயரைச் சொல்லுவது குற்றமா?'' இதுதான் அந்தப் பிரச்சினைக்கே காரணம்.

அது நான் வசிக்கின்ற தோட்டப் புறத்துக்கு மிக அருகிலுள்ள வட்டவளை நகரம். குறிப்பாக அட்டன்-கினிகத்தேனை நகரங்களுக்கு இடையில் அமைந்திருக்கின்றது. சிறிய நகரமென்றாலும் சுற்றியுள்ள சுமார் பதின்மூன்று தோட்டப்புறங்களுக்கு அதுதான் பிரதான நகரம்.

அந்த நகரத்திலுள்ள பிரபல்யமான கடையொன்றின் உரிமையாளர் தோட்ட மக்களுக்கு பொருள்களை கேள்வியின்றி கடனுக்கு வழங்குவதால் பலர் அந்தக் கடையிலே பொருள்களை கொள்முதல் செய்வர். கடையில் தினமும் நல்ல வியாபாரம்.

கடன் பெற்று அதை சில மாதங்களாக திருப்பிக் கொடுக்காமல் இருப்பவர்களின் வீடுகளுக்கு நேரடியாகச் சென்று மிகவும் இழிவான வார்த்தைப் பிரயோகங்களில் அவர்களை ஏசி கடன் வசூலிப்பதும், மிரட்டித் தொடர்ந்தும் அவரிடமேவியாபாரம்செய்யவைப்பதும், கடைக்கு வருபவர்களை மிகத் தரக்குறைவாக நடத்துவதும் கடை முதலாளியின் வழக்கமான செயற்பாடென பலரால் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. உறுதியின்றிய எதையும் சொல்ல ஒருவருக்குமே உரிமையில்லை. என் பார்வைக்குப் படாததொன்றாக இருந்ததனால் நான் அதனைப் பொருட்படுத்தவில்லை.

நான் புரியும் பிறிதொரு தொழில் நிமித்தமாக அண்மையில் அந்தக் கடைக்குச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது. நான் கடையின் நுழைவாயிற் பகுதியை அடைந்தபோது எனக்கொரு தொலைபேசி அழைப்பு வந்தது. அப்போது நான் எதேச்சையாக அவசர நிலையில் கடை உரிமையாளரின் பெயரைச் சொல்லி, நான் தற்போது அந்தக் கடையில் இருப்பதாகக் கூறினேன். அங்கு எனது வேலை முடிந்ததும் தொழில் நிலையத்துக்குத் திரும்பினேன். பின் அங்கு எனது பணியை முடித்துக்கொண்டு மாலையில் வீடு செல்லும் வேளையில் எனது உயரதிகாரியின் பணிப்புரைக்கிணங்க அவரின் ரூ.16,000 பெறுமதியான காசோலையை எடுத்துக்கொண்டு அதை மாற்றுவதற்காக மீண்டும் அந்தக் கடைக்குச் சென்றேன். காசோலையை வாங்கிய அவர் ''முதலில் வந்தபோது, நீ எதற்கடா தொலைபேசியில் என் பெயரைச் சொன்னாய்'' என்று ஆரம்பித்து மிகவும் இழிவான வார்த்தைப் பிரயோகங்களினால் கீழ்த்தரமாக என்னை ஏசி, தாக்கவும் முற்பட்டார். (அவர் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்.) அதைக் கேட்டால் செவிகள் செவிடாகும். அவரைப் பார்த்தால் கண்கள் குருடாகும். ஒரு வார்த்தை எதிர்த்துப் பேசியிருந்தால் நிச்சயமாக அடித்தேயிருப்பார். அவரின் செல்வாக்கைப் பயன்படுத்தி அந்தச் சூழ்நிலையையே தன் சூழ்ச்சியால் மாற்றியமைத்திருப்பார். அவரின் கொடூர வார்த்தைகளைக் கேட்டு என் உடலின் ஒவ்வொரு கலங்களும் முறுக்கேறின. என் உடலில் ஓடுகின்ற தாய்ப்பாலின் இரத்தம் நீராவியாகக் கொதித்தது. அந்த சூடான இரத்தத்துக்குச் சொந்தக்காரியான என் அன்னையை அவமானப்படுத்தியவனை நிச்சயமாக அந்த வேளை அடித்தேயிருக்க வேண்டும். (நானும் ஓர் இளைஞன்தானே) ஆனால் எனக்குள் ஒளிந்து கிடந்த அந்த ஊடகவியலாளன் அதைத் தடுத்தான்.

பணத்தைப் பெற்றுக்கொண்டு பேசாமல் திரும்பினேன். திரும்பி வந்து தீர்க்கமானதொரு முடிவை எடுத்தேன். அது அந்தப்பகுதி மக்களுக்கு நல்லதொரு விளைவினை ஏற்படுத்தும் வகையிலாக அவரை எதிர்ப்பது என்கிற முடிவு.

துணிந்தவனுக்கு தூக்கு மேடையும் பஞ்சுமெத்தை. உலக நீதி எல்லோருக்கும் ஒன்றுதானே என்று மனதுக்குள் எண்ணிக்கொண்டு நேராக வட்டவளை பொலிஸ் நிலையத்துக்குச் சென்று அவருக்கெதிரான முறைப்பாட்டைப் பதிவு செய்ய முனைந்தேன். அங்கும் சில சலசலப்புக்குப் பின்பே முறைப்பாடு ஏற்கப்பட்டது. அப்பொழுதே எனக்குத் தெரிந்தது அவரின் செல்வாக்கு எத்தகையதென்று. அதனை முடித்துக்கொண்டு வரும் வேளையில் எனக்குத் தெரிந்த சகல ஊடகத்துறை நண்பர்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் என பலருக்கும் இந்த விடயத்தை தொலைபேசியூடாக அறிவித்தவாறே சென்றேன்.

அவர்கள் சில நிமிடங்களில் பொலிஸாரைக் குடைந்திருக்க வேண்டும். பின் அவர்களூடாக இந்த விடயம் குறித்த அந்த வர்த்தகரைச் சென்றடைந்திருக்கலாம். அதுமட்டுமன்றி அந்த வர்த்தகர் என் தந்தைக்கு நன்கு பழக்கப்பட்டவர். என்னை யாரென தெரியாமலேயே அவர் என்னை ஏசியுள்ளார்.

மறுநாள் விடியற்காலை வேளையிலேயே என் வீட்டுக்குத் என்னைத் தேடி வந்து என் காலில் விழாத குறையாக என்னிடம் மன்னிப்புக் கேட்டுவிட்டுத் திரும்பினார் அந்த வர்த்தகர். அதுமட்டுமன்றி அன்றைய தினமே குறித்த காவல் நிலையத்துக்கு நேரடியாக வந்து என்னிடம் மன்னிப்புக் கேட்டார். இதை வாசிப்பவர்கள் கொஞ்சம் பொதுநிலைக் கண்ணோட்டத்தோடு இந்த விடயத்தைச் சிந்தித்துப் பாருங்கள். நான் ஓர் ஊடகவியலாளராக அங்கு செல்லவில்லை. அது அவருக்குத் தெரியவும் தெரியாது. அது மட்டுமல்ல. என் தந்தை அவருக்குப் பழக்கப்பட்டவர். அதுவும் அவருக்குத் தெரியாது. இந்த இரண்டையும் தெரிந்து கொண்ட பிறகே அவர் தனது செல்வாக்கையும் மறந்து தனது குற்றத்தை ஒப்புக்கொண்டு என்னிடம் மன்னிப்புக் கேட்டார்.

இந்த இரு தகுதிகளும் என்னிடம் இல்லாமலிருந்திருந்தால் அல்லது எனது இடத்தில் வேறு ஒரு தோட்டத் தொழிலாளி இருந்திருந்தால் நிலைமை என்னவாகியிருக்கும்? இதுதான் ஓர் ஊடகவியலாளரான எனது கோணப் பார்வை.

உலகில் எந்தவொரு பெரிய அதிர்வுமே ஒரு மிகச்சிறிய புள்ளியிலிருந்தே தொடங்குகின்றன. (நான் சட்டத்துக்குப் புறம்பான வாதத்தை முன்வைக்க முனையவில்லை) அதை தொடக்கி வைக்க ஒருவர் சரியாக இருந்தால் எல்லாமே நல்லவைகளுக்குச் சாதகமாக நடந்தேறும். பேரினவாத போக்கின் மற்றுமொரு வடிவமே இதுவாகும். ஓர் இனத்தின் மீது பிறிதொரு இனத்துக்கு இருக்கின்ற வன்மம் அந்த இனத்தைச் சேர்ந்த மற்றொரு சமூகத்தின் மீது வேறொரு வகையில் தாக்குகின்றது. இதுதான் உண்மை.



18 May 2013

"

சட்டத்துக்கு முன் எல்லோரும் சரிசமமே. உலகில் எந்தவொரு பெரிய அதிர்வுமே ஒரு மிகச்சிறிய புள்ளியிலிருந்தே தொடங்குகின்றன. (நான் சட்டத்துக்குப் புறம்பான வாதத்தை முன்வைக்க முனையவில்லை) அதை தொடக்கி வைக்க ஒருவர் சரியாக இருந்தால் எல்லாமே நல்லவைகளுக்குச் சாதகமாக நடந்தேறும். பேரினவாத போக்கின் மற்றுமொரு வடிவமே இதுவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...

02.06.2013 முதல் 08.06.2013 வரை

தருபவர் - வித்தியா

**மேடம்**- பேசுவதில் இனிமையும், பிறர் நலனில் உள்ளார்ந்த அன்பும் நிறைந்திருக்கும். உங்களை அவமானப்படுத்துகிற எண்ணத்துடன் உள்ளவர், மனம் மாறி விலகுவர். இல்லறத்துணையும், அவர் வழி சார்ந்த உறவினர்களும் கூடுதல் அன்பு, பாசத்துடன் உதவுவர். தொழிலில் முன்னேற்றம் பெற, அதிகம் பணிபுரிவது அவசியமாகும். குடும்பப் பெண்கள், கணவரின் பணவரவுக்கேற்ப செலவுகளில் சிக்கனம் மேற்கொள்வர். மாணவர்கள், அறிவு வளர்க்க பயன்படுகிற புத்தகங்களை வாங்குவர்.

**இடபம்**- உங்களின் நற்குணத்தை உணர்ந்து, அயல் வீட்டார் கூடுதல் அன்பு பாராட்டுவர். தன்னைச் சார்ந்தவர்களின் வாழ்வு வளம்பெற, தேவையான ஆலோசனை சொல்வீர்கள். எதிரியும் வியந்து பார்க்கிற, சுபீட்ச வாழ்வு பெறுவீர்கள். இல்லறத் துணையின் கூடுதல் அன்பு, பாசம் சந்தோஷம் தரும். தொழில், வியாபாரத்தில், உற்பத்தி, விற்பனை அதிகரித்து, ஆதாய பணவரவு கிடைக்கும். பணியாளர் சலுகைப்பயன் பெற, யோகம் உண்டு.

**மிதுனம்**- நீதி, நேர்மை குணங்களை கடைப்பிடிப்பதால், வாழ்க்கை நடைமுறை திருப்திகரமாகும். அடுத்தவர் விடயத்தில் கருத்துச் சொல்ல வேண்டாம். எதிர் மனப்பாங்கு உள்ளவரிடம் விலகுவது நல்லது. இல்லறத் துணை, உங்களின் எண்ணங்களை மதித்து உதவிகரமாக நடந்து கொள்வர். அதிகாரிகள், நிர்வாகத்தின் எதிர்பார்ப்பை உணர்ந்து செயற்படுவது அவசியம். மாணவர்கள், விலைமதிப்புள்ள பொருள்களை கவனமுடன் பயன்படுத்த வேண்டும்.

**கடகம்**- நீண்டநாள் திட்டமிட்ட செயல் ஒன்றை, இனிய சூழ்நிலை அமைந்து, சிறப்பாக நிறைவேற்றுவீர்கள். பணவரவும், புகழும் அதிகரிக்கும். இல்லறத் துணை கருத்து ஒற்றுமையுடன் நடந்து கொள்வார். தொழிலில் உற்பத்தி, விற்பனை செழித்து, லாப விகிதம் அதிகரிக்கும். அபிவிருத்திப் பணிபுரிவீர்கள். உத்தியோகத்தர், பணியாளர்களை ஊக்கப்படுத்தி, உற்பத்தியை அதிகரிப்பர்.

**சிங்கம்**-வாழ்வில் சகல வளமும் பெறுவீர்கள். மனதில் தைரியமும், செயல்களில் திறமையும் வளரும். எதிர்மனப்பாங்கு உள்ளவர், உங்களிடம் மறைமுகமாக உதவிபெற முயற்சிப்பார். இல்லறத் துணையின் செயல்களில் குறை காண்பதை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில், புதிய யுக்தி பயன்படுத்தி உற்பத்தி, விற்பனையில் முன்னேற்றம் காண்பீர்கள். பணியாளர்களுக்கு கூடுதல் வேலைவாய்ப்பு சலுகைப்பயன் கிடைக்கும். மாணவர்கள், சாகச விளையாட்டுகளில் ஈடுபடக்கூடாது.

**கன்னி**-இடம், சூழ்நிலை உணர்ந்து பேசுவதால், தேவையற்ற சிரமம் வராமல் தவிர்க்கலாம். எதிரியால் வரும், கெடுசெயலை சமயோசிதமாக முறியடிப்பீர்கள். இல்லறத் துணையின் நல் அன்பு, பாசம் மனதிற்கு ஊக்கம் தரும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனத்துடன், அபிவிருத்திப் பணி மேற்கொள்வீர்கள். பணியாளர்களுக்கு சலுகைப்பயன் கிடைக்கும். மாணவர்கள் எதிர்கால படிப்பில் சிறந்து வர உரிய திட்டமிடுவர்.

**துலாம்**- நியாய, தர்ம குணங்களை அதிகம் பின்பற்றுவீர்கள். நல்லவர்களின் அறிமுகமும், உதவியும் கிடைக்கும். புத்திரரின் சேர்க்கை சகவாசம் அறிந்து, நல்வழி நடத்துவீர்கள். இல்லறத்துணை கருத்து ஒற்றுமையுடன் நடந்து, குடும்பத்திற்கு பெருமை சேர்த்திடுவார். தொழில், வியாபார நடைமுறை சீர் பெற, அதிக கவனத்துடன் செயல்புரிவது நல்லது. மாணவர்கள் கல்வியில் அக்கறை செலுத்துங்கள்.

**விருச்சிகம்**-ஒவ்வொரு செயலிலும், முன்யோசனையைப் பின்பற்றுவது நன்மை பெற உதவும். நெருங்கிய உறவினர், நண்பர்களின் நிர்ப்பந்தத்தின் காரணமாக, பணசெதிக்கு மீறிய செலவு மேற்கொள்ள வேண்டாம். இல்லறத்துணையிடம், தேவையற்ற விவாதம் பேச வேண்டாம். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டதிட்டம் மதித்து நடப்பது நல்லது. மாணவர்கள், தகுந்த வழிகாட்டுதல் கிடைத்து, எதிர்கால கல்விக்கு திட்டமிடுவர்.

**தனுசு** -உங்கள் மனதில் புதிய உத்வேகமும், செயல்களில் திறமையும் பரிமளிக்கும். விட்டுக் கொடுக்கும் மனப்பாங்குடன் பேசி, எவரிடமும் நற்பெயர் பெறுவீர்கள். வழக்கு விவகாரத்தில் வெற்றி கிடைக்கும். இல்லறத்துணையின் கருத்துக்கு முக்கியத்துவம் தருவதால் மட்டுமே, குடும்ப ஒற்றுமை சீராக இருக்கும். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். உத்தியோகத்தர் சிறப்பாகப் பணிபுரிந்து, பாராட்டு பெறுவர். மாணவர்களுக்கு, ஞாபகத்திறன் வளர்ந்து நற்பெயரை உருவாக்கும்.

**மகரம்**-வாழ்வியல் நடைமுறையில் எதிர் வருகிற, சிரமங்களைச் சரி செய்ய, தகுந்த திட்டமிடுவீர்கள். ஆடம்பர செயல்களில் இருந்த ஆர்வம் குறையும். எதிரியால் இருந்த தொல்லை குறையும். இல்லறத் துணையுடன், உறவினர் இல்லம் சென்று வருவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். பணியாளர்களுக்கு பதவி உயர்வு, சலுகைப்பயன்பெற அனுகூலம் உண்டு. மாணவர்கள், வாகன பயணத்தில் மித வேகத்தைப் பின்பற்றுவது நல்லது.

**கும்பம்** - பேசுவதில் உண்மையும், கவித்துவம் நிறைந்த வார்த்தையும் கலந்திருக்கும். உயர் குணம் உள்ளவர்களின் அறிமுகம், நட்பு கிடைக்கும். எதிரி மற்றும் விஷப் பிராணியிடம் விலகுவதால், சிரமம் வராமல் தவிர்க்கலாம். இல்லறத் துணை, உங்களின் நல்ல குணத்தை, உறவினர்களிடம் சொல்லி மகிழ்வர். தொழில், வியாபாரத்தில் மாற்று உபாயம் பின்பற்றி, தகுந்த முன்னேற்றம் பெறுவீர்கள். மாணவர்கள், சீரான பணவசதி கிடைத்து, புதிய பயிற்சி மேற்கொள்வர்.

**மீனம்**- பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். பொருளாதார வசதியும், சமூகத்தில் நற்பெயரும் பெறுவீர்கள். குடும்பத்துடன் சுற்றுலா சென்று வர அனுகூலம் உண்டு. தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூல சூழ்நிலையை கண்ணும், கருத்துமாக பாதுகாத்துக் கொள்வீர்கள். [illegible] உதவி மற்றும் பொறுப்பான பதவி பெற யோகம் உண்டு. மாணவர்கள் புத்திசாலித்தனமாக நடந்து பாராட்டு பெற்றிடுவர்.



# நிரபராதியின் குரல்

குற்றம் சுமத்தப்பட்ட
நிரபராதியின் குரல்
மௌனத்தின் பாதையில்
ஊர்வலமானது

நீதி தேவதையின்
எதிரில்
செய்யாத குற்றங்களால்
கற்பழிக்கப்பட்டவன்

அவனுக்கு எதிரான வாதங்கள்
பணத்தின் அளவு பார்த்தே
உரக்கப் பாடப்பட்டது

தண்டனைக்குப் பயப்படாத
அவன் இதயம்
போலிக் குற்றம் சுமத்தப்பட்ட
அன்றே இறந்து விட்டது.

சட்டப் பெண்ணின்
கள்ளக் காதலர்களாகிய
காவல்துறையினர்
நிஜக் குற்றவாளிகளின் முன்
மண்டியிடுகின்றனர்

நீதி தேவதையின்
கண்கள் கட்டப்பட்ட துணியால்
மனிதத்தின் குரல்வளை
இறுக்கப்படுகிறது.

அவள் தராசுகளில்
ஒரு பக்கம் குற்றங்களும்
மறு பக்கம் குற்றவாளிகளும்
எடை போட்டு விற்கப்படுகிறது

அதிகாரத்தின் நகங்களில்
நிரபராதிக் கைதிகளின்
சதைகள்

காவல்துறையின்
கைத்தடியில்
அவர்களின் குருதி வர்ணம்

ஏன் அதிகாரிகள் கூட
அவர்கள் காயங்களில் தான்
முகம் பார்க்கிறார்கள்.

நாளை இந்த சமுதாயம்
குற்றவாளிகள் ஈன்ற
குழந்தையாய் இருக்கும்

புதை குழிக்குள் இருந்து
மூச்சுமுட்டி
காப்பாற்றச் சொல்லி
கதறும் நம்மோடிருந்த மனிதம்

நீங்கள் எல்லோரும்
குற்றங்களுக்கு வால் பிடிக்கும்
கூட்டமாக சட்ட அதிகாரிகளால்
மேய்க்கப்படுவீர்கள்.



எம்.நேதா, நெடுந்தீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இந்தத் தொடரில் ஆலயங்களில் ஸ்பீக்கர் சேவையை வழங்கும் ''கோமதி சவுண்ஸ் சேர்விஸ்'' குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் ''கலைத்தென்றல்'' விருது பெற்றதாக எழுதியிருந்தேன்.

அந்த விருதை பெற்றவர் சந்திரகுமார் என்றே எழுதி இருந்தேன். தவறுக்காக வாசகர்கள் மன்னிக்க வேண்டும். விருதைப் பெற்றவர் சந்திரகுமார் அல்ல. சந்திரகுமார் அவர்களின் சகோதரர் ஆகிய இரத்தினகுமாரே விருதைப் பெற்றவர் ஆவார்.

கலைத் தென்றல் விருது பச்சிலைப்பள்ளி கலாசார பேரவையில் வருடாவருடம் கலைஞர்களை கௌரவித்து வழங்கப்படும் விருதாகும்.

ஆலயத் திருவிழாவில் எம்மைக் கவர்ந்த இன்னொரு விடயமாக தவில் கச்சேரி இருந்தது.

அறத்தியம்மன் கோயிலில் கடைசி பங்குனித் திங்கள் இரவுத் திருவிழாவாக நடைபெறும். சகல நிகழ்வுகளும் சின்டிகேட் அமைப்பாகவே ஒழுங்கு பண்ணப்படும். எங்கள் குடும்பத்தில் வில்லுப் பாட்டு பிடிப்போம். அதிகமாக வில்வரைப் புலவர் சின்னமணி அவர்களே அழைக்கப்படுவார்.

தவில் கச்சேரி தொடங்கினால் ஆடாமல் அசையாமல் இருந்து பார்ப்போம். 1980 களின் தொடக்கத்திலும் முடிவிலும் பிரபல்யமான நாதஸ்வர வித்துவானாக இருந்தவர் திருவாளர் பஞ்சாபிகேசன் அவர்கள்.

குடுமி வைத்துக் கொண்ட ஒரே ஒரு கலைஞர். சக்சேரியின் போது குடுமி அவிண்டால் மேடையில் இருந்தே மிக இலாவகமாக பெண்கள் போல கையை வளைத்து அழகாக குடுமியை கட்டிக் கொள்வார்.

அற்புதமாக சுரங்கள் வாசிப்பதில் தேர்ந்தவர். ஆலாபனை செய்து பாடல்களை வாசிக்கும்போது நாங்கள் மெய் மறந்திருப்போம்.

''குன்றத்திலே குமரனுக்குக் கொண்டாட்டம்'' என்ற பாடலை அவர் வாசிப்பது நிஜப் பாடலை விட இனிமையாக இருக்கும். உயர்ந்த, மெலிதான தோற்றம் கொண்ட மகா கலைஞன்.

ஒவ்வொரு திருவிழாவும் முடிய நாம் மேள, நாதஸ்வர கலைஞர்களாக மாறிவிடுவோம்.

நாதஸ்வர, தவில் கலைஞர்கள் தலை முடிக்கு முக்கிய இடம் கொடுப்பார்கள். நடு உச்சி பிரித்து நல்லெண்ணெய் நிறைய வைத்து இழுத்திருப்பார்கள்.

நாங்களும் நல்லெண்ணெய்யோ, தேங்காயெண்ணெயோ நன்றாக அப்பி வைத்து நடு உச்சி பிரித்து இழுத்துக் கொள்வோம்.

நான் ''பஞ்சாபிகேசன்'' என்று கற்பனை பண்ணி தலைமுடியை சிலநாள் வளர்த்துக் கொண்டு குடுமி விட ஆயத்தம் செய்தேன்.

''தலைமுடி வளர்த்தால் பஞ்சாபிகேசன் ஆகி விடலாமா?'' அம்மா திட்டுவாள்.

''உது என்னடா தலை. வேடரை போல கிடக்கு. போய் கெதியா வெட்டு''

''நான் பஞ்சாமி மாதிரி குடுமி கட்டப் போறன்''

''குடுமியோ? கொப்பரிட்டை வாங்கப் போறாய். போய் வெட்டு''

சரி! குடும்பி ஆசைபோய் விடும். அடுத்தாண்டு இது தொடரும்.

நானும் சின்னணையும் நாதஸ்வர வித்துவான்கள். பெரியண்ணனும் பவளம் மாமியின் ரஞ்சனோ அல்லது பவளப் பெரியம்மாவின் றூபனோ தவில்காரர் ஆகிவிடுவார்கள்.

பழைய மா ரின்கள் மேளம் ஆகிவிடும். வாய்களே நாதஸ்வரம். சகிக்க முடியாத கச்சேரி ஒன்றை செய்து முடித்து விடுவோம்.

# 'எங்களூர் பொங்கல்கள்'



## மாறிப்போகும் வழிபாட்டு மரபுகள்

எனக்கு நல்ல ஞாபகம். 1985 அல்லது 1986 ஆக இருக்கலாம். அரசால் ஊரடங்குச் சட்டம் போடப்பட்டது. அன்று பங்குனித் திங்கள் கடைசித் திங்கள்.

அறத்தியம்மன் கோயிலுக்கு பிடித்த நிகழ்ச்சிகள் எதுவும் வரவில்லை. வந்த ஒரே ஒரு நிகழ்ச்சி பஞ்சாபிகேசன் அவர்களது மேளக் கச்சேரி மட்டும்தான்.

கிட்டத்தட்ட 5 மணிநேரம் கச்சேரி செய்து முடித்தார். தன் வாழ்க்கையில் இவ்வளவு நேரம் கச்சேரி செய்யவில்லை என்று பின்னர் சொன்னதாக ஞாபகம். அந்த வருடத்துக்குப் பின் அறத்தியம்மனின் பங்குனித் திங்கள் இரவுத் திருவிழா நடைபெறவில்லை.

பஞ்சாபிகேசனின் சகோதரர் ஒருவர் கல்யாண சுந்தரம் அல்லது நடன சுந்தரம் ஆக இருக்கலாம். சிறந்த தவில்காரர். 1990க்கு முதல் தவில் வாசித்துக் கொண்டிருந்தவர் அதன் பின் அவரை நான் மேடைகளில் கண்டதில்லை.

மேளக் கச்சேரியை ஆசை அடங்கப் பார்த்தது நாகர்கோயில் நாகதம்பிரான், கப்பல் திருவிழாவிலும், கடல் திருவிழாவிலும்தான்.

தவில் வித்துவான் குமரகுரு என்.கே. பத்மநாதன் போன்றவர்களையும் நாச்சிமார் கோயிலடியைச் சேர்ந்த கணேசன் என்ற தவில் வித்துவானையும் பார்த்திருக்கின்றேன். அவருக்கு ஒரு கண் மாறு கண். அதனால் ''வாக்கன் கணேசன்'' என அழைப்பார்கள். (பட்டம் சொல்வது தப்பு) ரி.எஸ்.பாலையா போல உடலசைவை ஏற்படுத்தி தவில் வாசிப்பார்.

மேலும் பிச்சையப்பா, கைதடி பழனி, என்.ஆர்.சின்னராசா அவர்கள் போன்ற பல வித்துவான்கள் கப்பல் திருவிழாவுக்கு வருகை தருவார்கள்.

ஆலயங்கள் பக்தியை மட்டுமல்ல கலையையும் வளர்த்தன.

கனகப்பா சொல்வார் ''கடனையும் வளர்க்கின்றன'' என்று.

எங்களூரில் ஒருவர் திருவிழா தனியவே செய்வார். பத்துக் கூட்டு மேளம் பிடிப்பார். எல்லோருக்கும் பத்து ரூபா அச்சவாரம் கொடுப்பார்.

திருவிழா அமோகமாக நடக்கும். சாமி வடக்கு வீதிக்கு வர உபயகாரர் கார் றெயில்வே தண்டவாளத்தைக் கடந்து போய்விடும்.

விடிந்ததும் மேளகாரர்களும், கலைஞர்களும் உபயகாரரைத் தேடிக் களைப்பார்கள்.

''முதலாளி எங்கே''

''வருவார் வருவார்''

எங்க வாறது அவர் போய்ப் படுத்திடுவார்.

''இதுதாண்டா ஓசில பிள்ளை பெறுறது'' கலைஞர்கள் அலுத்துக் கொள்வார்கள்.

அடுத்த திருவிழா வரைக்கும் பஸ் ஏறி இறங்குவார்கள் காசுக்காக.

நல்ல கோழி இறைச்சியும் சாப்பாடும் கிடைக்கும். காசு கேட்க மனம் வராது திரும்பிப் போக வேண்டியதுதான்.

ஏமாற்றியவர்கள் நிலைத்து வாழ்ந்ததாக வரலாறு இல்லையல்லவா?

# தூக்கம் தொலைந்தது...




ஜம்புலிங்கத்துக்கு ஒரு கெட்ட பழக்கம். காலையில் நீண்ட நேரத்துக்கு பின்னரே தூக்கம் விட்டு எழுவார். இதனால் தினமும் அலுவலகத்துக்குப் போக தாமதமாகி விடும். நீண்ட நேரம் மேலதிகாரியின் பேச்சை வாங்கிக் கட்டிக் கொள்வது என்பது அவரது முதலாவது அலுவலகப் பணியாக மாறிப் போனது. எத்தனை நாளைக்குத்தான் ஜம்புலிங்கம் பேச்சை வாங்கிக் கொண்டிருப்பது? என்ன செய்யலாம் என்று நீண்டநாள் யோசனைக்குப் பின்னர் வைத்தியர் ஒருவரிடம் ஜம்புலிங்கம் போனார்.

''டொக்டர்! எனக்கு அதிகாலையில் தூக்கம் விட்டு எழுவது கஷ்டமாக உள்ளது. எனவே வேளைக்கு நித்திரையை விட்டு எழுவதற்கு ஏதாவது மருந்து தர முடியுமா?'' என்று கேட்டார். மருத்துவர் இவரை நன்கு பரிசோதித்து விட்டு நாலைந்து மாத்திரைகளை ஜம்புலிங்கத்திடம் கொடுத்தார்.

அன்றைக்கு இரவே மாத்திரைகளை விழுங்கி விட்டு துயிலப் போனார் ஜம்புலிங்கம். என்ன ஆச்சரியம் அதிகாலை நான்கு மணிக்கே ஜம்புலிங்கத்துக்கு விழிப்பு வந்து விட்டது. பரபரவென காலைக் கடன்களை முடித்துக் கொண்டு முதல் ஆளாக அலுவலகத்துக்குப் போனார். அவர் போன பின்னர்தான் மேலதிகாரியே அங்கு வந்தார். அவரிடம் சென்ற ஜம்புலிங்கம் ''சேர்! பார்த்தீர்களா இன்று நான் முதல் ஆளாக வேலைக்கு வந்து விட்டேன்.'' என்று பெருமை பொங்கச் சொன்னார். அதைக் கேட்ட மேலதிகாரி ''அதெல்லாம் சரிதான். ஆனால் முதல் வேலையாக கடந்த மூன்று நாள்களும் நீ ஏன் வேலைக்கு வரவில்லை என்று சொல்'' என்று கேட்டார். [illegible] யைப் போட்டு [illegible] களாக உறங்கிய விடயம் ஜம்புலிங்கத்துக்கு தெரிய வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பில்கேட்ஸ்

## உலகப் பணக்காரன் உருவான கதை



■அழகிய பாண்டியன்

01

### அறிவியல் கண்காட்சி

பில்கேட்ஸ் ஓர் அமெரிக்கக் குடிமகன். ஆனால், அவர் ஒரு கணினி வல்லுநர் ஆவதற்கு அமெரிக்காவின் எதிரி நாடான ரஷ்யாதான் காரணம் என்றால் யாராவது நம்புவார்களா? ஆனால், அதுதான் உண்மை!

1960 களில் அமெரிக்கா, ரஷ்யா என்ற இரு வல்லரசுகளின் பனிப்போரால் உலக நாடுகள் அனைத்தும் தங்கள் உறக்கத்தைத் தொலைத்து நடுங்கிய நேரம் அது!

இந்த இரு நாடுகளுக்கும் இடையே நிலவிய "நீயா? நானா?" போட்டியில் இரண்டு நாடுகளும் இமயம்போல் எழுந்து நின்றன. குண்டூசி தொடங்கி அணுகுண்டு வரையில் தங்கள் பலத்தை நிரூபித்து "நானே பெரியவன்" என்று இரண்டு நாடுகளுமே பிரகடனம் செய்து கொண்டன!

சரிக்குச் சமமாகக் காட்சியளிக்கும் ரஷ்யாவை வெல்ல முடியாமல் தவித்த அமெரிக்கா, தொலை நோக்குப் பார்வையோடு சிந்திக்க ஆரம்பித்தது. "விஞ்ஞான ரீதியான மாபெரும் வளர்ச்சியை எட்டினால் மட்டுமே ரஷ்யாவை வெல்ல முடியும்" என்று அமெரிக்கா நினைத்தது. அது ஒரே நாளில் நடக்கக் கூடிய காரியமல்ல.

இளைய தலைமுறையிடம் அறிவியல் ஆர்வத்தை இப்பொழுதே தூண்டிவிட்டு வளர்த்தால், பின் நாள்களில் அவர்கள் விஞ்ஞானிகளாக மாறி, புதிய கண்டு பிடிப்புகளுக்கு வழி வகுத்து, ரஷ்யாவை வெல்வதற்கு காரணமாக இருப்பார்கள் என்று அமெரிக்கா கணக்குப் போட்டது. இதன் காரணமாக நாடு முழுவதும் அறிவியல் கண்காட்சிகளைத் திறந்து, அந்தக் கண்காட்சிகளில் "மாணவர்கள் கலந்து கொள்ள வேண்டும்" என்று அமெரிக்கா உத்தரவிட்டது.

வருங்கல விஞ்ஞான கண்டு பிடிப்புகளுக்கான சாத்தியக்கூறுகள் பற்றி, அந்தக் கண்காட்சிகள், மாணவர்களுக்குத் தெள்ளத் தெளிவாக எடுத்துக் கூறின.

1962 இல் சியாட்டல் நகரில் திறக்கப்பட்ட ஓர் அறிவியல் கண்காட்சியைக் காண்பதற்காக மற்ற மாணவர்களோடு, ஏழு வயதே நிரம்பிய ஒரு நோஞ்சான் மாணவனும் சென்றான்.

படிப்பில் ஆர்வம் காட்டாத அந்த மாணவன், அறிவியல் கண்காட்சியை ஆர்வமுடன் பார்த்தான். ஆசையுடன் பார்த்தான். ஒவ்வொன்றும் செயற்படும் விதத்தை விசாரித்து அறிந்தான். அவனுக்குள் உறங்கிக் கிடந்த ஒரு சிறு பொறியை அந்தக் கண்காட்சி பேரளவில் பற்ற வைத்து விட்டது. ஆம்! அமெரிக்காவின் கணக்குத் தப்பவில்லை. ஏதோ ஒரு துறையில் சாதிப்பதற்கு அந்த மாணவனின் ஆர்வம் துடித்தது.

கண்காட்சி நேரம் முடிந்தபோது அவன் மட்டுமே வீடு திரும்பினான்; அவனது நினைவுகளோ கண்காட்சியிலேயே கூடாரம் அமைத்துத் தங்கி விட்டன.

நல்ல வேளையாக அந்தக் கண்காட்சி சொந்த ஊரிலேயே நடந்ததால் விடிந்ததும் முதல் வேலையாகக் கண்காட்சிக்குச் சென்று மீண்டும் பார்வையிட்டான். மீண்டும் பரவசப்பட்டான். சந்தேகம் வந்த இடத்தில் கேள்வி கேட்டான்; கிடைத்த பதில்களில் திருப்தியுற்றான்.

வருங்காலத்தில் தானும், "இதைப் போல எதையாவது செய்ய முடியுமா?" என்று தனக்குள்ளே யோசிக்கத் தொடங்கினான். ஏழு வயதே நிரம்பிய சிறுவன் பில்கேட்ஸ்.

*(வளரும்)*




## அமைதியான சாவு

ஒரு நாள் தன் நண்பரொருவரை ஜம்புலிங்கம் சந்திக்க நேர்ந்தது. வந்த நண்பர் ஜம்புலிங்கத்தின் தாத்தா இறந்தது பற்றியும் துக்கம் விசாரித்தார். அப்போது ஜம்புலிங்கம் பெருமையாகத் தன் நண்பரிடம் "என் தாத்தா சாகும் போது அமைதியாக எந்தச் சத்தமும் போடாமல் பஸ்சில் தூக்கத்திலிருக்கும்போது இறந்து போனார்" என்றார். அதற்கு நண்பர் "அப்படியா ஜம்பு! அவருக்கு நல்ல சாவு தான்." என்று சொன்னார். அதற்கு ஜம்புலிங்கம் "அவருக்கு நல்ல சாவுதான். ஆனால் அவர் செலுத்திச் சென்ற பஸ்ஸில் இருந்த பயணிகள்தான் பெரிதாக அலறிக் கொண்டே செத்தார்கள்" என்றாரே பார்க்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவணியில் தாவணி



தையிட்டி அ.இராசதுரை

''எனக்கு, ஐந்து பெட்டையள், ஐந்து பெட்டையள் எண்டு ஊர் வழிய சொல்லித்திரிஞ்சவள் சிந்தாமணி.அந்தப் பழிக்கு தான் இண்டைக்கு தன்ர ஒரேயொரு பெட்டையை நெத்துக்கு விட்ட கணக்காய் அடி வீட்டுக்குள்ள வைச்சிருந்து வடிவு பார்த்துக் கொண்டிருக்கிறாள்'' என்று மனதுக்குள் பொருமியபடி சிந்தாமணி வீட்டின் ஓட்டை ஒறுவாய் தகரப் படலையைப் பிடுங்கி அடுக்குவது போல் திறந்தாள் அட்டமி அன்னம்மா. விடிய வெள்ளனக் காலத்தாலையே தங்கள் வீட்டு நடு முற்றத்தில் அட்டமி நவமி, தொட்டது நாசம் போல் வந்து நின்ற அன்னமாவைக் கண்டு சிந்தாமணியும் மகள் குண்டாதேவியும் அலமலத்தபடி இருந்தார்கள். குண்டாதேவியின் வாழ்க்கைக்கு முழு எதிர்மாறான காட்சி போல் முன் வளவில் நிற்கும் மாமரங்களும், எலுமிச்சைகளும், தோடைகளும் பூப்பூவாய் பூத்திருந்தன. இந்த மகாபுதினத்தைக் கண்கொண்டு பார்க்க முடியாமலே பார்த்துப் பரிதவித்துக் கொண்ட அன்னம்மா 'இதற்கும்' குண்டாதேவியின் 'வாழ்க்கைக்கும்' எந்தத் தொடர்புமில்லையென்ற முடிவுக்கு வந்தாள்.

''என்னடியாத்தை சிந்தா! இண்டைக்கு எங்கட தமிழுக்கு ஆவணி பிறந்திட்டுதெல்லோ ?? ஏன் வீட்டிலை திகதி கலண்டர் இல்லையோ??'' என்று கேட்டாள் அன்னம்மா. ஆவணி பிறந்த பின்னும் குண்டாதேவிக்கு இன்னும் திருமணம் சரிவரவில்லையா என்ற குத்தல் அந்தக் கேள்வியில் ஒளிந்திருந்தது. இத்தனைக்கும் சிந்தாமணி வீட்டின் முன்பக்கத்திலேயே ஒன்றுக்கு இரண்டு பெரிய கலண்டர்கள் தொங்கிக் கொண்டிருந்தன. அவற்றைக் கண்டும் காணாதது போலவே அன்னம்மா அந்தக் கேள்வியை கேட்டிருந்தாள். தன்னுடைய குத்தல் கதைக்கு ' தாயினதும் மகளினதும் , முகங்கள் எப்படி எப்படியெல்லாம் 'மூவ்' பண்ணி முடிக்கின்றன என்பதனையும் தனது மனதுக்குள்ளே 'நோட்'பண்ணவும் அன்னம்மா தவறவில்லை. ஆனால் அன்னம்மா சொன்ன எந்த அட்டமிக் கதையையும் காதில் விழுத்தியவர்கள் போல் அவர்கள் காட்டிக் கொள்ளவில்லை. குண்டாதேவி தன்னுடைய செல்போனைத் தூக்கி வைத்திருந்து அதனை நோண்டத் தொடங்கினாள்.ஆனால் சிந்தாமணிக்கு தான் நோண்டுவதற்கு எதுவுமே கிடைக்கவில்லை. என்ன செய்வதென்று யோசித்த சிந்தாமணி நோண்டுவதற்கு எதுவுமே கிடைக்காத அந்தரத்தில் 'தலையில் ஈர்க்கடி மோசம்' என்ற பாவனையில் தலையை கைகளினால் விறாண்டத் தொடங்கினாள். தன்னுடைய கதைகள் அவர்களது மனதை குத்தியிருந்த போதும் அவர்கள் வெளிக்காட்டாமல் மறைக்கிறார்கள் என்பது அன்னம்மாவுக்கு புரிந்திருந்தது. என்றாலும், ஏதாவது சொல்லாமல் அவளாலும் இருக்க முடியவில்லை. மகள்மாருக்கு திருமணம் செய்து வைக்கும் விடயத்தில் 'ஐந்து' பெட்டைக்காரியான தன்னிடம் ஒரு' பெட்டைக்காரியான சிந்தாமணி அடைந்த படுதோல்வி அன்னம்மாவுக்கு மகிழ்ச்சியையே அளித்தது. என்றைக்குமே சிந்தாமணி இந்த விடயத்தில் 'தோற்றுப் போனவளாகவே' இருக்க வேண்டும் என்ற அன்னம்மாவின் மனவேக்காடு ஹீரோஷிமாவில் அமெரிக்கா வீசிய சின்னப் பையன் அணுகுண்டை விட படு வீசுரமாகவே இருந்தது.

'' இந்த ஆவணிக்கு எங்கடை தம்பி ஜெயத்துக்கு கலியாணவீடு பெரிசாச் செய்யப்போறம்! அவனை வெளிநாட்டுக்கு கூப்பிடுறதுக்கு ஐந்து மச்சான்மாரும் எனக்குனக்கெண்டு அடிபடுகினம்.'' என்று பெரும் கல்யாண ஆரவார எழுப்பங்களோடும் , முழக்கங்களோடும் சிந்தாமணி வீட்டுக் குந்திலிருந்து அன்னம்மா தன் மகனின் கல்யாண வீட்டுக் கதைகளை அளக்கத் தொடங்கினாள். குண்டாதேவி எவ்வளவு நேரம்தான் மனதுக்குள் உறைந்திருக்கும் வேதனையை வெளிகாட்டாமல் இருக்க முடியும். அன்னம்மாவின் இந்தக் குத்தல் கதை அவளின் பொறுமைக்கு ஒரே நொடியில் முற்றுப்புள்ளி வைத்தது. இனியும் அந்த இடத்தில் ஒரு செக்கனுக்குமே இருக்க முடியாத நிலையில் அடி வீட்டுக்குள் ஓடி மறைந்தாள் குண்டாதேவி. மகளின் மனதை நோகச் செய்த அன்னம்மா மீது சிந்தாமணிக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. எங்கேயோ கண்ணுக்கெட்டாத தூரத்தில் இருந்த நாயைப் பார்த்து

''அடி அடிக்! நரகாலி அடிக் அடிக்! '' என்று விரட்டுவது போன்று மறைமுகமாக அன்னம்மாவை தாக்கினாள் சிந்தாமணி. நாயை விரட்டுவது போல் தன்னையும் ,தன் மகனின் திருமணத்தையும் தான் இந்தப் பொல்லாத சிந்தாமணியாள் விரட்டுகிறாள் என்ற வெப்பியாரம் அன்னம்மாவுக்கு எழுந்தது. பெரிய குண்டு வெடித்தது போன்று வெகுண்டெழுந்தாள். ஆத்திரத்தோடு அன்னம்மா வீட்டு தகரப் படலையை அடித்துச் சாத்தியபடி வெளியேறினாள். வாயிலிருந்து அறம் புறமான சொற்கள் வெளிவந்து கொண்டிருந்தன. தன்னை நாயென்று மறைமுகமாக சிந்தாமணி சொல்லிவிட்ட ஆத்திரம் அன்னம்மாவுக்கு இன்னும் அடங்கவில்லை. அந்த ஆத்திரத்தோடு போய்க் கொண்டிருந்தவளின் கண்ணில் சிந்தாமணியின் தங்கை பட்டுவிட்டாள். அவ்வளவு தான் .துர்க்காபுரம் கடையில் சாமான் வாங்கிக் கொண்டிருந்த அவளிடம் வரிந்து கட்டிக் கொண்டு சண்டைக்கு போய்விட்டாள். சிந்தாமணியின் தங்கைக்கு அன்னம்மா எதற்காக தன்மீது ஏறிப்பாய்கிறாள் என்று புரியவில்லை. நீண்ட நேர கூச்சலுக்குப் பின்னர் தான் அவளுக்கு அன்னம்மாவின் ஆத்திரத்துக்கான காரணம் புரிந்தது. எதுவுமே பேசாமல் அவள் நின்றிருந்தாள். சாட்டோடு சாட்டாக கடை முதலாளிக்கும் உறைக்கும்படியான சொற்களையும் அன்னம்மா வெளிவிடத் தவறவில்லை. ஏனெனில் கடை முதலாளியின் சின்னவீடு தான் சிந்தாமணி என்ற கதை ஊருக்குள் பரகசியம். அதனால் சிந்தாமணியின் கற்பை கேள்விக்குட்படுத்தும் ஒவ்வொரு சொல்லும் கடை முதலாளியையும் தாக்கும் என்பது அன்னம்மாவின் கணக்கு. அந்தக் கணக்கு தவறவில்லை. ஆனாலும் தனது கடையில் மாதாந்தம் பெருந்தொகைக்கு சாமான் வாங்கும் அன்னம்மாவை எப்படி திருப்பி பேசுவது என்று தெரியாமல் தத்தளித்துக் கொண்டிருந்தார். ஒரு கட்டத்தில் வாயை மூடிக் கொண்டிருக்க முடியாமல் பொறுமை இழந்து போன கடை முதலாளி,

'' எடியாத்தை அன்னம்மா! உவ்வளவு கதையும் என்னத்துக்கு ? நான் சொல்றனெண்டு கோவிக்காதை. உவள் குண்டாவுக்கு உன்ரை ஜெயத்தைக் கட்டி வைக்கலாம் தானே. அதில ஏதும் பிரச்சினையோ ?'' பகிடியும் வெற்றியுமாய் கடை முதலாளி சொன்ன கதையைக் கேட்டதும் அன்னம்மாவின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்துப் பறந்தது. மூன்றாம் உலகப் போர் மூண்டது போல கடை வாசல் அதிரத் தொடங்கியது.

''என்னவும் கடை முதலாளியார் ! இப்ப ஆவணி பிறந்திட்டு எண்டு எங்களுக்கும் தெரியும். உங்களின்ர ஐடியாவை நான் நூறு முறையுமே வரவேற்கிறேன். ஆனா ஒண்டு. தேப்பனில்லாத அந்தப் பிள்ளைக்கு இப்ப ஒரு தேப்பனுக்குத் தேப்பனா நீங்கள் தானே இருக்கிறியள். அந்த முறையிலை என்ர வடிவிலை குண்டாவுக்கு கட்டி வைக்கிறதா இருந்தா நீங்களும் சிந்தாமணியும் தான் தெத்தம் பண்ணிக் குடுக்க வேணும். அப்படி எண்டா எனக்கும் சம்மதம் தான்.'' அன்னம்மா போட்ட குண்டால்ஆடிப் போய்விட்டார் கடை முதலாளி. தனது சின்னவீடு சிந்தாமணி என்பதை எல்லோருக்கும் முன்னால் குத்திக்காட்டிய அன்னம்மாவை கொலை செய்ய வேண்டும் போன்ற வெறி எழுந்தாலும் கஷ்ரப்பட்டு அடக்கிக் கொண்டார்.கடை முதலாளியின் வாயை அடைத்த திருப்தியோடு வீட்டுக்கு வந்தாள் அன்னம்மா.

'இந்த ஆவணி மாதம் முடிவடைவதற்குள் எப்படியாவது மகனுக்கு ஊரே வியக்கும்படி திருமணத்தை செய்து முடித்துவிட வேண்டும்' என்று மனதுக்குள் கறுவிக் கொண்டாள். ஆனால் அந்த நினைப்பை குழப்புவது போன்று மகனிடமிருந்து வந்தது ரெலிபோன்கோல்.

''அம்மா! உனக்கேன் தேவையில்லாத சோலி .உன்னால குண்டா ஒரே அழுகை . இப்ப உனக்குச் சொல்றன் இந்த ஆவணி முடியமுதல் ஊருக்கு வந்து குண்டாவைத் தான் கட்டிக்கொண்டு போகப்போறன். நீ அதுக்கு மாட்டன் எண்டால் காலம் முழுக்க கட்டாமல் இருக்க வேண்டியது தான்.'' என்று ஒரு போடு போட்டான். அன்னம்மா ஆடிப் போனாள். வழமையாக மற்றவர்களை ஆடச் செய்து பழக்கப்பட்டுப் போன அன்னம்மா ஒரேயடியாக இடிந்து போனாள். மறுநாள் இரவு முழுதும் கண்ட கனவுகள் பலித்த மகிழ்வில் இருந்தாள் குண்டாதேவி. அவளின் தலையில் தேவர்களின் பூமாரி போன்று மாம்பூக்கள் ஆசி வழங்கி சொரியத் தொடங்கின.

*(யாவும் கற்பனை)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திமிங்கிலம் மீனினமா?



திமிங்கிலம் ஒரு முலையூட்டி ஆகும். திமிங்கிலம் 54000 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் நிலத்திலும், 50000 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் நீரிலும் வாழ்ந்த ஒரு விலங்காகும். திமிங்கிலத்தில் 75 வகைகள் உள்ளன. இதன் இதயத்தில் நான்கு அறைகள் உள்ளன. திமிங்கிலத்தின் நாக்கில் 50 மனிதர்கள் இருக்கலாம்.

இவ் விலங்கு 2 மணி நேரம் கடலுக்கடியில் இருக்கும். திமிங்கிலம் கடலுக்கடியில் 90ஒட்சிசனைப் பெற்றுக் கொள்கிறது. திமிங்கிலத்தின் குட்டி பிறப்பின் போது 25 அடி நீளத்தை கொண்டிருப்பதுடன் வளர்ச்சியடைந்த யானையொன்றின் நிறையுடன் இருக்கும். இக் குட்டி தனது தாயிடமிருந்து 200 லீற்றர் பாலை அருந்தும். வளர்ந்த திமிங்கிலம் ஒன்றின் நீளம் 100 அடி, எடை 150 தொன் ஆகும். திமிங்கிலம் தோலின் உட்புறத்திலுள்ள கொழுப்பின் மூலம் தனது உடல் வெப்பநிலையை சீர்செய்கிறது. இந்த விலங்குக்குச் செதில் இல்லை. உரோமம் உண்டு. இது 70 வயது வரைக்கும் வாழும் கடல் வாழ் விலங்காகும். ஒலி மூலம் தமது இனங்களுக்கிடையிலான தொடர்பு கொள்ளும் முறையைக் கொண்டுள்ளது. தற்போது திமிங்கிலம் மீனினமா? என்ற வினாவுக்கு விடை கிடைத்துவிட்டதா? விடை தெரிந்தால் மகிழ்ச்சி. இல்லாவிடில் ஆராய்ந்து பார்ப்போம்.

நே.ச.வித்யாசாகர், கிளிநொச்சி

## எ வரிசைப் பழமொழிகள்

1. எண்ணிச் செய்கிறவன் செட்டி எண்ணாமற் செய்கிறவன் மட்டி.
2. எய்தவனிருக்க அம்பை நோவானேன்?
3. எரிகிற கொள்ளியில் எந்தக் கொள்ளி நல்ல கொள்ளி
4. எல்லாமிருக்கிறது பெட்டியிலே; இலைக்கறி கடையச் சட்டியில்லை.
5. எறும்பூரக் கற்குழியும்
6. எரிகிற வீட்டிலே பிடுங்கினது ஆதாயம்
7. எருதின் நோய் காக்கைக்குத் தெரியுமா?
8. எளியாரை வலியார் கேட்டால் வலியாரை தெய்வம் கேட்கும்
9. எறும்புக்குக் கொட்டாங்கச்சித் தண்ணீர் சமுத்திரம்
10. எட்டி பழுத்தென்ன? ஈயாதார் வாழ்ந்தென்ன?

க. ஆகீசன், தரம் 5டி,
யாழ்ப்பாணக் கல்லூரி.

## விடை தெரியுமா? 213

### உங்களுக்கும் பரிசுகள்

1. கறுப்பு விதவை என்றழைக்கப்படும் உயிரினம் எது?
2. அமைதியின் சின்னமாகக் கருதப்படும் இலை எந்த மரத்தினுடையது?
3. சக்கரவர்த்தி என்றழைக்கப்படும் நகரம் எது?
4. நாக்கை நீட்ட முடியாத ஒரே விலங்கு எது?
5. ஒரு தலைமுறை என்பது எத்தனை ஆண்டுகளைக் குறிக்கும்?

சிறுவர் கதிருக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்பும் சிறார்கள் "சிறுவர்கதிர்",
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

### விடை தெரியுமா?

தெரிந்தால் 08.06.2013 இற்கு முன்வர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

### விடைகள் 211

1. கவிட் சர்லாந்து
2. ரஷ்யா
3. செலஞ்சர்
4. சீனா
5. கல்லீரல்

### வெற்றி பெற்றவர் விவரம் (211)

*நா. ஸ்ரீகிருஷ்ணா, தரம் 4ஔ, யாழ்ப்பாணக் கல்லூரி

(ஒருவர் மட்டுமே சரியான விடை அனுப்பியிருந்தார்)

## சிந்திக்க சில

★வெற்றி என்பது பெற்றுக் கொள்வதற்கு. தோல்வி என்பது கற்றுக் கொள்வதற்கு.
★எனக்கென்று உள்ளதை யாரும் தடுக்க முடியாது. எனக்கென்று இல்லாததை யாரும் கொடுக்க முடியாது.
★வாழ்க்கை என்பது இயற்கை அளிக்கும் செல்வம். ஆனால் நல்ல வாழ்க்கை என்பது ஞானம் அளிக்கும் செல்வம்.
★வேகம் இல்லாத விவேகம் வெறும் கனவு, விவேகம் இல்லாத வேகம் வேருடன் அழிவு, விவேகத்துடன் இணைந்த வேகம் வெற்றி வாயிலின் நுழைவு.
★தோல்வியைக் கண்டு அஞ்சுபவனிடம் இருந்து வெற்றி விலகுகிறது.
★உண்மையைச் சொல்லி நன்மையைச் செய்தால் உலகம் உன்னிடம் மயங்கும், நிலை உயரும் போது பணிவு கொண்டால் உயிர்கள் உன்னை வணங்கும்.
★விழிப்பதற்கே உறக்கம், வெல்வதற்கே தோல்வி, எழுவதற்கே வீழ்ச்சி.
★ஒருவன் விழாமல் வாழ்ந்தான் என்பது பெருமை யல்ல, விழுந்த போதெல்லாம் எழுந்தான் என்பதே பெருமை.

சு. ஆர்த்திகா, தரம் 9டி, யாழ்.வேம்படி மகளிர் உ.த.பா.



# ரொட்டித் துண்டு!

ஓர் ஊரில் தொடர்ந்து சில ஆண்டுகளாக மழை பெய்யவில்லை. அந்த ஊரில் கடும் பஞ்சம் நிலவியது மக்கள் பசியால் வாடினர். நல்ல உள்ளம் படைத்த செல்வந்தர் ஒருவரிடம் அந்த ஊர் மக்கள் சென்றனர்.

''ஐயா! பெரியவர்களாகிய நாங்கள் எப்படியோ பசியைப் பொறுத்துக் கொள்கிறோம். சிறுவர் சிறுமியர்கள் என்ன செய்வர்? இந்த நிலையில் நீங்கள் தான் கட்டாயம் உதவி செய்ய வேண்டும்...'' என்று வேண்டினர்.

இளகிய உள்ளம் படைத்திருந்த அவர் ''இந்த ஊரில் குழந்தைகள் யாரும் பசியால் வாட வேண்டாம். ஆளுக்கொரு ரொட்டி கிடைக்குமாறு செய்கிறேன். என் வீட்டுக்கு வந்து ரொட்டியை எடுத்துச் செல்லச் சொல்லுங்கள்!'' என்றார்.

மாளிகை திரும்பிய அவர், தன் வேலைக்காரனை அழைத்தார். ''இந்த ஊரில் உள்ள குழந்தைகளின் எண்ணிக்கையைக் கணக்கெடுத்துக் கொள். ஆளுக்கொரு ரொட்டி கிடைக்க வேண்டும். கூடவும் கூடாது. குறையவும் கூடாது. நாளையிலிருந்து ரொட்டிகளைக் கூடையில் சரியான எண்ணிக்கையில் வைத்துக் கொண்டு வீட்டுக்கு வெளியே இரு...'' என்றார்.

மறுநாள் வேலைக்காரன் ரொட்டிக் கூடையுடன் வெளியே வந்தான். அங்கே காத்திருந்த சிறுவர், சிறுமியர் அவனைச் சூழ்ந்து கொண்டனர். கூடையை அவர்கள் முன் வைத்தான் அவன்.

பெரிய ரொட்டியை எடுப்பதில் ஒவ்வொருவரும் போட்டி போட்டனர். ஆனால், ஒரே ஒரு சிறுமி மட்டும் அமைதியாக இருந்தாள். எல்லாரும் எடுத்துச் சென்றது போக மிஞ்சி இருந்த சிறிய துண்டை எடுத்துக் கொண்டு அங்கிருந்து மகிழ்ச்சியுடன் சென்றாள் அவள்.

இப்படியே தொடர்ந்து நான்கு நாள்கள் நிகழ்ந்தது. எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்தார் செல்வந்தர். ஐந்தாம் நாளும் அப்படியே நடந்தது. எஞ்சியிருந்த சிறிய ரொட்டியை எடுத்துக் கொண்டு புறப்பட்டாள் அந்த சிறுமி.

தன் வீட்டுக்கு வந்தவள் தன் தாயிடம் அதைத் தந்தாள். அந்த ரொட்டியைப் பிய்த்தாள் தாய் அதற்குள் இருந்து ஒரு தங்கக் காசு கீழே விழுந்தது.

அந்தத் தங்கக் காசை எடுத்துக் கொண்டு செல்வந்தரின் வீட்டுக்கு வந்தாள் சிறுமி. ''ஐயா! இது உங்கள் தங்கக் காசு. ரொட்டிக்குள் இருந்தது. பெற்றுக் கொள்ளுங்கள்!'' என்றாள் அவள்.

''சிறுமியே! உன் பொறுமைக்கும், நற்பண்புக்கும் நான் அளித்த பரிசு தான் இந்தத் தங்கக் காசு. மகிழ்ச்சியுடன் இதை எடுத்துக் கொண்டு வீட்டுக்குச் செல்...'' என்றார் செல்வந்தர்.

துள்ளிக் குதித்தபடி ஓடி வந்த அவள், நடந்ததை தன் தாயிடம் சொன்னாள்.



அ. க.கிசாந்தன், புங்குடுதீவு மகாவித்தியாலயம்
ஆ. வி.சஞ்சீகரன், தரம் 12சி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
இ. ம.அஜந்தா, வித்தியானந்தாக் கல்லூரி
ஈ. வி.சஞ்சீகரன், [illegible]
உ. [illegible].அர்ஜீன், தரம் 7 மாகதுப்பு குருசாமி வித்தியாலயம்
ஊ. நா.ஸ்ரீகிருஸ்ணா, தரம் 4 யாழ்ப்பாணக் கல்லூரி
எ. எஸ்.அனிருத்தன், தரம் 2 மானிப்பாய் மகளிர் கல்லூரி
ஏ. ச.அபையான், சித்தங்கேணி பாலர் பாடசாலை
ஐ. எஸ். அர்சயா, பாலர் பிரிவு, ஓலிம் பாலர் பாடசாலை மானிப்பாய்
ஒ. எஸ். அர்சயா, பாலர் பிரிவு, ஓலிம் பாலர் பாடசாலை மானிப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 268



அனுப்புபவர் பெயர்:.......................................

விலாசம்:.......................................

.......................................

கையொப்பம்:.......................................

### இடமிருந்து வலம்

1. நாடில்லாமல் அலைபவன்
4. உளவு
6. (வாழ்க்கை) வரலாறு
8. ரூபாவில் நூறு
10. தாமரை
11. வறுமை
12. அக்கினி
13. ஒரு இராசி
15. கொலை செய்ய ஏவுதல்
16. சோறு
17. இல்லம்
18. வயலில் கட்டுவது
20. கடன் வாங்கியவன்

### மேலிருந்து கீழ்

1. ஐந்தாவது திதி
2. நாடு
3. நகு
4. கண்ணைத் திறந்து கொண்டு இதைச் செய்ய முடியாதாம்
5. அரற்றுதல்
7. எரியும் செயற்பாடு
9. சளி வைத்தால் வரும்
12. இரும்பு ஆயுதங்களைத் தீட்டுவது இதனால்
14. மதிப்பு, மரியாதை கொடுக்கத்தக்க பண்பாளர்
15. கொடூரமான
16. அளவில், எண்ணிக்கையில் கூடிய
17. வீரம் மிகுந்தவன்
18. போக அல்ல
19. காயம்.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 266 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) துவேசம் (4) கழுகு (7) ரோசம் (8) பருத்தி (09) கம்பளம் (10) தரை (11) பதம் (13) சம்சாரம் (16) பாதை (17) சம்பவம் (19) எள (20) திம்பு (21) கரும்பு (22) புலி

**மேலிருந்து கீழ்**

(1) துரோகம் (2) வேசம் (3) சம்பளம் (4) கரு (5) முத்தம் (6) குதிரை (8) பம்பரம் (12) தம்பதி (13) சதை (14) சாசனம் (15) அம்புலி (16) பரி (18) வம்பு (19) எரு

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்ட சாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா150/ ரூபா 100/ பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விபரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 268**
*நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்]லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், (12.06.2013) ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

7. சொற்சிலம்பம்போட்டி இல.268இல்வெற்றி பெறுவோர்களது விவரம் 16.06.2013 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 266இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்ட சாலிகளது பெயர் விபரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
**ஆ.பாலாகுஜா,**
திருநாவலூர், புலோலி மேற்கு, பருத்தித்துறை.

**2 ஆம் பரிசு**
**யு.டெ.விஷோக்கா பிலேவியா,**
வ/ இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம், தபால் பெட்டி இல.10, வவுனியா.

**3 ஆம் பரிசு**
**வி.டினோஷன்,**
இல.67, மின்மாற்றி ஒழுங்கை, உடுவில் தெற்கு, சுன்னாகம்.

**4 ஆம் பரிசு**
**வே.இராசநாயகர்,**
சோறன்பற்று, பளை.

**5 ஆம் பரிசு**
**ம.ரொமோனா,**
முகாம் வீதி, ஊர்காவற்றுறை.

**பாராட்டுப் பெறுவோர்**

**திருமதி தி.சிதம்பரநாதன்,**
பச்சவீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

**குலசிங்கம் அர்ச்சனா,**
யா/வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.

**லோகேஸ்வரன் அனோஜினி,**
இல.21, (5/4) 1 ஆம் சப்பல் ஒழுங்கை, கொழும்பு-6

*பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ்.மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் ஒரு கிழமையில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால் ஊடாக அனுப்பிவைக்கப்படும்.*



# துணிச்சல்காரன்

நான் வெறும் பிண்டப்பிறப்பல்ல
உலக அநியாயங்களை
நாசமாக்கப் பிறந்தவன்!

நான் பூக்களின் சிநேகிதன்
ரத்தங்களின் காதலன்

கொடுமைகளை கொளுத்த
என் எச்சில் துப்பலேபோதும்
நீதி, வழி தவறினால்
அதைத் தூக்கிலிடத் தயங்காது
என் கவிதை

ஏழையின் வயிற்றை
எரிக்கும் பசியும்
ஒரு சமூக சேவகனின் மனதில்
கருவாகும் சிந்தனையும் நான்

சுயமரியாதைக்காரனின்
உண்மையும்
கண்ணீர் சிந்துபவர்களின்
கருணையும் நான்

நன் உலகமாதாவின்
போராளிப் புதல்வன்
ஆயுதம் ஏந்துபவர்களுக்கு
எதிரான அரக்கன் நான்

சாது மனிதர்களின்
கோபவெறியும்
வறுமைப் பெண்ணின்
புன்னகையும் நான்

அதிகார அரக்கர்களுக்கு
எதிராக முளைத்த
ரௌத்திர விருட்சம் நான்

ஏகாதிபத்தியத்தின்
ஆட்சி வேருக்கு
நஞ்சாய் தருபவனும் நான்

அவலத்தின் கூக்குரல்
அடங்கும்வரை
அடங்க மறுக்கும்
துணிச்சல்காரன் நான்



எம்.நேதா, நெடுந்தீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முதிய பெற்றோர் தொடர்பில் பிள்ளைகளின் கடமைகள்......

குழந்தைகளை பெற்றுக்கொள்வதிலும். அவர்களை வளர்த்தெடுப்பதிலும் இளம் தம்பதியினர் காட்டும் ஆர்வத்தை பார்க்கிறோம். அதே தம்பதியினர் பிள்ளைகள் வளர்ந்து பெரியவர்களாகி அவர்களும் பிள்ளைகளுக்கு பெற்றார் ஆகிவிடும்போது தமது முதிய பெற்றோரை அதே அக்கறையுடன் பராமரிக்கிறார்களா? அவர்கள் மீது அக்கறை காட்டுகிறார்களா என்பது இன்று ஆய்வுக்குரிய விடயமாகி விட்டுள்ளது. மேற்கு நாடுகளில் பெற்றோர் தொழில் செய்யும் போதே தமது எதிர்காலத்துக்கென அரசு திட்டங்கள் மூலம் ஒதுக்கீடுகளும் முதியோர் இல்ல ஏற்பாடுகளும் இருப்பதாகக் கூறப்படுகின்றது. ஆனால் நமது நாட்டில் முதியோருக்கென அரசு திட்டங்கள் எதுவும் வலுவான முறையில் கடைப்பிடிக்கப்படுவதாக தெரியவில்லை. அநேக பெற்றோர்கள் கைவிடப்பட் டவர்களாக பரோபகார நிறுவனங்களில் தயவை நாடிச் செல்கிறார்கள். இன்னும் சிலர் தெருக்களில் சித்த சுவாதீனமற்றவர்களாகவும் பிச்சை எடுப்பவர்களாவும் திரிவதைக் காண்கின்றோம்.

வயதானவர்களைப் பராமரிப்பதென்பது கடினமான காரியம் தான். ஆனால் அதை நீங்கள் செய்யும் போது உலகத்தில் வேறு எதையும் விட திருப்தியையும், மன ஆறுதலையும் பெறுவீர்கள்.



ஆனால் பெற்றோரை அவர்களின் முதிய காலத்தில் பேணிப் பாதுகாப்பது எவ்வளவு மிக முக்கியம் என்பதை உணர்கிறவர்கள் குறைவு. முதியவர்கள் இரண்டாவது குழந்தைத் தன்மையை பெறுகிறார்கள் என்பது ஆங்கிலச் சொல் வழக்கு. Second Childhood என்பார்கள். அவர்களின் நடை மற்றும் செயற்பாடுகள் யாவும் குழந்தைத் தன்மையாகிவிடும். அதனால் அவர்களை அன்போடும், ஆதரவோடும் , பொறுமையோடும் பேணுவது வளர்ந்த பிள்ளைகளின் கடமை. அந்த வகையில் தன் பெற்றோரை பராமரித்து பேணியுள்ள பிரானீத்த பெரெரா என்ற ஓர் அன்பர் பத்திரிகையொன்றில் எழுதியுள்ளதன் ஒரு பகுதியை இங்கு பார்க்கலாம். அனுபவத்தின் மூலம் எனக்குத் தெரியும் வயதானவர்களை வைத்து பார்ப்பதென்பது மிகக் கஷ்டமான காரியம். எமது அப்பா- அம்மாவை 78-84 வயதில் நாங்கள் என்னமாதிரி வைத்துப் பார்த்தோம் என்பது எனக்கு நினைவுக்கு வருகிறது. எனது சகோதரியும் நானும் அவர்களுடன் [illegible]. அவர்களைப் பராமரிப்பது என்றால் நிறைய [illegible] வேண்டும். எனது அம்மா பார்க்கின்சன் வியாதியால் பாதிக்கப்பட்டவர். ஒருமுறை விழுந்து எலும்புகள் முறிந்து படுத்த படுக்கையாகிவிட்டார். எனது அப்பாவோ பொதுவில் கண்டிப்பானவர். வயது அதிகரிக்க அதிகரிக்க அமைதியற்றவராய் பெரிதாகக் கத்திப்பேசத் தொடங்கிவிட்டார்.

எங்களில் ஐந்து சகோதர சகோதரிகள் இருந்தோம். ஆனால் நாங்கள் இரு வருமே திருமணம் முடிக்காத இளை யவர்கள். அவர்களை வைத்துப் பார்க்கும் பணி எங்களைச் சார்ந்து விட்டது.

### இறைவனுக்கு நன்றி

உண்மையில் நாங்கள் இறைவனுக்கு நன்றி சொல்ல வேண்டும். பலவாறு கஷ்டங்களுக்குள்ளானாலும் எமது பெற்றாரை எங்களால் வைத்துப் பார்க்க முடிந்தது. எமது ஒன்றுவிட்ட சகோதரி எமது தாயாரைப் பார்த்துக்கொள்ள தாதியொருவரை ஏற்பாடு செய்து கொடுத்திருந்தார். எனது தாயாரின் இறுதிப் படுக்கையின் போதும் அந்தப் பெண் கூடவே இருந்தார். உண்மையில் அவர் செய்த பணியை மதிப்பிட்டுக் கூற முடியாது. அவர் எமது குடும்பத்தில் ஒருவரானார். இப்போதும் கூட முக்கிய நாள்களில் அவர் வந்து பார்க்கத் தவறுவதில்லை.

சமூகத்தில் பொதுவான கருத்து என்னவென்றால் மனிதன் வளர்ந்தவுடன் திருமணம் செய்து கொள்ள வேண்டும். பிள்ளைகளையும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பார்கள். இல்லையென்றால் நீங்கள் இறக்கும்போது தனிமைப் பட்டுவிடுவீர்கள் என்பது அவர்கள் கருத்து.

ஆனால் திருமணமாகி பிள்ளைகளைப் பெற்றுக்கொண்டு விட்டாலும் அவர்களில் எத்தனைபேர் உங்கள் மரணப் படுக்கையின் போது கூட இருப்பார்கள் என்று யாருக்குத் தெரியும்.

### மிகச் சிறந்த மனதிருப்தி

ஆனால் உண்மையில் அவர்களின் அருகில் கடைசி நேரத்திலும் இருக்கும் வாய்ப்பு கிடைக்குமானால் அவர்களுக்குப் பணியாற்ற முடியுமானால் அது உங்களுக்கு சந்தோஷம் கொடுக்கும் விடயமே. அதுதான் நீங்கள் வாழ்க்கையில் பெற்றுக்கொள்ளும் கடைசி மிகச் சிறந்த மனத் திருப்தியாகும். நீங்கள் அவர்களை நன்றாக பராமரித்தீர்கள்-நடத்தினீர்கள் என்ற ஆறுதல் மனதில் நிலைக்கும்.

### பலவற்றை கற்றுக்கொண்டோம்

எனது தந்தையார் மொழி பெயர்ப்பாளராக இருந்தார். அதனால் எங்களுக்கு ஆங்கிலம் இலகுவாக கைவரப் பெற்றது. இது அவர் கொடுத்த வரப்பிரசாதம்.

அவர் மறைந்ததும் நாங்கள் அவர் இழப்பை பெரிதாக உணர்ந்தோம். சிட்டைகளின் கோப்புகளை எவ்வாறு ஆரம்பித்து பேணிக் கொள்வது என்பதை அவர் எங்களுக்கு கற்பித்தார்.

மின்சார கட்டண சிட்டை, தொலைபேசிச் சிட்டை போன்றவற்றுக்கான கோப்புக்களை இன்றும் கூட நாங்கள் பேணி வருகின்றோம்.

என் தந்தை பத்திரிகை படிப்பார்.- விமரிசனங்களும் எழுதுவார். அதை இப்பொழுது நான் செய்கின்றேன். நாங்கள் இன்று மகிழ்ச்சியாய் இருப்பதற்கு அவரிடமிருந்து பல்வேறு நல்ல படிப்பினைகளை பெற்றுக் கொண்டமைதான் காரணம்.

எனது அம்மா நல்லதொரு வீட்டுப் பணியாளராக விளங்கினார். வீட்டு வேலைகள் அனைத்தையும் அவரே செய்தார். நல்ல பாடகியும் கூட. பாடசாலைக்கான பாடல்களை சிறு வயதில் அவரே எங்களுக்கு பழக்கிவிடுவார். இதுவும் அவர்களிடமிருந்து நாங்கள் பெற்றுக்கொண்ட படிப்பினைகள் தாம்.

எனது பெற்றோர் மிக வித்தியாசமான மனிதர்களாக வாழ்ந்து மறைந்தார்கள். அவர்களின் இறுதிக் காலத்திலும் அவர்களுக்குப் பணி புரிந்து அவர்களிடமிருந்து பலவற்றைக் கற்றுக் கொண்டோம். அவை எமது இறுதிக்காலம் வரை எங்களோடு இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

வயதானவர்களைப் பராமரிப்பதென்பது கடினமான காரியம் தான். ஆனால் அதை நீங்கள் செய்யும் போது உலகத்தில் வேறு எதையும் விட திருப்தியையும், மன ஆறுதலையும் பெறுவீர்கள். எல்லா இளம் புதல்வர்களையும், புதல்விகளையும் நான் கோருவது இதுதான். உங்கள் பெற்றோரை அவர்களின் [illegible] இல்லத்தில் கொண்டுபோய் [illegible] நீங்களே அவர்களை அன்புடன் பராமரியுங்கள். நீங்கள் அவர்களுக்குச் செய்யும் கைமாறு அதுவாகத்தான் இருக்க முடியும்.

ரம்யன்

81 அசை போட ஒரு விடயம்

## சந்திரத் தரையை தாக்கிய எரிகல்

சந்திரனில் இதுவரை கண்டறியாத விதத்திலான ஓர் எரிகல் தாக்குதல் நடைபெற்றிருப்பதாக அமெரிக்க நாஸா விண்வெளி ஆய்வு விஞ்ஞானிகள் அறிவித்திருக்கிறார்கள். எரிகல் சந்திரத் தரையில் மோதியபோது வெளிப்பட்ட மிகப் பிரகாசமான வெளிச்சமானது தொலை நோக்கி இல்லாமலே கண்ணால் பார்க்கக் கூடியதாக இருந்தது என்று அவர்கள் அறிவித்துள்ளனர். சந்திரனின் மாரே இம்பிரியம் என்ற பகுதியில் அந்த விண்கலம் மோதியபோது மணிக்கு 56,000 மைல் வேகத்தில் பயணித்ததாக விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். விண்கலத்தின் குறுக்களவு 40 சென்றிமீற்றருக்கு மேல் இருக்காது என்றாலும் அந்தத் தாக்கமானது 4 தொன் (4500 கி.கி) ரி.என்.ரி. வேகத்தைக் கொண்டதாக இருந்திருக்க முடியும். அதனால் சந்திரத் தரையில் 20 மீற்றர் அகலமான பள்ளம் ஒன்றையும் ஏற்படுத்தியிருக்கும் என்கிறார்கள் நிபுணர்கள். நாஸா எரிகல் சுற்றாடல் ஆய்வு மையத்தில் பதிவாகியுள்ள மிகப்பெரிய எரிகல் தாக்கம் இதுவாகும் என்கிறார்கள் அவர்கள்.

லூனா ஆய்வுக்கலம் அடுத்த முறை சந்திரனில் குறித்த பகுதியைக் கடந்து செல்லும்போது அங்கு காணப்படும் பள்ளத்தை புகைப்படம் எடுக்க விஞ்ஞானிகள் தீர்மானித்துள்ளனர். சந்திரனில் பூமியைப்போன்று வாயு மண்டலம் (Atmosphere) கிடையாது. எனவே சந்திரத் தரையை அண்மிக்கும்போது எரிகல் எரிந்து போவதில்லை.

நாஸாவில் எரிகல் ஆய்வு மையம் 2005 ஆம் ஆண்டு நிறுவப்பட்டதிலிருந்து இதுவரை 300 எரிகல் தாக்கங்கள் சந்திரனில் நிகழ்ந்துள்ளதாகப் பதிவாகியுள்ளன. இந்த ஆய்வுமையம் அமைக்கப்பட்டதன் முக்கிய நோக்கங்களில் விண்வெளியில் பயணிகளும் விண்வெளிக் கலங்களும் விண் கற்களினால் தாக்கப்படாமலிருப்பதற்கான பாதுகாப்புக்களை செய்வதும் அடங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய அணிக்கு தமிழ் வீரர்கள்



சந்திப்பு: டிலீப்அமுதன், தமிழினியன்

தேசிய கிரிக்கெட் அணிக்கு யாழ்ப்பாண வீரர்கள் உள்வாங்கப்படும் காலம் விரைவில் உருவாகும் என்று இங்கு வருகைதரும் சகல கிரிக்கெட் பிரபலங்களும் சொல்கின்ற போதும் அது இன்னமும் எட்டாக் கனியாகவே இருக்கின்றது. இந்த நிலையில் அடுத்த வருடம் எஸ்.எல்.பி.எல் தொடர் யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் என்று அடித்துக் கூறுகின்றார் இலங்கை கிரிக்கெட் பிரதம தேர்வாளர் சனத்.

மேலும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரண்டு வீரர்களும் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு வீரருமாக மூன்று பேர் முக்கோண சுற்றுத் தொடருக்கு தேர்வு செய்யப்பட்டனர். ஐ.சி.சி மினி உலகக் கிண்ணத்துக்கான இலங்கை அணி தேர்வுக்காக இலங்கை அணி மூன்றாக பிரிக்கப்பட்டு முக்கோண கிரிக்கெட் தொடர் தம்புள்ளவில் அண்மையில் இடம்பெற்றது. இதற்கே வடக்கு, கிழக்கை சேர்ந்த மூவரும் தேர்வு செய்யப்பட்டனர். இருப்பினும் அவர்கள் ஓர் ஆட்டத்திலும் களம் இறக்கப்படவில்லை. தேசிய வீரர்களுடன் பழகுவதற்கும் அவர்களுடனான சூழ்நிலையைப் புரிவதற்குமான சந்தர்ப்பத்தை வழங்கவே அவர்கள் முக்கோணகிரிக்கெட் தொடரில் இணைக்கப்பட்டதாக கூறுகின்றார், இலங்கை கிரிக்கெட் அணியின் பிரதம தேர்வாளரும்முன்னாள் அணித் தலைவருமான சனத் ஜெயசூர்யா.

யாழ்ப்பாணத்தில் ஏன் வடக்கு, கிழக்கு பிராந்தியங்களில் முதல் தர கழகங்கள் எவையுமில்லை. இங்குள்ள கழகங்கள் எல்லாம் மூன்றாம் தரக் கழகங்கள். இரண்டாம் தரக் கழகங்களிடையே 23 வயதுக்குட்பட்டோருக்கான கிரிக்கெட் தொடர் இடம்பெறவுள்ளது.

இதற்காக இங்கு கழகங்கள் இல்லாத நிலையில் வடக்கு - கிழக்கு இணைந்த அணியாக ஓர் இரண்டாந்தர அணியை இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை களமிறக்கவுள்ளது. இதற்காக சென். பற்றிக்ஸ் கல்லூரியில் 2 நாள் கிரிக்கெட் பயிற்சி முகாம் இடம்பெற்றது.

வடக்கு - கிழக்கை சேர்ந்த 41 வீரர்கள் இதில் பங்கெடுத்தனர். அவர்கள் இரு அணிகளாக பிரிக்கப்பட்டு ஆட்டத்தில் மோதினர். இவர்களிலிருந்து 20 பேரைத் தேர்வு செய்து 23 வயதுக்குட்பட்டோருக்கான வடக்கு- கிழக்கு அணியை அமைப்பதற்கு வந்திருந்த இலங்கை கிரிக்கெட் அணியின் பிரதம தேர்வாளர் சனத் ஜெயசூர்யா 'உதயனுக்கு' வழங்கிய சிறப்பு நேர்காணல்.




இலங்கை கிரிக்கெட் அணியின் பிரதம தேர்வாளர் சனத் ஜெயசூர்யா

**யாழ்ப்பாணத்தில் கிரிக்கெட் எவ்வாறு இருக்கின்றது ?**

யாழ்ப்பாணத்துக்கு நான் நான்காவது தடவையாக வந்திருக்கின்றேன். வடக்கு மாகாணத்தில் மாற்றங்களை அவதானிக்கின்றேன். இங்குள்ள இளைஞர்களின் கிரிக்கெட் மீதான ஆர்வம் அதிகரித்துச் செல்கின்றது. அதனடிப்படையில் இங்குள்ள திறமையான வீரர்களை இனங்கண்டு தேசிய அணியில் இணைப்பதற்காகவே நாங்கள் (தெரிவாளர்கள்) இங்கு நேரடியாக வந்துள்ளோம். வடக்கு, கிழக்கு இணைந்த அணியாக இங்கு பயிற்சி ஆட்டம் இடம்பெறுகின்றது. இவர்கள் தெற்கிலுள்ள வீரர்களுக்கு போட்டியாக விளையாட வேண்டும். தங்களது திறமைகளை நிரூபிக்க வேண்டும். நாங்கள் இங்குள்ள வீரர்களுக்கு அதிஉச்சபட்ச சந்தர்ப்பங்களை வழங்கத் தயாராக இருக்கின்றோம்.

### இரண்டு மாதத்தில் ரேஃப்

மேலும் வடமாகாணத்தைப் பொறுத்தவரையில் புல்தரையிலான ஆடுகளம் (ரேஃப்) இல்லாத நிலை காணப்படுகின்றது. அந்தக் குறை இரண்டு மாதங்களில் இல்லாமல் போய்விடும். இந்த மைதானத்திலேயே ரேஃப் அமைப்பதற்குரிய சகல ஒழுங்குகளையும் நாங்கள் முன்னெடுத்துள்ளோம். அத்துடன் இங்குள்ள வீரர்களுக்கு சகல உதவிகளும் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையினூடாக பெற்றுக் கொடுக்கப்படும். இதனூடாக எமது நாட்டுக்குத் தேவையான சிறந்த கிரிக்கெட் வீரர்களை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றோம். இங்குள்ள எமது வடமாகாண பயிற்சியாளர் புஸ்பகுமார மிகச் சிறப்பாக தனது பணியை முன்னெடுக்கின்றார்.

**அண்மையில் முக்கோண கிரிக்கெட் தொடருக்கு வடக்கு, கிழக்கை சேர்ந்த மூன்று பேர் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். அவர்களுக்கு எந்தவொரு ஆட்டத்திலும் பங்கெடுக்க சந்தர்ப்பம் வழங்கப்படவில்லையே. அவர்களுக்கான எதிர்காலம் என்ன ?**

அந்த மூன்று வீரர்களையும் முக்கோண கிரிக்கெட் சுற்றுத் தொடருக்கு நாங்கள் தேர்வு செய்திருந்தோம். உண்மையில் அவர்களுக்கு தேசிய அணி வீரர்களுடனான சூழலை உணர்வதற்கான சந்தர்ப்பமாகவே அதனை வழங்கியிருந்தோம்.

நாங்கள் என்ன செய்கின்றோம் ? அங்கே என்னவிதமான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன? உடல் பயிற்சிகள் எவ்வாறு வழங்கப்படுகின்றன ? தேசிய வீரர்கள் எவ்வாறு பந்து வீசுகின்றனர் ? வலைப் பயிற்சியில் எவ்வாறு ஈடுபடுகின்றனர் என்று இங்கிருந்து சென்ற மூன்று வீரர்களும் அறிவதற்கு வழி செய்திருந்தோம்.

அவர்கள் தாங்கள் அங்கே அறிந்ததை இங்குள்ள வீரர்களுடன் பரிமாறிக் கொள்கின்றனர். தேசிய அணி வீரர்களின் அனுபவங்களை அவர்கள் அங்கே பெற்று இங்குள்ள வீரர்களுக்கும் அதனைச் சொல்லிக் கொடுக்கின்றனர்.

நேரடியாக தேசிய அணியில் யாரும் விளையாட முடியாது. நிறைய கடினமான பயிற்சிகளைச் செய்ய வேண்டும். திறமையான வீரர்களாக இருந்தால் நிச்சயமாக தேசிய அணியில் விளையாடும் சந்தர்ப்பம் உங்களுக்கு கிடைக்கும்.

**எத்தனை பேர் வடக்கு-கிழக்கிலிருந்து தேசிய அணியில் இணைவார்கள் என்று எதிர்பார்கின்றீர்கள் ?**

நான் மூன்று அல்லது நான்கு வீரர்கள் இங்கிருந்து தேசிய அணியில் விளையாடுவதற்கு தகுதி பெறுவார்கள் என்று எதிர்பார்கின்றேன். அவர்கள் தற்போது 23 வயதுக்குட்பட்டோருக்கான சுற்றுத் தொடர் பின்னர் இலங்கை ஷஏ' அணிக்கான சுற்றுத் தொடர் அதன் பின்னரே தேசிய அணிக்குள் உள்வாங்கப்பட முடியும். 19 வயதுக்குட்பட்டோருக்கான தொடர், 23 வயதுக்குட்பட்டோருக்கான தொடர், இலங்கை ஷ!!' அணிக்கான தொடர் இவற்றில் விளையாடிய பின்னரே நான் இலங்கை தேசிய கிரிக்கெட் அணியில் உள்வாங்கப்பட்டேன்.

படிமுறைகளினூடாகவே அணியில் இணைய முடியும்.

நான் நினைக்கின்றேன், இவர்கள் என்னை விட வேகமான படிமுறைகளினூடாக அணியில் இணைவதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஏனெனில் இவ்வளவு காலமும் இவர்கள் கவனிக்கப்படவில்லை. அதனால் அவர்களுக்கு அதிகளவான சந்தர்பங்களை நாங்கள் வழங்குகின்றோம்.

**எஸ்.எல்.பி.எல் தொடரில் கடந்த வருடம் வடக்கு,கிழக்கு அணிகளில் உள்ளூர் வீரர்கள் உள்வாங்கப்படவில்லை. இந்த வருடம் உள்வாங்கப்படுவார்களா ?**

நாங்கள் கட்டாயம் இந்த வருடம் அணி உரிமையாளர்களுக்குத் தெரிவித்து வடக்கு மற்றும் கிழக்கு அணிகளில் நிச்சயமாக உள்ளூர் வீரர்களை இணைத்துக் கொள்ள ஏற்பாடு செய்வோம். இந்த வருடம் ஆகக் குறைந்தது வடக்கு மற்றும் கிழக்கு அணியில் ஒரு வீரராவது இணைத்துக் கொள்ளப்படுவார்.

அடுத்த வருடம் எஸ்.எல்.பி.எல் தொடரில் ஓர் ஆட்டமாவது யாழ்ப்பாணத்தில் நடத்தப்படும். இந்த வருடம் அதற்கான வாய்ப்புக்கள் குறைவாக இருக்கின்றன. ஆனால் அடுத்த வருடம் கட்டாயம் யாழ்ப்பாணத்தில் எஸ்.எல்.பி.எல் ஆட்டம் நடத்தப்படும்.

### முன்னணி வீரர்கள் 'போர்மில்' இல்லை

**ஐ.சி.சி மினி உலகக் கிண்ணத்தை வெல்ல இலங்கை அணிக்கு சந்தர்பம் இருக்கின்றதா ?**

எங்களுக்கு நல்ல சந்தர்பம் இருக்கின்றது நான் நினைக்கின்றேன். இருப்பினும் சங்ககார, மஹேல, டில்ஷான், மத்தியூஸ் இவர்கள் தற்போது நல்ல திறனில்(போர்ம்) இல்லை. அவர்களுக்கு போதுமான அனுபவங்கள் இருக்கின்றன. அதனால் அவர்களால் ஓர் இன்னிங்ஸிலேயே தமது பழைய நிலைமைக்குத் திரும்ப முடியும்.

**எஸ்.எல்.பி.எல். தொடரில் இந்திய வீரர்கள் பங்கெடுக்காமை தொடர்பில்?**

இது தொடர்பில் நான் எதுவும் சொல்ல முடியாது. இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையே முடிவெடுக்க வேண்டும். இருப்பினும் இது துரதிர்ஷ்டமானதுதான்.

**மத்தியூஸை புனேவாரியர்ஸ் அணித் தலைமையிலிருந்து நீக்கியமை, அவரது இலங்கை அணித் தலைமையை பாதிக்குமா?**

இல்லை, இல்லை. இது எந்த வகையிலும் பாதிக்காது. நாங்கள் அவ்வாறு மாற்றப்பட்ட பொழுது மிகவும் கஷ்டமான நிலையை உணர்ந்தோம். இருப்பினும் இலங்கை கிரிக்கெட் அணிக்கு மத்தியூஸ் சிறந்த அணித் தலைவர்.

**ரணதுங்க, சனத், முரளி என்றும் பின்னர் சங்கா, மஹேல, டில்ஷான் இனி எவ்வாறான கூட்டணி அமையும் என்று எதிர்பார்க்கின்றீர்கள்?**

சந்திமால், திரிமன்னே, திமுத் கருணாரத்தன, அன்ஞலோ மத்தியூஸ், திஸ்ஸரபெரேரா இவர்கள்தான் சரியான இணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகராஜ சோழன் எம்.எல்.ஏ

## திரைவிமர்சனம்



பல வருடங்களுக்கு முன்பு தமிழக அரசியலை நக்கலடித்த சத்யராஜ் - மணிவண்ணன் கூட்டணி மீண்டும், அதே அரசியல் படம் மூலம் இணைந்திருக்கிறார்கள். இவர்களுடன் இலவச இணைப்பாக இயக்குநர் சீமானும் இப்படத்தில் இணைந்திருப்பதால் இப்படத்திற்கு பலமான எதிர்பார்ப்பு ஏற்பட்டிருந்தது. ஆயினும் அந்த எதிர்பார்ப்பு ஏமாற்றத்தைத் தந்திருக்கிறது.

அமைதிப்படை படத்தின் இரண்டாம் பாகமாக வெளியாகியிருக்கும் இப்படத்தின் கதையும், காட்சிகளும் பழைய அமைதிப்படை படத்தை ஞாபகப்படுத்துவது போலவே உள்ளன. மணிவண்ணனை கீழே இறக்கிவிட்டு, எம்.எல்.ஏ. நாற்காலியில் அமர்ந்த பிறகு அமாவாசை எப்படி நாகராஜன் சோழன் ஆனாரோ அதேபோலவே, இந்த நாகராஜ சோழன், கட்சியில் தனக்கு உள்ள செல்வாக்கை வைத்து முதல்வரை மிரட்டி பதவியை ராஜினாமா செய்ய வைக்கிறார்.

பிறகு இவரே முதல்வராகிறார். அதன் பிறகு இவர் செய்யும் கொலை, வாங்கும் லஞ்சம் என்று படம் நகர ஒரு கட்டத்தில் வெளிநாட்டு நிறுவனங்களுக்காக காடுகளை அழித்து அதில் சாலைகள் அமைக்க முயற்சிக்கிறார். இதற்கு தடையாக இருக்கும் அரசு அதிகாரிகளை கொலை செய்கிறார்.

அந்த காட்டில் வாழும் பழங்குடியினர், மரங்களை வெட்ட தடையாக இருப்பதால், தனது அடியாட்களின் மூலம் அவர்களை அப்புறப்படுத்த முயற்சிக்கிறார். இதற்கிடையில் லெப்டிச் சாரதியான சீமான், பழங்குடியினருக்கு ஆதரவாக ஆயுதம் ஏந்தி போராடுகிறார்.

இறுதியில் சத்யராஜ் வென்றாரா அல்லது சீமான் வென்றாரா என்பதுதான் படத்தின் முடிவு. என்றாலும், யாரும் எதிர்பார்க்காத வகையில் சத்தியராஜ் மகனான ரகுவண்ணன் தான் வென்றார் என்ற ஒரு புதிய முடிவைச் சொல்லிப் படத்தையும் முடிக்கிறார் இயக்குநர் மணிவண்ணன்.

நாகராஜ சோழன் எம்.எல்.ஏ. படத்தின் மீது எந்த அளவுக்கு எதிர்பார்ப்பு இருந்ததோ அதை விடவும் பெரிய அளவுக்கு படத்தில் ஓட்டை இருக்கிறது. எதிலும் யதார்த்தம் இல்லை, எந்த விடயத்தையும் முழுமையாக சொல்லவில்லை. பிரேக் இல்லாத வாகனத்தைப் போல திரைக்கதை தாறுமாறாக ஓடுகிறது. அதை அவ்வப்போது கட்டுப்படுத்துவது சத்தியராஜ் மற்றும் மணிவண்ணன் தான். இவர்கள் வரும் காட்சிகளில் திரையரங்கே அதிரும் அளவுக்கு சிரிப்பு வருகிறது. ஒரு வசனத்தை முழுமையாக சொல்லி முடிப்பதற்குள்ளே ரசிகர்கள் உற்சாகத்துடன் சிரிக்கிறார்கள்.

சத்யராஜ், மணிவண்ணன் இருவரும் லொள்ளு பண்ணுவது எப்படி என்ற ஒரு புத்தகம் எழுதலாம், அந்த அளவுக்கு எந்த ஒரு அலட்டலும் இல்லாமல் மிகச் சாதாரணமாக ரசிகர்களை சிரிக்க வைக்கிறார்கள். சி.பி.ஐ. அதிகாரி, நாகராஜ சோழன் என்று இரண்டு வேடங்களில் சத்தியராஜ் நடித்திருக்கிறார். இதில் நடுத்தர இளமைத் தோற்றத்தில் வரும் சி.பி.ஐ அதிகாரி வயதானவர் போல உள்ளார். அதே சமயம் வயதானவராக வரும் நாகராஜ சோழன் வேடத்தில் இளைஞரைப் போல இருக்கிறார்.

இயக்குநர் மணிவண்ணன் இயக்குநராக மட்டும் இன்றி நடிகராகவும் தனது நையாண்டி நடிப்பால் ரசிகர்களை கவருகிறார். நடிக்க கூட முடியவில்லை என்றாலும், தனது நையாண்டி வசனங்களாலும், அதை சொல்லும் விதத்திலும், அதற்கு அவர் கொடுக்கும் முகபாவங்களும் நம்மையும் அறியாமல் சிரிக்க வைக்கின்றன. சத்தியராஜ் - மணிவண்ணன் இவர்களை வைத்தே இப்படத்தின் திரைக்கதையை உருவாக்கியிருக்கலாம்.

இதில் சீமான் கதாபாத்திரமும், அவருக்காக உருவாக்கப்பட்ட கதைக்களமும் படத்திற்கு உதவவில்லை. விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனை நினைவூட்டவும், அவருடைய நிலை என்ன ஆனது என்பதை விளக்கவும் சீமானை பயன்படுத்தியிருக்கிறார்.

மேடைகளில் பேசுவதை போலவே படத்திலும் பேசுகிறார் சீமான். அவர் பேசுவது தவறில்லை. பேசும் முறையை மாற்றி பேசினால் தான் அது மக்களுக்கு புரியும் பிறகு பிடிக்கும். நான்கு நாயகிகள், நான்கு கதாபாத்திரங்கள், காடுகளை அழிப்பதாலும், அதனால் ஏற்படும் பிரச்சினைகள் குறித்தும் விழிப்புணர்வு என்று படத்தில் ஏகப்பட்ட விடயங்கள் இருந்தாலும், சத்தியராஜ் மற்றும் மணிவண்ணன் இருவரும் தங்களை ஒருவருக்கொருவர் கலாய்த்துக் கொள்வதும், அவர்கள் இருவரும் இணைந்து தற்போதைய அரசியலை கிண்டலடிப்பதும் தான் மக்கள் மனதில் நிற்கிறது. சத்தியராஜுக்காகவும், மணிவண்ணனுக்காகவும் ஒரு முறை இப்படத்தைப் பார்க்கலாம்.

விசாகப் பௌர்ணமி நிலாவில்
பொன்னாய் விளைகிறது
எனது பூமி

எண்ணற்ற தீபங்கள்
எங்குமாய் எழுந்திட
வெளிகளின் இருளை
பொழுது கழுவுகிறது

உள்ளே நிறைகிற
இருளைக் கழுவ
ஒரு தீபம் ஏற்றுதல்
நிகழ்வதாய் இல்லை

ஆகாய வெளியை
அளக்கிற கண்கள்
ஆத்ம வெளிக்குள்
இன்னும்
நுழையவே இல்லை

இதய விழிகளால்
உலகை வாசித்து
உணர்ந்ததை பகிர்ந்தவன்
உண்மையில் கௌதமன்
நினைக்கும் போதே மனது
இலேசாகிப்போகிறது

ஓடுகிறவனைத் துரத்துவது
நாய்க்கு மட்டுமல்ல
எல்லோருக்கும் பிடித்திருக்கிறது

பிறந்த நாள் முதல்
மூப்பும் பிணியும் சாவுமாய்
என்னை
துரத்திக்கொண்டேயிருக்கின்றன

துரத்துவதால்
நான் துடித்துக்கொண்டேயிருக்கிறேன்

இல்லை...
பயந்து நான்
ஓடிக்கொண்டேயிருப்பதால்
அவையென்னை
துரத்திக்கொண்டேயிருக்கின்றன

எந்த இனத்திலும்
இருக்கின்ற மனிதர்
மூப்பு பிணி சாவுக்கெல்லாம்
முகம் கொடுத்தே
வாழுதல் கூடும்

மதங்கள் என்பவை
வாழ்வியல் முறைமை
வாழுதல் என்பது
மதங்களே அல்ல...!

திராவிட நிலத்தின்
ஆரியகுளச் சந்தி
அமர்க்களப்படுகிறது

கூடுகள் நடுவே
எரிகின்ற விளக்கில்
கூடிடும் முகங்களில்
தேடுதல் செய்கிறேன்

முகங்களில் வெளிச்சம்
மனங்களில்..?

இழந்த உறவினை நினைத்து
ஒரு விளக்கினை ஏற்றுதல்
ஏற்காத மனங்களில்
ஆரியம் திராவிடம்
அனைத்தும் கடந்து
மானிடம் ஏற்றிய
மனிதத்தை நினைத்திடல்
எங்ஙனம் முடிகிறது...

விசாகப் பௌர்ணமி நிலவில்
பொன்னாய் விளைகிறது
எனது பூமி




சாவினைப் பதிவைத்த
சோலைகளையெல்லாம்
வேரோடு பிடுங்கிய
அதே கரங்களால்
உங்கள் சாக்களை மட்டும்
[illegible] பதிய
எங்ஙனம் முடிகிறது

எண்ணற்ற தீபங்கள்
எங்குமாய் எழுந்திட
வெளிகளின் இருளை
பொழுது கழுவுகிறது...

உள்ளே நிறைகிற
இருட்டை விரட்ட
விளக்கொன்று ஏற்றுவோம்
வாரும்....

24.05.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரகசியப் புலிகள் சுவிஸில்

ஔண்யன்



## இரைகளின் பயம்

தமது எதிரிகளை பழிவாங்குவதற்காக பிற நாடுகளுக்குள் சிறு சிறு குழுக்களாக ஊடுருவி வருடக்கணக்காக மறைந்து வாழ்ந்து கடைசியில் தமக்குரிய இலக்கை தாக்கியழிக்கும் படைகளை அநேகமாக ஒவ்வொரு நாடும் கொண்டிருக்கவே செய்கின்றன. புராதன காலத்தில் கிரேக்கத்தில் கூட குதிரைப் பொம்மைக்குள் ஒளிந்திருந்து தம் எதிரியின் கோட்டையை சின்னாபின்னமாக்கிய வீரர்களைப் பற்றி இன்றைக்கும் நிறையக் கதைகள் இருக்கின்றன. அதேபோன்று இந்து மதம் சார்ந்த புராணங்களிலும் ஒளிந்து காத்திருந்து எதிரியைக் கொல்லும் சம்பவங்கள் சொல்லப்பட்டே இருக்கின்றன. தனக்கு எதிரே நிற்பவர்களின் சக்தியை உறிஞ்சும் வல்லமை கொண்ட வாலியை இராமன் நீண்ட நேரம் காத்திருந்து மரங்களின் மறைவில் ஒளிந்திருந்தே கொல்ல முடிந்தது.

புராணங்களோடு இந்த இரகசியப் படைகளின் கதை முடிந்து விடவில்லை. 'சி.ஐ.ஏ.', 'சீல்படை', 'மொஸாட்', 'றோ' என்று வெவ்வேறு விதமான பெயரிடல்களோடு இந்த இரகசியப் படைகள் தமது இலக்கு நோக்கி அகல வாய் விரித்து காத்திருக்கவே செய்கிறார்கள். சுவிஸில் உள்ள இரகசியப் புலிகளும் இரை தேடிக் காத்திருப்பதாகவே பேரினவாதத்தின் அடிவயிறு கலங்கத் தொடங்கியிருக்கிறது. ஏனெனில் இரைகள் அவர்களல்லவா?

## அமைச்சரின் கனவு

விமானத்திலிருந்து வெளியே வந்ததுமே வெண்பனி அவர்மீது தூவத் தொடங்கியது. உற்றார், உறவுகள் புடைசூழ அரச செலவில் கிடைத்த ஓசிப் பயணத்தை இந்த வெண்பனி இன்னமும் இனிமையாக்கியது. "கோட்டுக்கு" மேலே போட்டிருந்த ஸ்வெற்றரையும் தாண்டி குளிர் நரம்புக்குள் ஊடுருவத் தொடங்கியது. 'இந்தக் குளிருக்கு நாலைந்து போத்தல் அடிச்சாத்தான் இதமாய் இருக்கும்' என்று மனதுக்குள் நினைத்தவாறு மதுபான மயக்கத்தோடு காரில் ஏறிக்கொண்டார். நீ முந்தி நான் முந்தி என்று முண்டியடித்துக் கொண்டே அவரோடு கூட வந்தவர்களும் வாகனங்களில் தொற்றிக் கொண்டார்கள். எங்கு பார்த்தாலும் படர்ந்து கிடந்த வெண்பனிக் காட்டை ஊடுருவிக் கொண்டு விடுதி நோக்கி கார் விரைந்து கொண்டிருந்தது. இவ்வளவு நேரமும் மறந்துபோயிருந்த சூட்கேஸை ஒருமுறை தட்டிப் பார்த்தார் அமைச்சர். உள்ளே ஆவணங்கள் உறங்கிக் கொண்டிருப்பதை உறுதி செய்துகொண்டார்.

"அமெரிக்கா என்ன அமெரிக்கா இந்த வருஷம் என்னதான் பிரேரணை கொண்டுவந்தாலும் என்ர கெட்டித்தனத்தால தலைகுப்புற விழ வைக்கிறன். நெடுகலும் அவையின்ர பருப்பு எங்களிட்ட வேகாது. முந்தி வந்தவங்களுக்கு வாய் வல்லமை கிடையாது. நான் வாயைத் திறந்தா வெள்ளைக்காரங்களே நடுங்குவினம். இந்த எல்லாருக்கும் போட்டி கொடுக்காட்டி நான் ஒரு பௌத்தன் இல்லை" என்ற சபதத்தை சற்று உரத்த குரலில் காருக்குள் போட்டார் அமைச்சர்.

தன்னை நம்பி நாட்டின் தலைவர் ஒப்படைத்த பணியை வெற்றிகரமாக முடித்தே தீருவது என்று அவர் இப்போதே ஒற்றைக் காலில் நிற்கத் தொடங்கிவிட்டார். இந்த நினைப்பில் பனியின் குளிரும், அந்தக் குளிர்போக அடிக்க நினைத்த பியரின் வெறியும் அவரது மனதில் இருந்து அகலத் தொடங்கியிருந்தன. கார் நின்ற இடத்தில் வரவேற்றது ஒரு பிரமாண்டமான விடுதி. சூட்கேஸை கையில் எடுத்துக் கொண்டு விடுதியை நோக்கி நாலைந்து அடிதான் வைத்திருப்பார். அப்போது-

"ஸ்...ஸ்...ஸ்..." என்று காற்றைக் கிழித்துக் கொண்டு ஒலி எழுப்பாது வந்த சக்திவாய்ந்த தோட்டாக்கள் அமைச்சரை ஒரே நொடியில் சல்லடையிட்டன. அவ்வளவுதான். சூட்கேஸ் நழுவியது. 'அமெரிக்காவின் இந்தப் பிரேரணையையாவது தோற்கடிக்கலாம்' என்ற கனவு கூடவே சிதறுண்டுபோவதை அவரால் உணர முடிந்தது. பெரும்வலி. கத்தக்கூட முடியவில்லை. ஒருகட்டத்தில் வலியின் வேதனை அவரது குரல் வளைக்கு எங்கிருந்தோ சக்தியைக் கொடுத்தது. குரலின் எல்லா அதிர்வுகளையும் ஒரே புள்ளியில் குவித்து பலமாகக் கத்தினார்.

"மஹே அம்மே"

அடுத்த கணம் கீழே விழுவதை உணர்ந்தார்.

"என்ன இண்டைக்கும் கனவுகண்டு கட்டிலால விழுந்திட்டீங்களோ?" என்று (சிங்களத்தில்) மனைவி சொன்ன பிறகுதான் அமைச்சருக்கு போன உயிர் திரும்ப வந்தது.

"நாட்டை பேர் எழுதித் தாறது எண்டு சொன்னாலும் அடுத்த முறை ஜெனிவாவுக்கு போகவே கூடாது" அந்த நடுராத்திரியில் தனக்குத்தானே சத்தியம் செய்துகொண்ட பின்னர்தான் அவருக்கு தூக்கம் வந்தது.

## இரகசியப் புலிகள் - கருதுகோள் 02

இறுதிப்போரில் படைகளுக்கு கடைசி நேரத்தில் கடுக்காய் கொடுத்துவிட்டு தப்பித்த ஏராளமான புலிகள் வெவ்வேறு மார்க்கங்கள் ஊடாக இந்தோனேஷியா, மலேஷியா, எரித்திரியா, தென்னாபிரிக்கா, இந்தியா போன்ற நாடுகளுக்குச் சென்று பின்னர் அங்கிருந்து ஐரோப்பிய நாடுகளுக்குள் உட்புகுந்து விட்டதாக அரசின் ஒரு சாரார் இன்னமும் உறுதியாக நம்புகிறார்கள்.

புலம்பெயர் நாடுகளிலும், இந்தியாவின் தமிழகத்திலும் கொளுந்து விட்டு எரியும் தீயாக பரவிய ஈழ ஆதரவுப் போராட்டங்களின் பின்னணியில் இவ்வாறு தப்பிச் சென்ற புலிகளே இருந்தனர் என்று அரசு சத்தியம் செய்யாத குறையாக அழுது புலம்பியது.

இதேவேளை புலிகள் கொள்வனவு செய்த நான்கு விமானங்களுடனும் ஏராளமான ஆயுதங்கள், போராளிகளுடனும் புலிகளின் தலைவர் பிரபாகரன் எரித்திரியாவில் இருக்கிறார் என்ற தகவலும் தென்னிலங்கையில் பரவி வருகிறது. அது சுத்தப் பொய் என்று அரசு மறுதலித் தாலும் கூட, அதனை நம்ப சிங்கள மக்கள் தயாராக இல்லை. அவர்கள் போர் வெற்றி என்ற மயக்கத்தில் இருந்து மீளத் தொடங்கி விட்டார்கள். அதனால் அரசு சொல்லும் எதையும் ஏன் எதற்கு என்ற ஆராய்வு இல்லாமல் அப்படியே ஏற்றுக்கொள்ள இனியும் அவர்கள் தயாராக இல்லை. இந்த நிலையில்தான் சிங்கள அரசியல் வாதிகளைக் கொல்ல ஜெனிவாவில் புலிகள் குறிவைத்துக் காத்திருக்கின்றனர் என்ற செய்தியையும் நம்புகிறார்கள். ஏனெனில் புலிகளின் தாக்குதல் உத்திகளும், செயற்றிறனும், மனோதிடமும் அவர்களுக்கு நன்கு தெரியும். தாம்தான் தாக்கினோம் என்ற எந்தத் தடயத்தையும் விட்டுவைக்காமல் கட்டுநாயாக்காவில் இருந்த விமானங்களை ஒரே இரவில் புலிகள் பற்றி எரிய வைத்ததை எப்படி மறப்பார்கள் அவர்கள்? அத்தகைய வல்லமையும், வீரமும் கொண்ட புலிகளுக்கு சுவிஸ்க்குச் செல்லும் அரசியல்வாதிகளை தடயமின்றிப் போட்டுத் தள்ளுவது என்பது தேநீர் குடிப்பதுபோல இலகுவான விடயமே என்று தென்னிலங்கை மக்கள் நம்புகிறார்கள்.

சர்வதேச நாடொன்றில் அதுவும் ஜனநாயகத்தின் உண்மையான மலர்வு இருப்பதாக சொல்லப்படும் சுவிஸில் சிங்கள அரசியல் வாதிகளை புலிகள் கொல்வார்கள் என்பது நம்ப முடியாத கதைதான். ஏனெனில் ஏற்கனவே ராஜீவ்காந்தியை புலிகளே கொன்றார்கள் என்ற கருதுகோளில்தான் இந்தியாவின் நிரந்தரப் பகையை புலிகள் சம்பாதித்தார்கள். அமெரிக்கா உள்ளிட்ட ஏராளமான நாடுகளின் தடைவிதிப்பை எதிர்கொண்டார்கள். மீளவும் அவ்வாறானதொரு அவப் பெயரை வலிந்து பெற்றுக் கொள்ள ஒருபோதும் அவர்கள் விரும்பப்போவதில்லை. சூடு கண்ட பூனை மட்டுமல்ல புலிகூட மீள அடுப்பங்கரை நாடாது. அதுவும் சர்வதேசம் தமிழர்கள் மீதான அக்கறையோடு செயற்படும் தருணத்தில் அதுவும் தமிழர்களுக்கான பிரேரணை நிறைவேற்றப்பட்டுவரும் ஜெனிவாவில் தாக்குதல் ஒன்றை நிகழ்த்த புலிகள் விரும்பமாட்டார்கள். ஏனெனில் அதன் மூலம் மீளவும் பயங்கர வாதிகள் என்ற பதிவு தமிழர்கள்மீது ஏற்பட்டு விடக்கூடும். ஆயினும் ஏதோஓர் இடத்தில் (அது சுவிஸாகவோ அல்லது வேறு நாடாகவோ இருக்கலாம்) ஒன்று திரண்ட புலிகள் மக்களின் சாவுக்கு பதிலடி கொடுத்தே தீருவது என்று முடிவெடுத்திருப்பதாக தகவல்கள் கசிகின்றன. இதனை எப்படியோ மோப்பம் பிடித்துக் கொண்ட புலிகளுக்கு எதிரான சக்திகளே புலிகளின் மீள்எழுச்சியை முளையிலேயே கிள்ளுவதற்காக சுவிஸில் மனித வேட்டைக்கு இரகசியப் புலிகள் காத்திருக்கிறார்கள் என்ற கதையை அவிழ்த்துவிட்டிருக்கக் கூடும்.

இதேவேளை இரகசியப் புலிகள் இருக்கிறார்கள் என்பதை மறுதலிக்க முடியாதுதான். ஆனால் தடயமின்றித் தாக்கும் வல்லமை கொண்ட புலிகள் தாம் நிலை கொண்டிருக்கும் தகவலை கசியவிடும் அளவுக்கு முட்டாள்கள் அல்லர். ஆனாலும் நெருப்பில்லாமல் புகையாது. சில வேளைகளில் சுவிஸில் வெண்பனிகளில் இருந்து கிளம்பும் பனிப்புகார் புகை போன்று தென்படுகிறதோ தெரியவில்லை.

## இரகசியப் புலிகள் - கருதுகோள் 01

"ஜெனிவாவுக்குச் செல்லும் இலங்கை அரசியல் வாதிகளை கொல்வதற்காக புலிகளின் சிறப்புத் தாக்குதல் அணி அங்கு நிலை கொண்டுள்ளது" என்று சுவிஸ் அரசு இலங்கைக்கு அறிவித்துள்ளதாக வெளிவந்த செய்தியால் ஒரு பரபரப்பு நிலை தொற்றியுள்ளது.

2009 மே பதினெட்டோடு புலிகளின் கதை முடிந்துவிட்டது என்று எந்த அரசு அறிவித்ததோ அதே அரசு அதற்கு முரணாக புலிகளின் இருப்புப் பற்றிய புதிய கதையாடல்களையும் சொல்லத்தான் செய்கிறது. அந்தக் கதையாடல்களின் வரிசையில் வந்துள்ள புதிய வரவுதான் 'சுவிஸில் நிலைகொண்டுள்ள புலிகளின் சிறப்புத் தாக்குதல் அணி' விடயமும். தேவாரம் பாடும் முன்னரும் பின்னரும் "திருச்சிற்றம்பலம்" சொல்வதுபோல, வடபகுதிக்கு வருகின்ற வெளிநாட்டுப் பிரதிநிதிகள் எல்லோரும் மறவாமல் சொல்லிச் செல்லும் ஒரு கருத்து,

"வடக்கில் அதிகரித்துள்ள படைப் பிரசன்னத்தால் மக்களின் இயல்பு வாழ்வு குழம்பியுள்ளது" என்பதுதான். எவ்வளவு காலம்தான் இத்தகைய சர்வதேசத்தின் கரிசனைகளை வெட்கம், சூடு, சுரணை இல்லாமல் தாங்கிக் கொண்டிருக்க முடியும். ஓரளவுக்காவது தமது இருப்பின் நியாயப்பாட்டை வலிந்தேனும் நிரூபிக்க வேண்டிய தேவை அரசுக்கும் படைத்தரப்புக்கும் உண்டு.

அதன் முதற்கட்டமாக தங்களுக்கு தாளம்போடுபவர்களின் வாய்களில் இருந்து "படைத்தரப்பு இருப்பதுதான் மக்களுக்கு பாதுகாப்பு" என்ற சாரப்பட சொற்களை வெளிவரவைத்துள்ளது அரசு. ஆனாலும் அவர்கள் அரசு கொடுத்த சாவியில் ஆடும் பொம்மைகள் என்பது ஏற்கனவே தெரிந்த விடயம் என்பதால், அந்தப் பொம்மைகளின் கருத்து எடுபடாமலே போயிற்று. எனவேதான் பொம்மைகளை நம்பாமல் தானே ஏதாவது உபாயமாக சிந்தித்து அடுத்த நகர்வை அரசு மேற்கொண்டுள்ளது.

'புலிகள் இருக்கும்போது எந்தவொரு நாடும் ஏன் படைகளின் பிரசன்னம் அதிகமாக இருக்கிறது என்று கேட்கவில்லைதானே. இப்போது புலிகள் என்ற நினைப்பில்தானே இப்படியெல்லாம் கேனக் கேள்வி கேட்கிறார்கள். பேசாமல் புலிகள் மீண்டும் வந்துவிட்டால் அவர்களின் கேள்வி இல்லாமல் போய்விடுமே' என்று வடிவேலுவின் பாணியில் 'ஆம் போட்டு' யோசித்ததன் விளைவே சுவிஸ் புலிகள் பற்றிய கதையாக இருக்கலாம் என்று சொல்லப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரிய உள்நாட்டுப் போரில் முகிழ்ந்துள்ள புதிய திருப்பங்கள்

■ ரெங்கன்

★ சிரியாவில் ஹெஸ்பொல்லா போராடுவது மோதலை விரிவுபடுத்திவிடும்- மூன் அச்சம்.
★ சிரிய ஆட்சியாளர்களுக்கு விமான எதிர்ப்பு ஏவுகணை- ரஷ்யா வழங்கும்.
★ புரட்சியாளர்களுக்கு ஆயுதம் வழங்கும் ஐரோப்பிய யூனியன் தடை நீக்கம்
★ ஜெனிவா சர்வதேச மாநாட்டை நடத்துவதற்கு யு.எஸ்- ரஷ்யா முயற்சி தீவிரம்

உலக நடப்புகள் ஒரு பார்வை





சிரிய படைகளுடன் இணைந்து ஹெஸ்பொல்லா இயக்கத்தினரும் புரட்சிவாதிகளுக்கு எதிராகப் போராடி வரும் அதேவேளை சிரிய அரசுக்கு விமான எதிர்ப்பு S300 ரக ஏவுகணைகளை வழங்க ரஷ்யா முடிவு செய்திருப்பதாக வந்துள்ள செய்தி சிரிய உள்நாட்டுப் போரை மேலும் விரிவடைய செய்துவிடுமோ என்ற அச்சம் உருவாகியுள்ளது.

சிரியாவில் போராடி வரும் இரு தரப்பினரையும் அமைதித் தீர்வொன்றுக்கு முன்வருமாறு வற்புறுத்துவதற்கான முயற்சிகளை அமெரிக்காவும் ரஷ்யாவும் மும்முரமாக எடுத்துவரும் நிலையில் இந்த செயற்பாடுகள் அந்த முயற்சிக்கு பாதகமாக இருந்துவிடக் கூடாது என்று ஐ.நா. ராஜதந்திர வட்டாரங்கள் கருதுகின்றன. ஹெஸ்பொல்லா இயக்கத்தினர் நேரடியாக சிரியாவில் போராட இறங்கியிருப்பது வேறு அமைப்புக்களையும் இதில் நேரடியாக இறங்கும்படி செய்துவிடக் கூடாது என்று அந்த வட்டாரங்கள் கருதுகின்றன.

ஆனாலும் ரஷ்யா ஏவுகணைகளை சிரிய படைகளுக்கு வழங்க எடுத்துள்ள முடிவை ஆதரித்து அது கருத்து வெளியிட்டுள்ளது.

ரஷ்ய பிரதி வெளியுறவு அமைச்சர் செர்கே றேயாப் கோவ் கூறுகையில் ரஷ்யா வழங்கவிருக்கும் ஏவுகணை பொறி அமைப்பானது வெளிநாடுகளின் தலையீட்டைத் தடுத்து நிறுத்தும் ஒரு செயற்பாடாகும் என்றார். இந்த ஏவுகணை அமைப்பினை சிரியாவுக்கு வழங்குவதற்கான ஒப்பந்தம் பல ஆண்டுகளுக்கு முன் செய்து கொள்ளப்பட்டது என்றும் கூறினார்.

நேட்டோவுக்கான ரஷ்ய தூதுவர் கூறுகையில் தங்கள் நாடு இது விடயத்தில் முழுக்கவும் சர்வதேச சட்டங்களுக்கமையவே செயற்படுகிறது என்றார்.

சிரியாவில் தற்போதுள்ள நிலைமைகளை எந்த வகையிலும் மாற்றி அமைக்கும் வகையில் தாங்கள் செயல்படவில்லை என்றும் ரஷ்ய தூதுவர் அலெக்ஸாண்டர் குருஷ்கோ கூறினார்.

சிரியாவில் ஆட்சி மாற்றம் கோரி போராடும் புரட்சிப் படைகளுக்கு எதிராக அரச படைகளுடன் சரிசமமாக நின்று ஹெஸ்பொல்லா இயக்கத்தினர் போராடி வருகின்றார்கள் என்ற செய்தி குறித்து ஐ.நா. செயலாளர் நாயகம் கவலை தெரிவித்திருக்கிறார். ஹெஸ்பொல்லாக்கள் இவ்வாறு போராடுவதானது சிரிய போரை வேறு நாடுகளுக்கும் விஸ்தரித்துவிடக் கூடிய அபாயம் தோன்றியிருப்பதாக அவர் அச்சம் தெரிவித்துள்ளார்.

லெபனானைச் சேர்ந்த சையித் இயக்கத்தின் பிரிவான ஹெஸ்பொல்லா அமைப்பின் தலைவர் ஹாசன் நர்ஸல்லா அண்மையில் விடுத்த அறிக்கையொன்றில் சிரிய அரச படைகளுக்குத் தமது இயக்கம் வெற்றியைத் தேடிக் கொடுக்கும் என்று அறிவித்துள்ளார்.

ஆட்சியாளர்களின் படைகளுடன் சேர்ந்து போராடும் தமது ஹெஸ்பொல்லா படையினர் ஆட்சியாளர்களுக்கு வெற்றியைக் கொண்டு வந்து தருவார்கள் என்று ஹெஸ்பொல்லா தலைவர் தமது அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

சகல வீரர்களுக்கும், சகல முஜாஹெதீன்களுக்கும் மற்றும் சகல கௌரவத்துக்குரிய மக்களுக்கும் நான் தெரிவித்துக் கொள்வதென்னவென்றால் நான் எப்பொழுதுமே வெற்றியைத் தேடித் தருவேன் என்றே வாக்களித்திருக்கிறேன். இப்பொழுது மீண்டும் ஒருமுறை அதே வாக்குறுதியை வழங்குகிறேன் என்று கூறியுள்ளார்.

லெபனானிலிருந்து இஸ்ரேலிய படைகள் வாபஸ் பெறப்பட்டதை நினைவு கூரும் நிகழ்வில் ஹெஸ்பொல்லா தலைவர் பேசினார். சிரியன் ஆட்சியிலுள்ள அதிபர் பாஷர் அல்-அசாத்தின் தோழமை சக்திகளுக்கு நாங்கள் தொடர்ந்தும் ஆதரவளித்து வருவோம். அதற்கான பொறுப்புக்களையும் தியாகங்களையும் ஏற்றுக் கொள்வோம் என்றார் அவர். இந்தப் போர் எங்களுடையது. உங்களுக்கு வெற்றியை நாங்கள் உறுதியளிக்கிறோம் என்றார்.

இஸ்ரேலுடனான போரின்போது பின் பக்கபலமாக இருந்தது சிரியாதான். எமது முதுகெலும்பாகச் செயற்பட்டவர்கள் அவர்கள் பாதிப்புக்குள்ளாகும்போது நாம் கைகளைக் கட்டிக் கொண்டிருக்க முடியாது என்றார்.

## ஐரோப்பிய யூனியன் தீர்மானம் அமைதிக்கு ஆபத்து

சிரியாவில் போரிடும் புரட்சிப் படைகளுக்கு ஆயுதம் வழங்குவதற்கான தடையை கைவிடுவது என்று ஐரோப்பிய யூனியன் எடுத்துள்ள முடிவு குறித்து ரஷ்யா கவலை தெரிவித்துள்ளது. இந்த முடிவானது சிரியா ஆட்சியாளர்களுக்கு பாதிப்பு ஒன்றையும் ஏற்படுத்தாது. ஆனால் சிரியாவில் அமைதியைத் தோற்றுவிப்பதற்கு சர்வதேச மட்டத்தில் எடுக்கப்படவிருக்கும் அமைதி முயற்சிகளைப் பெரிதும் பாதிப்பதாய் இருக்கும் என்று ரஷ்யா கூறியுள்ளது.

ரஷ்ய பிரதி பாதுகாப்பு அமைச்சர் செர் ஜே.ஹையப்கோவ் பத்திரிகையாளருக்கு கருத்துத் தெரிவிக்கையில் ஐரோப்பிய யூனியனின் முடிவு சர்வதேச அமைதி மாநாடு ஒன்றை கூட்டுவதற்கு எடுக்கப்பட்டு வரும் முயற்சிகளைப் பாதிக்கும் என்றார்.

சிரிய புரட்சிவாதிகளுக்கு ஆயுதம் வழங்குவதைத் தடுக்கும் திட்டத்தைக் கைவிடும்படி பிரான்ஸும் பிரிட்டனும் வற்புறுத்தி வந்ததன் காரணமாகவே ஐரோப்பிய யூனியனால் இந்த முடிவு எடுக்கப்பட்டது. ஐரோப்பிய யூனியனின் இந்த முடிவு உடனடியாக செயற்பாட்டுக்கு வரமாட்டாது என்றும் அமைதி முயற்சி பாதிப்படைய செய்ய யூனியன் விரும்பவில்லை என்றும் பிரான்ஸ் அதிகாரிகள் கூறினார்கள்.

சிரியா தொடர்பாக 2 ஆவது ஜெனிவா சர்வதேச மாநாட்டை கூட்டுவதென்று ரஷ்யாவும்- அமெரிக்காவும் ஏற்கனவே முடிவு செய்துள்ளன. இந்த மாநாடு பெரும்பாலும் அடுத்த மாதம் இடம்பெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. சிரியாவில் உள்நாட்டுப் போரில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரையும் அமைதிப் பேச்சில் ஈடுபடச் செய்வதற்கு இரு வல்லரசுகளும் முயற்சி எடுத்துள்ளன.

## யு.எஸ் ரஷ்யா அமைச்சர்கள் சந்திப்பு

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோன் கெரி மற்றும் ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்கே லாங்ரோவும் சிரிய விவகாரம் தொடர்பாக ஆலோசிப்பதற்காக கடந்த வாரம் பாரிஸ் நகரில் சந்தித்து பேசினார்கள்.

சிரியாவில் அமைதியைத் தோற்றுவிப்பது அதில் பங்கேற்க வேண்டிய தரப்புக்கள் மற்றும் இடைக்கால அரசு ஒன்றை ஏற்படுத்துவது போன்ற விடயங்கள் இந்த சந்திப்பில் விவாதிக்கப்பட்டதாக ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த அமைதி மாநாட்டை நடத்துவதற்கு அமெரிக்காவும் ரஷ்யாவும் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டிருப்பதாக அமெரிக்க அமைச்சர் பத்திரிகையாளர்களிடம் அந்த சந்திப்பின் பின்னர் தெரிவித்தார்.

மாநாட்டில் பங்குபற்ற வேண்டிய தரப்புகள் குறித்து குறிப்பாக அரசு தரப்பிலும் புரட்சிவாதிகள் தரப்பிலும் பங்குபற்ற வேண்டியவர்கள் குறித்து விவாதிக்கப்பட்டது என்று ரஷ்ய அமைச்சர் லாவ்ரோவ் கூறினார்.

சிரிய விவகாரத்தில் அக்கறை கொண்ட தரப்புகளில் எவையெல்லாம் மாநாட்டில் கலந்துகொள்ள வேண்டும் என்பது பற்றியும் ஆராயப்பட்டதாக அவர் கூறினார்.

மாநாட்டில் ஈரான் கலந்துகொள்ள வேண்டும் என்று ரஷ்யா ஆலோசனை முன்வைத்துள்ளது. கடந்த வாரம் ஜோர்தானில் கூடிய புரட்சிவாதிகள் ஈரான் மாநாட்டில் பங்கெடுப்பது தொடர்பாகக் கருத்தொற்றுமை ஏற்படாமல் பிரிந்தனர். மாநாடு வெற்றி பெறுவதற்கான சூழ்நிலை இருக்கின்றது. அதனை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள நாங்கள் விரும்புகிறோம் என்றார் அவர்.

★★★

## தாயை மீட்ட தனையன்

தாய் சிறையில் இருக்கும் போது அங்கேயே பெற்றெடுத்த அவருடைய மகன் வளர்ந்து பெரியவனாகி தொழில்செய்து பணம் சேமித்து சிறையில் வாடிய தன் தாயை சிறையில் இருந்து மீட்டெடுத்திருக்கிறார். இந்த உருக்கமான சம்பவம் இந்தியாவில் அலிகர் மாவட்டத்தில் நிகழ்ந்துள்ளது.

அலிகர் மாவட்டத்தில் இடம்பெற்ற கொலையொன்றையடுத்து விஜயா என்ற இளம் பெண் கைது செய்யப்பட்டிருந்தார். விஜயா என்ற 48 வயதான அப்பெண் 4 மாதம் கற்பிணியாக இருந்தபோது 1993 ஆம் ஆண்டு கைதுசெய்யப்பட்டார். 1994 ஆம் ஆண்டு அந்தப் பெண்ணுக்கு அலிகர் நீதிமன்றம் 10,000 ரூபாய் பிணையில் செல்ல அனுமதித்தது. ஆனால் கணவன் கைவிட்டு சென்றுவிட்டதால் பிணை செலுத்த வழியில்லாமல் சுமார் 20 வருடங்கள் சிறையில் வாட நேர்ந்தது.

தமது கிராமத்தில் நடந்த கொலைக்கும் தமக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்று விஜயா மறுத்து வந்தார். சிறையில் இருந்தபோதே குழந்தை பிறந்தது. அதன் பின் தாயும் பிள்ளையும் உத்தரப் பிரதேசத்தில் லக்னோவிலுள்ள நாரி நிகேதன் சிறைக்கு அனுப்பப்பட்டனர். மகன் கன்ஹாயாவுக்கு 11 வயதானபோது அவர் சிறுவர் நன்னடத்தை சிறைக்கு அனுப்பப்பட்டார். கடந்த வருடம் விடுதலையாகும் வரை அவர் அங்கேயே இருந்துள்ளார்.

விடுதலையானதன் பின்னர் கன்ஹாயாவுக்கு ஒரு தொழிற்சாலையில் தொழில் கிடைத்தது. அதன் மூலம் பணம் சேமித்த அவர் இப்போது பத்தாயிரம் ரூபாய் பணம் செலுத்தி நீதிமன்ற உத்தரவுடன் தாயை மீட்டுள்ளார். கடந்த மே 5 ஆம் திகதி சிறைச்சாலைக்கு வெளியில் தாயும் மகனும் ஒன்று சேர்ந்தனர். விஜயாவின் கதை ஆச்சரியமானது. அவள் மகன் சிறையிலேயே பிறந்து வளர்ந்து தாயை சிறையில் இருந்து மீட்டுள்ளான் என்று வியப்புடன் கூறுகிறார் நாரிநிகேதன் சிறைமேல் அதிகாரி ஷாஷி சிவாஸ்தாவா. ★

## அசைபோட ஒரு விடயம்-81

### புதிர்களுக்கான விடைகள்

1. அமெரிக்க அதிபர்,
2. மூன்றாமவருக்கு வழுக்கைத்தலை,
3. இரகசியம்,
4. ஈரவெங்காயம்,
5. கால்அடி, 6. இருள்,
7. இரத்தவங்கி,
8. ட்ரான்சிஸ்டர்,
9. யன்னல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மரக்கறியும் கலையாகி மனதை மயக்கும்












வழமையாக நாம் சமையலுக்குப் பயன்படுத்தும் மரக்கறி வகைகளைக் கொண்டு பல்வேறு கலைவடிவங்களை ஆக்க முடியும். மரக்கறிகளுக்குள் மறைந்திருந்த உருவங்களுக்கு நீங்கள் கூட உயிர் கொடுக்கலாம். அப்படி உயிர்பெற்ற சில மரக்கறிக் கலைவடிவங்கள் உங்களுக்காக...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கொமர்ஷல் வங்கியின் சேமிப்பு ஒளியில் இணைந்து இலங்கையின் மிகச்சிறந்த வங்கி வழங்கும் விசேட பிரதிலாபங்களுடன், பரிசுகளையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

நீங்களும் அண்மையிலுள்ள கொமர்ஷல் வங்கிக் கிளைக்கு வாருங்கள்.

COMMERCIAL BANK

தொடர்ந்து 15 வருடங்களாக இலங்கையின் மிகச்சிறந்த வங்கி - குளோபல் பினான்ஸ் USA

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

+94 11 2 353 333 www.combank.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாபகம்

## சுவாரஸ்யமான தகவல்கள்

-தமிழ்

'வீட்டுக்கு வரும்போது தேங்காய் எண்ணெய் வாங்கிக் கொண்டு வரச் சொல்லி எத்தனை தடவை சொன்னாலும் இந்த மனிசன் மறந்து போட்டு வந்து நிற்கிறார்'' என அம்மாவிடம் பேச்சு வாங்கும் அப்பாவைப் பார்க்க பாவமாக இருக்கும். ஞாபகம் என்பது எவ்வளவு அவசியம் என்பதை பரீட்சை எழுதும் மாணவர்கள் நன்கு உணர்ந்திருப்பார்கள். வினாத்தாள் கையிலிருக்கும் போது நினைவுக்கு வராத விடைகள் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே வந்ததும் ஞாபகத்துக்கு வரும்போது 'அடடே' என்று சொல்வதைத்தவிர என்ன செய்ய முடியும். இப்ப டியான நினைவுகள் என்பன நீண்ட காலத்துக்கு சேமிக்கப்பட்ட தகவல்கள் என விஞ்ஞானிகள் வரையறை செய்வார்கள். கண், காது, மூக்கு, நாக்கு, உடல் தொடுகை போன்ற பல்வேறு புலன்கள் மூலம் கிடைக்கும் தகவல்கள் மூளைகள் மூலம் கிடைக்கும் தகவல்கள் மூளையில் சேமிக்கப்படும் போது அது ஞாபகத்துக்கு அடித்தளமாகிறது.

சாதாரணமாக விஞ்ஞானிகள் நினைவுகள் ஒரு சில கணங்களுக்கு நிற்கும். புலன் ஞாபகம் (Sensory Memory), ஏறத்தாள அரை மணி நேரம் மட்டுமே நிற்கும் குறுகிய கால ஞாபகம் (Short Term Memory), நீண்ட காலமாக நிற்கும் நீண்ட கால ஞாபகம் (Long Term Memory) என மூன்றாகப் பிரிக்கிறார்கள். உண்மையில் இந்த மூன்று ஞாபகங்களும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு டையவை.

மனித உடலில் சகல புலன்களில் இருந்தும் வருகின்ற நரம்பு கணத் தாக்கங்கள் மில்லி செக்கனில் நினைவில் நிற்கும். அந்த நினைவில் சிறிது ஆழக் கவனம் செலுத்தும்போது அவை ஏறத்தாள 30 செக்கன் வரை நிலைத்து நிற்கும். இந்த நேரத்திற்குள் மீண்டும் ஒருமுறை அது பற்றி நினைத்தால் அது நீண்ட காலத்திற்கு நிலைத்திருக்கும், ஞாபகத்துக்குள் சென்று பதியும்.

உதாரணமாக வீதியில் நடந்து செல்லும் போது அதிக ஒலிகளை உங்கள் காதும், நிறையக் காட்சிக ளை உங்கள் கண்ணும் மூளைக்கு அனுப்பிக் கொண்டிருக்கும். இவை சாதாரணமாக புலன் ஞாபகமாக இருந்து ஒரு நொடிப் பொழுதிலே அழிந்து விடும். அதேநேரம் பாதை ஓரக்கடையில் அழகிய மாம் பழங்கள் அடுக்கப்பட்டு அதன் மேல் மாம்பழம் ஒன்று பத்து ரூபாய் (அட இவ்வளவு சீப்பா?) எனும் விலைப் பட்டியலும் இருக்கும்போது அது பற்றி நீங்கள் கவனம் செலுத்துகிறீர்கள். அட நல்ல மாம்பழம் பத்து ரூபாவுக்கா? என வியந்து கொண்டு இருக்கும் போது அது குறுகிய கால நினைவினுள் பதிந்து விடும். இந்தக் காட்சி மீண்டும் மீண்டும் நினைக்கப்பட அது நீண்டகால ஞாபத்தினுள் சென்று விடும். ஓரிரு வாரங்கள் கழிந்த பின்னர் உங்கள் நண்பரிடம் ''நல்ல மாம்பழம் போன வாரம் பத்து ரூபா விற்றது'' என சொல்லக்கூடிய இந்த நீண்ட கால ஞாபகம் உதவுகிறது.

இதைத் தவிர ஞாபகம் என்பது உங்களை அறியாமலேயே உங்களுக்கு உதவுகிறது. அதனால் தான் யாரும் சொல்லாமலே, அல்லது நாமாக நினைக்காமலே ஜீன்ஸ் போட்ட பின் தான் காலணி போட வேண்டும் என்ற ஒழுங்கு அங்கே நடை பெறுகிறது. ஞாபக மறதியாகக் காலணியை மாட்டி விட்டு பின்னர் ஜீன்ஸ் போட முயன்றால் அது எப்படி இருக்கும்? என்று கற்பனை செய்து பாருங்கள்.

ஞாபகம் என்பது மூளையில் இரசாயணங்களாகவும் நரம்பு இணைப்புக் களாகவும் சேமிக்கப்பட்டிருக்கின்றது என விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக் கிறார்கள். நினைவுச் சேமிப்பு மூளையின் முற்பாகத் தில் (நெற்றிப் பகுதியில்) இருக்கிறது. ஆயினும் நினைவு மீட்கும்போது மூளையின் பல்வேறுபட்ட பகுதிகளுக்கும் அதற்கு உதவியாகச் செயற்படுகிறது. சேமிக்கப்பட்ட தகவல் தொலைந்து போகாமல் இருக்க அத்தகவல்களை பல்வேறு வகைகளில் தொடர்புபடுத்தி மூளை சிக்கல் வலையமைப்பாக வைத்திருக்கும்.

உதாரணமாகக் 'கன்றுக் குட்டி' என்பது எங்கள் மாடு ஈன்றது. எங்கள் வீட்டுக் கன்றுக் குட்டி வெள்ளை. 'கன்று பால் குடிக்கும்', 'பால் வெள்ளை நிறம்' என்ற இலட்சக்கணக்கான தகவல்களுடன் திரண்டு காணப்படும். எனவே மூளை தகவல்களை மீண்டும் தேடும் போது இவற்றில் ஏதாவது ஒரு வழியைப் பிடித்து கன்றுக் குட்டியைப் பற்றிய தகவல்களைப் பெற்றுவிடும். அட.. கூகுள் தேடல் இப்படி தானே தேடல் வேலை பார்க் கிறது!



பொதுவாக நாம் நினைவு வைத்திருக்கும் ஆற்றலைப் பல்வேறு முறைகளில் அதிகரித்துக் கொள்ள முடியும் என்று மருத்துவ விஞ்ஞானிகள் நிரூபித்துள்ளார்கள். ஒரு பொருளை இன்னொன்றுடன் தொடர்புபடுத்தி வைத்திருப்பது திரும்ப திரும்ப நினைப்பது அல்லது மனத்தினுள் ஒத்திகை பார்ப்பது.

(தொடரும்)

# வெற்றிலை, பாக்கு போடுவதன் மகிமை



-மிது

பழம்தமிழர் மரபாகட்டும் இந்தியப் பண்பாடாக இருக்கட்டும் அவை எல்லாமே காரண காரியத்தோடு உருவாக்கப்பட்டது தான். மன்னர்கள் முடிசூடுவது வரை கடைப்பிடிக்கப்படும் சடங்குகளில் பல்வேறு வாழ்க்கைத் தத்துவங்கள் அடங்கி உள்ளன. வாழ்க் கையை நெறிப்படுத்தும் தத்துவ முறைகள் மட்டுமல்லாது உடலை வளப்படுத்தும் நல்ல காரியங்கள் கூட அதில் அடங்கி இருக்கும்.

வெற்றிலை பாக்கு தரிப்பதில் கூட இப்படி ஒரு நல்ல விடயம் அடங்கி இருக்கிறது. இது வெற்றிலை போடும் அதிகமானோருக்கு தெரியுமா என்பது எமக்குத் தெரியாது. பொதுவாக வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு ஆகியவற்றை சரியான வீதத்தில் கலந்து சுவைக்கும்போது அந்த சுவை உடலையும் மூளை யையும் சுறுசுறுப்படையச் செய்கிறது; அதே நேரம் இதயத்தையும் வலுப்படுத்துகிறது.

மனித உடலுக்கு நோய் ஏன் வருகிறது என்பதற்கான காரணத்தை ஆயுள் வேதம் சொல்லும் போது உடம்பில் உள்ள வாதம், பித்தம், சிலேத்துமம் போன்றவைகள் சரியான விகிதத்தில் இல்லாமல் கூடும் போதோ குறையும் போதோ நோய் வருகிறது என்று சொல்கிறார்கள். இது முற்றிலும் சரியான காரணமாகும் இந்த மூன்று சத்துக் களும் சரியான கோணத்தில் உடம்பில் அமைந்துவிட்டால் நோய் வராது என்பதை விட நோயை எதிர்த்து நிற்கும் ஆற்றல் உடம்புக்கு வருகிறது. இந்த மூன்று நிலைகளையும் சரியான படி வைக்க தாம்பூலம் உதவி செய்கிறது.

பாக்கில் இருந்து கிடைக்கும் துவர்ப்பு பித்தத்தை கண்டிக்கக் கூடியது. சுண்ணாம்பில் உள்ள காரம் வாதத்தை போக்கவல்லது. வெற்றிலையில் உள்ள உறைப்பு கபத்தை நீக்கி விடும். இப்படிப் பார்த்தால் தாம்பூலம் போடுதல் என்ற ஒரே பழக்கத்தில் உடம்பில் உள்ள மூன்று தோஷங்களையும் முறைப் படுத்தும் நிலை அமைந்து விடுகிறது. இதுமட்டுமல்லாது தாம்பூலத்தோடு சேர்க்கும் ஏலம், கராம்பு, ஜாதிபத்திரி போன்றவைகள் வாயில் உள்ள கிருமிகளை மட்டுப் படுத்துகிறது. ஜீரண சக்தியை அதிகரிக்கவும் செய்கிறது.

தாம்பூலம் தரிப்பதில் இத்தனை நல்ல விடயங்கள் அடங்கி உள்ளன. அதனால் தான் எமது விருந்து களில் வெற்றிலைக்கு முக்கிய பங்கு கொடுக்கப் படுகிறது. தாம்பூலம் போடுவது எந்த இடத்தில் கெட்ட பழக்கமாக மாறுகிறது என்றால் வெற்றிலை, பாக்கு சுண்ணாம்போடு புகையிலையும் சேரும்போது தீய பழக்கமாக மாறி விடுகிறது. எமது முன்னோர்களின் தாம்பூலத்தில் புகையிலை கிடையாது. புகையிலை என்பது இடையில் சேர்க்கபட்ட தீய பழக் கமாகும்.

இப்போது வயதானவர்களுக்கு இருக்கக்கூடிய அபாயங்களில் மிக முக்கியமானது எலும்பு முறிவு ஆகும். சிறிதளவு முறிவு ஏற்பட்டு விட்டாலும் முதுமையின் காரணமாக பெரிய பிரச்சினைகளை ஏற்படுத்தி விடுகிறது. பல நேரங்களில் சாதாரண எலும்பு முறிவே மரணத்தை பரிசாகத் தந்து விடுகிறது. ஆனால் பத்து இருபது வருடங்களுக்கு முன்பு முதியவர்களுக்கு எலும்பு முறிவு என்பது அவ்வளவு விரைவாக ஏற்படாது. இதற்குக் காரணம் அவர்களிடமிருந்த தாம்பூலம் தரிக்கும் பழக்கமே. ஒரு குறிப்பிட்ட அளவு சுண்ணாம்பு சத்து உடம்புக்கு நேராகக் கிடைக்கும் போது எலும்புகள் வலுப்பட்டு விடுகின்றன.

தாம்பூலம் போடுவதற்கென்று தனிப்பட்ட நெறிமுறையே எமது முன்னோர்களால் வகுக்கப் பட்டிருக்கிறது. காலையில் சிற்றுண்டிக்கு பின்னர் போடும் தாம்பூலத்தில் பாக்கு அதிகமாக இருக்க வேண்டும். காரணம் மதிய நேரம் வந்து வெப்பம் அதிகமாகும் போது உடம்பில் பித்தம் ஏறாமல் அது பாதுகாக்கும். அதே போல மதிய உணவுக்குப் பின்னர் சுண்ணாம்பு சத்து அதிகம் எடுத்துக் கொள்ள வேண்டும். அது உணவில் உள்ள வாதத்தை அதாவது வாயுவைக் கட்டுபடுத்தும்.

இரவில் வெற்றிலையை அதிகமாக எடுத்துக் கொண்டால் நெஞ்சில் கபம் தங்காது. இந்த முறையில் தான் தாம்பூலம் தரிக்க வேண்டும் என்பது எமது முன்னோர்களின் கட்டளை. இதை மீறும் போது தான் சிக்கல் வருகிறது.

> “ தாம்பூலம் போடுவதற்கென்று தனிப்பட்ட நெறிமுறையே எமது முன்னோர்களால் வகுக்கப் பட்டிருக் கிறது. காலையில் சிற்றுண்டிக்கு பின்னர் போடும் தாம்பூலத்தில் பாக்கு அதிகமாக இருக்க வேண்டும். காரணம் மதிய நேரம் வந்து வெப்பம் அதிகமாகும் போது உடம்பில் பித்தம் ஏறாமல் அது பாதுகாக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வீட்டை சுமந்து செல்லும் நபர்



இடத்துக்கிடம் கொண்டு செல்லக்கூடியதாக மூங்கில்கள் மற்றும் பொலித்தீனினால் தனது வீட்டை உருவாக்கியுள்ளார்.

சீனாவைச் சேர்ந்த ஒருவர் தான் வசிக்கும் வீட்டை தோளில் சுமந்து 435 கிலோமீற்றர் தூரம் நடந்துள்ளார்.
குவாங்ஸி மாகாணத்தைச் சேர்ந்த லியூ லிங்சாவோ எனும் இந்த நபர் இடத்துக்கிடம் கொண்டு செல்லக்கூடியதாக மூங்கில்கள் மற்றும் பொலித்தீனினால் தனது வீட்டை உருவாக்கியுள்ளார்.
60 கிலோ எடையுள்ள இந்த வீட்டை தான் போகுமிடமெல்லாம் சுமந்து செல்கிறார் லியூ லிங்சாவோ. நான் எங்கு வேண்டுமானாலும் செல்ல முடியும்; தங்குமிடப் பிரச்சினை எனக்கில்லை; நான் சுதந்திரமானவனாக உள்ளேன் என்கிறார் லியூ.
இந்த வீடு சுமார் ஒரு வருட காலமே பயன்படுத்தக் கூடியது; மூன்றாவது தடவையாக இத்தகைய வீட்டை உருவாக்கியுள் ளதாக அவர் தெரிவித்தார்.
இவர் நடந்து செல்லும் போது வீதியோரங்களில் வீசப்பட்டி ருக்கும் பிளாஸ்டிக் போத்தல்களை எடுத்து விற்பனை செய்வதன் மூலமும், சூழலை சுத்தப்படுத்துவதன் மூலமும் தனக்கு வருமானம் தேடிக்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.



# நடமாடும் 'கழிப்பறை'

உலகம் மிகவேகமாக இயங்கிக்கொண்டிருக்கையில் அதற்கு ஈடுகொடுப்பதற்கு மனிதனும் நிமிடத்துக்கு நிமிடம் ஏதோவொன்றை செய்துகொண்டுதான் இருக்கின்றான்.
போகவேண்டிய இடத்துக்குப் போய்கொண்டே இயற்கைக் கடன்களை முடிக்கும் வகையிலான நடமாடும் கழிப்பறையை குழாய் பொருத்துனர் ஒருவர் தயாரித்துள்ளார்.
இந்தக் கழிப்பறை உலகில் மிகவும் வேகமாக செயல்படும் கழிப்பறையாக இருக்கின்றது என்று சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.
சுமார் 140 வலுகொண்ட மோட்டார்சைக்கிள் இயந்திரத்தைக் கொண்டே அது தயாரிக்கப்பட்டுள்ளது.
கொலின் பர்ஸ் என்ற நபரே இதனை உருவாக்கியுள்ளார். இதற்காக அவர் மூன்று மாதங்களை செலவிட்டுள்ளார். மிகவும் வேகமாக செயற்படக்கூடிய இந்த நடமாடும் கழிப்பறையில் நீரும் நிரப்பப்பட்டு காணப்படுகின்றது.
நடமாடும் கழிப்பறையின் கைப்பிடியில் உள்ள பொத்தானை அழுத்தும்போது நிரப்பப் பட்டுள்ள நீர் இயல்பாகவே கழிப்பறையை சுத்தமாக்கும்.
இந்த கழிப்பறை வாகனத்தில் செய்தித் தாள்களை கொழுவிக் கொள்வதற்கான வசதிகளும் காணப்படுகின்றமை குறிப் பிடத்தக்கது.





# ஆடை அணிந்த பின்னரும் 'அயன்' செய்ய சாதனம்

கணினியின் வருகையைத் தொடர்ந்து அறிமுகமான USB தொழில்நுட்பம் தற்போது மிக வேகமாக பிரபலமடைந்து வருகின்றது. இதன் காரணமாக பல துணைச்சாதனங்களும் USB இணைப்பானை அடிப்படையாகக் கொண்டு வெளிவந்த வண்ணம் உள்ளன.
இவற்றின் தொடர்ச்சியாக தற்போது USB இணைப்பானில் இணைத்து ஆடைகளை அயன் செய்யக்கூடிய அதி நவீன சாதனம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. செல்லும் இடங்களுக்கு எல்லாம் இலகுவாக கூடவே எடுத்துச் செல்லக் கூடிய அளவில் மிகவும் கையடக்கம் உள்ளதாகக் காணப்படும் இந்தச் சாதனத்துக்கு, USB இணைப்பான் மூலம் மின்கலங்களிலிருந்து கிடைக்கும் மின்சக்தி வழங்கப்படுகின்றது.





# 5 கோடிக்கு விலைபோன 'புறா'



பந்தயங்களில் கலந்து கொள்ளும் மிக வேகமாகப் பறக்கும் புறா ஒன்றைச் சீனாவைச் சேர்ந்த தொழிலதிபர் ஒருவர் 5 கோடி 54 லட்சத்துக்கு வாங்கியுள்ளார்.
அவர் பந்தயங்களில் மின்னல் வேகத்தில் பறக்கும் சக்தி வாய்ந்த புறாவுக்கு 'போல்ட்' என்று பெயரிட்டுள்ளார்.
தற்போது ஒரு வயதாகும் இந்தப் புறாவே அதிக விலைக்கு விற்கப்பட்ட ஒரு பறவை என்ற சாதனையை தன்னகப்படுத்தியுள்ளது.
கடந்த ஆண்டு ஜனவரியில் ஒரு பறவை 322, 000 அமெரிக்க டொலர்களுக்கு விற்பனையானதே இதுவரை சாதனையாக இருந்தது.
பெல்ஜியத்தில் இடம்பெற்ற பந்தயங்களில் கலந்துகொள்ளும் வேகமான பறவைகள் ஏலத்திலேயே இந்த 'போல்ட்' எனும் புறாவை சீனாவைச் சேர்ந்த தொழிலதிபர் வாங்கியுள்ளார்.
இந்த ஏலத்தில் பெரும்பாலான பறவைகளை சீனா மற்றும் தாய்வான் நாட்டிலிருப்பவர்களே வாங்கியுள்ளனர்.
இந்தப் புறாவை வளர்த்த லியோ ஹெரிமன்ஸ் பெல்ஜியப் புறாக்களை வளர்ப்பதில் பிரபலமானவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

VI

# அமெரிக்காவில் டைட்டானிக் மியூசியம்





அமெரிக்காவில் அமையப் பெற்றுள்ள டைட்டானிக் அருங்காட்சியகம் பிரஸ்டன் என்கிற சிறிய நகரத்தில் உள்ளது. பிரமாண்ட அருங்காட்சியகம் தான். இங்கு டைட்டானிக் சுற்றுலா வருபவர்களுக்கு சில அதிச யங்கள் காத்து இருக்கின்றன. இவற்றுள் குறிப்பிடத்தக்க ஒன்று இவர்களின் சுற்றுலாவில் ஒவ்வொரு வருடமும் ஒரு பயணி கூடவே பயணிக்கும் ஏற்பாடுள்ளது. இப்பயணி குறித்த விவ ரங்களை சுற்றுலா வருபவர் அறிந்து கொள்வார். அந்தப்பயணி டைட்டானிக் கப்பல் விபத்தில் தப்பிப் பிழைத்தவர்களில் ஒருவரா ? இல்லையா ? என்கிற விவரத்தை சுற்றுலா முடிவில் தெரிந்து கொள்ள முடியும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாத்துகளின் நடைபவனி

Peabody எனும் நட்சத்திர ஹோட்டல் அமெரிக்காவில் அமைந்துள்ளது. இங்குள்ள சிறப்பம்சம் என்னவெனில் தினமும் மாலை ஐந்து மணிக்கு ஹோட்டலின் நடுவிலுள்ள தடாகத்தில் இருந்து வாத்துகள் சிவப்பு கம்பள விரிப்பில் நடந்து செல்லும். இதை பார்ப்பதற்கு ஹோட்டலின் வாடிக்கை யாளர்கள் பெருமளவில் கூடுவது வழக்கம். 1932 ஆண்டு தொடக்கம் இடம் பெறும் இந்த அணிவகுப்பு ஹோட்டலுக்கான தனித்துவத்தை தருவதாகவும் நிர்வாகத்தினர் கூறுகின்றனர்.



# இதற்காகவா இத்தனை போராட்டம்?





லண்டனில் உள்ள ஜோர்க் என்ற இடத்தில் உள்ள முஸ்லிம் பள்ளிவாசல் ஒன்று இங்கிலாந்து மக்களுக்கு எதிரான செயலில் ஈடுபடுவதாகக் குற்றம்சாட்டி "இங்கிலிஷ் டிபென்ஸ் லீக்ஸ்" என்ற அமைப்பு ஒரு ஆர்ப்பாட்டத்தை அந்தப் பள்ளிவாசலுக்கு முன்னால் நடத்தியது. கிட்டத்தட்ட மூன்றரை மணித்தியாலங்களாக நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தை ஒரு வழிக்குக் கொண்டுவர பொலிஸார் எடுத்த முயற்சிகளும் பயனளிக்க வில்லை. ஒரு கட்டத்தில் கத்திக் கத்தியே ஆர்ப் பாட்டக்காரர்கள் களைத்துப் போனார்கள்.

அப்போது பள்ளிவாசல் கதவைத் திறந்து வந்த இஸ்லாமியர்கள் ஆர்ப்பாட்டக் காரர்களை பள்ளிவாசலுக்குள் அழைத்துச் சென்று தேநீரும், பிஸ்கட்டும் கொடுத்து உபசரிக்க ஆர்ப்பாட் டக்காரர்கள் வெட்கித் தலைகுனிந்தார்கள்.

சுலோகங்களைத் தூக்கி எறிந்துவிட்டு பள்ளிவாசல் நிர்வாகத்தினரோடு கூடி நின்று புகைப்படத்துக்குப் 'போஸ்' கொடுக்குமளவுக்கு நெருக்கமாகிவிட்டார்கள். இலங்கையிலும் ஒரு பிளேன் கோப்பியோடு கப்சிப்பாகிவிடும் அரசியல் வாதிகளுக்கு லண்டன்காரர்களும் குறைந்தவர்கள் அல்லர் போலும்.





தொழில் வழிகாட்டி மற்றும் அபிவிருத்தி பற்றிய பாடநெறி (PCGD)

| O/L பரீட்சை எழுதிய மாணவ,மாணவியர்களுக்கு |

உங்கள் முழுத் திறமையையும் இனம் கண்டு, உங்களுக்கேற்ற எதிர்காலத் தொழிலை கண்டுபிடிக்க நாம் உதவுவதோடு உங்கள் மேற்படிப்பிற்கான மாற்று வழிகளையும் நாம் இனம் கண்டு தெரிவிப்போம். இப் பாடநெறியானது க.பொ.த (சாதாரண தர) பரீட்சை எழுதிய மாணவ, மாணவிகளுக்கென விசேடமாக வடிவமைக்கப்பட்டது. எனவே எம்மோடு இன்றே பேசுங்கள். நாம் உங்களுக்கேற்ற விடயங்களைத் தேர்வு செய்ய உதவுவதோடு, உங்கள் வெற்றிக்கும் வழிகாட்டுவோம்.

| | |
|---|---|
| தகைமை: க.பொ.த (சாதாரண தர) பரீட்சை எழுதிய மாணவ, மாணவிகள் | காலம்: 1 1/2 மாதங்கள் |
| ஆரம்பம்: 29 ஜூன் 2013 \| சனிக் கிழமை \| மு.ப.9 - பி.ப.1 \| ஆங்கிலம் / தமிழ் IPM யாழ் கல்வி நிலையம், இல.19, மக்கள் வங்கி கட்டிடம், 2ஆம் மாடி, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம் | |

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் நிரூபன்: 021 2219909 அல்லது மின்னஞ்சல்: ipmjaffna@gmail.com

இலங்கை மனிதவள முகாமைத்துவ நிறுவகம் (Inc)
யாழ் கல்வி நிலையம் இல.19, மக்கள் வங்கி கட்டிடம், 2ஆம் மாடி, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 0212 219 909
மின்னஞ்சல்: ipmjaffna@gmail.com இணையத்தளம்: www.ipmlk.org

IPM Sri Lanka
The Nation's Leader in HRM







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

VIII

www.wisdombusiness.com

# CIMA

Chartered Institute of Management Accountants

11 ELEVEN YEARS OF EXCELLENCE

THE LARGEST CIMA BUSINESS SCHOOL IN SRI LANKA

## தற்போது யாழ்நகரிலும் உங்கள் வெற்றி தொடரட்டும்...



Theoganarajah Soumyraj
Chairman - Wisdom

க.பொ.த சாதாரண அல்லது உயர் தரத்திற்கு பின்னர்
CIMA கற்கை நெறியை தற்போது யாழ் நகரில்
இலங்கையில் மாபெரும் CIMA கல்வி நிறுவனமான
Wisdom கல்வி நிறுவனத்தில் பயின்று
நீங்களும் நிபுணத்துவம் அடையுங்கள்

154A/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

021 222 07 27
021 720 0777



Sivapiragasham Mayoorran
Operations Head - Wisdom - Jaffna




CIMA Certificate Level
CIMA Operational Level
CIMA Management Level

மேற்குறிப்பிடப்பட்ட நிலைகளுக்கான பதிவுகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படும்

ஆரம்ப திகதி
2013 ஜுன் 8ம் திகதி

இன்றே
தொடர்புகொள்ளுங்கள்



## Wisdom Business Academy
The Specialist in CIMA Education

158, Station Road, Colombo 3
E : info@wisdombusiness.com

Colombo : 011 2 370 995 / 6
Matara : 041 7 390 390
Jaffna : 021 222 07 27

CIMA | ROBERT GORDON UNIVERSITY • ABERDEEN

A world class panel of lecturers | Success above the rest | State of the art facilities | Great study environment | Assured completion of syllabus | Exam focused revision | The largest Pearson authorised test centre for CBA exams

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org